தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண் 75

# தமிழக ஊர் வரலாறுகள்

பதிப்பாசிரியர்

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்,**

காப்பாட்சியர்,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

பொதுப்பதிப்பாசிரியர்

**நடன. காசிநாதன்,**

இயக்குநர்,

தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை-113

©

தமிழ்நாடு அரசு

1995

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண் 75

# தமிழக ஊர் வரலாறுகள்

பதிப்பாசிரியர்

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்,**

காப்பாட்சியர்,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

பொதுப்பதிப்பாசிரியர்

**நடன. காசிநாதன்,**

இயக்குநர்,

தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை-113

©

தமிழ்நாடு அரசு

1995

TAMILNADU GOVERNMENT
ORIENTAL MANUSCRIPTS SERIES No. 75

# TAMIZHAGA OOR VARALAARUGAL

*Editor* :
**Dr. S. SOUNDARAPANDIAN,**
Curator,
Government Oriental Manuscripts Library, Madras-5

*General Editor* :
NATANA. KASINATHAN
Director,
Department of Archaeology, Madras-113

©
GOVERNMENT OF TAMILNADU

1995

*Price* ;

முதற் பதிப்பு 1995

பிரதிகள் 1000

தமிழக ஊர் வரலாறுகள்

© தமிழ்நாடு அரசு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

பதிப்பாசிரியர் :

டாக்டர் எஸ். செளந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 3

பொதுப்பதிப்பாசிரியர் :

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 113

விலை : ரூ.

வெளியீடு :

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 5

அச்சிட்டோர் :

தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி
சென்னை - 113

First Edition 1995
No. of Copies ; 1000

TAMIZHAGA OOR VARALARUGAL

© Government Oriental Manuscripts Library

Editor ;
DR. S. SOUNDARAPANDIAN
Curator
Government Oriental Manuscripts Library
Madras - 5

General Editor :
THIRU NATANA. KASINATHAN
Director
Department of Archaeology
Madras - 113

Price : Rs.

Published by :
Government Oriental Manuscripts Library
Madras - 5

Printed at :
Department of Archaeology
Tharamani, Madras - 113

# உள்ளடக்கம்


பொதுப் பதிப்பாசிரியர் உரை

பதிப்புரை

1. அன்னம தேவராயர் கைபீது ... 28

2. வாமனாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகா விசேஷித்த கைபீது ... 33

3. மாமலைபுரம் கைபீயத்து ... 37

4. பொம்மைய நாயகன் கைபீது ... 41

5. முப்பந்தட்டிப் பட்டணம் கைபீது ... 49

6. பொள்ளாச்சி தாலுகா ஆனைமலை காடர்ச்சாதி வரலாறு ... 52

7. கோயமுத்தூரு தாலுகா போளமாம்பட்டி வெள்ளிமலை கைபீது புக்கு ... 63

8. காயங்காடு அல்லது காயங்குளம் வரலாறு ... 67

9. சாமக்குளம் மார்க்கண்ட பண்டிதர் ஒழுங்கு கைபீது ... 68

10. செட்டிப் பாளையந் தாலுகா பேரூர்க் கைபீது ... 71

| | | | |
|---|---|---|---|
| 11. | கம்பம் கிராமம் உண்டான வரலாறு | . . | 75 |
| 12. | மாணிக்கவாசகர் மடத்துக் கைபீது | . . . | 77 |
| 13. | நெமிலிக் கிராமக் கைபீது | . . . | 79 |
| 14. | ஏநாமக்கல் வரலாறு | . . . | 80 |
| 15. | மதுராந்தகம் வரலாறு | . . . | 85 |
| 16. | வேட்டமங்கலம் வரலாறு | . . . | 87 |
| 17. | அருணாபுரிப் பட்டணம் கைபீது | . . . | 89 |
| 18. | கடம்பர் கோயில் கைபீது | . . . | 103 |
| 19. | பவானிக்கூடல் கைபீது | . . . | 107 |
| 20. | அவிநாசி தாலுகா கைபீது | . . . | 114 |
| 21. | தொரவலூர் அயினேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு | . . . | 126 |
| 22. | சேவூர் வாலீசுவர சுவாமி கைபீது | . . . | 131 |
| 23. | மடவளாகங் கைபீது | . . . | 148 |

# பொதுப்பதிப்பாசிரியர் உரை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மிக அரிய ஓலைச்சுவடிகளை உள்ளடக்கியதாகும். இவற்றுள் பல இதுவரை வெளியிடப்படாத நூல்களாக உள்ளவை. ஆதலால் ஒவ்வொரு ஆண்டும் இயன்ற வரையில் ஓலைச்சுவடியில் காணப்பெறும் புதிய நூல்களில் சிலவற்றையானும் வெளியிடுதல் வேண்டும் என்பது தமிழக அரசின் விருப்பம். அந்த வகையில் சென்ற சில ஆண்டுகளில் கீழ்க்காணும் நூல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

தமிழ்ச் சுவடிகளின் விவர அட்டவணை, 25 மற்றும் 26

நலங்கு மெட்டு இராமாயணம்

குளுவ நாடகம்

நீதிக் கதைகள்

மடல் திரட்டு

இந்த ஆண்டில் தமிழ் வளர்ச்சித்துறை நிதி உதவி பெற்று ''தமிழக ஊர் வரலாறுகள்'' என்னும் இந்நூல் வெளிக்கொணரப்படுகிறது.

இந்நூலில் தமிழகத்தில் காணப்பெறும் சில ஊர்களைப் பற்றிய குறிப்புகள், சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேய அலுவலர்களால் திரட்டப்பட்ட 'கைபீது' என்பவைகளிலிருந்து சேகரிக்கப் பெற்றவை தற்போதுள்ள ஊர்களின் பெயர்கள் இதே பெயரில்தான் அந்நாளில் வழங்கப்பெற்றனவா? அல்லது அவற்றுக்கு வேறு பெயர் இருந்தனவா? என்பது பற்றியும், அவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் பழக்கவழக்கம் பற்றியும் அறிந்து கொள்ள இவை பெரிதும் உதவும்.

இது போன்று மேலும் மேலும் இதுவரை வெளிவராத் புதிய நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து கண்டறிந்து வெளியிடப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ் நாடு அரசின் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மொழிவாரியாக வல்லுநர் குழுக்களை அமைத்து ஆணை வெளியிட்டுள் ளார்கள். இனி வெளியிடப்படவுள்ள நூல்கள் இக்குழு வினர் ஆலோசனையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படும். மேற்காணும் ஆணை வழங்கி இந்நூலகத்தின் மேம்பாட்டில் நல்வழிகாட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது வெளியிடப்பெறும் தமிழக ஊர் வரலாறுகள் என்னும் இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பெரிதும் பயனளிக்கும். இந்நூலை தமிழ் வளர்ச்சித் துறையின் நிதி உதவியோடு வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளர், திருமிகு. சா. பா. இளங்கோவன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல் வெள்ளியிட நிதியுதவி செய்துள்ள தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் செல்வராஜ் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றி. இந்நூலை உரிய விளக்கக் குறிப்புக்களோடு சிறந்த முறையில் பதிப்பித்துள்ள காப்பாட்சியர் டாக்டர் செளந்தரபாண்டியன் அவர்களுக்கும் எம் உளமார்ந்த பாராட்டுக்கள். இந்நூல் ஒரு திங்களுக்குள் அச்சிடப்படுதல் வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்து செயல்பட்ட அச்சுப்பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் எம் அன்பார்ந்த நன்றி.

அன்பன்

**நடன. காசிநாதன்**

## GENERAL EDITOR'S REMARK

Government Oriental Manuscripts Library is a treasure house of invaluable manuscripts and books written in various languages like Tamil, Telugu, Kannada, Sanskrit, Urdu, Persian, Arabic etc.

Started in 1869, this institution was annexed to the state department of archaeology in the year 1980. Since then sincere efforts have been taken to publish hitherto unpublished works dealing with several subjects of this library for the use of researchers and public.

Tamilnadu Government is evincing keen interest by allotting sufficient funds towards the publications of these manuscripts.

So, I must thank Mr. S. P. Ilangovan, I. A. S., Secretary, Tamil Development and Culture for his diligent efforts and guidance for the outcome of this volume.

I hope Tamil scholars, historians and archaeologists will find this book much useful.

**Natana. Kasinathan**

# பதிப்புரை

இதுவரை அச்சில் வராத இந்த 'ஊர் வரலாற்றுச் சுவடிகள்' சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையத்தில் பாதுகாக்கப் பெற்று வந்தனவாம். ஏறத்தாழ நூற்று ஐம்பது ஊர் வரலாற்றுச் சுவடிகள், 'கைபீதுகள்' எனும் தலைப்பில் இந்நூலகத்தில் உள அவற்றினின்றும் எடுத்து வரையப்பெற்ற இருபது கைபீதுகளே இந்நூல்.

கைபீது (Kaifiyat) எனும் சொல் பாரசீகச் சொல்லாகும். கைபீது எனும் இப்பாரசீகச் சொல் கூற்று, சூழ்நிலைகள், குறிப்புக்கள், தொடர்புகள் எனப் பொருள்படும்.[1] பொதுவாகக் கைபீதுகள் ஊர் வரலாறுகளை விளக்கி நிற்பதால், 'கைபீது' என்பது ஊர், வரலாற்றைக் குறிப்பதாகவுளது. இவ்வகைக் கைபீதுகள் யாவும் மெகன்சி அவர்களின் தொகுப்பாம்.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையத்திலுள்ள இதுபோன்ற வரலாற்றுச் சுவடிகள், தல வரலாறுகள் (Gazetteers), மற்றும் ஆய்வு நூற்கள் எழுதிய பலருக்கும் பயன் பட்டுள்ளன. தல வரலாறுகள் வரைந்த டிபிள்யூ. பிரான்சிஸ் (W Francis) முதலியோர் இவை போன்ற மெகன்சி தொகுப்பு வரலாற்றுச் சுவடிகளைப் பயன்கொண்டுள்ளனர் என்பதை அறிதல் தகும்.

இந்நூலிலுள்ள கைபீதுகளிற் சில புராணங்களை அடிப்படையாகக் கொண்டவை; சில முழுவதும் வரலாற்று அடிப்படையின. புராண அடிப்படை இருப்பினும், அவைகளுள் பொதுளிய வரலாற்று உண்மையை அறிவது நம் கடனாம்.

'கைபீது'களாகவும், 'வரலாறுகளாகவும் உள்ள சிறு நூற்களுக்குப் பதிப்பாசிரியர் இட்ட பொது நூல் தலைப்பே 'தமிழக ஊர் வரலாறுகள்' என்பதாம்.

இதன்கண் உரலாகும் வரலாறு முதலிய சிறப்புக் குறிப்புகளை ஈண்டுக் காண்டுவம்.

**வல்லம்**

**அன்னம தேவராயர் கைபீது** என்னும் சுவடி, விசயநகர மன்னன் **அன்னம தேவராயர்** வழித்தோன்றலான இராயதேவரின் துணைவியார் பிராமணர்களுக்குத் தனுக்கோடியில் வல்லம் எனும் கிராமத்தைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

**கலியாணம்மாள்** எனும் பெயரிய அவர் **காஞ்சிபுரத்தி**லிருந்து சில பிராமணர்களுடன் இராமேசுவரம் சென்றார். அங்கு, தீர்த்த மாடிய பிறகு, பிராமணர் காஞ்சிப் பகுதியில் உள்ள **வல்லம்** கிராமத்தை அக்கிரகாரமாகச் செய்து தரவேண்டும் எனக்கோரினர். ஆனால், அவ்வூர் தேவத்தானமாக இருப்பின், வழங்க இயலாது என்று கூறினார். பிராமணர், அது தேவத்தானமல்ல என்றதனால், அவ்வம்மையார், தனுக்கோடியிலே இருந்தபடியே **வல்லம்** கிராமத்தை **சர்வமானியமாக** அப்பிராமணர்க்கு அளித்தார்கள்.

இதனால், வரி முதலானவைகள் எங்களுக்கே வரல் வேண்டும் என்று வல்லம் பிராமணர் கோர, அப்பகுதி மக்களுக்கும் பிராமணர்க்கும் பூசல் எழுந்தது. மக்கள், இராயதேவரிடம் முறையிட, இராயதேவர் படை வீரர்களாகிய **மல்லக செட்டிகளை** அனுப்பி, பிராமணர்களை விரட்டச் செய்து வல்லம் கிராமத்தைத் தேவத்தானத்துக்குட்பட்ட கிராமமாக்க ஆணையிட்டார்.

மல்லக செட்டிகள், அதன்படியே, வல்லம் பிராமணரை விரட்டி அடித்துத் துன்புறுத்தினர்.

அப்போது பிராமணரைக் கொன்ற பாவம் நீங்குதற்காக, ஒரு மல்லக செட்டி, வல்லம் திருவரங்கத்தீசுவரர் ஆலயத்தின் ஈசானிய திக்கில் (வடகிழக்கு) சிவ பிரதிட்டை செய்தான் என்று விளக்குகிறது இச்சுவடி.

மல்லக செட்டிகள் தமிழில் ஒரு வழக்கையே ஏற்படுத்தியுள்ளனர். யாருக்கும் பணியாத ஒருவனை, 'இவன் சரியான மல்லக செட்டியா இருக்கிறானே' என்று கூறல் இன்றும் வழக்காக உள்ளதை நோக்கலாம்.

இச்சுவடியில் ஓர் அரிய வரலாற்றுக் குறிப்பு உளது. அஃதாவது, வல்லம் திருவரங்கத்தீசுவரர் ஆலயத்தைப் பிரித்து, சுலுப்புகான் என்பான் வந்தவாசிக் கோட்டை கட்டப் பொருட்களை எடுத்துச் சென்றுள்ளதாக அறிவிக்கிறது சுவடி.

வல்லம் கிராமப் பிராமணரை விரட்ட வந்த மல்லக செட்டிகள் நிலையாக தமிழ் மண்ணில் ஊன்றிக்கொண்டனர். இராசமல்லர் எனும் மல்லக செட்டி காஞ்சிப்பகுதித் தலைவனாகி, சிவ, வைணவத் தலங்களுக்கு ஏற்றம் தந்து வாழ்ந்தான் எனச்சாற்றுகிறது சுவடி

விசயநகரத்து மன்னனிடத்தில் திவானாக (அமைச்சனாக) துந்துசெட்டி என்பான் இருந்தான். அவன் 'கர்வத்தை' அடக்க, மன்னன் ஒரு அறைக்குள் செட்டி இருக்கும்போது, புலியை அவிழ்த்துவிடச் செய்தான். செட்டி, புலியைக் கொன்று மன்னன் அருகே இறந்த புலியை வீசினான். மன்னன், அச்செட்டிக்குப் பொன் அளித்துச் சிறப்பித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வல்லம் கிராமக் குருக்களாகிய திருமலைப்பட்டர் என்பார் அக்கிராமப் பகுதியை மேம்படுத்திய வரலாற்றையும் இங்குக் காண்கிறோம். திருமலைப்பட்டரே, விசயநகர மன்னனிடத்திற் சென்று, 40,000 வராகன் பொன் பெற்றுவந்து, கோயில், மண்டபம், ஏரி முதலியன ஏற்படுத்தினார். மேலும், கோயில் தேர், விழாக்கள் முதலியவற்றுக்கும் தக்க வழிவகை செய்தார்.

இவர் கட்டிவைத்த ஒரு மண்டபத்தில் இருந்த கற்களை, பிற்காலத்து இசுலாமியர் தங்கள் கோட்டைகளுக்காகக் கவர்ந்து சென்றார்கள் எனக் குறிப்பிடுவது கருதத்தக்கது.

இக்குறிப்புக்களால், இச்சுவடி அரியதொரு வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்வது கண்கூடு

### பழைய மயிலாப்பூர்

வாமனாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகா விசேஷித்த கைபீது எனும் சுவடியின் தலைப்பினால், தற்போதைய மைலாப்பூருக்கு வாமநாதபுரம் என்ற ஒரு பெயர் இருந்தமையை அறிகிறோம்.

மைலாப்பூரில், முன்பு, நேமிநாத சுவாமி கோயில் ஒன்று இருந்தது. அதைச் சமணர் வழிபட்டு வந்தனர். ஆலயத்துள் சில சமணர் குடிகொண்டிருந்தனர். சில நாட்களுக்கொருமுறை கோயிலை விட்டு, ஊருக்குள் வருவர். அப்போது, உறுப்புக் குறைவற்றோர் இல்லத்தில் உணவு கொள்வர்.

இத்தகு சமணத் துறவி ஒருவருக்கு, ஒரு நாள், கனவில், 'இன்னும் மூன்று நாட்களுக்குள் மைலாப்பூர் கடலுக்கு இரை யாகப் போகிறது' என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. அதனை அவர் **மயிலமான்** எனும் அரசனிடம் கூறினார்

மன்னனும் பிறரும் மைலாப்பூர் நீங்கி வேரிடம் சென்றனர். சென்றபின், கனவிற் கூறப்பட்டபடியே, மைலாப்பூர் கடல் கொள்ளப்பட்டது.

பிறகு, மயிலமான் என்ற அந்த அரசன், மூழ்கிப்போன வாமநாதபுரம் என்ற பகுதியருகே நகர்செய்து, அதற்கு **மயிலமான் நகர்** என்று பேரிட்டான். நேமிநாத ஆலயம் கட்டி, அதைச் சிறப்புச்செய்து வந்தான் அச்சமண மன்னன்.

மயிலமானுக்குப் பின்வந்தவர்களாக, **மயில்பூசித ராசன், சமந்தபத்திர ராசன், சாந்தகுணசீலன், வரமண்டனாதன்** முதலியோரைக் குறிப்பிடுகிறது இவ்வரலாறு.

பிறிதொருநாள், நேமிநாதசுவாமி, ஒரு சமணத்துறவி கனவில் தோன்றி, 'மயிலமான் நகரும் கடலுக்கு இரையாகப்போகிறது' என்று அறிவித்தார். அதன்படி நேமிநாதசுவாமி திருமேனியை அகற்றிக்கொண்டு, அத்துறவி வேறிடம் சென்றார். கனவிற் கூறிய படியே மயிலமான் நகரும் கடலுக்கு இரையானது.

பிறகு, அழிந்துபோன அப்பகுதிக்கு அருகிலிருந்து ஆப்பூர் எனும் ஊரை இணைத்துப் புதியநகர் உருவாக்கப்பட்டது. அதற்கே **மயிலாப்பூர்** என்று பெயர் தரப்பட்டது. இதுவே தற்போதுள்ள மைலாப்பூராம்.

இங்ஙனம் மைலாப்பூரை ஆண்ட சமண மன்னர் பரம்பரையை, சோழ நாட்டிலிருந்து வந்த பிராமணர் தங்களின் சோதிட, கணித, மாந்திரீக வன்மையால், சைவப் பரம்பரையாக மாற்றி னார்கள் என்றும் பகர்கிறது இவ்வரலாறு. **கந்தப்பராசன்** எனும்

பிற்கால மைலாப்பூர் அரசன் சைவனே. வடநாட்டில் ஆண்டதாகக் கருதப்படும் (Gondaphores) கொண்டாபோரஸ் என்ற பெயரும் கந்தப்பராசன் பெயரும் ஒப்பிட்டு ஆயத்தக்கது. ஏனெனில் கிறித்துவப்பெரியார் புனித தாமஸ் (St. Thomas) கொண்டாபோரஸ் அரண்மனைக்கே முதற்கண் வந்தார் என்கிறது வரலாறு.

**மாமலைபுரம்**

**மாமலைபுரம் கைபீது :** தற்போதைய மகாபலிபுரத்தையே குறிப்பிடுகிறது. இதனை ஆக்கிய அரசராக, **மல்லேசுவரன்** என்பவனை இச்சுவடி குறிக்கும். இது பல்லவர் பரம்பரையில் மூன்றாவது பேரரசனாகத் திகழ்ந்த **முதலாம் நரசிம்மவர்மனையே (கி.பி. 630-668)** குறிக்கும்.

''பூமியிலே சயனிச்சுக் கொண்டபடியினாலே ஸ்தலசயனச் சுவாமியென்று நாமதேய முண்டாச்சுது'' எனப் பேசும் சுவடி.

''எம்மானைக் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே''[2]

என்ற திருமங்கையாழ்வார் வாக்கை ஒப்பு நோக்கலாம்.

இச்சுவடி வழியாக, **மல்லாபுரி, மாமலைபுரம்** என்ற இது பெயர்களும் மகாபலிபுரத்தின் பழம் பெயர்கள் என அறிகிறோம்.

இக்கோயிலுக்குப் பண்டு ஐந்து காணி நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது என்ற வரலாற்றுச் செய்தியும் இச்சுவடியில் அறியக்கிடக்கிறது.

பொதுவாக, பிரமாண்டபுராணத்தை நிலைக்களனாகக் கொண்டே செல்கிறது சுவடி.

**சிவகங்கை**

**பொம்மைய நாயகன் கைபீது:** சிறப்பான வரலாறாகும். எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களைப் பிரித்தது யார் என்பதில் வரலாற்றாசிரியர்கள் தெளியவில்லை. **அரிய நாத முதலியாரே** என்று சிலர் கூற, அ. கி. பரந்தாமனார், **விசுவநாத நாயக்கரே,** அரியநாதர் துணையுடன் 72 பாளையங்களை அமைத்தார் எனக் குறிக்கிறார்.[3]

இச்சுவடியில், முற்றிலும் வேறாக, நாகம நாயக்கரே 72 பாளையப்பட்டுக்களாகப் பகுத்தமைத்தார் எனக் குறிக்கப் பட்டுள்ளது. நாகம நாயக்கர், விசுவநாத நாயக்கரின் தந்தையாவார்.

திருச்சியில் ஆண்ட சொக்கநாத நாயக்கர், தஞ்சை மீது படையெடுத்து, விசயராகவ நாயக்கரைக் கொன்ற செய்தியை இச்சுவடி குறிக்கிறது. பிறகு, சொக்கநாத நாயக்கர், பிரான்மலை, திருப்பனூர் முதலிய பகுதிகளைத் திருச்சிச் சீமையுடன் இணைத்துக் கொண்டதாகப் பேசப்படுகிறது.

கட்டைத் தேவ ரெகுநாத சேதுபதி முகவையை ஆளும்போது பவானி சங்கரத் தேவர் என்பார், போர் தொடுத்து, முகவையைக் கவர்ந்துகொண்ட அரும் வரலாற்றையும் இச்சுவடியில் நோக்கலாம்.

தோற்ற கட்டைத்தேவ ரெகுநாத சேதுபதி, சுவர்ணப் பெரிய உடையாத்தேவர் என்பாருடன் சேர்ந்து, தஞ்சை சென்று, சரபோசியைச் சந்தித்தனர். சரபோசி கேட்டுக் கொண்டதன் பேரில, பெரிய உடையாத்தேவர், ஒரு புலியைக் குத்திக் கொன்றா ராம். மகிழ்ந்த சரபோசி, அவ்விருவருக்கும் பரிசுகள் வழங்கி அனுப்பினார்.

பரிசு பெற்று வந்த அவ்விருவரும், மீண்டும் முகவை பவானி சங்கரத்தேவர் மீது போர் தொடுத்தனர். போரில், சங்கரத்தேவரை சிறைப்பிடித்துத் தஞ்சைக்கு அனுப்பிவிட்டு, முகவையை இருவரும் மீண்டும் கைக்கொண்டனர். கட்டைத் தேவ ரெகுநாத சேதுபதி, சுவர்ணம் பெரிய உடையாத் தேவருக்குச் சிவகங்கைச சீமையை விட்டுக்கொடுத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, சிவகங்கைச் சீமையை அநாபு சாயபு என்பார் கைப்பற்றிக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இதன் பிறகே பெரிய மருது, சின்ன மருது ஆட்சிக்கு சிவகங்கை உட்பட்டது.

சின்ன மருது, பெரிய மருது இவர்களின் அரசியல் வன்மைச் செயல் ஒன்று இச்சுவடியில் குறிப்பிடப்படுகிறது.

முத்துவடுகநாதப் பெரிய உடையாத் தேவரின் மகளை, படமாத்தூர் கவுரி வல்லபத் தேவர் அவர்களுக்கு மணமுடிக்க எண்ணியிருந்தனர். அத்திருமணம் நிகழ்ந்தால், தன் புகழ் குறையும்; அரசியல் மாட்சி மங்கும் எனக் கருதிய சின்ன மருதும், பெரிய மருதும் வேறு உத்தியைக் கையாண்டனர். அஃதாவது முத்துக் குமாரத் தேவரின் மகனுக்கு அப்பெண்ணைக் கொடுத்து, மாப்பிள்ளைக்கு வெங்கம் பெரிய உடையாத் தேவர் என்ற பெயரையும் அப்போது அளித்துச் சிறப்புச் செய்தனர்.

இச்சுவடி, சிவகங்கைச் சீமைக்குச் சொந்தமாக இருந்த பொன்னமராவதி, குமாரப்பட்டி ஆகிய இரு கிராமங்களை புதுக்கோட்டை அரசர்கள் வலுவில் கைப்பற்றிக் கொண்டதாகக் குறிப்பிடுகிறது. புதுக்கோட்டை மன்னரின் பெயர் முதலியன குறிப்பிடப்பெறவில்லை. கி.பி. 1790-ல் புதுக்கோட்டைக்கு அரசுரிமை பூண்ட இராஜா விஜயரகுநாதத் தொண்டமான் அம்மன்னர் எனக் கருத இடமுண்டு.

இவ்விஜயரகுநாதத் தொண்டமான் ஆட்சிக் காலத்தில், முற் குறிப்பிட்ட படமாத்தூர் கவுரி வல்லபத் தேவருக்குச் சிவகங்கை அரசாட்சிப் பட்டத்தை ஆங்கிலேயர் அளித்தனர். மருது சகோதரர் களின் வளர்ச்சியைக் குறைக்கவே இதனை ஆங்கிலேயர் மேற் கொண்டனர். கி பி. 1801-இல் கவுரி வல்லபத் தேவருக்குச் சிவகங்கை யில் பட்டம் கட்டப்பட்டது.[4]

இவ்வரலாற்றுச் சுவடியில், ஆங்கிலேயர் சிவகங்கைச் சீமையில் மருது சகோதரர்கள் புகழைக் குறைக்க மேற்கொண்ட செயல்கள் எவையும் பேசப்படவில்லை சுவடியே ஆங்கிலேயருக்கு விடுக்கும உதவிகோரும் விண்ணப்பமாக அமைந்துள்ளதே அவை குறிப்பிடப் பெறாமைக்குக் காரணமாகலாம்.

இறுதியாக, மருது சகோதரர்களின் வரலாற்றை[5] ஒரு சிறிது இங்குக் குறிப்பது இச்சுவடியை ஆயத் துணை செய்யலாம் முகவை மாவட்டத்து முக்குளம் எனும் கிராமத்தில், மொகக பழனியப்பன் சேர்வைக்கும் பொன்னாத்தாளுக்கும் பிறந்தவர்களே பெரிய மருதுவும் சின்ன மருதுவும் 177[illegible] - இல் சிவகங்கைச் சீமையை ஆங்கிலப் படை தாக்கியப்போது, அதை எதிர்த்துப்

போரிட்ட இவர்கள், முடிவில், திண்டுக்கல் சென்று ஐதர் அலியிடம் அடைக்கலம் புக நேரிட்டது. எட்டு ஆண்டுகள் கழித்தே, மீண்டும் சிவகங்கை திரும்பினர். 1780 முதல் 1801 வரை இவர்களின் நல்லாட்சி சிவகங்கைக்குக் கிட்டியது. 1801-இல் நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஊமைத்துரை தோற்று சிவகங்கை மருதுபாண்டியரிடம் தஞ்சமடைந்தான். ஊமைத்துரைக்கு அடைக் கலம் கொடுத்த மருது பாண்டியர் மீது வைதண்ட ஆங்கிலேயர் 1801-இல் சிவகங்கையைத் தாக்கினர். இறுதியில் 1801-ஆம் ஆண்டு அக்டோபர் 27-ஆம் நாள் மருதுபாண்டியர் இருவரும் திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்கள்

### முப்பது வெட்டி

முப்பந்தோட்டி என்று தொண்டை நாட்டில் உள்ள தலமே இது. இதற்கு **முப்பது வெட்டி** என்பதே பழைய பெயர் என்று கூறுகிறது இவ் வரலாறு. அதற்குரிய காரணத்தையும் விளக்குகிறது

**வீரசம்புவராயன்** எனும் மன்னன் ஆட்சியில், ஒரு நதியிலிருந்து நீர் வருவதற்காக 30 வீரர்களைக் காவலாக வைக்கப்பட்டிருந்தாம். நீர் வராமற் போகவே, சினந்த ராயன் அம்முப்பது வீரர்களையும் வெட்டி வீழ்த்தினானாம். இதனால், அவ்வூர்க்கு, முப்பது வெட்டி என்ற பேர் ஆகி, தற்போது, முப்பத்தட்டி என்றழைக்கப் படுவதாகப் பேசும் சுவடி.

வீர சம்புவராயனுக்குப் பகையாக, வடக்கேயிருந்து **யாதவ ராயன்** என்பான் வந்து, பலரை அழித்து நாசம் செய்தான். அஞ்ஞான்று, காளபயிரவர் கனவில் தோன்றி, சம்புவராயனுக்குத் தேறுதல் கூறி, படையெடுக்கக் கூறி, வெற்றியும் தந்தார். அழிந்து போன படை முதலானவற்றைத் தாங்கிச் சிறப்பித்ததால், அப் பகுதிக்கு **அழிபடைதாங்கி** என்று சம்புவராயன் பேரிட்டான்.

முப்பந்தோட்டி சோமநாதன் மீது பாடப்பெற்ற உலாநூல் என்றுதான் சுவடி வடிவில், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தில் டி.278 என்ற எண்ணின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

"சொல்லுமுப்பந் தோட்டிவரு சோமநா தீசுரன்மே
னல்ல வுலானவ நவிலுதற்கு"

என்பவை நூலின் முதலில் அமைந்திருக்கும் நேரிசை வெண்பா

அடிகளாம். இந்நூல் இதுவரை அச்சிடப் பெற்றதாகத் தெரிய வில்லை.

ஆனைமலை

**பொள்ளாச்சி தாலுகா ஆனைமலை காடர்ச்சாதி வரலாறு :** பொள்ளாச்சி தாலுகாவில் உள்ள ஆனைமலையில் இருந்த **பொன்னுமூப்பன், பரம மூப்பன்** என்ற இரு காடர்ச் சாதியினர் எழுதிவைத்த வரலாறாம். இதிற் குறிக்கப் பெறும் **காடர், காடிர்** எனவும் அறியப் பெறுவர்.[6]

இச்சுவடி, அம்மலைமீது தனித்து வாழ்ந்த **விசுவர்** என்ற இனத் தாரைப் பற்றிச் சிறப்பாக உரைக்கிறது. அவர்களுக்கு **விலங்குகளை** வயப்படுத்தும் மந்திரம் முதலியன தெரிந்திருந்தது என்று குறிக்கப் படுகிறது. விசுவர்களுக்கு, காடர் மரியாதை செய்வது மரபு. அப்போது, பரிசாக கத்தி, கோடாலி, துப்பட்டி, சேலை முதலியன அளிக்கப்படும். காடர் வாழும் பகுதிக்கு விசுவர் வந்து செல்வரே தவிர, விசுவர் வாழும் பகுதிக்குக் காடர் செல்வதில்லை.

காடர்ச் சாதியில், கணவன் இறந்துவிட்டால், மனைவி மறு மணம் செய்து கொள்வர். விதவையாக இருத்தல் அவர்களுக்குப் பழக்கமில்லை. ஓர் ஆண், இரண்டு, மூன்று மனைவியரை மணக்கும் வழக்கம் உளது.

அவர்கள் வசிக்கும் மலைப்பகுதியில், மஞ்சள், இஞ்சி, சிகைக் காய், குங்கிலியம், மட்டிப்பால், ஏலம், மிளகு, முதலியன கிட்டும். இவற்றை, அங்கு வரும் வணிகர்களான செட்டியார்களுக்குக் கொடுத்து, செட்டியார்களிடமிருந்து துணி, அரிசி முதலிய பொருள்களைப் பண்டமாற்றாகக் கொள்வர்.

காடர்களின் பெயர்களும் இச்சுவடியில் தரப்பட்டுள்ளன, ஆண்களுக்கு, வயவன், வெள்ளையன், நீலன், தும்பி, வட்டாடி. என்றும், பெண்களுக்கு, கும்மாச்சி, நட்டுவத்தி, பாஞ்சி, சுருளை என்றும் பெயரிட்டுளர். நிறத்தினையும், விளையாட்டு ஈடுபாட்டை யும், திறனையும் அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டுள்ளமை குறிக்கத்தகும்.

**மட்டிப்பால்** எடுக்கும் முறையை இச்சுவடி விளக்குகிறது. அஃதாவது, ஒருவகை மரத்தில், பட்டையைக் கீறி விடுவார்கள்.

கீறிய இடத்திலிருந்து பால் வடியவே, அதனை மூங்கிற் குழாய்களில் அடைத்து வைப்பார்கள். அதுவே மட்டிப்பால் எனும் பொருள். அதனை நெருப்பில் சுட, மணம் கமழும், ஆனை மலைக் காடர் இவ்வகையாக மட்டிப்பால் எடுப்பர்.

**தேன்** எடுக்கும் முறையும் கூறப்பட்டுளது. தேனை இரவு நேரத்தில் தான் காடர் எடுப்பர். மரத்தில் ஏணி சார்த்தி, தேன் கூடு அருகே தீப் பந்தத்தால் ஈக்களை விரட்டி, ஆயுதம் கொண்டு தேனை எடுப்பதாக விளக்கும் இச்சுவடி.

**குங்கிலியம்** ஒரு வகை வெள்ளை மரத்திலிருந்து எடுக்கப் படுவது. மரத்தடியில், நெருப்புப் போடுவார்கள், அவ்வெப்பத்தில், மரப்பட்டை பிளந்து, பிளவில் இருந்து பால் வடியும். அதுவே குங்கிலியம்.

இத்தகைய காடர். பறையர்களினும் உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்டதாகப் பேசும் சுவடி.

**வெள்ளிமலை**

போளமாம்பட்டி வெள்ளிமலை 'கைபீது' என்பது வழி வழியாகக் கூறப்பட்டுவரும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.

கோயமுத்தூர் தாலுகா நொய்யலாற்றுக்கு வடக்கில் இருக்கும் வெள்ளிமலை பற்றிய வரலாறு இது.

போடிக் கவுண்டன் ஒருவன் மாடுகளை அடைத்து பட்டியாக இருத்தினமையால், **போடிமாம்பட்டி** என்ற பேர் வந்ததாக இவ் வரலாறு உளது; இவ் வரலாற்றில் போளமாம்பட்டி என்றுளது திரிபு.

வெள்ளிமலை மீதுள்ள ஒரு பாறையருகே நின்று மக்கள் வணங்கி வருவதால், அப்பாறைக்குக் **கோபுரவாசல்** என்று பெயர் வந்ததாகவும் இச்சுவடி கூறுகிறது.

மலைச் சரிவில் **முடுகர்** எனும் மலை வகுப்பினர் இருப்பதாகக் குறிப்பிடும் சுவடி.

மாரம்பதி, குஞ்சரமடை பதி, கோரேகுதி முள்ளுபதி; மேற்காணும் மூன்று சிற்றூர்கள் இம்மலை அடியில் இருப்பதைக் குறிப்பிடுகிறது இச்சுவடி.

இப்பதிகளில், ஏலம், மலை இஞ்சி, மலை மஞ்சள், குங்கிலியம், தேன், மெழுகு, மாகாணிக் கிழங்கு. முதலிய பொருட்கள் விளைகின்றன. இவைகளை, முடுக சாதியினர்க்குச் சிறிது பணம் படியாகக் கொடுத்துவிட்டு, எடுத்து வந்து பிறர்க்கு விற்பார்கள் என்று பேசும் சுவடி.

### காயங்காடு

காயங்காடு அல்லது காயங்குளம் வரலாறு எனும் சுவடியில் 400 ஆண்டுகளுக்கு முன்பு, கொச்சிக்கும் காயங்குளத்துக்கும் பிராமணர், வைசியர் முதலானோர் குடியேறிய வரலாற்றுச் செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது.

### கோயம்புத்தூர்

சாமக்குளம் மார்க்கண்ட பண்டிதர் ஒழுங்கு கைபீது; மார்க்கண்ட பண்டிதர் என்பாரிடத்தில் இருந்த சுவடியை ஆதாரமாகக் கொண்டது. கரிகால் சோழன், கவையன் எனும் இருளன் அவ்வனத்தைக் காத்ததால், அங்கு ஊர் செய்து, அவன் பெயரையே அதற்கு வைத்ததாக இச்சுவடி கூறுகிறது. இதனால், கவையன்புத்தூர் என்பது மருவி, கவயம்புத்தூர் - கோயம்புத்தூர் என ஆனது எனக் கருத இடமுண்டு. கோவன் எனுந் தலைவன் பெயரால் எழுந்ததால், கோவன்புத்தூர் என்றாகி, கோயம்புத்தூராயது என்பார் ரா.பி.சே.[7] கோவன் என்பதே கவையன் என்று வழக்கில் வந்திருக்கலாம்.

ஆலய ஊழியத்துக்கு ஆள் நியமித்தல், அப்போது ஓலை தந்து பாக்கு வெற்றிலை தரல் போன்ற பண்டைய பழக்க வழக்கங்களை இதிற் காணலாம்.

### பேரூர்

செட்டிபாளையந் தாலுகா பேரூர்க் கைபீது; பிரமாண்ட புராணத்தை ஆதாரமாகக் கொண்டது. இப்புராணத்தின் அடிப்படையில், பேரூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த உத்தமபண்டிதர், சாம வாத்தியார், அண்ணவாத்தியார், சாமவாத்தியார் முதலியோர் எழுதிவைத்திருந்த வரலாறே இது. குறிப்பிடத்தக்க வரலாற்றுக் குறிப்புகள் இதிற் காணப்படவில்லை.

**கம்பம்**

**கம்பம் கிராமம் உண்டான வரலாறு:** இச்சுவடி, பாண்டி நாட்டுக் கம்பம் எனும் ஊர் குறித்த வட்டார வரலாற்றை நவில்வது. இச்சுவடியில் வரும் கதையொன்று சுவை மிகுந்தது.

"ஒரு மரத்தடியில் புற்று ஒன்று இருந்தது. அதில் ஒரு பெண் இருந்துகொண்டு, அவ்வழியாக வந்த வளையல் விற்கும் செட்டியை அழைத்தாள். கையை நீட்டி வளையல்கள் போட்டுக்கொண்டாள். இறுதியில், ''பராக்கிரம பாண்டியனிடத்தில் இதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்'' என்று கூறி மறைந்துவிட்டாள். செட்டியும் அவ்வாறே பாண்டியனிடம் சென்று தொகை பெற்றுப் போயினன். பாண்டியன், அப்புற்று இருந்த இடம் வந்து, சாமுண்டியைப் பிரதிஷ்டை செய்து கோயிலமைத்தான்.''

கோதைவர்மன் எனும் அரசன், **வடக்குக் கம்பம்** என்ற பகுதியை உண்டாக்கி, கோவில் கட்டி அப்பகுதியை வளப்படுத்திய தாக இச்சுவடி கூறுகிறது.

இவன், பல தேவதைகளுக்குக் கோயில் கட்டியதோடு, இசுலாமியர்க்குப் **பள்ளிவாசலும்** கட்டிச் சிறப்புச் செய்தான் என்ற வரலாறு அறியத்தகும். அந்நாளில் பாண்டிய நாட்டில் இருந்த மத இணக்கத்தை, மத ஒற்றுமையை இச்சுவடி நன்கு விளக்கி நிற்கிறது. இதனால், மக்கள் நம்பிக்கை அடிப்படையில் எழுந்த இச்சுவடியில் **முரண்பட்ட மதங்கள் யாங்ஙனம் இயைந்து வாழ்ந்தன என்ற அரிய வரலற்றையும் பெற முடிகிறது** என்பது குறிப்பிடத்தக்கது.

**குணம்பட்டி கரை**

**மாணிக்கவாசகர் மடத்துக் கைபீது;** இச்சுவடி திருவாசகம் கண்ட மணிவாசகப் பெருமான் குறித்ததாகக் கூறவில்லை.

கோவை மாவட்டத்திலுள்ள பெருந்துறைத் தாலுகாவைச் சேர்ந்த **குணம்பட்டி கரை** எனும் கிராமத்திலுள்ள மாணிக்கவாசகர் மடத்து வரலாறு இது.

மாணிக்கவாசகர் என்னும் பெயரிய ஒருவர் நிகழ்த்திய அற்புதச் செயல்களைக் கேள்விப்பட்ட கோவைச் சேர அரசன் ஒருவன், அம் மாணிக்கவாசகரைத் தம் நாட்டில் இருத்தி, சிறப்புச் செய்தான்.

அம்மாணிக்கவாசகர், அவிநாசி, விசயமங்கலம் முதலிய சில இடங்களில் மடம் நிறுவினார்.

இறுதியில், அப்பரம்பரையில் வந்த இராசலிங்க மாணிக்க வாசகர் என்பார் 1807 சூன் 14-ஆம் நாள் வரைந்த வரலாறே இக் கைபீது ஆகும். திருவாசகம் கண்ட மாணிக்கவாசகரும் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகச் செப்பேடுகள் பகர்கின்றன. இக் கைபீது குறிப்பிடும் மாணிக்கவாசகருக்கும் அவருக்கும் தொடர்பு உளதா என்பது மேலாய்வுக்கு உரியது.

**நெமிலி**

**நெமிலிக் கிராமக் கைபீது ;** இச்சுவடி அவ்வட்டாரப் பெரியோர் கருத்துக் கொண்டது.

நெமிலி ( ? ) கிராமத்துக்குக் கிழக்கே புதையல் இருப்பதாக அப்பகுதியில் பிராமணர் கூறுவதாக இவ்வோலைச் சுவடி குறிப்பிடுகிறது. இது போன்ற கருத்துக்கள் பரம்பரை பரம்பரையாகக் கூறப்பட்டு வருவனவேயன்றி, அவற்றுக்கு வரலாற்று ஆதாரங்கள் இருப்பதாகக் கொள்ளல் இயலாது

தஞ்சை மாவட்டத்து வல்லம் எனும் கிராமப் பகுதியில் கல்லிற் குடைந்திருக்கும் லிங்கம் ஒன்றையும், ஒற்றைக் கல்லில் துளைத் திருக்கும் சிவன் கோயில் ஒன்றையும் வேறு ஒரு பெருமாள் கோயில் ஒன்றையும் இச்சுவடி குறிக்கிறது. இவ்வூர்க்கு அக்கினி மூலையில் (தென்கிழக்கு) ஓர் ஏரியருகே இருபது பாண்டு குழிகள் உள என்றும் வரையப்பட்டுள்ளது. பாண்டு குழி என்பது இறந்தோரைப் புதைத்த குழியாம். இறந்தோர்க்காக நடப்பட்ட கல் பாண்டுக்கல் என அறியப்படும்

**ஏநாமக்கல்**

**ஏநாமக்கல் வரலாறு :** கேரளத்தில் உள்ள ஏநாமக்கல் எனும் ஊர் வரலாறாம். இவ் வரலாறு எழுதப்பட்ட காலம் கி. பி. 1820.

மலையாளத்தில் பிராமணரே, நம்பூதிரிகள் என அழைக்கப் படுவர் என இச்சுவடி விளக்குகிறது. இச்சுவடியிற் காணலாகும் இரு பட்டிகள் வழியாக, வேளாண் கணக்குமுறை அப்பகுதிகளில் யாங்ஙனம் இருந்தது என ஒருவாறு அறிகிறோம்.

*மதுராந்தகம்*

**மதுராந்தகம் வரலாறு**: இச்சுவடியில், மதுரையை ஆண்ட பாண்டியனின் எல்லை **மதுராந்தகம்** வரை இருந்தது என்று குறிப்பிடப்பட்டுளது. **மதுரைக்கு அந்தமாக (இறுதியாக)** இருந்ததால் மதுராந்தகம் என்ற பேர் ஏற்பட்டதையும் விளக்குகிறது சுவடி.

சுவடியின் இக்கூற்றுக்கு வரலாற்றுச் சான்றுகள் சில.

**வீரராசேந்திரன்** (1063-1070) மெய்க்கீர்த்தியில்,

"தன் திருப்புதல்வனாகிய **மதுராந் தகனை**
வானேந்து தானை சோழேந்திர என
எண்திசைத் திகழ எழில்முடி சூட்டி"[8]

என வருவதால், வீரராசேந்திர சோழனின் மகன் ஒருவனுக்கு மதுராந்தகன் என்ற பேர் இருந்ததாக அறிகிறோம். அவன் மதுரைக்குக் காலனாக (அந்தகன்) விளங்கியதால், அவன் உருவாக்கிய பகுதியான மதுராந்தகத்துக்கு, அப்பேர் ஏற்பட்டது என்றும் சிலர் மொழிவர்.

மதுராந்தகத்தில் இருந்த விஷகர தீர்த்தத்தைப் பாண்டிய மன்னனும் சோழ மன்னனும் அடுத்தடுத்துச் செப்பனிட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறது சுவடி.

மதுராந்தகத்தை ஆண்ட சோழன், பன்னிரண்டு சிவாலயங்களும், பன்னிரண்டு விஷ்ணு ஆலயங்களும் கட்டிச் சிறப்பித்ததாகப் பேசுகிறது நூல். சோழ மன்னனின் பெயர் சுவடியில் யாண்டும் குறிப்பிடப்படவில்லை.

வரலாற்றில், மதுராந்தகத்துடன் தொடர்புடைய அரச பரம்பரையினர் பலர் குறிப்பிடப் பெறுகின்றனர். முதலாம் இராசேந்திர சோழன் (1012-1044) மதுராந்தகன் என்று அழைக்கப்பட்டான்.[9] உத்தம சோழன் (670-985) என்பானின் புதல்வன் பெயர் மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பதே.[10] இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் (957-970), மதுராந்தகன் சுந்தர சோழன் என்றே அழைக்கப்பட்டுளான்.[11] சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளாளன் என்பான் ஒருவனும் வரலாற்றில் குறிப்பிடப் பெறுவான்.[12] இரண்டாம் இராசேந்திர சோழனின் மகள் பெயர் மதுராந்தகி என்பதே ஆகும்.[13]

### வேட்டமங்கலம்

**வேட்டமங்கலம் வரலாறு :** இச்சுவடி கொடுமுடிப் புராணத்தையும், கருவூர்ப் புராணத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

கருவூர்ப் பகுதிக்குக் **கிழங்கு நாடு** என்ற பெயர் இருந்ததாகவும், சேரன் வேட்டையாடியதால் **வேட்டமங்கலம்** என்ற பேர் வந்தது என்றும் புராணத்திற்கேயுரிய பாங்கில் விளக்கிச் செல்கிறது சுவடி.

### அருணாபுரிப்பட்டணம்

அருணாபுரிப்பட்டணம் வரலாற்றில், அருணாபுரிக்குச் சோளணகிரி, ஞான நகர், மோட்ச ஸ்தம், அருணாசல ஸ்தம் என்னும் பிற பெயர்களும் உள்ள பாங்கை அறிகிறோம்.

நந்திகேசுவரர் மார்க்கண்டருக்கு அருணாசலத்தின் பெருமைகளை உரைப்பதாகக் கூறுவது இச்சுவடி. அதில், 'தில்லையாகிய சிதம்பரத்தை கண்டு வணங்கினால் மோட்சம்; காசித் தலத்திலே இறந்தால் மோட்சம்; திருவாரூரில் பிறந்தால் மோட்சம்; ஆனால் அருணாசலத்தை நினைத்தாலே மோட்சம்' என்ற வருணனைப் பகுதி குறிப்பிடத்தகும்.

அருணாசலத்திற் செய்யும் பூசை, பூங்காவுக்கு நீர் பாய்ச்சுவது போல என்ற உவமையும் கூறப்பட்டுள்ளது. சூரியனின் தேரிற் கட்டிய குதிரை அருணாசல மலை உச்சியில் உள்ள சுனை நீரைப் பருகும் என்று சிறந்த கற்பனையும் இவ்வரலாற்றிற் கூறப்படும். இக்கூறுகளால் இந்நூல் சிறந்த ஓர் இலக்கியமாகவும் திகழ்கிறது.

அருணாசலத்தின் பெருமையைப் புராண அடிப்படையில் விளக்கும் இச்சுவடி, மக்கள் அவ்வூரைத் தங்கள் நெஞ்சகத்தே அக்காலத்தில் யாங்ஙனம் போற்றினர் என்பதை நமக்கு பறைசாற்ற வல்லது.

### கடம்பர் கோயில்

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுக்குப் பெயர் ஏற்பட்ட வரலாற்றைப் புராண நம்பிக்கை அடிப்படையில் விளக்குகிறது இந்த ஓலைச்சுவடி. **கடம்பர் கோயில் கைபீது** எனும் இச்சுவடியின் தலைப்பாகும்.

முருகன் மயில் வாகனத்துடன் இறங்கிய ஊராதலால், சிறுமயிலூர்க்கு அப்பேர் உண்டானது என்னும் இச்சுவடி.

முருகன் வதிந்து வருகிறார் என்ற நம்பிக்கை அடிப்படையில் ஏற்பட்ட பெயரே இளையனாரவேலூர் என்பதாம்.

கடம்பர் கோயில் தலப்பெருமையை ஒரு கதை வழியாக விளக்குகிறது இச்சுவடி. ஒரு பிராமணன் அஸ்தி கொண்ட சிறு முடிப்பை இங்கு வைத்துவிட்டுச் சமையல் செய்தான். வேறு ஒருவன் அதை அவிழ்த்துப் பார்க்க, சாம்பல் பூக்களாக மாறியிருந்தன. பிறகு, காசிக்குச் சென்று அம்முடிப்பைப் பிரிக்கையில், ஒரே ஒரு பூவைத்தவிர, பிற எல்லாம் சாம்பலாகவே மாறியிருந்தன. இதன் பிறகு, கடம்பர் கோயில் பெருமையை அறிந்து, வாழ்நாள் முழுதும் அங்கேயே தொழுது கழித்தான்.

ஒரு பொருள் பிறிதொன்றாக மாறுவது என்பது மக்கள் நம்பிக்கையின்பாற்பட்டதே. பல்வேறு கடவுளர் பெருமையை இதுபோலப் பொருள் மாற்றம் மூலம் தமிழகத்தில் பேசக் கேட்கலாம்.

### பவானிகூடல்

**பவானிகூடல் கைபீது :** இச்சுவடி தொடக்கத்தில் பவானியும் காவேரியும் கூடும் இடமாதலால் அதற்கு பவானிகூடல் எனப் பெயர் வந்ததாகத் தெரிவிக்கிறது.

இச்சுவடி புராண அடிப்படையையும், தூய வரலாற்றடிப்படை யையும் ஒருங்கே கொண்டது.

கொங்கு நாட்டு (கோவை, சேலம் பகுதி) வடகரை நாட்டுப் பாளையக்காரரான கெட்டி முதலியாரை இச்சுவடி குறிக்கிறது. ஆனால் கெட்டி முதலிகளின் வம்சாவளியைப் பிறிதொரு சுவடியான[14] 'அந்தியூர் தாலுக்கா சரம்பள்ளி கணக்குப்பிள்ளை கைபீது' மூலமாக அறிகிறோம்.

1. சியாளி கெட்டி
2. இரகுநாத கெட்டி
3. இம்முடி கெட்டி
4. புணக்கன் கெட்டி

5. வணங்காமுடி கெட்டி
6. கொமார கெட்டி

என்று வம்சாவளியைக் குறிக்கிறது அச்சுவடி (டி. 2955). இதே சுவடியில், கெட்டி முதலியாரைப் பணிய வைக்கத் திருமலை நாயக்கர் மேற்கொண்ட மதிநுட்பச் செயல்களையும் காணலாம்.

அவர் சாப்பிட்ட இலையை அவரே (கெட்டி முதலியாரே) எடுக்க வேண்டும் என்று கருதிய திருமலை நாயக்கர் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். முன்னெச்சரிக்கையாகச் சுரை இலையைக் கொண்டு வந்து, உணவு உண்டபின் இலை வெந்து இருந்ததால், தானே சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிட்டார் கெட்டி முதலி!

இப்படிப்பட்ட அறிவு சான்ற கெட்டி முதலியின் இறப்பைப் பேசுகிறது இத்தொகுப்பில் உள்ள பவானிக் கூடல் கைபீது.

அஃதாவது, மைசூரை ஆண்ட சிக்கதேவராய உடையார் கெட்டி முதலியாரின் ஆட்சியைத் தொலைக்க நினைத்து, கெட்டி முதலியைக் கொல்ல ஆணையிட்டார். அதன்படி, அந்தியூர்க்குக் கிழக்கே கெட்டி முதலியாரைக் கொண்டு சென்று, ஒரு சாக்குப் பையில் கட்டி, இரும்பு உலக்கையால் அடித்துக் கொன்றார்கள் எனக் குறிப்பிடுகிறது சுவடி.

சீயாளி கெட்டி முதலியாரின் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. இக்கெட்டி முதலியார் பரம்பரையினர் தமிழகத்தில் பல கோயில்களைக் கட்டிப் பணிபுரிந்துளர் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தகும்.

எடுத்துக்காட்டாக, கொங்கு நாட்டிலுள்ள அந்தியூரில் கெட்டி விநாயகர் எனும் விநாயகர் கோயில், அவ்வூர்ச் சிவாலயத்தில் உளது. இச்சிவன் கோயிலைக் கட்டியோர் கெட்டி முதலியார்களே.[15] ஓமலூரில் இருக்கும் சிவன் கோயிலையும் கெட்டி முதலியார்களே அமைத்ததாகக் குறிப்பர்.[16]

கெட்டி முதலியார்களின் அரசுச் சின்னங்கள் விற்கொடி, புலி, மீன் உருவங்கள் என்பார் பம்மல் சம்பந்த முதலியார்.[17]

அவிநாசி

**அவிநாசி தாலுகா கைபீது;** புராண அடிப்படை கொண்டது. வாரணாசி, அவிநாசி, புஷ்காக்ஷேத்ரம், பிரம்ம தீர்த்தம் முதலிய பெயர்கள் ஏற்பட்டதற்கான புராண விளக்கங்களை நவில்கிறது.

**கந்த புராணம், பவிஷ்ய புராணம், பிரம்மாண்ட புராணம்** ஆகிய புராணங்களே இச்சுவடிக்கு ஆதாரங்களாம். தமிழக சாதி வரலாற்றில் இக்கைபீது இன்றியமையாததாகிறது.

அவிநாசித் தலத்தில் ஒரு 'சூத்திரன்' கோயிலைச் சார்ந்த பிராமண வகுப்பாருடன் பந்திபோசனம் முதலியன செய்து கொண்டு இருந்த குற்றத்துக்காக, கோயிலில் இருந்த 60 தண்டிகைக் காரர்கள் எனப்பட்ட குருக்கள்மார் தீப்புகுந்து உயிர்விட்டனர் எனத் தெரிவிக்கிறது இச்சுவடி.

ஏழாம் திருமுறை தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுவார். இவர் திருமுருகன் பூண்டிப் பகுதியில் வரும்போது வேடர் வழிப்பறி செய்ததாகவும். பின் இவர் பாடலால், அவர்கள் செல்வத்தைத் திருப்பித் தந்தனர் என்றும் ஒரு வரலாறு கூறும். இச்சுவடியில், வழிப்பறி மட்டுமே குறிப்பிடப்படுகிறது. சுந்தரமூர்த்திகளது பயணத்தின்போது, கொள்ளைத்தொழில் வேடுவர், அவரின் தன்மையால் தம் கொடுந் தொழிலைக் கைவிட்டனர் எனக் கொள்ளவேண்டும் என்கிறார் **சி எம். ராமச்சந்திரன் செட்டியார்.**[18]

சுந்தரமூர்த்திகளின் பாடலுக்கு, பிள்ளையுண்ட முதலை, பிள்ளையை உமிழ்ந்த கதையும் இச்சுவடியில் வருகிறது. "அருட் கடலாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், நிலையில்லாத உடல் என்றும் முதலையின் வாயினின்று, உயிர் என்னும் பிராமணப் பிள்ளையை, ஆதிதிரோதாயி என்னும் யமனாலே, நாதாந்தம் என்னும் குளக்கரையிலே உமிழ்வித்து, சிவம் என்னும் அப்பிள்ளையின் தந்தையோடு சேர்ப்பித்தார் என்பது அதன் பொருள்', என்பார் செட்டியார்.[19]

### தொரவலூர்

**தொரவலூர் அயினேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு:** இச்சுவடி புராண அடிப்படை கொண்டதே. புராணத்தில் கூறப்பட்ட கருத்துக்களை, மக்கள் கற்பனைகளுக்குத்தக மாற்றி யமைத்து வரலாறாக வழங்குவது உண்டு அவிநாசித் தலத்திற்குத் தென்கிழக்கில் இருக்கும் மூங்கில் வனத்தையும், ஆண்டு உள்ள சிவலிங்கப் பெருமையையும் பகர்கிறது இச்சுவடி.

சீதாராம சாஸ்திரி, சேஷராம சாஸ்திரி, ஸ்தானிக பொன்னையன் என்ற மூவர் சாட்சியாக எழுதப்பட்ட வரலாறு என்று சுவடியின் இறுதிப் பகுதி அறிவிக்கிறது.

### சேவூர்

**சேவூர் வாலீஸ்வரசுவாமி கைபீது:** இச்சுவடியும் புராண அடிப்படை கொண்டதே.

பிரம்மாண்ட புராணத்திற் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப் படையில் எழுதப்பட்ட வரலாறு இது. பிரமாண்ட புராணம் பதினெண் உப புராணங்களில் ஒன்று.

கோவை மாவட்டச் சேவூருக்கு செம்பியன் கிழானடி நல்லூர் என்றொரு பெயரும் உளது.[20]

சேவூர்த்தல பெருமாள் பெயர் கல்வெட்டுக்களில் ஆளுடையார் திருக்கபாலீச்வரமுடையார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.[21]

சேவூர் வாலீசுவர சுவாமி தேவஸ்தானம் எனும் சிவன் கோயி லில் வீரநஞ்சராசன் உடையார், வீர சோழீஸ்வர தேவர், வீரராசேந்திர தேவர் முதலியோர் குறித்த கல்வெட்டுக்கள் உள.

### மடவளாகம்

**மடவளாகங் கைபீது** எனும் ஓலைச்சுவடி கல்வெட்டைச் சாற்றுவதாகும்.

செங்கற்பட்டு மாவட்டம் மடவளாகம் எனும் கிராமத்திலுள்ள குருமாரேஸ்வரர் ஆலயக் கல்வெட்டு இது. இதனால், மாறல்

எனும் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலில் வாலி பூசை செய்ததாக குறிக்கப்பெறுகிறது. இதுவும் மக்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதே யாம்.

**பதிப்பு முறை:** வரலாறு தெரிவிக்கும் சுவடிகளாதலின் கல் வெட்டுப் பதிப்பைப் போல, மூலத்தில் உள்ளவாறே, திருத்தப் படாது. பதிப்பிக்கப் பெற்றுள. இருப்பினும், மூலத்தில், பெரும் பாலும், மெய்களுக்கு ப்புள்ளி இடாதிருக்க, இங்கு விளக்கத்திற்காக, புள்ளியிட்டுப் பதிப்பிக்கப்பட்டுளது என்பது அறியத்தகும். பத்தி பிரிப்பு, நிறுத்தற் குறியீடுகள் ஆகியவை சுவடியில் இல்லாதவை.

**உரைநடை:** கி பி 18, 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் உரை நடை நெறியினை விளக்கவல்ல நூல் இது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடிகள் சிலவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்து, தமிழ் உரைநடை வளர்ச்சி எனும் நூல் கண்ட அ. மு. ப. அவர்கள் விளக்கியுள்ளார்கள் என்பது ஈண்டு நினையத்தகும்.

நீண்ட வாக்கியங்கள், வடமொழிச் சொற்கலப்பு, ரகர றகர மயக்கங்கள், வழக்குச் சொற் பிணைப்பு, நேரில் பேசுவது போன்ற விளிக் குறிப்புகள், ஒருமை பன்மை மயக்கம், முதலிய கூறுகள் அந்நாள் உரைநடைக் கூறுகளென்பதை இந்நூலால் உணரலாம்.

வானத்தைச் சேர்ந்த என்பதற்கு, வானத்தில் சேர்ந்த என்றாங்கு உருபு மயக்கம் கொண்டும் சிலபோழ்து உரைநடை செல்வதையும் நோக்கலாம்.

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ.(தமிழ்). எம்.ஏ,(ஆங்கிலம்) பி.எட்., டிப்.வ.மொ., பி.எச் டி.
பதிப்பாசிரியர்

## அடிக்குறிப்புகள்

1. The New Royal Persian-English Dictionary (1932). p. 341.
2. பெரிய திருமொழி 2.5 : 3, 5, 6.
3. மதுரை நாயக்கர் வரலாறு (சென்னை, 1960), ப. 102.
4. சிரஞ்சீவி, புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு (சென்னை, 1980), ப. 106.
5. அ. கணபதி. தமிழக வரலாறு, (மதுரை, 1980), பக். 132-137.
6. E. Thurston, Castes and Tribes of Southern India, Vol. III, p. 3.
7. தமிழகம், ஊரும் பேரும் (சென்னை, 1950), ப. 33.
8. S.I.I. vol. V. No. 976.
9. S.I.I vol. III. No. 205.
10. S I.I. vol. III. No. 49.
11. Inscriptions of the Pudukkottai State, No. 82.
12. டி. வி. எஸ். பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு (1958), ப. 193.
13. ஷை, ப. 225.
14. அ.கி.சு, நூலகச் சுவடி எண். டி. 2955.
15. பம்மல் சம்பந்த முதலியார், சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும், ப. 7.
16. Ibid., p. 55.
17. Ibid., vol. IV, p. 3.
18. ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கொங்கு நாடும் (கோவை, 1921), பக். 56
19. Ibid, ப. 57.
20. தி. ந. சுப்பிரமணியம், தென்னிந்திய கோயிற் சாசனங்கள், (சென்னை, 1953), பாகம் 1, ப. 202.
21. ஷை, ப. 210.

# I

## விசயநகர அரசர்களின் வம்சாவளி வரலாறு

புக்கர்; மங்காம்பாள்

சங்கம ராசர், மாலாம்பிகை

1. ஹரிஹரர் I (ஆட்சியாண்டு கி.பி. 1336-1354)
2. கம்பா — சங்கமா
3. புக்கர் I (ஆட்சியாண்டு கி.பி. 1354-1377)
4. மாரப்பா
5. முத்தப்பா

புக்கர் I:

1. ஹரிஹரர் II (ஆட்சியாண்டு 1377-1404)
2. விருபன்ன உடையார்
3. பாஸ்கரர்
4. திப்பராசர்
5. சிக்கராசர்

1. சதாசிவ மஹாராயர்
(ஆ.ஆ. கி.பி. 1407)

2. புக்கர் II
(தேவராயர் I)
(ஆ. ஆ. கி.பி. 1404-1422)

3. விருபா க்ஷமஹாராயர்
(ஆட்சியில் அமர்ந்த ஆண்டு
கி.பி. 1404)

புக்கர் II (தேவராயர் I) அவர்களின் மக்கள்:

1. விஜயராயர்
ஆ.ஆ. 1422-1423

2. பாஸ்கரர்

3. மல்லண்ண உடையார்

4. ஹரிஹரர்

5. கொலை செய்யப்பட்ட ஒருவர்; பெயர் அறியப்படவில்லை.

விஜயராயர் அவர்களின் மகன்:

தேவராயர் II
(ஆ.ஆ. 1423-1446)

அன்னமதேவராயர் கைமீது, முதலாம் தேவராயரையே 'அன்னமதேவராயர்' என்றும், இரண்டாம் தேவராயரை 'ராயதேவர்' என்றும் குறிப்பிடுகிறது.

தேவராயர் II அவர்களின் மக்கள்:

மல்லிகார்ச்சுனராயர்
(ஆ. ஆ. 1446-1465)

விருபாக்ஷராயர்
(ஆ.ஆ. 1469-1478)

## II

### மதுரை நாயக்கர்கள் வரலாறு

(1) விசுவநாத நாயக்கர்
(1529 - 64)

(2) கிருஷ்ணப்ப நாயக்கர் I
(1564 - 72)

(3) வீரப்ப நாயக்கர்
(1572 - 95)

(4) கிருஷ்ணப்பா நாயக்கர் II (1595)

விசுவப்ப நாயக்கர்

கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர்

(5) முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர்
(1601-09)

6) முத்துவீரப்ப நாயக்கர் I

7) திருமலை நாயக்கர்
(1623-59)

குமாரமுத்து நாயக்கர்

(8) முத்துவீரப்ப நாயக்கர் II
(1659)

(9) சொக்கநாத நாயக்கர்
(1659-82)
(மனைவி மங்கம்மாள்)

(10) முத்து வீரப்ப நாயக்கர் III
(1682 - 89)
(மனைவி முத்தம்மாள்)

(11) மங்கம்மாள்
(1689 - 1706)

(12) விஜயரங்க சொக்கநாத நாயக்கர்
(1706 - 32)
|
(13) மீனாட்சி அரசி)
(1732 - 36)
(விஜயரங்க சொக்கநாதர் மனைவி)

## III

### இராமநாதபுரம் சேதுபதிகளில் இன்றியமையாதவர்களின் கால வரிசை

| | |
|---|---|
| சடைக்கத் தேவர் I | 1605-1622 |
| கூத்தன் சேதுபதி | 1622-1636 |
| சடைக்கத் தேவர் II (தளவாய் சேதுபதி) | 1636-1645 |
| இரகுநாத சேதுபதி (திருமலை) | 1645-1670 |
| கிழவன் சேதுபதி எனும் இரகுநாத சேதுபதி | 1671-1710 |
| திருவுடையாத்தேவர் எனும் விசயரகுநாத சேதுபதி | 1710-1720 |
| பவானி சங்கரத் தேவர் | 1720-1729 |
| இராணி மங்கலேசுவரி நாச்சியார் | 1803-1812 |

## IV

### சிவகங்கை மன்னர்களின் கால அடைவு

| | |
|---|---|
| சசிவர்ணத் தேவர் (சிவகங்கையின் முதல் மன்னர்) | 1730-1750 |
| முத்துவடுகநாத உடையத் தேவர் | 1750-1772 |
| மருது பாண்டியர் (சின்ன மருது, பெரிய மருது) | 1780-1801 |

# அன்னமதேவராயர்

## கைபீது

### டி. 3122

விஜயநகரத்திலிருந்து வந்த மல்லராசா அன்னமதேவராயர் என்கிறவர்களுடைய மகா விசேஷித்த கைபீது.

சாலிவாகன சகாப்தம் 1000 வருஷமான பின்பு விஜயநகரத்திலே கற்னாடக பிறபுவாயிருந்த அன்னமதேவராயர் ராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டு திராவிட தேசமான காஞ்சி பட்டணங் கட்டிக்கொண்டு வெகுனாளாயிந்த தேசத்துலே பிறபுத்துவம் பண்ணிய பிறகு, அவர் வமுசத்தில் ராயதேவர் என்கிறவரும் ஆந்திர கற்னாடக திராவிட தேசங்களும் கட்டிக்கொண்டு தனம் நீதியாயி ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அவருடைய பட்டஸ்ரீ கலியாணம்மாள் யென்கிறவள் சேது[1] யாத்திரைக்கிப் போகச்சே யிந்த காஞ்சிபுரத்திலே யிருந்து சிறுது பிறாமணாளும் கூட சேதுவுக்கு அவர்கள் பின்துடர்ந்து போனார்கள்.

போனவிடத்திலே, அந்த ராசஸ்ரீயானவள் சேது ஸ்நானம் பண்ணி பிராமணாளுக்கு தனம் தானம் பண்ணுகிற வேளையிலே, யிந்த காஞ்சிபுரத்திலிருந்து போன பிராமணாள் சொன்னது காஞ்சி துக்குடியிலே வல்லமென்கிற[2] கிராமம் கொஞ்ச கிராமமாயிருக்குது. அந்த கிராமத்தை யெங்களுக்கு அக்கிராகாரம் பண்ணிக் குடுக்கவேணுமென்று கேட்டத்துக்கு அந்த ராஜஸ்ரீயானவள் சொன்னது அந்த கிராமம் தேவஸ்தானமாயாவது அக்கிராக்கரமாயிருந்தால் தானம் பண்ணமாட்டோம். அப்படி தானம் பண்ணினாலுந் தானத்து செல்லமாட்டாது யென்று சொன்னத்துக்கு அந்த பிராமணாள் வல்லமென்கிற கிராமம் தேவஸ்தானமுமல்ல அக்கிராகாரமுமல்லவென்று சொன்னது கேட்டு, அந்த ராசஸ்ரீயானவள் தனுஷ்கோடியிலே யிருந்(து) வல்லமென்கிற கிராமத்தை பிராமணாளுக்கு சற்வ மானியமாயி தத்தம்பண்ணிப் (போட்)டு அவளுடைய தேசம் விஜெயநகரத்தே போயிச் சேர்ந்தாள்.

அதின் பிறகு தானம் வாங்கின பிராமணாள் யிந்த வல்லமென்கிற கிராமத்துக்கு சேதுக்கரையிலே கிறான புண்ணிய காலத்திலே ராஜஸ்ரீ தானம்பண்ணி யிருக்கிறாளென்றும் யினிமேல் யெங்களுக்கு தீர்வை முதலானதெயும் குடுக்க வேணுமென்றுஞ் சபத்தி செய்த விடத்தில் ஸ்தானத்தார் குருக்கள்மார் மேளவாத்தியகார் தாசி முதலான சினங்களும் வடக்கே விசெயநகரத்துக்குப் போயி ராயதேவரைக் கண்டு பேட்டிபண்ணிக்கொண்டு நடந்த சமாச்சாரங் களை யெல்லாம் சொல்லி அம்மாள் தானம்பண்ணினது பிராமணாள் சபத்தி செய்து தேவஸ்தானத்துக்கு கிராமம் நடக்கவொட்டாமல் செய்ததும் யிதுவெல்லாம் விபரமாய் சொல்லிக்கொண்டவிடத்திலே ராயதேவரானவர் யிந்த ஸ்தானிகளுககு தயிரியஞ் சொல்லி தன்னிடத்திலிருக்கிற மல்லசெட்டிகளை அவர்களுடன் கூட அனுப்பி அந்த பிராமணாளை துரத்திவிட்டு தேவஸ்தானத்தை நிலைநிறுத்தச் சொல்லி அனுப்பிவிச்சார்.

அந்தப்படியே அவாள் வந்தவிடத்திலே யிந்த கிராமத்திலே யிருக்கிற பிராமணாள் வெகு சினங்களை கூட்டிக்கொண்டு ராசா ஆக்கினை(னை)ய ஷடாவிச்சவிடத்திலே வந்திருக்கிற மல்லசெட்டிகள் பெலசாலிகளானபடியினாலே கையிலே யிருப்பு உலக்கையை யெடுத்துக்கொண்டு பிராமணாளை துரத்தி துரத்தி அடித்தார்கள்.

பிராமணாளெல்லாரும் பயந்து ஓடிப்போயி அதிலொரு பிராமணன் வைசகல்ப் போருக்குள்ளே புகுந்துகொண்டான். அவனை ஒரு மல்லன் யிருப்பு உலக்கையினாலே அடிச்சயிடத்திலே அந்த பிராமணன் ம(ண்)டை நசிங்கி செற்றுப் போனான்.

அந்த தோஷம் அந்த மல்லனுக்கு வந்தபடியினாலே அந்த தோஷம் போ(கிற) நிமிற்த்தியாற்தம் அந்த மல்லனாகப்பட்டவன் வல்லம் (திருவரங்)கத்தீஸ்வரர் கோயிலுக்கு யீசானிய திக்கிலே சிவ பிறதிஷ்ட்டை பண்ணி வைற்றான்.

அப்போ ஸ்தானிகாளுங் குருக்கள்மாரும் அவனுக்கு மத்தித்து செய்தபடியினாலே அத்தோஷம் யிவாளுக்கும் வருமென்று தனம் சாஸ்திரிகள் சொன்னபடியினாலே யிவாளுங் கோவிலுக்கு மேல்புறம் சிவ பிறதிஷ்டை பண்ணார்கள்.

யிந்த ரெண்டு கோவிலும் பிரிச்சு வந்தவாசிக் கோட்டை கட்ட சுலுப்புகான் கொண்டுபோயி போட்டானாம். அந்த லிங்கங் கள் மாத்திரம் யின்னம் யிருக்குது.

அந்த பிறமகத்தி விமோசனமாயி போனபடியினாலே அந்த பிறமஅத்தி சுரூபம் செய்து சிலாவிக்கிரகம் கொளத்துக்கு அக்கினி மூலையிலிருக்குறது.

பிறகு அந்த மல்ல செட்டிகளிலே துந்துசெட்டி யென்கிற சற்தாருடனே கூட னாலு வூட்டுக்காறர் யிந்த ஊரிலே வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதின் பிறகு யிறாய தேவரண்டையிலிருந்து வெகு மல்ல செட்டிகள் வந்து யிந்த தேசங்களிலே றாயர் மனிஷர்களாய் அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அப்படி யிருக்கயில் யிந்த கிராமத்திலே செட்டிகள் துன்மார்க்க மாயி ஊரிலே ஒருத்தரையும் ...திரு வைக்காமல் கோயில்களுக்கும் நீதி தப்புவிக்கயில் திரும்பியுங் குருக்கள்மார் றாயரண்டை போயி பிராது பண்ணிக்கொண்டு அபோ யிந்த செட்டிகளை (அ)ப்போ விசைய நகரிக்கி அழைப்பிவிச்சு யிருக்கையில் யிந்த செட்டிகள் வெதபேரை சேர்மானஞ் செய்துக்கொண்டு வெகு ராஜியங்கள் செயிச்சபடியினாலே ராசாவானவர் யிந்த செட்டிகளிலே துந்து செட்டிக்கி திவானிசி உத்தியோகங் குடுத்து அவன் வழியால் அதிகாரமும் நடந்துக் கொண்டிருக்கையில் அப்போ செட்டிகள் வெதபேர் அதிகாரத்துக்கு யிந்த தேசத்துக்கு வந்து ராசமல்லரென் கிற செட்டி ராசா யிந்த காஞ்சி தேசம் ரெக்ஷிச்சுக் கொண்டு அனேகஞ் சிவஸ்தளம் விஷ்ணு ஸ்தளத்துக்கு -12- மங்களம் நடப்பி விச்சு சிலாசாசனம் பண்ணி வம்சமாயி ராஜியம் ரெக்ஷிச்சார்.

அப்படியிருக்கையில் விஜையநகரத்து ராசாவண்டை திவானி சியாயிருக்கிற துந்துசெட்டி ரொம்பவும் செறவத்தையடைஞ்சு றாஜியத்திலே கிராமங்களுக்கு விக்கினந் தேடி வெகு சினங்களுக்கு சீர்மை உண்டாக்கினா னப்போ றாசாவானவர் ரொம்பவும் கோபத்தை மனதிலே வைத்துக் கொண்டு அப்படியே மகா

விறோதஞ் செய்தவனை வைக்க கூடாது யென்று சம்மாரம் பண்ணு கிறது. றா(சா) யோசனை செய்தவிடத்தில் அதுக்கு அவன் வசப் படாமலிருக்குறபடியினாலே ராசாவானவர் வஞ்சனையாயவனைக் கொல்லவேணுமென்று நினைச்சு கொஞ்ச காரியமிருக்குதென்று வஞ்சனையாயி பேசி வரச்சொல்லி அனுப்பிவிச்ச யிடத்தில் அந்த மல்லசெட்டி றாசா வேட்டிக்கி அந்தப்புரத்துலே வந்தயிடத்திலே அந்த ராசா சப்பிரகூட மஞ்சத்திலிருக்கச்சே அந்த கட்டில் மேலே வினோதமான பொம்மைகள் கட்டி யிருக்கிறதின் மேல்னோக்கி பார்த்துக்கொண்டு யிருவருமிருக்கிற வேளையிளவருடைய கடாரீ கீழே வைத்திருந்ததை ராசாவெடுத்துக்கொண்டு மரத்துனாலே கட்டாரி போல் செய்திருந்ததை கீழே அதுக்குத் தெரியாமல் செட்டியானவன்... அதையெடுத்துக்கொண்டு றாசாவண்டை அனுப்பிவிச்சுக் கொண்டு வெளியிலே வருகையில் றாசாவான வன வஞ்சனையாயி ஒரு புலியை வாசலிலே பெரனுலே கட்டிவைச்சு யிவன் போகச்சே அந்த தாவுலே யிரு பிறத்திலேயும் கதவைச் சாத்தி வியாக்கிறத்தை விடச்சொல்லி அப்படியே விட்டயிடத்திலே அந்த புலி யிந்த செட்டிமேலே பாய்கையில் அவன் புலியுடனே சண்டைபண்ணி யதைக்கொன்றுபோட்டு அந்தை றாசாவண்டை கொண்டுவந்து யெறிஞ்சான்.

றாசா வெகு சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகு கனகாபி ஷேகம் பண்ணி வெகுதிரவியம் ராசிராசியாயிக் கொட்டினயிடத்திலே அந்த திரவியமெல்லாந் தானதற்ம பண்ணிப்போட்டான்.

அப்போ அந்த வல்லத்துக் குருக்கள்மாருலே **திருமலைப் பட்டரென்கிறவர்** அவடத்திலே ராசா பேட்டிக்கி வந்திருந்த விடத்திலே யிந்த குருக்கள்பேரில் தயவு வைச்சு னாற்பதுனாயிரம் வறாகன் மட்டுக்குங் கொடுத்து கோவிலுக்கு திருப்பணி நடப்பிவிக்கச் சொல்லி திட்டஞ்செய்தனுப்பிவித்தார்.

அப்படியே அந்த திரவியத்தை எடுப்பிச்சுக்கொண்டு வந்து யிந்த கோவில் ஆஸ்தான மண்டபம் திருமடமாளிமண்டபம் முதல்ப் பிறகார மிரண்டாம் பிறகாரம் தென்பிற நிலை கோபுரங் கட்டி பெரிய யேரி கட்டிவைத்து சிற்றேரி குளமிதுவெல்லா முண்டாகக் கோவிலுக்கு சித்திர தேருகளும் உச்சவாதிகளும் வெகு விமரிசையாய்

நடப்பவிச்சார்களாம். யிந்த சுவாமியாருக்குப் பாரு வேட்டைக்கி நாலு மண்டபங் கட்டிவைச்சு உச்சவ விக்கிரகம் விஷ்த்திரிச்சு செய்விச்சார்களாம். அந்த வெளிப் பிறகாரங்கள் கல்லுகளை கொண்டுபோயி முன்னேயிருந்த துலுக்கர் கோட்டைகள் கட்டினார்களாம்.

அந்த மல்லன் புலியோடே யுத்தம்பண்ணினபடியினாலே கோவில் மதளிலே புலியும் அந்த மல்லனையுஞ் சிலையிலே செய்திருக்குது.

அந்த துந்து யென்கிற மல்லன் கல்லுனாலே செய்திருக்கிற ஸ்தம்பகல்லு யெடுத்து விளையாடுகிற கல்லு கோவிலுக்கு வாய்வு மூலையிலே தெருவிலே நட்டுயிருக்குறது. அது ரொம்பவும் பாரியாயி ஒரு கிசப் பிறமாணம் அளவினுடனேயும் ரொம்பவும் பெருமனாயு மிருக்குது.

அந்த மல்லர் முன்னாலே யிந்தவூரிலே மேல் பிறம் யேரி கீழை வரதராசப் பெருமாள் என்று பேருண்டாயி பிறதிஷ்ட்டை செய்திருக்குறார்கள். அந்த சுவாமியாருக்கு கோவில் மண்டப முதல் கட்டி வைச்சு நடப்பிச்சாம்.

---

1. சேது-இராமேசுவரம்

2. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வல்லக்கோட்டை.

# வாமனாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகா விசஷேித்த

## கைபீது

## டி. 3123

ஆதிகாலத்திலே யிந்த மூன்றாம் பங்காகிய தெண்டகாரிணியத்திலே சமுத்திரக்கரை யோரத்திலே **வாமனாபுரமென்று** ஒரு பட்டணமிருந்துது. அதில் சயினர் பிறபுத்துவம் பண்ணிவந்தார்கள். அவாள் வமுசாவழியைப் பத்தின சரித்திரம் ஒருவராலுங் காப்பாற்றப்பட்டிருக்கவில்லை.

வாமனாத புரத்திலே யொரு மகா பிறபலமான சயின ஆலயமிருந்துது. அதிலிருந்த சயின விம்பம் மகா முக்கியமானதாக யிருந்து **நேமினாத சுவாமி** அல்லது தீர்த்தங்கர் என்று அப்போ யிருந்த சறுவ சயினாளாலுஞ் சுவிகரிக்கப்பட்டது. இது அதிக சக்தியுள்ள விம்பமாயிருந்தபடியினாலே வெகுபேர் சயினாளதுக்கு வருஷந்தோறும் பொருத்தினைகள் செய்வார்கள்.

யிந்த ஸ்தளத்தில் மகாவிரதத்தரேருக்கிற வாணசன்னாசியா மடபதிராயிருந்த ஆலயத்துகுள்ளாக வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள். ரெண்டுனாள் மூன்றுனாளைக்கி பிற்பாடு யிந்த ஸ்தளத்தை விட்டு தெருவீதியில்ப் பிறப்படுகிறது.

அப்போ வெகு சயினாள் வந்து யிவரை தங்கள் வீடுகளில் சிஷ்சைபண்ணிக் கொள்ளும்படியாய் வேண்டிக் கொள்ளுகிறது அவர் உறுப்பதீகமில்லாதவனாய் அங்க யீனமத்தவனாயிருக்கிற சயினன் வீட்டில் பிறவேசஞ் செய்து பிஷ்சை பண்ணிக்கொள்ளுகிறது. அவர் (உப்பு), பிளிப்பு, கைப்பு, நெய்ப்புத் தவிர்த்துடைத்து... ஆகாரம் பண்ணிக் கொள்ளுகிறது.

இவர் சறுவத்திராளாலும் கண்கண்ட தெய்வம் போலே பூசிக்கப்பட்டிருந்தார். இவர் அல்லும் பகலும் சிபதவத்துடனே

யாதொருத்தநிடத்திலும் பேசாமலிருப்பார். இப்படி யிவர் யிருக்கையில் ஒருனாளவருக்குச் சொற்பனமாகி வாமனாதபுரம் யின்ன மூன்று னாளைக்குள்ளாக சமுத்திரங் கொண்டுபோ(குதெ)ன்று அறிவிக்கப்பட்ட.... அதை யவரப்போ ராசாவாக யிருந்த மயிலமானுக்கு அறிவித்தபோது முதல்வன் பறவாய் பண்ணாமலிருந்து பிற்பாடு நம்பி தன் சனங்களுடனே வமனாதபுரத்தை விட்டு அதற்கு மேல் பிறத்தில் போயிருந்தான்.

அப்போ யிந்த நிற்வாண சன்னாசியாரும் யிந்த நேமினாத சுவாமியினுடைய விம்பத்தை யெடுப்பித்துக்கொண்டு ராசா வந்திருந்த யிடத்திலும் வந்து சேர்ந்தார். அந்தப்படி யிவாளிட வந்து சேந்து மூன்றா(ம்) நாளிலே வாமனாதபுரம் முழுவதும் பிறவாகங் கொண்டு சமுத்திரத்தில் முழுகிப் போச்சுது.

அப்போ யிந்த வாமனாதபுரம் என்ற பட்டண மகா விஷ்தாரமான பட்டணமாயிருந்துது. இதில் சன்னியாசியினுடைய தீர்க்கதெரிசினத்தைப்பத்தி அவி விசுவாசப்பட்டிருந்த சமணாளவ்விடத்திருந்த அனைவோர்களுட பிரதாபமான பிறகாரமாய் மடி(ந்து) போய்விட்டார்கள்.

யிது கலியுகம் பிறந்து ?000 சிவ்வானம் வருஷத்துக்கு பிற்பாடு நடந்ததாய் காணப்படுது. அப்பிறம் மயிலமான் ராசா தனக்கு ராசதானிப் பட்டணமாக முழுகிப்போன வாமனாதபுரத்துக்கு மேல் புறத்தில் பட்டணங்கட்டி தன்னுடைபேர் னண்கு விளங்கும்படியாய் அந்தப்பட்டணத்துக்கு மயிலமான்நகர் என்று பேரிட்டு அதில் அஞ்சு சயினாலயங் கட்டி அதைச்சுத்திலும் சுத்துப்பிறாகாரங் களேற்ப்பித்துடுகமாயி யதிலிருந்த சயினாலயத்தில் பழைய பிறவாகங் சொண்டுபோன வாமனாதபுறத்திலிருந்த நேமனாத தீர்த்தங்கரர் விம்பத்தை ஸ்தாபனம் பண்ணி வெகு சயின பக்தியுடைத்தானவனாய் பிறபுத்துவம் பண்ணினான்.

அவன் னாளில் பிறபல சன்னாசிகளுடன் மத்த சியின சன்னாசிகளும் நிர்வாணர்களா யிருந்தார்கள். யிவாளெல்லாரும் மயிலாப்பூருக்கு சமீபங்களிலேயிருந்த பிற தளங்களிலே வாசஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

யிவாள் (வா)ரங்கள்தோறும் வனங்களை விட்டு மயிலமானகரில் பிறவேசஞ் செய்து சாஸ்திரப்படி நடக்கிற சயினாள் வீடுகளில் பிஷ்சைபண்ணிக் கொள்ளுவார்கள்.

யிவாளந்த மயிலமான் ராசா மார்த்தீகமாய் பூசிக்கப்பட்டிருந் தார்கள். யிந்த ராசா வெகுகாலமிருந்து காலம் பண்ணிப் போனான்.

அப்பிறம் **மயில்பூசிதராசன்** பட்டத்துக்கு வந்தார். அப்பிறம் **மந்தபத்திரராசசன்** பட்டத்துக்கு வந்தார். அப்பிறம் **சந்த குணசீலன்** பட்டத்துக்கு வந்தார். அப்பிறம் **(வ)ரமண்டனாதன்** பட்டத்துக்கு வந்தார்.

இந்தப்படி சயின ராசாக்களுடைய பட்டம் நடந்துவருங்கயில் வாமனாதபுரம் சமுத்திரங் கொண்டுபோய் வெகுகாலங்களுக்குப் பிற்பாடு திரும்பவும் யிவடத்திலந்த நிற்வான சயின சன்னாசிக்கு நேமிநாத சுவாமி சொற்பனத்தில் வந்து யின்ன மூன்று னாளைக் குள்ளாக யிந்த மயிலமானகர் சமுத்திரத்தினால் பிறவாகமாகிப் போகுது. ஆகையினாலே யின்னம் அடிக்கடி யிந்தப்படி சமுத்திரத்துக்கு குத்தலானபடியினாலே சமுத்திரமிந்த யிடத்தை அழுத்துக்கொண்டேயிருக்கும். ஆகையினாலே நம்முட பிம்பத்தை அப்புறப்படுத்திப் போடென்று சொன்னார். அந்தப்படியே அந்த நிற்வாண சன்னாசியார் காரியத்தை சகலருக்கு மறிவித்துப்போட்டு நேமினாதர் பிம்பத்தை எடுப்பித்துக்கொண்டு அப்பிறப்பட்டார்.

மூன்றா நாளில் இவருட தீர்க்கதெரிசினப்படி சமுரம் பிறவாக மாகிப்போய் மயிலமானகரம் அழிந்துபோய் அதுக்குச் சமீபத்தி லிருந்த ஆப்பூரைச் சேந்து பட்டணமாக்கினதில் புராதீன நாமத்துடன் சேந்து மயிலாப்பூர் என்று அழைக்கப்பட்டுது.

அப்பிறமவ்விடத்தில் சயின ராசா ஆண்டு மேல் சோள தேசத்திலிருந்திவ்விடம் வந்த பிராமணாள் கணிதம் சோதிரிஷம் அதற்வணத்திலதிக வித்தியா சாமர்த்தியமுள்ளவர்காயிருந்து மாந்திரீக பலத்துனாலே ராசாவை சயிவத்துக்குள்ளாக்கினார் களென்று மவ்விடத்தில் லிங்க பிறதிஷ்ட்டை பண்ணினார்களென்று சொல்லப்படுகுது.

சயினிய மதத்தில் யிருந்து சயிவ மதத்திலிருக்கும் பின் ராசா காலம்பண்ணியபினவர் குமாரன் கந்தப்ப ராசா பிறசத்துவம் பண்ணினா னென்று சொல்லப்பட்டது.

மேல் பழைய மயிலாப்பூரிலிருந்து மேற்கே வண்டியின் பேரில் கொண்டுபோன விம்பம் வெகுதூரம் போய் சித்தாமூரில் யிருக்கை யில் வண்டி முறிந்துது.

அப்போ அந்த விம்பம் கொஞ்சப் பழுதாகப் போனதக்கும் அதிக சக்தியுள்ளதானாலிந்த வனத்தில் ஸ்தாபனம் பண்ணினார்கள்.

வெகு வருடங்களுக்கு பிற்பாடு மயிலாப்பூரில் கப்பல் வள் தகம் பண்ணிய்வரு வைசியனுக்கு சொற்பனமாகி அவன் வந்து சித்தாமூரில் திருப்பணி செய்தான், ஏறக்குறைய 800 வருஷத்துக்கு முன் 600 வருஷத்துக்கு பின் **பழைய திருப்பத்தூர், மயிலாப்பூர், மகாபலிபுரத்தில்** யின்னம் சமுத்திரத்தருகில் யிருக்கிற சில பட்டணங்களை சமுத்திரங் கொண்டுபோனதாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

அதுக்கு முன்னிரண்டுதரம் விம்பத்தை முன்னிட்டு அறியப் பட்டிருக்கிறதாய் காணப்படாமல் வசந்தையாய் சொல்லப் பட்டிருக்குது.

# மாமலைபுரம்

## கைபீயத்து

## டி. 3774

பூர்வம் மூன்றாம் சதுற்யுகத்திலே புண்டரிகமகாரிஷ என்கிறவர் மேற்கு ஸமுத்திரத்திலே யிருக்கிற தடாகத்தில் நின்றும் பத்மத்தை கிறிகிச்சுக்கொண்டு, திருநாறாயணபுரம் வந்து திருநாராயணனை அற்சிச்சு பூ பிறதெக்ஷணம் பண்ணிக்கொண்டு, வரவேணுமென்று யோசனைபண்ணி, அப்படியே பூப்பிறதெக்ஷணம் பண்ணிக்கொண்டு வருகிறபோது, தாம் தினப்பிறதிதினம் எவடத்திலே தாமரை புஷ்பத்தை கண்டால் அத்தை பகவானுக்கு ஆராதனம் பண்ணிக் கொண்டு வரும்போது யிந்தயிடம் ஆறணியமாய் யிருந்துது

அந்த ஆறணியத்தில் ஒரு தாமரை தடாகம் அனேக அலாங் காரத்துடனே யிருந்தபடியினாலே அனேக ரிஷிகள் யிந்த ஆற ணியம் தபஸுக்கு மகா யோக்கியமாயிருக்குதென்று யோசனை பண்ணி அனேக காலம் இவடத்திலே தபஸு பண்ணிக்கொண்டு யிருந்தார்கள்.

யிப்படி யிருக்கும் நாளில் புண்டரிக மகாரிஷியும் தென்தேச மெல்லாம் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டு யிந்த ஆறணியத்திலே வந்து, யிங்கே யிருக்கிற றிஷிகளையும் தாமரைத் தடாகத்தையும் பார்த்து, "றொம்பவும் மனோறம்மியமாய் யிருக்கிறது; நாமி வடத்திலே தானே வாசம் பண்ணிக்கொண்டு யிருக்கவேணு" மென்று யோசனைபண்ணி, யிவடத்திலே தபசுபண்ணிக் கொண்டு யிருக்கப்படா நின்ற றிஷிகளோடும் கூடிக் கொண்டு தாமும் தபஸு பண்ண வேணுமென்று தாமரை தடாகத்தையும் புஸ்பத் தையும் பார்த்து, "யிந்த புஷ்பத்தை எடுத்து பகவானுக்கு ஆரா தனம் பண்ணவேணுமெ"ன்று தாமரை தடாகத்திலே இறங்கி ஸகஸ்ரதள கமலத்தைப் பறிக்குமளவில், அதிலேஹரியப்பரியனென் னப்பட்ட றாஜா பூர்வம் பிரஹ்மணனுடைய சாபத்தினாலே யிந்த தடாகத்திலே முதளையாகப் பிறந்து, அனேக காலம் வாசம்

பண்ணிக்கொண்டிருக்கப்பட்ட முதளை புண்டரிக மஹாரிஷியி னுடைய பாதத்தை வாயாலே வாயாலே பிடிக்கவேணுமென்று போகச்சே, தாமரைக் கொட்டயினுடைய முள்ளுனாலே நாக்கில் நின்று றத்தம் புறப்பட்டு மூற்சை அடைஞ்சு கறையிலே விழுந்து மூற்சை தெளிஞ்சுயிருக்க றிஷியும் ஸஹஸ்ரதள கமலத்தை[1] பறிச்சுக் கொண்டு கரையிலே வந்து முதளையைப் பாத்து நீயாரென்று கேட்க, முதளை சொன்னது, "பூர்வம் றாஜாவாய் அனேக கிறுதுக் களெல்லாம் பண்ணிக்கொண்டு, பிறாமணாள் முதலானபேர்களுக்கு அகண்ட ஸாம்புறாச்சியமுங் குடுத்துக் கொண்டு யிருக்கச்சே, ஒரு பிறாமணன் வந்து சாதம் வேணுமென்று கேட்டான்; அதுக்கு நான் ஸ்ப்தஸாம்புறாச்சியமும் குடுக்கச்சே சாதம் கேட்டானென்று சிரிச் சேன்; அவர் நீயென்னை பரிகாஸம் பண்ணினபடியினாலே முதளை யாகப் போகக்கடவாயென்று சபிச்சார். அந்த சாபத்துக்கு எப்போ விமோசனமென்று கேட்டேன். அதுக்கு, அந்த பிறாமணன் சொன்னது புண்டரீக மகாறிஷி வரப்போறார் அவரைக் கண்டால் உன் சாபம் விட்டுப்போமென்று சொன்னார். ஆகையால், உம்மைக் கண்டபடி யினாலே என் சாபம் விட்டுப்போம்படியாய் என்னிடத்திலே தயவு பண்ண வேணுமென்று கேட்டேன். அப்படியே ஆகட்டும் உன் வ்ருத்தாந்த மென்னாவென்று கேட்டார். அதுக்கு முதளை, யான் றாஜா சொன்னது பூர்வம் நெம்முடைய குலத்திலே அரிசேகர மஹாராஜாவென்று ஒரு றாஜா யிருந்தான். அவனுக்கு வறாகஸ்வாமி பிறத்திக்ஷமானார் அவரை ஆராதிச்சுக்கொண்டு யிருந்தான்.

அதுக்கு பிற்பாடு எங்கள் தகப்பன் **அரிநந்தன்** ஆராதிச்சுக் கொண்டு யிருந்தான். அதுக்கு பிற்பாடு நான் ஆராதிச்சுக்கொண்டு யிருந்தேன். எனக்குப் பிற்பாடு என் பிள்ளை **சதாநந்தன் மல்லறாசா** வென்னும் பேர் யிப்பவும் ஆராதிச்சுக் கொண்டிருக் கிறான் என்று சொல்லி ரிஷி கையில் சிலவு வாங்கிக்கொண்டு சொற்கத்துக்குப் போனான்.

புண்டரிக மகாரிஷியென்கிறவர் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு யிந்த புஷ்பத்தை யாருக்குச் சாத்தலாமென்று ஆலோசனை பண்ணச்சே க்ஷிறாப்பதி நாதனுக்கே யோக்கியமென்று ஆகாசவாணி சொல்லிற்று. அத்தைக்கேட்டு புஷ்பத்தை சமுத்திரக்கரையில் வைத்து சமுத்திரத்தை எறைக்கும்போது க்ஷிறாப்பதிநாதன் நம்முட

பக்தன் சிறுமைப்படுகிறானென்று அவர் ஒரு கிழவனாய் வந்து, 'நீரேன் எறைக்குறிர்? என்று கேட்டத்துக்கு, 'க்ஷிறாப்பதிக்குப் போகவேணுமென்று' ரிஷி சொல்ல, அதை சுவாமி கேட்டு, "எறைக்க உம்மாலே ஆகாது நான் எறைக்கிறேனெ"ன்று சுவாமி எறைக்க, சமுத்திரம் வடிஞ்சத்தை ரிஷி கண்டு, சந்தோஷப்பட்டு, சுவாமியென்று தெரியாமல், 'உமக்கு யென்னவேணுமென்று கேட்க, சாதம் கொண்டுவாருமென்று சொல்ல, நல்லதென்று ரிஷி சம்மதிச்சு, சாதம் கொண்டுவருகிறேனென்று மல்லாபுரி பட்டணத்துக்கு வந்து, பிறசாதம் கொண்டு கொண்டுபோய் பார்க்குமிடத்தில், கிழவறாய் வந்த க்ஷிறாப்பதிநாதன் சமுத்திர சமிபத்தில் மணலை திண்ணையாய் குவித்து, அதின்பேரில் பள்ளிகொண்டு, ரிஷி சமற்பிக்க வேணுமென்று வைத்திருந்த தாமரை புஷ்பத்தையும் சாத்திக் கொண்டு யிருந்தத்தை ரிஷி கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு அனேகவிதமாய் ஸ்வாமியை ஸ்தோத்திரம் பண்ணினான்.

அதுக்கு ஸ்வாமி, சந்தோஷப்பட்டு, உமக்கு யென்னவேணுமென்று கேட்க, அடியேனுக்குத் தேவரீர் திருவடிகளே தவிர வேறெ ஒன்றும் தேவையில்லை யென்று ரிஷி சொல்லி சுவாமியினுடைய திருவடிகளண்டை பசனை பண்ணிக்கொண்டிருக்கிறார்.

பூமியிலே சயனிச்சுக்கொண்டபடியினாலே, ஸ்தலசயனச் சுவாமியென்று நாமதேயமுண்டாச்சுது. தன்னாமமாய நிலமங்கை நாச்சியாரென்று ஸ்ரீ மகாலெக்ஷுமிக்குப் பேருண்டாச்சுது.

அப்போ, அந்த பட்டணம் ஆண்டுகொண்டிருந்த மல்லேசுவர றாசா, சுவாமியையும், ரிஷியையுங் கண்டு மஹாபாக்கியமென்று கோவில் கெற்பகிரகம் மஹாமண்டபம் கோபுரம் திருமதில் முதலாகிய திருப்பணிகள் செய்விச்சு பிறம்மோச்சவ முதலான உச்சவங்கள் பண்ணிவிச்சுக்கொண்டு வந்தான்.

யிப்பால், கோயில் வருத்து வயணம் கலகத்துக்கு முன்னாலே யிந்த கோயிலுக்கு யிந்த ஊரிலே அஞ்சு காணி மானியம் தென்னந் தோப்பு தானியத்து உடவாரத்துமேரை உப்பளம் கடும்பாடி பையனூர் பூஞ்சேரி யிதுகளிலே உப்பு விக்கிறையம் 100க்கு மேரை 1. உப்பளங் காணி 2. பெருமாளேரி நெல்லுக்காணி 3. கொளத் தூர் காணி 4. மாம்பாக்கம் காணி 5 ஆத்தூர் காணி

நல்லபெற்றாள் சுரோத்திரியம் முன்னாலே.. 9 வராகன் குடுக்கிறது. கலகத்துக்குப் பிற்பாடு பேரிசு சுறோத்திரியம் . . 9 மேரை . . 12 ஆக . . 21 யிப்போ கட்டுகிறது.

கோவளத்திலே உப்பளத்துக்கு 100 . . ஆக கோவிலுக்கு வருகிறது. யிந்த வூரிலே யிலுப்பை மரம் முத்து, கோயிலுக்கு சேருகிறது. யிப்போ யிதுகளெல்லாஞ் சேர்த்துக்கொண்டு சறுக்காறிலே வருஷாவருஷம் 60 (வராக)ன் விழுக்காடு உப்பளம் மேரை தவிர் குடுக்கிறார்கள்.

யிது நடந்துகொண்டு வருகிது சிலவு றொம்ப கோயிலுக்குச் செல்லுகிறபடியினாலே, நடக்கும்படியாய் தாங்கள் தயவுபண்ணி நடப்பிக்க வேண்டியது.

---

1. சகஸ்தரள கமலம்-ஆயிரம் இதழ்கள் கொண்ட கமலம்.

# பொம்மைய நாயகன்

## கைபீது

### டி. 2750 (ஓலை)

கரிசப்பட்டுவார்ப் பூர்வ பொம்மைய னாயக்கர் பாளையப் பட்டுப் பூர்வத்திர சங்கதிக்கி விபரம் யென்னவென்றால், முன் சின்னலேகக் குமரர் ஆதியில் ஸ்ரீகர்த்தாக்களாகிய **விசுவநாத நாயக்கரய்யனவர்கள்** பிதாவாகிய **நாகம னாயக்கனய்யனவர்கள்**, ராயர் சமஸ்தானத்திலிருந்து பாண்டிய ராட்சியந் தெட்சணத்துக்கு வருகிறபோது, தெட்சணத்திலே யிருக்கிரபேரை நம்பிக்கை யில்லாமல் நாங்கள் அகோபளத்திலிருந்த பேரைக் கூடக் கூட்டிக் கொண்டு தேசத்துக்கு வந்தார்கள்.

அப்போது தெட்சண ராட்சியஞ் சண்டை சமரங்களில் நாங்கள் ரெம்பவும் உத்தரவாதம் செய்தோம். யெங்களை ரெம்பவும் நம்பிக்கையாக ஒப்புக்கொண்டு, **மதுரைக்கோட்டையில்** யெளுவத்திரெண்டு கொத்தளமும் போட்டு, யெளுவத்திரெண்டு கொத்தளத்துக்கும் **யெளுவத்திரெண்டுப் பாளையப்பட்டும்** உண்டு பண்ணிக் கொடுத்தார்கள்.

யெளுவத்திரண்டு பாளையப்பட்டாருங் காத்து உத்தரவாதஞ் செய்துகொண்டிருந்தோம். அப்போது **மருங்காபுரிப் பூச்செய நாயக்கரும்**, நாங்களுந் தாயாதி வர்கமாக ஒரு சேகரமாக யிருந்து ரெம்பவும் உருத்தாகச் சொன்னபடி கேட்டுக்கொண்டிருந்தோம்.

அப்போது யெங்கள் பேரில் ரெம்பவும் அபிமானமாகிக், கர்தாக்கள் சமஸ்தானம் தெட்சண ராச்சியம் நாற்பத்துநாலு லட்சம் பொன் சீமையில் எங்களுக்கும் பூச்செய னாயக்கருக்கும் நாற்பத்தி நாலாயிரம் பொன் சீர்மையும் விட்டுக் குடுத்து அனேக விருதுகளுங் கொடுத்து முந்தின வெகுமதியும் பாக்கு வெத்திலையும் யெங்களுக்குக் குடுத்து ரெம்பவும் அபிமானமாக நடப்பிச்சு வந்தார்கள்.

மருங்காபுரிப் பூச்செய நாயக்கரும் நாங்களும் ஒருசேகரமாகப் பாளையப்பட்டு ஆண்டு கொண்டிருந்தோம்.

அப்படி யிருக்கிற நாளையில் மருங்காபுரி பூச்செய னாயக்கருக்கும் யெங்களுக்கும் சேகரமில்லாமல் நாங்கள் வாராப்பூர்ப் பாளையப் பட்டு துண்டாய்ப் பங்கு பிரித்துக்கொண்டு பாளையப்பட்டும் ஆண்டு கொண்டிருந்தோம்

அதின்பேரில் யெங்கள் பாளையப்பட்டு தஞ்சை நகரத்துடனே சேர்ந்து தஞ்சை நகரங் கர்னாடகத்துரையள் ஸ்ரீ செவ்வப்ப னாயக்கரவர்கள், அச்சுதப்ப னாயக்கரய்யனவர்கள், ரெகுனாத னாயக்கரய்யனவர்கள், அச்சுத விசையராகவ னாயக்கரய்யரவர்கள், இவர்கள் ராச்சியம் ஆண்டுகொண்டிருக்கையில், அவர்களுக்கு நாங்கள் குமாரவற்கமாக வௌம...ம மருங்கைப் பதிக்கும் அதிப னாகிய சுஞ்சை கோத்திரம் சில்லவார வங்கிச சிரோமணியாகிய அகோபள வீரெரபு வெள்ளைய பொம்மைய னாயக்கர் அவர் குமாரனுக்கு அச்சுத விசை(யரா)கப் பொம்மைய னாயக்கரென்று தஞ்சை நகரம் அச்சுத விசெயராகவ னாயக்கரய்யனர்கள் பேருங் கொடுத்துப் பஞ்சவர்ணப் பாவாடை, யனுமக்கொடி, மகரக்கொடி, கெருடக்கொடி, புலிக்கொடி சின்மக் கொடி, சந்திரகாவி டால். உபைய வெண்சாமரம், பேரிகை, சுருட்டி, தீவெட்டி, பூச்சக்கிரக் குடை, மகர தோரண விருது இப்படி அனேக விருது மனேக வெகுமதியுங் குடுத்து அபிமானமாக நடப்பிவிச்சார்கள்.

அப்படி யிருக்குற னாளையில்த் திரிசிரபுரத்துக்கு ராசகரமா யிருந்த ஸ்ரீ சொக்கனாத னாயக்கரய்யனவர்கள் தஞ்சை நகரத்தின் பேரில்ப் பாளையஞ் செய்து, தஞ்சை நகறம் அச்சுத விசையராகவ னாயக்கரய்யனவர்களையும் வெட்டிக் கொன்றுபோட்டு, தஞ்சை நகறஞ் சீர்மையும் அதில்ச் சேர்ந்த பாளையப்பட்டும், பிரான் மலைச் சீர்மையும், திருப்பனூர் சீர்மை முதல் திரிசிரபுரஞ் சேர்க்கையாய்க் கட்டிக்கொண்டார்கள்.

அப்போது திரிசிரபுரம் ஸ்ரீ ரெங்க கிஷ்ண முத்துவீரப்ப னாயக்கரய்யனவர்கள், விசையராகவ னாயக்கரய்யனவர்கள் விசையுரெங்கச் சொக்கநாத னாயக்கரய்யனவர்கள் நாளை,

வரைக்கும் யெங்கப் பாளையப்பட்டு திரிசிரபுரஞ் சேற்க்கையாய் வெள்ளைப் பொம்மைய னாயக்கர், அவர் குமாறன் விசையராகவப் பொம்மைய னாயக்கர், அவர் குமாறன் வெள்ளைப் பொம்மை னாயக்கர், அவர் குமாறன் அச்சுத விசையராகவப் பொம்மைய னாயக்கருந் திரிசிரபுரஞ் சேற்க்கையாய்ப் பகுதி குடுத்துக் கொண்டிருந்தோம்.

அவர்களும் எங்களைக் குமாறவற்க்கமாக ரெம்பவும் அபிமானித்துச் சகல விருதுங் குடுத்து நடப்பவிச்சு வந்தார்களப்படி யிருக்குர னாளையில் பிரான்மலைச் சீர்மை, திருப்பத்தூர்ச் சீர்மை யும், யெங்கப்பாளையப்பட்டும், ராமனாதபுரஞ் சேற்க்கையாய் இரணிய கெற்ப்யாதி ரெகுநாதச் சேதுபதி அவர்கள் கட்டிக் கொண்டார்கள்.

அது முதல் விசை(ய) ரெகுநாதச் சேதுபதி அவர்கள் ஷெ ரெகுநாத சேதுபதியவர்கள் நாளை வரைக்கும் குமார வெள்ளைப் பொம்மைய னாயக்கர், அவர் குமாரன் விசைய ரெகுநாத பொம்மை னாயக்கர், அவர் குமாரன் சின்ன லெக்க குமாறப் பொம்மையனாயக்கர், அவர் குமாறன் வெள்ளைப் பொம்மய னாயக்கர், ராமனாதபுரஞ் சேற்க்கையாய்ப் பகுதி குடுத்துக் கொண்டிருந்தோம்.

அவர்களும் எங்களைக் குமாற வர்க்கமாக அனேக விருது வெகு(மதி) குடுத்து அபிமானமாக நடப்பிச்சு வந்தார்கள்.

அப்படி இருக்குர நாளையில் ராமனாதபுரஞ் சீர்மைக்கு உத்தர வாதியாகிய கட்டைத்தேவரெகுநாதச் சேதுபதியவர்களை ராசகறஞ் செய்யவொட்டாமல், பவானி சங்கரத் தேவரவர்கள், வலுவிலே ராமனாதபுரஞ் சீர்மையை ஆக்கிரமிச்சுக் கொண்டார்கள்.

அப்போது, சீர்மையார் சகலமான பேரும் ஒப்புக்கொள்ளாம லிருந்தார்கள். அப்போது கட்டைத்தேவ ரெகுனாதச் சேதுபதி யவர்களுஞ், சிவற்னப்பை பெரிய உடையாத் தேவரவர்களுந், தஞ்சை நகரத்துக்குப் போய்த் துறக்கோசிச் சரபோசி மகாராசா[1]

வைக் கண்டு, பேட்டி செயிது, அனேக வெகுமதியளும் வாங்கி, ஆகவேண்டிய காரியமும் பேசிவிச்சுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது துறகோசி சரபோசி மகாராச சிவறனப் பெரிய உடையாத் தேவர்களைப் பாத்து, புலிகுத்தச் சொல்லிச் சொன்னார்கள். அந்தப் புலியையும் சிவறனப் பெரிய உடையாத் தேவரவர்கள் குத்திக் கொண்ணுபோட்டார்களப்போது ரெம்பவும் சந்தோசமாகிச் சகல வெகுமதியளுஞ் செய்து, தஞ்சை நகரத்திலிருந்துப் பாளைய முங்குமுக்குச் செயிது, கட்டைத்தேவ ரெகுநாதச் சேதுபதியவர் களையும் சிவறனப் பெரிய உடையாத் தேவரவர்களையும் அனுப்பிவிச்சார்கள்.

அப்போது, தஞ்சை நகரத்திலிருந்துப் பாளையமுங் கட்டிக் கொண்டுப் பவானி சங்கரத் தேவரவர்கள் பேரில் சமறஞ் செய்ய ராமனாதபுரத்துக்கு வருகுறபோது, பவானி சங்கரத் தேவரவர்கள் ஏரியூர் திட்டிலே வந்திருந்து யெதிர்த்துச் சமரஞ்செய்தார்சள்.

அப்போது, சமரம் நடந்ததில் பவானி சங்கரத்தேவரவர்களை அவுதாவிலே இருந்தவரை கைப்பிடியாப் பிடித்துத் தஞ்சை நகரத்துக்கு அனுப்பிவிச்சுப் போட்டு கட்டைத்தேவ ரெகுநாதச் சேதுபதியவர்களுஞ் சிவறனப் பெரிய உடையாத் தேவரவர்களும், ராமனாதபுரம் போய்ச் சேர்ந்துத் தேவமார் சீர்மையார்க் கவமான பேரையும் வரவளைத்து, அவர்களும் ஒப்புக்கொண்டு, கட்டைத்தேவ ரெகுநாதச் சேதுபதி அவர்களுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார் களந்த முன்னுக்குச் சிவறனப் பெரிய உடையாத் தேவரவர்களுக்குச் சீர்மையும் அஞ்சு ரெண்டஞ்சு மூணாகப் பங்கு ரெண்டு பங்கு சீர்மையும், சிவகங்கையும்ச் சிவறனப் பெரிய உடையாத் தேவரவக் களுக்கு விட்டுக்குடுத்தார்களப்போது, பிராமலைச் சீர்மை எங்கப் பாளையப்பட்டுஞ் சிவகெங்கையுடனே சேந்து அதின்பேரில்ச் சிவறனப் பெரியஉடையான்த் தேவரவர்கள் நாள்முதல் அவர் குமாரன் முத்துவடுகநாதப் பெரியஉடையாத் தேவரவர்கள் நாள்வரைக்கும், எங்களைப் பாளையப்பட்டுப் பகுதி சிவகங்கைச் சேற்க்கையாகச் சின்ன லெக்குமாறப் பொம்மைய னாயக்கர், அவர் குமாறன் குமாறவெள்ளைப் பொம்மைய னாயக்கரும் பகுதி குடுத்துக் தொண்டிருந்தோம்.

அவர்களும் யெங்களை ரெம்பவும் அபிமானமாக நடப்பிவிச்சு வந்தார்கள் அப்போது, சிவகெங்கைச் சீர்மையை ஸ்ரீ அ நபாபு சாயபவர்கள் வ ந் து கட்டிக்கொண்டார்களப்போது குமாற வெள்ளைப் பொம்மைய னாயக்கர் குமாறன் வெள்ளைப் பொம்மைய னாயக்கர் நாளையில் சிவகெங்கைச் சேர்க்மையாய் ஸ்ரீ அ. நபாபு சாயபவர்களுக்குப் பகுதி குடுத்துக்கொண்டிருந்தோம்.

அவர்கள் நாளையிலும் யெங்களை ரெப்பவும் அபிமானமாக நடப்பிவிச்சு வந்தார்கள். அப்போது, சிவகெங்கைச் சீர்மையை ஸ்ரீ அ. நபாபு சாயபவர்கள் வந்து கட்டிக்கொண்டார்களப்போது, குமாற வெள்ளைப் பொம்மைய னாயக்கர் குமாறன் வெள்ளைப் பொம்மைய நாயக்கர் நாளையில் சிவகெங்கைச் சேற்க்கையாய் ஸ்ரீ அ. நபாபு சாயபவர்களுக்குப் பகுதி குடுத்துக் கொண்டிருந்தோம்.

அவர் நாளையில் யெங்களை குமாற வற்க்கமாக அபிமானித்து யெங்களுக்குண்டாகிய சகல விருதுங்குடுத்து நடப்பிவிச்சுக்கொண்டு வந்தார்கள்.

அப்படியிருக்கும் நாளையில் முத்துவடுகநாதப் பெரிய உடையாத்தேவரவர்கள் ராணி வகையார்ப் பெரிய மருது சேருவை காறர், சின்ன மருது சேருவை காறருஞ் சிவகெங்கைச் சீர்மையை ஆக்குறமிச்சுக் கொண்டார்கள். அதற்கு மேல் சிவகெங்கைச் சீர்மைக்கி உத்திரவாதியாரென்று சகலமான தேவமாறும், உடைய ராணுவத்தாரும் பெரிய மருது சேருவைகாறருஞ் சின்ன மருது சேருவைகாறரும் அளப்புச் செயிது, சிவகெங்கைச் சீர்மைக்கி உத்தரவாதி மதியாரி அளகத்தேவரவர்கள் சகோதறமாகிய படமாத்தூர் ஒய்யத்தேவரவர்கள் வெங்குசமல்லவா மண்ணுக்கும் பெண்ணுக்கும் உத்தரவாதியென்று சகலபேரும் யோசித்து, இன சம்மதியாய்ப் படமாத்தூர் நமசிவாயத் தேவரவர்கள் குமாறன் கெவுரிவல்லத் தேவரவர்களுக்கு காளையார் கோவில்க் காளீசுவறர் சன்னிதானத்தில்ப் பட்டமுங் கட்டித் தேவமார் பெரிய மருது சேருவைகாறர், சின்னமருது சேருவைகாறர் உடைய ராணுவத்தார் சகலமான பேருந் திட்டிச் சேலைப் போட்டுக் கும்பிட்டு விளுந்து, ராசாக்கள் ராவுத்தமார் பாளையகாறரும், அவரவர் நடப்பிவிக்குற மறியாதியும் நடப்பிவிச்சார்கள்,

நாங்களும் வந்து கண்டு எங்களுக்கு வஷ்திர வெகுமதியளனேக வெகுமதியாய் யெங்களை அனுப்பிவிச்சார்கள். அந்த முகனையிட வெள்ளைப் பொம்மைய னாயக்கர் மகன் சின்ன நலக்கக் குமாறப் பொம்மைய னாயக்கர் வந்து கண்ட முன்னுக்கு யெங்களுடைய பூர்வோத்திர சங்கதியள் விளங்கிக் கருசப்பட்டுவா(றளு)ர்ச் சீர்மைக்குப் பட்டக்காறர் நீயல்லவென்று சொல்லிச், சின்னாலக்க குமாறப் பொம்மைய னாயக்கருக்குக் கருசப்பட்டுச் சீர்மையும் வாறப் பூரச் சீர்மை குமாற வெள்ளைப் பொம்மைய னாயக்கருமாக பிரிச்சு ஆண்டுகொண்டு யிருக்கச் சொன்னபடிக்கு நாங்களிரு பேரும் பகுதி குடுத்துக் கொண்டிருந்தோம்.

முத்துவடுகனாதப் பெரிய உடையாத் தேவரவர்கள் ராணிப், படாமாத்தூர்க் கெவுரி வல்லத் தேவரவர்கள் பேரில் ரெம்பவும் ஆதரவாய் ராணி பெண்ணெக் கெவுரிவல்ல(வ)த் தேவரவர்களுக்குக் கலியாணஞ் செய்யிரதாக நெமுகஞ் செயிதிருந்தார்கள்.

அதுகாரியம் பெரியமருது சேருவைகாறர் சின்ன மருது சேருவைகாரர் (இரு)ந்து, ''ராணி பெண்ணெ படமாத்தூர்க் கெவுரிவல்லவத் தேவரவர்களுக்குக் கலியாணம் செய்தால் அவர் (பட்டத்துக்கு உ.த்த)ரவாதியாயிருக்குறதுனாலே யெல்லாக் காரிய மும் அவர்கள் ஒப்புக்கொண்டு போவார்கள்; நமக்கு ஒரு காரியமும் நடக்கமாட்டாதெ''ன்று யோசித்துச் சக்க(நதி) முத்துக்குமாரத் தேவரவர்கள்ப் பேறனை வரவளை(த்து), ராணி பெண்ணெயும், மருதுசேருவைகாறர் பெண்ணையும், அவருக்கு கலியாணம் செயிது அவருக்கு வெங்கம் பெரிய உடையா தேவரென்று பேருமிட்டு, அவரைப் பேருக்குப் பட்டமென்று வைச்சுக்கொண்டு, பெரியமருது சேருவைகாறரும், சின்னமருது சேருவைகாறரும் சகலகாரியமும் பாத்துவந்தார்கள்.

படமாத்தூர்க் கெவுரி வல்லத் தேவரவர்களுக்கு மகிமையை குறைச்சு நடப்பிவிச்சார்களிது காரியம் அறிந்து, கெவுரிவல்லத் தேவரவர்கள்த் தொண்டமானார் சீர்மை போய்ச் சேர்ந்தார்கள். தொண்டமானாரவர்களும், யிவர்களுக்குச் சகலமுங் கொடு(த்து வந்)து ஆதரவு செயிதிருக்கையில்ச், சின்னமருது சேருவைகாரர் மனுஷரை அனுப்பிவிச்சுப் பிரமாணஞ் செய்துகுடுத்துக், கெவுரி

வல்லவத் தேவரவர்களை வரவளைத்துச் சகல காரியமும உங்க(ள்) ம(ன)து பிரகாற நடத்து...ரெனப் படாத்தூரிலே போயிருங் களென்று சொல்லி, அனுப்பிவிச்சுக் கெவுரி வல்லவத் தேவரவர் களும் படமாத்தூரிலே போயிருக்கையிலவர்கள் வடக்கே மனுஷனை அனுப்பிவிச்சுப் பிரவர்த்தகஞ் செய்து கொண்டிருந்தார்களப்போது வடக்கேயிருந்து சிவகெங்கைச் சீர்மைக்கு உத்திரவாதிய யிருக்கிர பேரை தள்ளிவச்சு, மருதுசேருவைகாரர் சீர்மை ஆளவேண்டிய தென்னவென்று சேதுபதியவர்கள் ரெம்பவும் பிரவற்த்திகஞ் செய்து கெவுரி வல்லவத் தேவரவர்களுக்குச் சிவகெங்கைச் சீர்மைக்குப் பட்டமுங் கட்டுகிரதாக யோசனை செய்திருக்குற(தி)ல், அப்போது நல்லவேளை வராமல்ச் சேதுபதி அவர்களை வடக்கே கூட்டிப் போய்விட்டார்கள்.

அந்த வேளையில்ச் சின்னமருது சேருவைகாறர்க் கெவுரிவலவத் தேவரவர்களை அவக்கேடஞ் செய்யிரதாகத் தெரிந்துகொண்டு, ராமனாதபுரத்திலுமிராமல்த் தஞ்சை நகரஞ் சீர்மையிலே போயிருந் தார்கள். அதுவரைக்கும் யெங்களைப் பாளையப்பட்டு யிருபெறும் பகுதிச் சக்கநதி முத்துக்குமாறத் தேவரவர்கள் பேறன் வெங்கம் பெரிய உடையாத் தேவரவர்கள் வகையரா மருதுசேருவைகாறருக் குள்ளாக கருசப்பட்டுச் சின்னலெக்க குமாரர் பொம்மையனாயக்கர் மேவாரப்பூர் வெள்ளைப் பொம்மையனாயக்கர் குமாரன் சின்ன லெக்க குமாரப் பொம்மையனாயக்கநமாகப் பகுதி குடுத்துக் கொண்டு வந்தோம்.

அவர்களும் யெங்கள் யிருவகைப் பேரிலேயும் ரெம்பவும் அபிமானித்து யெங்களுக்குப் பூ(வா)ம்பட்டுக் கிராமமும் விட்டுக் குடுத்து மரியாதியாய் நடப்பிவிச்சு வந்தார்களதின்பேரில் ஸ்ரீ கும்பிணியாறவர்கள் அபிமானித்து, நெ(டி)கிலுஞ் சிவகங்கைச் சீர்மைக்கி உத்தரவாதியாரென்று நன்றாய்த் துவங்கி, முத்துவிசைய ரெகுநாதக் கெவுரி வல்லப பெரிய உடையாத் தேவரவர்களுக்குச் சிவகங்கைச் சீர்மைக்குப் பட்டாபிஷேகஞ் செய்து, சீர்மையுங் கொடுத்ததுனாலே அந்தமுன்னுக்கு யெங்களை வரவளைத்துப் பூர்வ சங்கதியும் விசாரிச்சுக் கருசப்பட்டுவாரப் பூறுச்சீமைக்கும் பட்டமுங்கட்டி அனுப்பிவிச்சார்கள்.

அந்தப்படிக்கிப் பகுதியும் கொடுத்துக்கொண்டிருந்தோம். இப்படி ரெண்டு வருஷத்துக்குப் பிரகு யெங்களையும் வாரப்பூரா ரையும் சிவகங்கைச் சீர்மை முத்துவிசைய ரெகுநாதக்கெவுரி வல்லப் பெரிய உடையாத்தேவர்கள் வரவளைத்து நாலிலேயும் விசாரிச்சு யெங்களுக்குக் கரிசப்பட்டுச் சீர்மையில் மூன்று பங்கும், அவர்களுக்கு வாறப்பூர்ச் சீர்மை ரெண்டு பங்குமாகப் பிரித்துக் குடுத்துப் பகுதி குடுத்து வருகுரோம்.

நாங்களும் வருஷபாறம்பரையா சீர்மையும் ஆண்டுகொண்டுப் பகுதியும் கொடுத்துக் கொண்டு சுகமே யிருக்குரோம்.

இதற்கு முன் (எங்கள்) பாளையப்பட்டுச் சிவகங்கைச் சேற்க்கையாய்ச் சேருகிறதுக்கு முன்னமே, யெங்கள்க் கருசப்பட்டு வாரப்பூரச் சீர்மையில்ச் சேர்ந்த பொன்னமராதி மாகாணத்தைப் புதுக்கோட்டைச் சீர்மையார் வலு(விலே) கட்டிக்கொண்டார்கள்.

அதுவுமல்லாமல்ச் சிவகங்கைச் சீர்மையை ஸ்ரீ அசாது நபாபு சாயபவர்கள் கட்டியிருந்து, மருதுசேருவைகாறர் வருகிற முன்னுக்கு எங்கள் பாளையப்பட்டுச் சீர்மையில்க் கொங்கம்பட்டிக் குமாரப் பட்டியென்று ஒரு கிராமமும், அதில்ச் சேர்ந்த பூசை வெகையடியும், யேளு யேந்தலும் புதுக்கோட்டைச் சீர்மையார் வலுவிலே கட்டிக் கொண்டார்கள்.

அதுவுமல்லாமல் இன்னமும் யெங்களவர்களைச் சதிரில் அவர் காளன்னேரமுஞ் செல்லியம் செய்து கொண்டு யிருக்குராகள் யெங்கள் பேரில் ஸ்ரீ கும்பிணியாறவர்கள் தயவு செய்து ரெட்சிக்க வேண்டியது. இந்தப் பூர்வத்திர சங்கதி யெளுதிக் கொடுத்துக் கருசப்பட்டுச் சீமை சின்னலெக்க குமாரப் பொம்மைய னாயக்கர் வகை ஷ்தானாபதி சுப்பிரமணியன் அத்தாட்சிபடிக்கு யெளுதினது.

ஷெிப் பாளையப்பட்டுச் சம்பிரிதி முத்துக்கறுப்பன் கையெளுத்து.

---

1. முதலாம் சரபோஜி (1712-1724)

# முப்பந்தட்டிப் பட்டணம்

## கைபீது

### டி. 3080 (ஓலை)

யிப்ப முப்பந்தட்டி[1] என்கிறத்திலே முன் ராசா க.. நதியில் கால்வாயிருந்தது வராததிலே முப்பதுபேரை காவல் வைச்சுயிருந்து அந்த தண்ணியிந்தப் பட்டணத்துக்கு வந்துகொண்டுயிருக்கையில் ஒருனாள் வேளையில் கால்வாயிலே வெள்ளம் வராததை ராசா பாத்து, அந்த முகத்துவாரத்துக்கு போயி, தண்ணீர் வராமல் போனதுக்காக காவல்யிருந்த முப்பது பேரையும் வெட்டி, அந்த மடையிலே போட்டு கட்டினபடியினாலே அதுக்கு அப்ப உண்டான பேர் முப்பது வெட்டி; அதுக்கு யிப்போ வழக்கம் 'முப்பந்தட்டி' எண்ணு சொல்லுறார்கள்.

யிந்தப் பட்டணத்துக்கு அந்த முப்பந்தட்டி முகத்துவாரம் அந்தக் கால்வாயிலே தண்ணி வாங்காமல் வந்து, யிந்தப் பட்டணத்துக்கு வீட்டுகளுக்கு எல்லாம் காராஞ்சிகளாலே தண்ணி வந்துகொண்டு யிருந்து, யின்னம் ஏரிகளுக்கும் தண்ணி வந்து கொண்டு யிருந்தது.

அந்த முப்பந்தட்டி முகத்துவாரம் முதல் யிந்தப் பட்டணம் வரைக்கும் கால்வாயி வழிகளிலே வீரசம்பூவறாயன் கால்வாயி எண்ணு சொல்லுறார்கள்.

யிந்த பட்டணத்தில் யிருந்த வீரசம்பூவறாயனுக்கு சத்துருவாயி, வடக்கே வெகு தூரத்திலே யிருந்து யாதவறாயன் எண்ணுற ராசா வெகுசேனையோடே வந்து, யிந்த யேழுசுத்து கோட்டையை யும் ஆறு வெருஷம் முற்றுக்கை போட்டுக்கொண்டு, யிருந்து உயித்தியமாயி அனேகம் சேனைகள் மடிஞ்சுபோயி, ராசா றம்பவும் வெசனப்பட்டு யிந்த பட்டணத்திலே அனாதியாயி

யிப்ப புறாண பிறசித்தமாயிருக்கப்பட்ட கா(ள)பயிரவ சுவாமி யாரை தோத்திரிச்சு றம்ப வெசனப்பட்டுக்கொண்டு சுவாமி அண்டையில் யிருக்கயில் அந்த காளபயிரவ சுவாமியார் அந்த ராசாவுக்கு பிறத்தியக்ஷமாயி, "நீ வெசனப்பட வேண்டாம் நீ ஒருத்தனும் குதிரை ஏறிக்கொண்டு யென்னோடே வா, னான் உனக்கு செயம்பண்ணி குடுகுறேன்" எண்ணு சொல்லி, அப்படியே செயம்பண்ணி சத்துருவை கையிப்பிடியாயி பிடிச்சு குடுத்தாராம்.

அப்போ அழிஞ்சுபோயி பட்டணத்தை சுவாமி பிறத்தியக்ஷமாயி படையை தாங்கி றச்சிச்சபடியினாலே, அழிபடை தாங்கி யெண்று அந்த ராசா பேர்வைச்சான்.

வெகுணாள்வரைக்கும் அந்த ராசா வமுசத்தராயிருந்தார்களாம். அப்பிறம் சிறுது காலத்துக்கு பிறகு கிஷ்ணறாயர் னாளையிலே அவரண்டே றாமச்சந்திர தீக்ஷிதரெண்றும், வெங்கிடபதி தீக்ஷிதரென்றும் ரெண்டுபேர் வித்துவாமுசாள் யிருந்தார்களாம். அவாள் பேரிலே பிறீதியாயி றாயர் ஆம்பிடையான் கொண்டம்மான் என்னுறவன் அக்கிறாரம் பண்ணச்சொல்லி சிலவு குடுத்தபோது யிந்த அழிபடைதாங்கி எங்குற அக்கிறாரம் பண்ணிவச்சார்களாம்.

யிந்த ஊரிலே எவடத்திலே வெட்டினாலும் உளி னாடின கருங்கல்லுகளும் செங்கல்காரை கட்டுகளும் விஸ்தாரமாயிருக்குது.

யிந்தபடிக்கி யிந்த அக்கிறரத்தில் யிருக்கப்பட்ட மகாசெனங்கள் பெரிய வறுதய்யா சின்ன வறுதய்யா பூறுவீகமாயி சொல்லிக் கொண்டு யிருக்குறத்தை னாங்கள் கேழ்விபட்டத்தை யெழுதி வைச்சோம்.

யிந்தப்படிக்கி பூறுவீகமா யிருக்குற கையிபீத்து னாமா யிந்த அக்கிறாரத்திலே யிருக்குற காளபயிரவ சுவாமியார் மகிமை திருவத்தூரிலே வேதபுரியீஸ்வரர் கோயில் ஸ்தளபுராணத்தில் யிருக்குதாம்.

அந்த ராசா னாளையில் யிருந்த உச்சவ விக்கிறகம் யிப்ப யிருக்குது யிப்ப கோவில் கிலமாயிப்போயி பூசை நின்றுயிருக்குது.

யிப்படி யிருக்கச்சேயும் சிறு(து) சனங்கள் பிறாத்தினை பண்ணிக் கொண்டு வாறார்கள்.

யிப்ப அந்த கோவில் மண்ணை சுத்தபட்டு வெகு தூரத்திலே யிருந்து மனுஷாள் வந்து நெல்லு, தானியம், உப்பு, யிதுகள் கொண்டுவந்து போட்டு பதில் மண் எடுத்துக்கொண்டு போயி உ..ளுக்கும் பயரிலே பூச்சிகளுக்கு எறைச்சால் சொஸ்தமாயி போயிவிடுகுதாம்.

ஊர் கணக்கு கோபாலபிள்ளை.

---

1. முப்பதுவெட்டு : இவ்வூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆர்காட்டுத் தாலுக்காவில் உள்ளது.

# பொள்ளாச்சி தாலுகா ஆனைமலை காடர்ச்சாதி வரலாறு

டி. 2963

பொள்ளாசி தாலுக்காவுக்கு சேந்த ஆனைமலை மேல் வாசமா ருக்குற காடற் கைபீது புக்கு.

தாறாபுறம் துக்குடி பொள்ளாச்சி தாலுக்காவுக்குச் சேந்த ஆனைமலை மேல் வாசமாயி யிருக்குற காடற் எண்ணப்பட்ட சாதியில் பொன்னு முப்பன் பறம முப்பன் எயிதிவிச்ச கைபியது யென்னமென்றால், காற்றுக்கு குறுவாயி யிருக்கப்பட்டவாள் வறாககிறியிலே தெண்புறம் கேறள தேசத்துக்கிச் சேந்த றாமறாசா சீமையிலே மலைமேலே (1)50-னூத்தியன்பது விட்டுக்காறர் விசுவர் என்னு யிருக்குறார்கள்.

அந்த விசுவர் அன்காதவளிக்கி அன்காதவளி சதுறத்துக்கு புனக்காட்டுகளை வெட்டிக்கொண்டு நெல்லு, தொவரை, கேப்பை யிந்த மூன்று தானியமும் பயிற்செயிதுக் கொண்டு யிருக்குறது.

பயிறிகள் செயிது வெரை வெரைச்சு வருக்குற போது, அந்த பயிர்கள் உண்டாக்கிய நிலங்களுக்கு விசுவர் மந்திறிச்சு, மணலை எறச்சு, அந்த நிலங்கள் சுத்திலும் யிருவது மாறிக்கு ஒரு கொம்பு விழக் காடு சுத்திலும் னட்டுபோட்டு வந்திவிட்டால் பலனாயி அறுப்பு ஆகுறவரைக்கும் யானை, புலி கறடி, பண்ணி, மான் இப்படிப்பட்ட காட்டு முறுகங்கள் தடைதாண்டி, பயிற்களை அழிவுப்(ப)ண்ணுகுறது யில்லை வெரைச்சுவந்தநாள்ளேயி அந்த நிலத்தை பாற்க அறுப்பு ஆகுற னாள் பலன் உண்டு பண்ணிக் கொண்டு வருகுறது

விசுவர் வாசமாக யிருக்கப்பட்ட யிடத்தில் ஈய்யி னொழயாத கானலானபடியினாலே, அந்தக் கானல்களிலே புலி, கறடி, யானை,

பண்ணி யிப்படிப்பட்ட முறுகங்கள் அனேகம் வாசமாயிருக்குறது. அதுகளுடனேகூட விசுவரும் சாலைகள் போட்டுக்கொண்டு குடியாக யிருக்குறது. விசுவர் சாலைகள் கிட்ட புலி யானைகள், கறடி முதலானதுகள் ஊருகளிலே னாயிகள் திறிஞ்சுக்கொண்டு வாசல்களிலே படுத்துக்கொண்டு யிருக்குறாப் போலே சாலைகள் முன்னே படுத்திக்கொண்டு யிருக்குறது.

அந்த விசுவர் புறு(வந)ாள் யிருக்கப்பட்டது யெப்படியென்றால், காது பெரிசாக வளத்துயிருக்குறது. தலைவளத்தி கொண்டை கட்டுகிறது; கைக்கி யிச்சம் அரகுனாலே கடையம் மொடைஞ்சு போட்டுகுறது; முண்டு சுத்திக்கொள்ளுக்குறது; யிப்படிக்கி முப்பமாற் என்று பாண்டியன் குறிவியன் யென்று ரெண்டுவீட்டுக்காரன் முற்கங்கள்[1] தடைக்கட்டுகுற மந்திரம் தெரிஞ்சவானாயி யிருக்குறது.

அந்த ரெண்டுபேற் ஆசறாவிலே னுறுகனமும் சாலை போட்டுக்கொண்டு மலைமேல் சஞ்சாறம் பண்ணுகுறது. பெண்டுகள் யிருக்கப்பட்ட வயணம் யென்னமென்னால், தலை வளத்தி, தொண்டை கட்டுகுறது; காது வளக்குறது யில்லை. சின்னதாயி காது வளத்தி, ஓட்டுகடுக்கன் போலே யிச்சன் ஓலைலே[1] மொடைஞ்சு முறுகு போடுகுறது; மாற்மேலே துனி போடுகுறது யில்லை. தூறமானால் முணுனாள் பொறம்பாயி யிருந்து, னாலானாள் ஸ்தானம் பண்ணிவிட்டு, வெசனசாறம் பண்ணுதரது. புள்ளை பெத்தால், பதினாறு னாள் பொறம்பாயி யிருந்து, பதினேழா னாள் ஸ்தானமான உடனே வீட்டுக்கு வருக்குறது. மலமாமசங்கள் திண்ணுகுறது யில்லை;. சுத்திற சாதியாறிலே செயிவாளா யிருக்(கி)றவாள்போலே விசுவரும் செயிவகற்றாயி யிருக்குறது.

விசுவர் அனைவரும் அந்த மலைலே கான(ல்)விட்டு மத்தோரு யிடத்துக்கு வருகுறது யில்லை.

விசுவர் யிருக்குற யிடத்துக்கு பதிறு காடற்மலசற் ஊருகளிலே சந்சாரம் பண்ணுகுற பறயன் முதலானபேரும் போகுறது யில்லை. ஊருகளிலே சந்சாறம் பண்ணப்பட்டவாள் விசுவரைப் பாத்ததும் யில்லை. வருஷவருஷம் ஒருதிறம் காடற் யிருக்கப்பட்ட யிடத்துக்கு விசுவர் வந்து முணுனாள் யிருக்குற(து). விசுவர் வந்த உடனே காடற் குறுவுகள் வந்தாற்கள் என்று புதுபாளை வடிகள் தருவிச்சு

குடு(த்து), அரிசி முஸ்தும் குடுத்து, பிறதக்ஷண ந(ம)ஸ்காறம் பண்ணுகுறது. காடற் யிடத்தில் முன்னாள் யிருந்து காடறுக்கு யானை முதலான முற்கங்கள் உபத்திறம் யில்லாத படிக்கி மந்திரிக்கிறது.

விசுவர் போறபோது காடற் குடுக்குறது என்னவென்றால், ஆழற்கத்தி 1, கோடாலி 1, உருமாலை 1, துப்பட்டி 1, சேலை 1, போயிலை கட்டு 1, யிதுகள் குடுத்து மறியாதையாயி, ஒருவேளை படியும் குடுத்து பயணம் அனுப்புகுறது.

யிப்படிக்கி வருஷாவருஷம் ஆடி மாசத்து முரைலே வருஷத்துக்கு ஒருதினம் காடற் யிடத்துக்கு விசுவர் வந்துப் போகுறது. விசுவர் யிடத்துக்கு காடற் போகுறது யில்லை. காடறுக்கு விசுவர் வருஷம் ஒருதடவை வந்துப் போறதானபடினாலே காடறுக்கு யானை புலி கறடிகள் பயமில்லை. விசுவர் சொல்லினிகதிபடிக்கி வணதேவதை களுக்கு கும்பிட்டுக்கொண்டு யிருக்குறது.

விசுவரிலே மூப்பமாற் எண்ணும் பேற்உண்டானவர்கள் வம்ச பறம்பரையில் புள்ளைபுள்ளை தலமரையா கால அந்தியிலே அந்த மந்திர கற்பிச்சு குடுக்குறது.

மந்திற சாமாற்த்தியத்தில் வல்லனாயிருக்கபட்டவாளுக்கு பாண்டியனெண்ணும் குறிரயனெண்ணும் பேற்கள் யிருக்குற(து).

விசுவர் சாதியில் அ(னவ)றுக்கும் மந்திரம் தெரியறது யில்லை. விசுவரிலே குஞ்சுகொளந்தயை கண்டாலும் யா(னை), புலி, கறடிகள் ஒதங்கிப்(போ)றது. விசுவர் மலை றசாத்துக்கு வருகுறது யில்லை. காடறும் விசுவர் யிருக்கப்பட்ட யிடம் குறிப்புக் கண்டதுயில்(லை).

விசுவர் காடற் யிடத்துக்(கு) வருஷத்துக்கு ஒருதினம் வருகுற படினாலே விசுவர் என்று அவாளுக்கு தெ(ரி)ய்குறது.

ஆனைமலை மேலே வாசமாக யிருக்குற காடற் எண்ணப் பட்டவாள் சஞ்சாரம் பண்ணபட்ட யிடங்கள் முதலாகிய வரலாறு.

ஆணைமலை எண்ணபட்ட பருவதம் காடற் சன்சாறம் பண்ண பட்ட அத்துகள் முலைமேலே தெற்க்கு யிறடமேலை ஆத்துக்கு

வடக்கு, பிள்ளையாறு கணவாயிக்கி தெற்கு, தென்வடல் முக்காதை வளி கிளக்கு சின்னத்தனக்கல் பெரிதனக்கல் மேற்க்கு அரிசிப்பாரை, னாமக்குத்தடி, மாக்கல்பாரை யிதற்க் கிளமேல் பதின் காதவளி.

இப்படிக்கி யிந்த அத்துக்கு மலைமேலே வெகு னா(ளாயி) காறடற் எண்று பேற்பட்டவாள் வாசமாக யிருந்து சன்சாறம் பண்ணிக்கொண்டு (யி)ருக்குறது.

காடற் சன்சாறம் பண்ணபட்ட அத்துக்கு மலைமேலே ஆனைமலை சறகத்துக்கு கிளக்கு ஆனைமலை 1, பிள்ளையாறு கணவாயி மலை 1, வாத்தாண்டி மலை 1, ஆனைகொந்தி மலை 1, னாயிகளேறு மலை 1, பூப்பாறு மலை 1, கறுமலை கோபுறமலை 1, குலகுமலை அக்கா தங்கச்சி மலை 1, யிப்படிக்கி பேறகளுலே எட்டு மலையிருக்கிறது.

அக்காதங்கச்சி மலையண்டை மலைக்கி (மே)ல்(பு)றம் வருகுற தண்ணி யிடைமலையாறு அக்காதங்கச்சி மலை அக்கோட்டையிலும் உண்டையிட கிள்பறம் வறபட்டது பெரியாறு ஆமிறாவதி னதி, அதுலே கிளபறம் வரபட்டது ஆனைமலை ஆளியாறு. பின்னையும் அந்த மலைமேல் ரெண்டு மூணு சில்லரை ஆறுகள் வந்து யிடை மலையாத்துலே கூடுகுறது.

காடற்கள் சாதி தற்மம் என்னவென்றால் ஆம்புளை தலை மயிற் வளத்திக் கொண்டு யிருக்குறது. காதுவளத்தி ஓடை யீச்சம் ஓலை போடுகுறது. களுத்து சறடுமணி போட்டுக்கொண்டு யிருக்குறது.

பெண்புளை யிருக்குற தினுசு தலைமயிற் வளத்தியிருக்குறது. காது பெரியதாயி வடத்திச் சறம்வண்டிபோலே யித்த ஓடையோலை போட்டுக்கொண்டுயிருக்குறது. களுத்திலே சறடுமணி, மூக்குக்கு மூச்குத்தி போட்டுக்கொள்ளுகுறது. முதல் கலியாணம்பண்ண புறுஷன் போயிவிட்டா பொம்மிண்டாட்டி றாசியில் மூணுனாலு கலியா(ண)ம் பண்ணிக்கொண்டு வருகுறது. பொம்மிண்டட்டி ஆயுச்சு வுள்ளவரெக்கு வெதவதனமில்ல. ஆம்புளையும் ரெண்டு பேர் மூணுபேற் வ(ர)க்கும் பொண்டுகளை கட்டிக்கொள்ளுகுறது.

காடற் வச்சுக்கொண்டு யிருக்கப்பட்ட ஆயுதங்கள் தோளுலே (போ)ட்டுக் கொள்ளுகுறதாக யீச்சம் ஓலைலே (மொ)டஞ்சு யிருக்குற பூணி என்குற குடை 1 பாரைக்கோல் என்குற கிளங்குகள் தோண்டி யெடுக்கப்பட்ட ஆயுதம் 1 வெறகுகள் வெட்ட கோடாலி 1 கொடுவாள் 1 யிப்படிப்பட்ட ஆயுதங்கள் வச்சுகொண்டு மலைமேல் வுண்டான தினுசுகள் மஞ்சள், இஞ்சி, சீவக்காயி, குங்கிலியம், மட்டி பால், யேலக்காயி, தேன் முளுக்கு, கானல் முளகு, யிப்படிக்கு உண்டான தினுசுகளை கானல்களுலே மூக்குவளிக்காடு, சொறி கல்க்காடு, நாயிகுந்திக்காடு, வால்பாரைக்காடு, வாட்டுபாரக்காடு, நாயக்கநளைக்காடு, ஆண்டிபாரை காடு. துறுக்கடவுகாடு, தணக் கல்க்காடு, இதின்யிவாள் குடியிறுக்கப்பட்ட தர வடக்கு மேற்க்கு.

பரமக்குளம் காடு கோங்குறுவிக்காடு, பாம்பளை, குளங்கால் காடு, தூவையாரு, கள்ளிபாறா, வாத்துகாலு, முக்கல வேங்கை, நாறுமுரை பாரை, கறுமலை கோபுரம், யிப்படிக்கு பேற்கள் உண்டான கானல்களுலே மேல் யெளுதப்பட்ட யேலக்காயி முதலான தினுசுகளை கொண்டுவந்து வச்சுக்(கொ)ண்டு, மலைக்கு சறாங்கமாயி வறப்பட்ட பதிக்கார செட்டிக்கு குடுத்து, அந்த செட்டியெடத்தில் அறிசி துணி முதலான தின்சுகள் மலையிலே யில்லாத தினுசுகளை வாங்கி கொள்ளுகுரது.

காடற் சன்ச்சாரம் பண்ணப்பட்ட யிடங்களிலே புலி, யானை. கறடி, பண்ணி, கடமான், புள்ளிமான், காட்டெறிமை இப்படிப் பட்ட முற்கசாதியள் வாசம் பண்ணிகொண்டு யிறுக்குறது. அந்த முற்கசாதிகளிலே காட்டையும் னிலையாஇ வமுசபறம்பரையாஇ வாசம்பண்ணிக்கொண்டு இறுக்கப்பட்ட இடத்துக்கு பரையன் கடவுபதியென்று பேற். அந்த பறையன் கடவளிடத்திலே பொன்னமூப்பன் 1, வயவன் 1, வாறியன் 1, முறுடன் 1, வாலி 1, குப்பன் 1, முதிறுளி 1, கொந்தைன் 1, செவ்வனம் 1, வெள்ளையன் 1, னீலன் 1, கோட்டுறபதியில் பரப்பமூப்பன் 1, வாலி 1, மங்காடன் 1, தோனை 1, வட்டாடி 1, தும்பி 1, சுக்குரன் 1, மாக்கலன் 1, காடற்களுலே பெண்பெண்டாட்டியள் பேற் குரும்பை, கணியெக்கே, ஒண்ணாயி, நட்டுவத்தி. கோச்சலை, கும்மாச்சி, சுறுளை, திறுகணி, முறுட்டை, பாஞ்சி, இப்படிக்கி காடற்சாதியளுலே ஆண் புள்ளை களுக்கும் பெண்புள்ளைகளுக்கும், பேற்வுண்டானவாளாஇ யிந்த

ரெண்டு பதியிலேயும் ஆண்புள்ளை, பெண்பிள்ளை, குஞ்சுகுளந்தையள் சயிதமாஇ அறுனூத்திபத்து சனம் காடற்சாதியென்று பெறசுத்திப்பட்டு மலையிலே வாசம்பண்ணிக் கொண்டு யிறுக்குரது.

காடற் மலையிலே வாசம் பண்ணிவறுர யிடத்தில், மலைமேலே யிறுக்கப்பட்ட அவாளுடைய குலதயிவம் கறுமலை வேட்டகாறன் 1, காளியம்மன் 1, பொன்னாலம்மன் 1, விநாயகன் 1, பெரிகோட்டலம்பன் பெறுமான் 1, கறுப்பனாயன் கன்னிமாறு 1, லாடசன்னாசி 1, கறுமலை கோபிறம் கல்லியாண்டன் ஆத்தச்சேறி பகவதி 1 குறக்குண்டிச் சேத்தாவு துறக்குடவு அம்பன் 1, பூனாச்சம்மன் 1, யிப்படிப்பட்ட தயிவங்களுக்கு முன்னாடி பின்னாடி புரட்டாதி பெறும்பயல் மனைமாற்களி மாற்களி யிப்படிக்குபேற் அவாள் சொல்லப்பட்ட மாசத்துலே மாசமாசமும் தயிவத்துக்கு கும்பிட்டுக்கொண்டு வறுகுரது.

தயிவத்தை கும்பிட்டுக்கொண்டு வறுகுரது யென்னவென்றால் யானை புலி முதலான மிற்க சாதிகளாலே காடற் சனங்களுக்குச் சேதம் யில்லாமல் யிறுக்கவேணுமென்று தயிவத்தை கும்பிட்டுக் கொண்டு காடற் திண்ணப்பட்ட கிளங்குகள் முதலானதுகளையும் கொண்டுவந்து பொங்கலும் வச்சு தயிவத்துக்கு படைக்குறது.

காடற் அவாள் குலதையி பலத்துநாலே யானை, புலி, கறடி யிப்படிப்பட்ட துஷ்ட்ட மிற்கங்கள் காடரை கண்டால் மிறுகங்கள் ஒதிங்கி போறது. மிறுகங்களை கண்டால் காடறுக்கு பயமில்லை. இப்படிக்கு மிறுகசாதிகள் பயமில்லாதபடிக்கி சஞ்சாறம் பண்ணி கொண்டு ஆஹாரம் பண்ணப்பட்ட கெளங்குகள் பெற ஹூத்து கிளங்கு 1, தாளி கிளங்கு 1, இற கிளங்கு 1, அயின் கிளங்கு 1, காஞ்சல் கிளங்கு 1, சேல் கிளங்கு 1, சாவல் கிளங்கு 1, பேடான் கிளங்கு 1, ஹூல் கிளங்கு வெண்ணி கிளங்கு 1, ஈந்து கிளங்கு காயி, கூந்தபனை மாவு, கத்திறி மஞ்சள் மாவு, வெள்ளை கூற இப்படி பேற் உண்டான கிளங்குகள் ஆஹாரம் பண்ணிகொண்டு, வாசம் பண்ணிகொண்டு யிறுக்குரது.

மலையிலே யிறுக்கப்பட்ட திஹுசுவாறி மரங்களாட பரம விஸ்தாறமாஇ யிறுக்கப்பட்டது. மறம் சிறுசுரெண்டு தேக்கமறம் 1, இலுப்பூட்டு மறம், குரவ மறம், வேக்காலி மறம், மறுத மறம்,

பூவா மறம், புன்னை மறம், கொட்டா மறம், இலுப்பை மறம், குங்கிலிய மரம், மட்டிபால் மறம், அத்தி மறம், வேங்கை, உன்னை மறம், மாமறம், பெலா மறம், நெல்லி மறம், நாவல் மறம், மலை வாளை, சன்ன வாளை, இப்படிப்பட்ட தினுசுவாறி மரங்களிலே கானலுகளிலே, ஒருபனை ஒண்ணரைபனை ஒசத்திக்கி யிறுவது முப்பது முள கயிற்சுத்துக்கு விறுஷ்சகங்கள் யிறுக்குறது. யிப்படிக்கி ரொம்பா னாள்ப்பட்ட விறுஷ்சங்கள் அனேகமா யிறுக்குறது

மட்டிபால் மறம் யெண்ணப்பட்டது யெப்படி யிறுக்கு மென்றால் பூமியிலே உண்டான பறுமறம்போலே யிறுக்குரது. மறம் வெள்ளை நிறமாஇ இறுக்குறது. தளை பறுமறத்து தளை போலே யிறுக்குறது. அப்படி யிறுக்கப்பட்ட மட்டிபால் மரத்துக்கு பூ பூத்து, காஇ காச்சது யில்லை. அந்த மறம் கண்டுபிடிக்குற அடியாளம் குடுவாள் யெண்ணப்பட்ட ஆயுதத்துனாலே அந்த மறத்தை தட்டினால் மறத்து பட்டை சீக்கிறமாஇ விட்டுபோரது; அந்த பட்டை விட்ட ஒடனே அந்த மறத்துலே வடியப்பட்ட பால் யெடுத்து, நெறுப்புலேப் போட்டால் சுகந்தமான வாசனை யாகும். அந்த குறுப்பு கண்டுபிடிக்சு, அந்த மட்டிபால் மறங்களுலே மாடங்கள் போலே தோண்டிவைச்சு அதுலே வடியப்பட்ட பால் பாரைக்கொலு ஆயுதத்தினாலே யெடுத்து மூங்கல் கொளாயிலே போடுகுரது. அப்படி மூங்கல் குளாயில் யெடுக்கப்பட்டதுக்கு மட்டிபால் யென்று பேற்.

யேலைக்காஇ செடி துலக்க சோளத்திட்டு போலே யெலையும் செடியும் யிறுக்குரது. அடி வேறுகளுலே சாம்பல் செகப்பு நிறத் தோடே வேப்பன் பூபோலே பூ பூத்து யேலைக்காயி காக்கிறது.

காடற் யெண்ணப்பட்டவாள் மலைமேலே யிறுந்து வாசம் பண்ணிக்கொண்டு, பறயன்கடவு யெண்ணப்பட்ட இடத்தில் குடியிறுப்புக்காறாயி இறுந்து கானலுகளிலே னாலுநாள் பயணம் அஞ்சுநாள் பயணம் வரைக்கும் போஇ, சுத்தி, சன்ச்சாறம் பண்ணிக் கொண்டு, தினுசுகளை கொண்டுவந்துவச்சுக் கொண்டு யிறுக்குரது; பதிக்காரன் வந்த சமயத்திலே சறக்குகளை பதிகாரனுக்கு குடுக்குறது.

காடற்கள் மலையிறக்கத்துக்கு வறுகுரது யில்லை. காடற் யென்ங்குறவாள் பேசுகுற பேசு கொங்கு வாற்த்தையாஇ கொச்சையாஇ பேசிகொண்டு வறுகுரது யென்னவென்றால், 'வாணி', 'போவோம்பா', 'அணிநேறம் கடந்தோட', 'தெற்க்கன்பா', 'ஆனக்காடு', 'அரிவகாடு', 'தெற்க்கன்பா', 'போவாம்'.

பொன்பிளை ஆம்புளையோடே பேசுறது. 'பரகேடாபா' 'போவான்', 'நேரம் கடத்தோட', 'கன்னி', 'சோறு', 'பாதம்', 'குபே', 'தங்குவாயி', 'திக்குறது' - இப்படி பாஷா பேதமாஇ வாற்த்தெ சொல்லுகுரது.

அவாள் தெயிவத்துக்கு கும்மு, பொட்டுகள்[3] முதலானதும் சொல்லுகுறது உண்டு.

காடற் மலை யெறக்கத்துக்கு வறுகுரது யில்லை. புள்ளையார் கணுவாஇ அண்டைக்கு மலை வேட்டக்காற் காளியமன் யென்ங்குற தயிவத்தை கும்புடுகுரதுக்காக வறுஷத்துக்கு ரெண்டு திரம் யிறக்கத்துக்கு வறுகுரது உண்டு யிது தவிர அவாளாக யறக்கத்துலே வந்து சஞ்சாறம் பண்ணுகுரது யில்லை.

ஆனைமலை கிறாமத்துக்கு காடற் யிறுக்கப்பட்ட மலையடிவாரத்துக்கு யிறுகாதவாளி யிறுக்கும். மலையடிவாரத்துக்கும் காடற் யிறுக்கப்பட்ட மலைமேல் முதல்தங்கல் வெள்ளரை கணுவாஇ, ரெண்டா தங்கல் தூண்க்கடலை கணவாஇ, மூணாம் தங்கல் ஆனைகுந்தி மேட்டு கணுவாஇ, நால்தங்கல் பறயன் கடவு காடற் பதிக்கு அயிங்காதவளிக்கு மூணு கணுவாஇ யேத்தம் யிறக்கமாயி இறுக்கும்.

காடற் **தேன்** யெடுக்கப்பட்ட வயணம் யென்னவென்றால், விறுஷ்சத்துக்கு செனங்குத்தாஇ யேணிகள் மாட்டி, காடன்பூணி யெண்ணப்பட்ட பேறான குடைய்யை ரெண்டு தோளுக்கும் மாட்டி கொள்ளுகுறது. அந்த குடையிலே யெலைபோட்டு கொள்ளுகிரது. தென்னை சுடுகுர கூடு கொண்டுபோறது. யேணிமேலே மறத்து

மேலே போறி தீயினாலே ஈயிர்பா டி ஆயுதந்துநாலே தேனை யெடுத்து கூடையிலே போட்டுகொண்டு தினை யெறங்குரது. யிப்படிக்கு தேனு றாத்திறி யெடுக்குரது.

குங்கிலியம் மறத்து வரலாறு யென்னமென்றால், மறம் வெள்ளை நிறமாயி நாவல்மறம் யெலைபோலே ஒ(டு)க்கமாறி யிறுக்கும். பெலை துளுறுலே செகப்பு வற்ன்னமாறி யிறுக்கும். அப்படிப்பட்ட மறத்தின் அடியிலே கட்டையள் கொண்டுவந்து போட்டு திய்யி யெறிச்சால் அந்த மறத்துப்பட்டைவிட்டு பால் வடியும். அப்படி மூணு மாசத்துக்கு மேலே அந்த மரத்தில் குங்கிலியம் யிறுக்கும்.

இப்படிக்கு குங்கிலியம் யெடுக்குரது. இதுக்கு யின்ன மாசமென்று நிகுதியி இல்லை.

காடற் திண்ணப்பட்ட கிளங்குகளிலே பெண்ணி கிளங்கு யெறக்கத்துலே வாசம் பண்ணப்பட்ட சனங்களாவது சீவசத்து களாவது தின்னால், அந்த கிளங்கு திண்ண தட்சணத்துலே சீவிச்சுபோறது அப்படி விஷமாறி யிறுக்கப்பட்ட பெண்ணி கிளை வகை காடற் திண்ணுகொண்டு வறுகுரது.

இறக்கத்திலே கானலுலே வாசம் பண்ணப்பட்ட மலைசற் தம்மபதி 1, வெட்டுக் சடவுபதி 1, தேவனூற்பதி 1, இந்த மூணு பதிகளிலேயும் வாசம் பண்ணப்பட்ட மலைசற் குடியிறுப்புக்காறாயி முப்பது வீட்டுக்காரற் பெண்டுபுள்ளை சயிதமாறி னூறுசனம் யிறுக்கும். யிவாள் சன்ச்சாரம் பண்ணப்பட்ட கானல் கிளுமேல் காதம் தென்வடல் யிறுகாதம் யிந்த கானலுலே சன்ச்சாரம் பண்ணு கொண்டு யிருக்குறது.

அவர்கள் ஆகாறம் பண்ணப்பட்டது வெத்திலைக்கொடி, கிளங்கு, முள்ளிக்கிளங்கு, புளி, சாம்பல் யிதுகள் பக்ஷிச்சுக்கொண்டு மாய்சங்கள் திண்ணுகுறது.

மலே மேலே யிருக்குற் காடற் மலசரை தொட்டால்; தண்ணி மேலே விழுந்து முளுக்கறது. காடற் ஆச்ராமமாய் மலைமேலே வாசம் பண்ணிக்கொண்டு யிருக்குறது

காடாயிருக்கபட்ட ஆனைமலைக் கானல்களிலே பறயன்கடவு பதியிடத்துக்கு வருஷாவருஷமும் விசுவர் வந்தவுடனே வி(சு)வருக்கு காடர்சாதி பிறதக்ஷணப்பண்ணி, சுத்தி, யானை, புலி, கறடி, பண்ணிகள் னிண்ணுக்கொண்டு யிருக்குறது.

விசுவர் காடர் சன்சாறம் பண்ணப்பட்ட யிடங்களுக்கு யானை, புலி, கறடிகள் வுபத்திறவம் யில்லாமல் தடைக்கட்டி மந்திறிச்சுப் போட்டு[4] போறது அந்த மந்திற பலத்துனாலே மறுவருஷம் விசுவர் வருகுற வரெக்கும் யானை முதலாகிய முற்கங்கள் காடற் களிலே குஞ்சுகொளந்தையைக் கண்டதும் ஒதிங்கி போயிவிடுகுறுது

காடற்சாதிக்கி யிரக்கத்தில் கானல்களிலே யிருக்கிற மலசற் சாதி கீழ்படிந்த சாதியாயி, பறயர் சாதிக்கி சமானமாக யிருக்குறது. மலையடிவாறத்துலே கானல்களிலே மலசற் சஞ்சாறம் டண்ணிக் கொண்டு தேன்மொளுக்கு, புளி யிதுகள் பதிக்காறனு(க்கு) குடுத்துக் கொண்டு யிருக்குறது

ஆனைமலை கிறாமத்துக்கு மேல்பறம் ஒருனாளி ளியில் சேனக்கல்றாயன் துறக்கம்யென்று யிருக்குது அந்த துறகம் வரெக்கும் சகலசனமும் போயி துறகத்து மேல்யிருந்து பாத்தால், கானல்கள் தெரியும் அந்த துறகத்து மேலே பெருமாள் கோயில் யிருகாதவளிக்கி சுத்தியும் கானல் ஊர்கள் தெரியவரும்.

மலைமேலே காடற் யிருக்குற யிடத்துக்கு, சகல செனங்களும் போகுறதில்லை மலைமேலே றாப்பகல்களிலே மேக சன்சாறமும் பண்ணியுபத்திரவமும் கானல்க் காட்டுலே யானை முதலாகிய முற்க சன்சாறமானபடியினாலே பயணம் போகுறதில்லை.

காடற் யிருக்கப்பட்ட பறயர் கடவுபதி வரைக்கும் யாலக்காயி முதலாகிய தினுசு வியாபாறத்துக்காக பதிக்காறசெட்டி வாடிக்கைக்காறன் போயி வந்துக்கொண்டு யிருகாதவளிக்கி மலை மேலே போயிவருகுறது.

1 ளாறக்கிளங்கு
1 தாளக்கிளங்கு
1 னுத்திக்கிளங்கு
1 பேடான் கிளங்கு
1 பென்னிக்கிளங்கு விஷம்ாயிருக்குறது.

---
5

---

1. மிருகங்கள்
2. ஈச்ச ஓலையிலே.
3. குலதெய்வம்.
4. கும்மிப்பாட்டுகள்.
5. மந்திரித்துவிட்டு.

# கோயமுத்தூரு தாலுகா போளமாம்பட்டி
# வெள்ளிமலை கைபீது புக்கு

## டி. 3070

கோயமுத்தூற் தாலுகாவுக்கு சேந்த னொயிலாறுக்கு[1] வடக்கு **போளமாம்பட்டி**[2] **வெள்ளிமலை** கைபீது. ஷெ போளமாம்பட்டி கிறாமம் நாட்டாண்மை ஆதிகவுண்டன் கணக்கு சரவணைபிள்ளை யெழுதி குடுத்த கைபீது யென்னவென்றால்,

பூற்வத்தில், யிந்த பிரதீரமெல்லாம் கானல்க்காடுகளாயி இறுந்து, அந்த கானல்களுலே னொயிலாறுக்கு தெற்க்கு பிரதீரத்தில் இருக்கப்பட்ட **அறுப்பசாதியில்** போடிக்கவுண்டன் யெண்ணப் பட்டவன் யிக்கரையில் மட்டுகளுக்கு[3] பட்டி போட்டுககொண்டு யிறுந்து வீடேத்தி வூடுகள் வுண்டாக்கினபடியினாலே, அந்த வூருக்கு போளமாம்பட்டி யென்று வூறு வுண்டாச்சுது யென்று கேள்வியுண்டு.

யெங்கள் வூறான போளமாம்பட்டி கிராமத்துக்கு நேற் மேற்க்கு அஞ்சி னாளிகை வளி தூரத்தில் **வெள்ளிமலை**[1] யென்று பேற்ப்பட்ட பெரிய மலை யிருக்குரது.

அந்த மலை மேலே பிறிதிவி, அப்பு, தேசோ, வாயுவு, ஆகாசம், யிப்படி அஞ்சு லிங்கம் யிறுக்குரது. யிந்த மலை தெற்க்கு புதாற் சுணுவாயி[5] முதல், வடக்கே வெகுதூரம் போரது வடக்கே ஷெ தாலுகாவுக்கு சேர்த தட்டாகத்து கிராமத்து வரைக்கும் தெற்க்கு வடக்கு யிரு காதவளிக்கு மலை கோணக்கோணலாயி இருக்கும். கிளக்கு மலையடிவாரத்துக்கும், மேற்க்கு பரம் மலை யடிவாரம் பரம்பாத்து வரைக்கும் ஒண்ணரைக் காதவளி போத்தம் யெரக்கமாயி இருக்கரமுமாயி இருக்கும். இப்படிப்பட்ட மலைமேல் அஞ்சு லிங்கங்களும் யிறுக்கப்பட்ட வயணம் யென்னவென்றால்,

புராண பிரசுத்தியாயி யிறுக்கப்பட்ட ஸ்தளமென்றும் பறுவதமும் சிவசுருபமென்றும் பெரியவாள் சொல்ல கேள்வியுண்டு.

கௌக்குடரம் மலையடிவாரத்தில், பூற்வம் முதலாக யிருக்கப் பட்ட கானலுலே ஒரு சொனையும் சிலா விக்கிரஹம் யிறுக்கும் யிடத்துக்கு **பூண்டி** யென்று பேற்.

அந்த பூண்டிக்கும் உச்சியில் சுவாமி யிருக்கப்பட்ட யிடத்துக்கும் மத்தியானத்து ப்யணம் யேத்தமா யிருக்கும். அவடத்தில், உச்சியில் பிறதிவி லிங்கம், அப்பு லிங்கம், இந்த ரெண்டு லிங்கமும் சோடாக பாரைக் கல்லுகள் குரைகளுலே[6] யிருக்குறது.

அதுலே, ஹூரபுசனம் வரைக்கும் யிருந்து சுவாமி த்ரிசினம் பண்ணலாம். அந்த பாரை கல்லு குரைகைக்குள்ளாக மேற்குபரம் ஒரு ஆளு போகும்படியாக குரைகையாக போகுரது. அந்த குரைக்கு போற வளிலே, ஒரு சின்ன குரைகையிலே தேசோ லிங்கம் யிருக்குரது. அதுக்குள்ளாக குரைக்கு வளி போகுர்து, அந்த குரைக்கு மனுஷாள் போகவேணுமென்றால், தாறாளமாயி போக கூடாது.

அந்த குரைக்கு (ள்ளாக) வாயு லிங்கம், ஆகாச லிங்கம் யிறுக்குரது. சகலமான பேருக்கும் பிரிதிவி, அப்பு, தேசு, யிந்த் மூணு லிங்கம் தரிசனமாகுரது.

வாயுவு, ஆகாசிரம் ரெண்டு லிங்கமும் மனுஷாளுக்கு தரிசன மாகுரது பிரயாசமானபடியினாலே, தேசோ லிங்கத்து சன்னிய் தானத்துலே யிருந்து, வாயுவு, ஆகாசம் அந்த ரெண்டு லிங்கத்துக்கும் பூசை பண்ணி போட்டுவந்துவிடுகுரது.

யிந்த தேசத்தில் யிறுக்கப்பட்ட சகலமான ச்னங்களும் மஹாஸ்தளமென்று அவாளவாள் வந்து பூசை பண்ணி, சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு போரது.

மஹாபுராதன ஸ்தளமானபடியானாலே, காலவறுஷங்கள் யில்லாமல் போனால் சுவாமியே வேண்டுதலை பண்ணிக்கொண்டால் கால வருஷங்கள் வருஷிச்சுக் கொண்டு வருகுரது.

மலைமேலே, அரைப்பனை பிரமாணத்துக்கு சுவாமி குரஹை பாரைக்கு வடக்குபரம் குத்துக்கல்லாக ஙிண்ணு யிறுக்குது. அது

மேலே ஒரு பாரை சாஞ்சு யிருக்குரது. அந்த வாசலாக சகல சனங்களும் சுவாமி தரிசனம்ப் பண்ணிக்கொண்டு வெருகுரபடியனாலே, அதுக்கு **கோபுரவாசல்** யென்று பேர வரப்பட்டுது.

அந்த மலைமேலே வாசம் பண்ணப்பட்ட மலைசைசாதிக்கு கீழ்ப்பட்ட **முடுகசாதி**[7] சனங்கள் முப்பது வீட்டுக்கார், மலைச் சருவுகளுலே ஆசாரவுலே குடியிருந்துக் கொண்டு, மலையிலே சஞ்சாரம் பண்ணிக்கொண்டு யிருக்குரது.

யிந்த மலையிலே வுண்டாகி யிருக்குர விறுஷ்சங்கள் விபரம்.

தேக்கு மரம், காட்டு பெலா, காட்டு பாக்கு, நெல்லி மரம், அரசு, ஆலே, யிப்படிப்பட்ட சாதி விருட்சங்கள், செம்புளிஞ்சாக் கட்டை யிது முதலானது வெகுனாள்ப்பட்ட விறுட்சங்கள் கானலு களுலே யிறுக்குரது. கானலுகளிலே ஆனை முதலான மிறுகங்கள் வாசமாக யிறுக்கப்பட்ட யிடம்.

யிந்த மலைக்கு சேந்த பதிகளுலே யிருக்கப்பட்ட தினுசுகள் விபரம்:

மாரம்பதி — க

குஞ்சரமடை பதி — ஒண்ணு

கோரே குதி முள்ளு பதி — ஒண்ணு

இப்படி பேற் வுண்டான பதிகளுலே, மேல்பரம் யெரக்கத்தில் வண்ணாரக்காட்டு யெல்லை சமயபத்தில்[8] யேலக்காயி வெளயுரது. மலையிஞ்சு, கஸ்தூரிமஞ்சள், மலைமஞ்சள், மலைவாளை, சீவக்காயி, குங்கிலியம், தேன், முளுகு[9], மாகாணி கிழங்கு, இப்படிப் பட்ட தினுசுகள் வுண்டாகியிருக்குரது.

வுண்டாகிய தினுசுகளை அந்த மலையிலே வாசமா இறுக்கும் முடுக சாதிகளுலே யிறுக்கப்பட்டவாளுக்கு படி குடுத்து தினுசு தரிவிச்சுகொண்டு, பதிக்கு கொத்துக்காரனாக சருக்காருக்கு முன்னின்று வியாபாரம் பண்ணிக்கொண்டு வெருகிரது.

அந்த மலையிலே வாசம் பண்ணப்பட்ட முடுக சாதியுல்லள்ள வற்கள் மலை வுண்டான னாள்முதல் வமுச பரம்பரையாஇ தினுசுகள் யெடுத்துகுடுத்துக்கொண்டு சீவனம் பண்ணிக்கொண்டு யிருக்குரது.

இப்படிக்கு யெங்கள் பெரியவாள் சொல்ல கேள்வியுண்டு
ஆதிகவுண்டன் ருசு
கணக்கு சரவணைபிள்ளை ருசு

---

1. நொய்யல் ஆறு.
2. போளாமாம்பட்டி, தற்போது புலுவப்பட்டி என்று வழங்குகிறது; கோவைத் தாலுகாவில் உள்ளது இவ்வூர்.
3. மாடுகளுக்கு.
4. கோயமுத்தூர் தாலுகாவில் உள்ள வெள்ளிமலைப் பட்டணம் என்பது. இம் மலை ஊரையே குறிக்கிறது.
5. கணவாய்.
6. குகைகளில்.
7. முடுகர் (Muducar) என மாவட்ட அடங்கல்களில் இச்சாதி குறிப்பிடப் படுகிறது.
8. சமீபத்திலே
9. மெழுகு

# காயங்காடு அல்லது காயங்குளம் வரலாறு

## டி. 3711

யேப்பிறல் மாதம் 21-ஆம் தேதியில் கொங்கிணியற் கோவில் விட்டல் சுவாமி வறலாறும் டெி காயங்குளம்[1] கொங்கிணி சொறடு வாத்தியாற் பிறம்மசெனா சூரியபட்டன் ஜனாந்தன் பிறபு காளிதாசப்பய்யன் தளவலம்பை அப்புச்சவணிகன் னாகெத்திளம்பை னாகசெத்தினபிரபு · அறுட்டு கம்மதி ஆக 8. ஆலப்புடித்தரசு னாயக்கன் பெரியவன்.

கொங்கண தேசத்து பிறாம்மணற் வைசியற் முதல் னானூரு வருஷத்துக்கு முன்னு கொச்சிக்கு வந்து காயங்குளத்துக்கும் வந்து தென்மேற்க்கு றனாழி வழியில் காயள் காவும் குளமாக யிருந்து காயுங்குளமெண்றும் காயங்குளமெண்றும் பேற் வழிப்பட்டுது.

டெி காயங்குளத்து றாஜா றாசியம்... ... 300 களிபணம் வற்ஷனளாடிறயிடமும் 86ம் 1க்கு ஒழிவும் திற 100க்கு 5 வகயில் பணம்... தேவற் பணமும் அதில் வருஷம் 1க்கு சித்திரை மாதம் விட்டம் கோடியெதும் கைறம ஆறாமடு 10 னாள் .. னடனப்பட்டு சி... நிண்ணுபோயி இபோ கொங்கணி கூட்டம் 100, 150, 200 விட்டுக்காற வற்த்தகறானது... 2க்கு 100 கழம் ளெஞ்சக்கிறிஷி ...ற்றாகன்டனப்படுகுறதென்று சொல்லப்படுகுறது.

டெி காயங்குளம் சொன்மாபுளமாற் ஜமாத்து பன்னி வறலாற் காதி ஜயினித்தின் அகம்மது முதலியார்... 4 அகம்மது மூக்குஞ்சு பொக்கு முக்குஞ்சு குஞ்சிசேதிகுஞ்சி அகம்மது மூசு பேறன் ஆக .. முகமத்தின் பிள்ள சைஅமுகம்மது களந்தற்குஞ்சி அகம்மது ஆக 4 ஆக முதல் 39 கூட்டினால் பத்தியூற் ரீறிக்காட்டு நிலண்புளம் தெக்கெக்கற் யிபிறவர்த்தியிலுள்ள 300 (கு)டியும் கூடினது போனால் டெி ...டியில் தோப்பனும் உடம்புறப்பும் யிறவாத பொண்ணை நிகர்வு கழிச்சாலும் செத்தாலும் அகுதியார் வறவுண்டு. தோப்பனும் ஒடப்புறப்பும் ஊறவற்க்கு தெரியாமார...லும் பெறக்கு பெருகுறது புறக்கான் வேதம் அல் அதின் பொன்னாணி ஜயினிச்சுகு பின் பெரியவன்...... வேதம் உமைஉகாரியம்...... யிமாழ்கஜாலி......டையில் போயிட ஆதாரம்.

---

1. காயங்குளம்-கேரளமாநிலத்தைச் சேர்ந்த ஊர்.

# சாமக்குளம் மார்க்கண்ட பண்டிதர் ஒழுங்கு கைபீது

## டி. 2958

ஷெ தாலுகாவுக்கு சேந்த சாமக்கொளம் கோவில் பாளையத் துலே[1] யிறுக்கும் மாற்க்கண்டபண்டித்தற் குமாரன் மாற்க்கண்ட பண்டிதற் யிடத்தில் யிறுக்கப்பட்ட பாளைய யேடில் யெளுதி யிறுக்கப்பட்ட ஒளுகு கைபீதுக்கு நக்கல்.[2]

பூற்வத்தில் கரிகால்சோளன், **சடையப்பன், கஸ்தூரிரங்கப்ப செட்டி, சமையமுதலி** மற்றும்முள்ள பேறுமாக வெள்ளாதி நகர் கடந்து சுகவயநென்ங்குர யிருள் வனத்துக்கு வந்தாற். அவற் வந்தபின்பு கரிகால்சோளன் வேடகம்பளத்தாரைவிட்டு செடி வெட்டிவயிக்கும்போது, அந்த வனங்காத்து யிருந்த கவையபத்திர காளி கோனிடத்துக்கு வந்து பலிகேட்டது. அது கேட்டபடிக்கு சோளன் சமயமுதலிய்யை அளைத்து, அந்த துறங்கிக்கி ஒப்புச் சொல்ல சொன்னாற். அவற் சொன்னபடிக்கு சமயமுதலிய்யையும் அப்படியே அந்த துறங்கிக்கி கரிகால்சோளன் ஆகுரவன், "யிந்த நகரமும் யிங்கேவுண்டாகிய ஆலயமும் கட்டிமுடித்த பின்பு, வுனக்கு னானே சொன்ன பிலி ஆலயமும் கட்டிவயிது வுன்னெயும் நிலைநிறுத்தி, மூப்பலியும் குடுப்பிவிக்குரேன்" யென்று சமயமுதலி சொன்னதுக்கு துறங்கே கேட்டு மனம் பொறுத்து நின்றபின்பு கரிகால்சோளன் வேடகம்பளம் விட்டு அந்த வனம் வெளிபண்ணி, செடிவெட்டிவச்சு, அதலிறுந்த **காலகாலீசுரமுடயாறாகிய** லிங்கத் தையும் கண்டு, அந்த லிங்கத்துக்கு கரிகால்சோளன் கோவிலும் கட்டிவயித்து, **கோவில் நகரம்**மென்று வூரும் கட்டிவைத்து, சுட்டி வயித்தபின்பு சோளன் அந்த வனம் காத்திருந்த **கவையநென்ங்குர யிருளன் பேறுக்கு** வூரும் கட்டிவயித்து, அதில் கோட்டை பேட்டை கட்டிவைத்து வூரும் கட்டிவைத்தாற்.

அவற் கட்டிவைத்தபின்பு செமயமுதலி, சடையப்பன், கஸ்தூரி ரங்கப்பசெட்டி யிம்முவ்வருமாக பதிநேளு சாதி பல குடியும்

அனப்பிவைத்து, கவையம்புத்தூரில் கோவில் நகரமும் கட்டிவைத்து, ஔவு குடியானவற்களுக்கும் முதல்குடி பால்ச்சேரி நகற வேளாளறில் அப்பணநென்ங்குரவனை சடையப்பன் வைத்தாற் செட்டிமையான பலகுடிக்கும் முதமையாக கவரைவளுஞ்சேறியில் திருப்பதிசெட்டி யென்ங்குரவனை கஸ்தூரிரங்கப்பசெட்டி வைத்தான். செயிதபின்பு கர்ணீகத்துக்கு சித்தம்பலபிள்ளைய்யை வைத்தாற். நிகுதிசெயித பின்பு சமயமுதலி உத்தமபண்டிதரை கொண்டு காலகாலேசு பரனுக்கு புணியரங்கம், அஷ்ட்டபந்தனம் பிறதிஷ்ட்டை செயிவித்தாற். செயிவித்த பின்பு, சேரநிடத்தில் கரிகால்ச்சோழன் பூமி கைக்கிறயம்க்கொண்டு அந்த ஆலயத்துக்கு விட்ட மானியம் அயினூற் பொன்கிராமும், அன்பது பொன் சுங்கமும், அன்பது, மிடாவிறப்பு நஞ்சை விடிவித்துவிட்ட மானியத்துக்கு னாலு சூலக் கல்லும், நடுவிடத்து அந்த ஆலயத்துக்கு விட்ட மானியத்தில் சமய முதலிக்கு பத்தில் ஒன்று, ஆலயத்தில் ககலச்சக்கிறம் போடுவித்தாற்.

செயிதபின்பு, அந்த ஆலயத்து வூளியத்துக்கும் நம்பி முதல் திருவிலகுகடைவரைக்கும் ஆள்போடுவித்து, திருவாடு துஷ்கை வூளியத்துக்கு கைக்கோளற் அரவது குடியும் வயித்து, அரவது குடிக்கும் முதமை னாட்டாமைக்கு குப்பண முதலிய்யை வைத்து, நம்பிமுதமைக்கு குப்பயநம்பியை வைத்து, னாகபாச முதமைக்கு கந்தசாமி நட்டுவனை வைத்து, தாசி முதமைக்கு பாறவதி மாணிக்கியெ வைத்து, அந்த கோவில் மணியம் கணக்குக் கைக்கொள்வறில விளனைலைந்த முதலியை வைத்து, அவற்களுக்கு யெல்லாம் ஓலைப்பட்டயமும் பாக்குவெத்திலையும் குடுத்து, சமய முதலிக்கு நிகுதிசெயித பின்பு யிந்த வனம் காத்துயிருந்த கவைய காளிக்கும் **கோவில், கோட்டை** கட்டிவைத்து பிறதிஷ்ட்டை செயிவித்து சேரநிடத்தில் பூமி கைகெரயத்துக்கு கொண்டு தறங்கிக்கி ஆலயத்துக்கு விட்டமானியம் னூரு பொன் கிராமமும், பத்துபொன் சுங்கமும், பத்துமிடா விரப்பு நஞ்சையும், விடிவித்து விட்ட மானியத்தில் சமயமுதலிக்கு பத்தில் ஒன்றென்று துறங்கி ஆலயத்தில் ககலச்சக்கிறமும் போடுவித்து நிகுதி செய்தாற்.

கரிகால் சோளன் நிகுதிசெய்தபின்பு, வூளியத்துக்கு அரிசோகி கோரக்கனாதற் பண்டாரத்தை வைத்து, அந்த பண்டாரம் முதலாக

னாகபாச திருவிலகு கடைவரைக்கும் ஆள்போடுவைத்து, அந்த பண்டாரத்தை துறங்கிக்கி அபிஷேக தூபதீபாறாதனை முடிப்பித்து, அந்த முகத்தில் தறங்கைக்கி ஆடு,பண்ணி, கோளி அருபலியுமடி வித்து நாம் வுனக்கு சொன்ன பலி வந்துதென்று துறங்கைக்கும் ஒப்பிவித்து, அவ்வூரிலுள்ள குடிபிரசை சனத்துக்கு வறுஷெ மொறுக்கால் திருனாள் நடப்பிவித்து நீங்கள் கட்டின வீடுதோரும் பொங்கல் விளக்கு ஆடு, பண்ணி, கோளி யிந்த முப்பலியும், வறுஷமொறு எருமைக்கிடாயியும் மிந்தபடி வாங்கிக்கொண்டு, அவற்களுக்கு நீயுமிந்த கிறாமதேவதை யிறுந்து ரட்சிச்சுக்கொண்டு இருமென்று சமயமுதலி கட்டுசெயிதபின்பு, கரிகால் சோளன், சேரன், சடையப்பன், கஸ்தூறிரங்கப்ப செட்டி மற்றுமுள்ளபேறு மாக சமயமுதலி யெளுதினபடிக்கு அந்த கோவில் நகரத்தில் கால் நதியும்ங்கண்டு, கண்டபின்பு கரிகால் சோழன் அந்த காலங்கிட்ட திகிர்த்தமாடி வந்து காலகால ஈசுபரறுக்கு அபிஷேக தீபாராதனை முடிப்பிவித்து எல்லோரும்ந் தெரிசித்துக்கொண்டு, அந்த னகரில் இருக்கும்போது, அன்னாழில் முன்உரையூற்ச்சோழன் பெண் சாதிகழில் கரிகால்சோளன் தாயாராகிற சிங்கம்மாளையும், அவன் சிறியதாயாரற் ஆகிர சாமளம்மாளையும் வைத்து சஞ்சரித்த பிராமணறில் ராமாபட்டர், சந்திரபட்டர்...

---

1. கோவில்பாளையம், ஈரோடு தாலுகாவில் உள்ள ஊர்.

2. நகல்.

# செட்டிபாளையந் தாலுகா
# பேரூர்க் கைபீது

## டி. 2962

தாறாபுரம் துக்குடிக்கு சேந்த செட்டிபாளையம் தாலுகாவுக்கு சேந்த பேரூறு[1] தேவஸ்தானம் உ.த்தம பண்டிதற் பச்சக்குறுக்கள், பாலசுந்தர சாஸ்திறியள், வேங்கிட்ட சோமயாஞ்சி, சாமவாத்தியாற், அண்ணவாத்தியாற் மொதலாகிய பேற் யெளுதிவிச்ச கைபீது யென்னவென்றால்,

பிறம்ஹாண்ட புராணத்தில் கவுமாரகண்டத்தில் உபரி பாகத்தில் சூதபுராணீகற் நயிமிசாறிண்ணிய றிஷீசுவாறாளுக்கு ஆதிபுரம் ஹத்தியத்துனுட கதை முதல் அத்தியாய முதல் யிறுவத்தி ஆராம் அத்தியாயத்து வரைக்கும் வரப்பட்ட கதை யெளுதி வறுகுரது.

**மொதலத்தியாயத்து கதை :**

சூதபுராணிகரை நயிமிசாரிண்ணியவாசிகளா யிறுக்கப்பட்ட யமுனியமா பிறாணாயாம பிறத்தியாஹார தியானதாரண சமாதி யஷ்ட்டாங்க யோகாதிஷ்ட்டான ததப்பறாளான மஹாரிஷிகள் கிலியுகம் பொரக்கபோரது யென்ங்குர பயத்துனாலே பாவ நிவாரணாற்த்தமாயி கேள்க்கப்பட்ட வரலாறும் நயிமிசாரிண்ணியங் களுடய மஹாத்தியம்ங்களும் சொல்லிவறுகுரது.

**ரெண்டா அத்தியாயத்துலே** வரப்பட்டது :

நயிமசாரிண்ணிய ரிஷீசுவாறாளுக்கு சூதபுராணிகற் அனுக்ரெஹம் பண்ணி நாம் வியாசறாலே கேள்க்கப்பட்ட கதையளை சொல்லச் சொல்லி கேட்டபடியினாலே, சுப்பிரம்மண்ணியறுக்கு பரமேஸ்வரறாலே நந்திகேஸ்வரற் கேட்டு, நந்திகேஸ்வரறாலே சுப்பிரம்மண்ணியற் கேட்டு, சுப்பிரமண்ணியறாலே நாரதற் கேட்டு, நாரதறாலே வியாசற் கேட்டு, வியாசராலே நாம் கேள்க்கப்பட்ட ஆதிபுர மஹாத்தியத்து கதை சொல்லுகுரேன்,

கொங்கு தேசத்துலே மேற்க்கு பிறம்மகிரி, விஷ்ட்டுணுகிரி, றுத்திரகிரி, யிந்த மூணு கிரிக்கும் பூற்வபாகத்துலே, சதுர்சற்மத்துக்கு மூணு யோசன விஸ்தாரத்துலே, மஹாபாபங்களையெல்லாம் போக்கடிக்கப்ப(டும்) மஹாபுண்ணியட் சேத்திரமான பிப்பலாரண்ணியமென்று யிறுக்கிரது. அந்த வனத்து மத்தியிலே பசு பட்சி மிறுகாதிகள் யிறுபரத்திலேயும் நெரஞ்சி,[2] காச்சிமஹா நதியென்று நதி யிருக்குறது. அந்த வனத்துலே சித்திசாரண கந்தற்வ கின்னற யிவர்கள்னாலே சேவிக்கப்பட்டதாயி இருக்குரது. சகல பலங்கள் புஷ்ப்பங்கள் சதாசாற்வகாலமும் பலிச்சுக்கொண்டு யிருக்குரது. அந்த நதீ தீரத்துலே சொயமாக அற்புதமாக ஒரு சிவலிங்கம் வௌங்கிகொண்டு யிருக்குரது. அந்த லிங்கத்துனுடய மகிமெயள் யீஸ்வரறாலே அரியவேணுமே அல்லாமல் நம்(மா)லே அரிய கூடாது. பூற்வம் திரதயுகத்துலே காசபகுலத்தில் வுண்டான (கா)லவ றிஷி யென்ங்குரவறுக்கு அவறத பேறபலத்துநாலே சீவன்முகுத்தியானபடியனாலே காலவேஸ்வர் யென்ங்குரனாமதேயத் தோடே கூடாயிறுக்குராற்.

மூணு அத்தியாயத்துலேயும் காலவ ரீஷீஸ்வரறுடைய தபோ மஹிமெகளும், பிப்பலாரணிய வனத்துலே யிருக்கப்பட்ட பலாதிகள் புஷ்ப்பங்கள் யிது முதலானதுகளுடய வற்ன குகைகளும் காலவரிஷி ஈஸ்வரரை ஸ்துதி பண்ணப்பட்ட வரலாரும், சவிஸ்தாரமாக சொல்லிவருகறது.

### னாலாம் அத்தியாயத்து கதை :

சொலகம்: புராகிறத யுகே பிறம்மன்னு பிறமறிஷி கால மஹான்னு காசிப்பசச்குலே சாதனஹ. கமனிய்ய குணாபுதஹ. தத்திரகாஞ்சீன புண்ணிய சற்வேச்சித பலபறதா தத்திரே கல்ப்பயாமாசா ரெம்மை மாசிரமமுத்தமம் தத்திர சுமாத்துவா முனீனித்திய கற்மகிற்த்துவா மலாதுமானது ஆதிலிங்கம் சமாராதிய தியாத்துவாதி புரனாயகம் ஸ்ரீமது பஞ்சாட்சரம் மத்திரம் திஞ்சாப நியமே கைஹா.

யிதுக்கு பாவம் கிறதயுகத்தில் கால்வரிஷீசுரர் மோட்சம் வேணுமென்ங்குறதாக சுவாமிய்யை குறிச்சு தபசு செயிதாற். அந்த

நாளயில் காலவேசுரரென்ங்குர ஆதிலிங்கம் தேதப்பத்தியாயி அந்த மஹாலிங்கத்தை பூசைபண்ணித் தந்த்தாம் ஆதிபு யகரை குறுச்சு வாதன.. பு பறானாசாறாயி தேவவருஷத்துலே பதனய்யா யிரம் வருஷம் தபசு பண்ணி, அதின்பிரகு பாண்டவ தெரிசினம் பண்ணி மோஷ்சத்தை அடஞ்சாற்.

பிரப்பு பிறமதேவற் யோக நித்திரியினாலே பிறாசா ஸ்ரீஷ்ட்டி பண்ணினவிடத்தில் அவருடைய காமதேனுவானவள் தனக்கு ஸ்ரீஷ்ட்டி சாமார்த்தியம சம்பாதிக்க வேணுமென்று, சுவாமிய்யை குறுச்சு ஹிமோத்தபறுபத பிறாத்தியத்துலே தபசு பண்ணின யிடத்தில், நாரதற் அப்பணையின்மேல் யிந்த ஆதிபுரமும் திமந்திணி வனமும் சமீமஹானதியும் பாரிசாத விருட்ச(ம்) உள்ளனாளையில் வலமீகோதுபவறான விசுவாதிகேசுர(ஸ்)வாமி அந்த காமதேனுக்கு பிரசா ஸ்ரீஷ்ட்டி சாபரிதியமும் அனுக்கிறஹச்சி மனோரத பூற்த்திசெயித பின்பு, தெரேதா யுகத்தில்

சொலகம் : காமாதேனுற் மஹாதேவம் ஸ்ரீ பிப்பலசபாபதிம்
ஆராபிய ஸ்ரீஷ்ட்டி சாமற்த்தியம் லேபேசிவகிறபாவசா.

ஷெ. யுகத்தில் சுவற்ன்னமுகின்தியும் புன்னாக விருட்சமும் கைவல்லியபுரமும் பிலா விருஷ்சமும் உள்ள நாளையில் அமுறுதேசுர சுவாமியென்ங்குற னாமதேயத்தோடே கூடின சுவாமி முசிகுந்த சக்கிரவற்த்திக்கு கபிமுகத்து விமோசனம்பண்ணி தேவேந்திரனுடைய பிறம்மறாட்சசு மோசனம்பண்ணி கோமுனீ, பட்டிமுனிக்கு தாண்டவேசுரசுவாமி அவதாரம் செயிது நாடிய தரிசனம் செயிது அவறுடைய மனோரதம் பூற்த்திபண்ணின நாட்டியதிரசனு வரலாறு யென்னவென்றால் :

சொலகம் : மீனமகதே சுறாசாறியே பாஸ்கரே தீரமாபதே
கன்னியாராசிம் கதேசந்திரெ பவுற்ன்ன மாசியா
பிதாவஹம் ததேஓத்திர பலகுனியாம பாறுவாரேசு
பெதினே மதிய்யம தாண்டவம் சிதிரம் ஸ்ரீபிப்பல
சதசஹம் தரிச ஸ்ரீஷியாமி லெட்சுமீசா லோகானுகிரஹ
காமஷ்சிய பிரணிபத்திய சிவம்பகுதிய தெனுர்
சதியோனுமோதிதஹ.

யிதுக்கு பாவம் பங்குனி மாசத்தில் மீன நாசியில் பிறஹஸ்துதி பகவானும் சூரியபகவானும் வந்த நாளையில் கன்னியா நாசியில் சந்திரன் வந்ததாயும் பவுற்ணமாவாசை திதியும் பானுவாரமும் உத்திர பல்குனி நட்சத்திரமும் கூடின யிந்த சுபதினத்தில், பட்டிமுனி, கோமுனி, காலேசுரர், தேவேந்திரன் முதலான ஸமஸ்தமான தேவதைகளுக்கும் ரிஷீசுறாளுக்கும் நாட்டிய தரிசனம் பண்ணி அனேக சந்தோஷத்தை அடஞ்சாற்.

துவாபுர யுகத்தில் தாளவிறுட்சத்து வனமும் தட்சண கெங்கா (நதி)யும் சூகவிறுட்சமும் உள்ள நாளையில் தற்ம்மனாதேசுர சுவாமி யென்ங்குர னாமதே(த)யத்தோடே கூடின சுவாமியவற்கள் திருபுவன சக்கிரவற்(த)றால் பூசைபண்ணப்பட்டவறாயி அவருடய மனோ ரதிபூற்த்தி பண்ணினாற்கள்.

கலியுகத்தில் காஞ்சிமஹா னதியும், பிலப்பலாரண்ணிய வனமும், பன்னீற் விறுட்சமும், நாமாகுலட்டமென்ங்குர பேரூறுபுரமும், பட்டிசுரசுவாமி யென்ங்குர னாமதேயத்தோடே கூடி ஸபுத்த கன்னிகளுக்கும் சோளறாசாவுக்கும் சவுந்தர...ரறுக்கும் சேரமான் பெருமாளுக்கும் யிஷ்ட்டாற்த்த சித்தியும் குடுத்து அனேக தேவாதிதேவதைகளாலே பூசைபண்ணப்பட்டவராயி பட்டிசுர சுவாமி அவதரிச்சவிடத்தில்...

---

1. பேரூர். தற்போது கோயமுத்தூர் தாலுகாவை சேர்ந்த ஊர்.

2. நிறைந்து

# கம்பம் கிராமம் உண்டான வரலாறு

## டி. 3251

கம்பம் யென்கிர கிறாமமுண்டான வறலாரு.

முன் புறாதனம் யிந்தக் கம்பம் யென்கிர கிறாம பாண்டி தேசம். அப்போது பறாக்கிரம பாண்டியன்[1] நாளையில் சின கம்பமென்பதாய் ஒரு பட்டணம், அந்த பட்டணத்துக்குத் தென் பாரிசத்தில் பாதை மாறக்கத்தில் ஒரு அதிசெயமுண்டாச்சுது. அந்த அதிசெயமென்னவென்றால் ஒரு விருட்சத்தடியில் ஒரு புத்துயிருந்தது. அந்தப் புத்தின்க்கண்ணிலே ஒரு குழந்தைப் பெண்ணிருந்து பாதை மாறக்கமாய்ப் போரவழிகிச் செட்டியை[2] கூப்பிட்டு யெனக்கு வழகி தொடுவென்று கேட்டதாகவும் ஷெ வழகிச் செட்டி புத்தின் கிட்ட வருகிரபோது ஒரு கய்யை நீட்டின தாகவும் அந்தக் கய்க்கி வழகி தொட்டதின் பிறகு ஒரு கய்யை நீட்டினதாகவும் அதற்கும் வழகி தொட்டதின்பிறகும் அப்படி யேராலம் கய்யையும் நீட்டினதாகவும் அதற்கும் வழகி தொட்ட தாகவும் அப்பால் அந்தச் செட்டியைப் பாறத்து அம்மன் சொன்னது உனக்கு வழகிக்குக் கிரையம் பறாக்கிறம பாண்டியனிடத்தில்ப் போய் சாமுண்டி சொன்னாளென்றுக் கேட்டால் குடுப்பாரென்று திருவுளம்பற்றினதாகவும் அந்த வழகிச் செட்டியானவன் பறாக்கிறம பாண்டியனிடத்தில் வந்து யிந்த அதிசெயங்களைச் சொல்லி வழகிக்கி கிரையம் கேழ்க்கும்போது வழகிக்கி கிரையம் குடுத்து விட்டு ஷெ புத்தினிடத்துக்கு வந்து வெளிசெய்து அவடத்தில் ஒரு கோவிலுங்கட்டி சாமுண்டி அம்மனையும் பிறதிஷ்ட்டை செய்து வய்த்தாற்.

அப்பால் கொஞ்சநாளைக்கி பிறகு அந்தப் பட்டணத்தை ...லையதாசனார்கன் பரியாதினம் பண்ணிக் கொண்டிருக்கும் நாளையில் அந்தப் பட்டணம் சீரணமாய்ப்போய் விட்டுது. அதின் பிறகு அந்த சீடன் . பத்துக்கு தெற்கு தொண்டமானென்று ஒருவன் கோட்டையும் போட்டுக்கொண்டு சிருது நாளிருந்தான். அவனுங்

கோட்டையுஞ் சீரணமாய்ப் போனதின் பிறகு **கோதை வற்மறாசா வானவர்** சினக்கம்பத்துக்கு **வடக்கு கம்பமென்று** ஒரு பட்டண முண்டுபண்ணி கோட்டையும் போட்டு அதின் மத்தியில் காசி விசுவனாத சுவாமிக்கி கோவிலுங் கட்டி பிறதிஷ்டையும் செய்து கம்பறாய்ப்பெருமாளுக்குக் கோவிலுங் கட்டிப் பிறகு வீட்டையுஞ் செய்து ரத உச்செபமுஞ் செய்து திருவிளா உண்டுபண்ணி நடந்து வருகிர நாளையில் பினும் முத்தி வினாயகன் செல்வ வினாயகன் திம்மறாயப்பெருமாள் வீறபத்திரசுவாமி அங்காளம்மன் செல்லாண்டி யம்மன் யிவளவு தேவதையளுக்குக் கோவிலுங் கட்டிப் பிறதிஷ்ட் டையுஞ் செய்து பின்னும் வாவே...பள்ளிவாசல் மய்யது தீன் **பள்ளி வாசல்** ஊக்குருவி சாயவு கோரிராமாட்சிக் கவுண்டற்மடம் பெரிய மடம் அன்னக்காவடி மடம் யிவ்வளவும் உண்டுபண்ணி மானியங் களும் விட்டுக்குடுத்து நடப்பிச்சாறகள்.

அதே மேரைக்கி நாளது வரைக்கும் நடந்து வந்துது.

---

1. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில், மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பராக்கிரம பாண்டியனாக இருக்கலாம்.

2. வளையல் செட்டி.

# மாணிக்கவாசகர் மடத்துக் கைபீது

டி. 2966

கோயமுத்தூரு சில்லா பெறுந்துறை தாலுகா திங்களூறு மிட்டா மவுசே குனம்பட்டி[1] கறயில் யிறுக்கப்பட்ட மாணிக்கிய வாசற் யென்னபட்ட பிறாமணன் மட்டாதிபத்தியத் தொடைய கையிபியது.

பூற்வத்தில் பாண்டிதேசதுக்கு பெறதாணிக்கியமாக தேவதா அம்சத்திலே ஜெணிக்சியபட்ட வாதபுறிசுவறற்க்கு யிசுவற அனுக்கிற அத்துனால் மாணிக்கியவாசறெண்டு பேறு வறபட்டு, ஞானவரத நாயிறுக்கும் காலத்தில், அவறிடத்தில் சிஷியனாக ஒறு பிறாம்மண பிள்ளை சிசுறுஷை பண்ணிகொண்டு பொகுனாள் அவறிடத்திலே காத்துயிறுக்கும் யெடத்திலே, யிந்த பிறாம்மணபிள்ளை யெடத்தில் றொம்பவும் சந்தோஷம் தோணி, தமக்கு சாயெறெசிய வேளையில் தம்மோட சன்னிதானத்தில் காத்து சிசுறஷெ பண்ணி கொண்டு யிறுந்த சிஷ்ஷனுக்கு கேனோபதேசம்பண்ணி தம்மொடய னாமதேயம் வெச்சாற்

மேலே யெழு நபட்ட மாணிக்கியவசற் யெடத்தில் சிசுறுஷெ பண்ணிகொண்டு வறபட்ட பிறாம்மண பிள்ளைக்கு கியனோப தேசத்துனாலே, ஆசிறுவாத கடாஷ்சதுனால், மாணிக்கியவாசகற் யெண்ணபட்ட பேற் வறபட்டு சகல பிறுதுகளொடனே சிவதாபுரி ஷேசத்திறத்தில் வாசஷ்தறாயிறுந்தாற்.

மேல் யெழுதபட்ட சிவதாபுரி ஷேக்த்திறத்தில் வாசஷ்தறாயி யிறுக்கபட்ட மாணிக்கியவாசகற் யெண்டு பேற் வறப்பட்டு, யிறுக்கும் காலத்தில், சிறுதுப் பெறதேசங்களிலே யிறுக்கபட்ட பிறாம்மணாள் முதலான செனங்கள் யிவறொடய மகிமகளெ கேள்விபட்டு, செனங்கள் வந்து தறசெனம் பண்ணி, அவாள் அவாளுடய அபிஷ்டங்களெ பிறாற்த்திச்சு கொள்ளும் யெடத்தில், அவற்க்கு கியானோபதேசமான பலத்தினாலே செனங்கள்க்கு விபூதி குடுத்த மாத்திறத்தினாலே, செனங்கள்க்கு அவாளவாளுடய அபிஷ்டங்களெ னெவேற்ப்பு பண்ணிகொண்டு செனங்கள் சிஷ்ஷிய மாற்க்கமாயி னடந்துகொண்டு வந்தாற்கள்.

யிப்படிக்கி மேலே யெழுதபட்டவறுடய மகிமகள்னாலே அனேகம் செனங்கள் சிஷ்ஷியறாயி, பொகுனாள் சிவதாபுறிக் ஷேத்திறத்திலே பிறக்கியதியாயி பறம்பறியா யிறுந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் சுப்பிறம்மணிய யாத்திறை மு(தலான) .. ளனை முதலான சிவ ஷேச்த்திறங்களெ தறிசனம் பண்ணவேணு மெண்ணு வந்தயெடத்தில், அக்காலத்துக்கு கொங்கு தோசாதிபதி யான சேறனெண்ணபட்ட றாசா யிவறுடய மகிமெகளெ கேளுவி பட்டு, தம்முடய தேசத்தில் யிறுக்கவேணு யெண்டு பிறாற்திச்சு சிறுது கிறாமம் பூமிகள் குடுத்து யிவடத்தில் னிறுத்திக்கொண்டான்.

கொங்குதேசத்துக்கு வந்து யிறுக்கும் யெடத்தில், யிந்த பெற தேசங்களிலே யிறுக்கபட்ட செனங்களுடய சிஷ்ஷியாற்ச்சனை யினால் மாணிக்கியவாசகற் யெணப்பட்டபேற் பிறிக்கியிதியாயி, வாகுபறம்பறியாயி **அவினாசி விசயமங்கல**[2] முதலான ஷ்தளம் களில் மடம் உண்டு பண்ணி கொண்டு அனேகம்பேற் சிஷ்ஷாற்ச் சனை அனுப்பிவிச்சுக் கொண்டு வந்தாற்கள்

மேல் யெழுதபட்ட மாணிக்கியவாசகற் யெண்ணபட்ட பேற் வறப்பட்டவறுடய காலம் துவாபற யுகாந்திமமானபடியினாலேயும், தாகல்க்கு ஆதறுவுவா யிறுக்கபட்ட ஒளுகுகள் காலாந்தறங்களிலே றாசிகங்களிலே கயி சோந்தபோனபடியினாலேயும், ஆதி ஆறப்பிய மாயி பட்டங்களுடய வற்செகளுடய சகமங்களுக்கு வயனம் தெறிய வில்லெ.

யெங்களுடய ஆதினத்துக்கு பறம்பறியாயி னடந்துவறபட்ட வினியோகமுஷ்தை யிதெகள் பல்லக்கு, உபயசாமறம், சுவேத செதறம், சூறியபான், னகாற், சங்கிதவாத்தியம் யிதுமொதலான பறட்டவணைகள் உண்டு. அதுலை வெத்தியசம் யில்லே. யிப்படிக்கி யெங்கள் வங்குச பறம்பறியிலே னடந்துகொண்டு வறபட்ட சிஷ்ஷி யாற்ச்சனைகளையும் அனுப்பிவிச்சிகொண்டு னாளது ஆசறுலை யிறுக்கபட்ட றாசலிங்க மாணிக்கியவாசகற் யெண்ணும் பேறு வற பட்டவறாயி யிறுக்குறேன். 1807 ஹு சூனு மாசம் 14-தேதி மாணிக்கவாசகர் ஒப்பிதம்.

---

1. பெருந்துறை, திங்களூர், குணம்பட்டி ஆகிய மூன்று ஊர்களும் தற்போதைய ஈரோடு தாலுகாவில் உள்ளன.

2 விஜயமங்கலம் எனும் ஊர், ஈரோடு தாலுகாவில் உளது.

# நெமிலிக் கிராமக் கைபீது

## டி. 3789 (ஓலை)

சுலாயி மாதம் 16-ஆம் தேதி நிம்மிலி அக்கிறாகறம் ஷெ அக்கிறாகறத்தில் சாசனங்கள் யில்லயாம். ஷெ கிறாமத்துக்கு கிழக்கு திருக்கழி குன்னுவழி யோறம் கல்சேத்தும் கீழே திரிவிய மிருக்குதென்று அந்த கிறாமத்து பிறாமணாள் முதலான பேற்களும் சொல்லுகுறா(ர்க)ள்.

அந்த கல் சேத்தி காணப்பட்டுது.

சுலாயி மாதம் 17-ஆம் தேதி வல்லம் கிறாமத்து செபத்து ஷெ கிறாமத்துக்கு மேற்குளத்துக்கு மேல்புறம் மலைக்கிக் கீழ்புறம் தாழ்வரையில் ஒத்தைபாரை கல்லில் துளைச்சுயிருக்கும் கோவிலில் கைலாசனாத ஸ்வாமியார் பூசை ஆகுர கோவிலில் லிங்கம் 1. ஷெ கோவிலுக்குக் கீழ்புற சரிவில் பூசையில்லாமலிருக்குற ஒத்தை பாரையில் துளைச்சு யிருக்குர சிவன் கோயில் 1. ஷெ கோவிலுக்கு வடபுறம் பெருமாள் கோவில் ஒத்தை கல்லு கோவிலிலிருக்குர பெருமாள் கோவில் 1.

யிந்த கோவில் பாரையில் அந்தந்த துவார பாலகாள் அந்த மலைப்பாரையில் கல்லிலேதானே செய்து யிருக்குது

அந்த ஊருக்கு அக்கினி மூலையில் யேரியெதிரில் பாண்டுகுழி யிருவது மட்டுக்குமட்டுக்கு மிருக்குது.

யிதி மேற்குமலை யோரத்தில் பாண்டுகுழி 20 மட்டுக்கு மிருக்குது.

---

இங்கு கூறப்படும் நெமிலி, தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகாவில் உள்ள நெமிலி எனும் சிற்றூராக இருக்கலாம்.

# ஏநாமக்கல் வரலாறு

## டி. 3449

1820-ஆம் வருஷத்தில் ஜனவரி மாதம் 27-ஆம் தேதி பகல் 4 மணி முதல் பிபர்வரி மாதம் 5-ஆம் தேதி வரைக்கும் ஊறகம் முகமாய் இருந்ததில் ஷெி யேனாமக்கல் கோவிலகத்துக்கும் வாதுக்கல்லுக்கு சேர்ந்த சீற்மை வழி வழி வறலாற் முதலானது.

பெருமனம் கிறாமக்காற் குன்னத்து பட்டேரி மடத்தில் னம் வடக்கேயிடத்து நம்பூதிரி சித்தூர் 1. அவணாமல் 1. னம்பூரிப்பாடு வாள்ளம் பிஸ்தாநம் உள்ளவர். ஜன்மம் யென்றது அப்படி பேரு நிறோதம் யெண்ணப்படும்.

ஆயது நம்பூரிமாரில் அத்து தேசத்தில் உள்ள சம்மந்தக்கார் நம்பூரிமார்களுக்கல்லாதே அன்னிய பிறாமணாளுக்காக கட்டும் அட்டி பெரு நிறோதம் குடுக்குற வாடிக்கைகளில்லை. ஆனால் யிப்போ சூத்திறறும் வெள்ளாயிமக்காறறுக்கு நாடு சம்மந்தி சந்தேசங்சள் ஜன்மமுண்டென்றும் கீழக்கடயில் ஒறோரு பிறபுக்கள் மாற் அடக்கி பல சங்கதி ஆயும் கையேரின வகையில் பிறபுக்கள் மாற் ஜன்ம்மமாக அட்டி பேருகுடுத்து அனுபவிக்குறதுகளும் உண்டு யெண்ணப்படுகுறது.

கிறாம சம்மந்தப்பட்ட தேசங்களில் ஜன்ம்மம் அட்டி பேரு நிறோதகமருகியாதிகள் யில்லையென்று கிறாம சம்மந்தத்தில் நாலு யில்லக்காறறும் கூடி ஜன்மம் உள்ளதில் ஒருத்தருடைய வஸ்து அவர் அடியந்திறத்துக்காக மத்தொருத்தருக்குக் கொடுக்குறதர்க்கு பொருமற்த்தம் தேச மரியாதி போலே குடுத்தாலும் வாங்காக் கொடையாலும் அர்த்தம் வாங்கிக்கொண்ட நம்பூரி அர்த்தம் குடுத்த நம்பூரிக்கி இன்ன வஸ்துவில் யெனக்குள்ள காணம் போதிச்சுது யென்று புக்கு சீட்டு குடுத்ததிநால் மத்துள்ள நம்பூதிரி புக்குசீட்டு வொங்கிக் கொண்டவர்ச்கு ஜனம்மமாச்சு தென்றும், அத்துதேச மல்லாதே மத்தொரு அன்னியதேசங்களில் உள்ள

அன்னியருக்கு யேதானும் சில வஸ்து ஜனமம் குடுப்பாரும் வாங்குவாரும் கீழ் மரியாதி இல்லையென்றும் தேசம் அடக்கி புக்கு சீட்டு வாங்கியால் பெருமற்த்தம் குடுத்த புக்கு சீட்டு வாங்கியவர்க்கு ஜன்மம் ஆயிவருமென்றும், யிப்படிக்கி உள்ள கிறாமாசாறமாந் தேசங்களில் கீழ் மரியாதி நடப்புகளென்றும் சொல்லப்படுகுறது.

ஜன்மத்துக்கு நிறோதம் பிறமாணமென்றதாகயால் பிறாம் மணர்க்கு பிறாமணறல்லாதே ஜன்மம் சம்மந்தமான அட்டி பேரு சூத்திராதிகளுக்கு யின் மலையாளத்தில் கீழ்மரியாதிகளில்லை யென்றுப் படும்.

உபயத்துக்கும் உல்ப்பத்திக்கும் பறம்புகளுக்கும் ஆளடியாற்க் கும் ஜன்மம் சமந்தமுள்ளவர் யின் மலையாளத்தில் பிராமணர் னம்பூரிமா்ர் யெண்ணு சொல்லப்படுகுறது பிராமணரில் கிராம மெண்ணும் தேசமெண்ணும் உள்ளதில் அத்து கிராமங்களிலும் தேசங்களிலும் அத்துதேச மரியாதி போலே முதலான ஜன்மிகளான னம்பூரிமாற் சூத்திறர் முதலான குடிகளுக்கு காணம், பணயம், அடும் அனுபவம், இப்படிக்கி பணம் வாங்கிக்கொண்டு குடுக்குறதும் உண்டு. மாடம்பிக்காற்றை உண்டாக்கியதில் ஆ பிறபுக்களுக்கு ஜன்மம் குடுத்திருக்கிறது உண்டு. அவாளாலே பல வகயில் அடக்கியும் சூத்திரர்களுக்கு ஜன்மம் அனுபவவும் உண்டு. பிராமணர் ஜன்மம் அட்டி பெரும் அடுப்பில் விராயன் பொன் 100க்கு வருஷத்துக்கு நெல்லு புற.கவ. புறபாட்டம் வருவானுள்ள நீலுகண்டு அட்டிபேரும் வாங்கியும் யிப்போ பலப்பிறகாறம் னடப்புகளும் உண்டு. காணத்துக்கு பொன் 100க்கு ஆண்டு 1க்கு பலிசைக்கி 2க்கு கால்பலிசயும் மூவாயிரம் காலே அரைக்கால் பலிசயும் நீதி வநத்தின பிறகு அஞ்சிஅரெ பலிசயும் கண்டு குடுக்குறதும் வாங்குறதும் பெருமணம் கிறாம மரியாதி யெண்ணப்படும்.

பெருமற்த்தம் அண்ணன்னத்தை விலை கண்டு நாலற கண்ட பொருமர்த்தம் பலிசமடக்கி பொன் 100-க்கு பலிசப்புற 5.

அதுக்கப்பால் ஒண்ணுமில்லை, பணம் குடுத்தால் மத்தது நிலுவிட வேண்டும். பாட்டம் 1க்கு புறகண்டத்துக்கு 3 விளவு ஒரு புறநெல்லு பாட்டம். மூனுபாட்டம் யெண்ணும் மூணிலொண்ணு பாட்டம் ஜனமிக்கி அனுபவம்.

உபய பட்டோலைக்காறணமாவது 12 வருஷத்துக்கா நாலும் தேவஸ்வத்திலாகட்டும் ஜன்மிக்காகட்டும் சாக்ஷிக்கவகாசம் யாறா, 1, 2, ஒப்புறா, 100-க்கு, 3, 5, 7, 8, 10, 13, 15, வறயும் உள்ளது கூடி கூடி குடுத்து மாரியெழுதி வாங்க கொடுக்குறதும் திறவியபுஷி போலே காலவர்த்தமானம் போலே மரியாதியெண்ணு சொல்லப் படுகுறது.

சூத்திராளுக்கு பெருமணம் யிருங்காலிக்குட கிராமத்தில் ஜன்மமில்லை யெண்ணப்படுகுறது. அத்தாலடக்கமாயி ராஜாக் கள்மார் முதலாய பிறபுகளுக்கு ஜன்மங்கள் நடப்புகள் உண்டு யெண்ணுசொல்லப்படுகுறது.

யிப்பவும் இவடங்களில் னடப்பு நிலுவகைக்கும் புறம்பு வகைக்கும் அட்டிபெரும் 1, உபய பட்டோல 1, பணய சாத்தோல 1, யிதே காணமெணப்படும் வெரும் பட்டோல 1, பாட்டஞ் சாற்த்து 1, தேவஸ்வ மரியாதிக்குள்ள காணப்பட்ட வகை 1, ஆளடியாற் அட்டிபெத்தோல் 1, பண்டாற வகையில் பட்டயம் 1, அடும் அனுபோகம் 1, இப்படிக்கு மரியாதிநப்புக்குள்ள வகையிநாலே

| குடி கிஷி | படியாள் சிலவு | விளவு வெள யும் | பண்டாற வகைக்கி | குடி யான் | விஸ்த்த றம் புற | உண்டாக்குறதி னுசு மற வகை | தினுசு | யென் சுக பிறர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| யிவல ளவு சாகுபடி | வுழு முதலான வகை | பலன் வகை | குடுக் குறம் | கிரிஷி செயதம் | 30 | பிலா அயிணி | | சேச்கறம் வகை |
| யாகு மென்றது | கை | யெடுப்பு முதல் | ரியானு | $1\frac{1}{2}$ | 40 | யின | | யில் 6 |
| சாகுபடி | சிலவு வகை | கண்டு முதல் | நிதி | ஆதாயம் | 60 | மறங்கொண் குண்டாக்குறது | | யில் 8 |
| விரிப் புகள். ளி. பொன் 40 | எறம் படவு | விரிப்பு 100 புற | பலு வித்தார் | | 80 | | | யில் 12 |
| முளைட மகறப்பூ 30 | யிரும்பு வகயில் 316 | கண்டம் புற 200 300 | வித்து பலு 100 | | 120 | அயிலா பிலாடி றுளச்சி சசி | | யில் 16 |
| புஞ்ச மடப்பூ 30 | கிரிவிக் காறனுக் கு | விரிப்பு 2 சிப்பு | வித்து பலு 1/4 | | 160 | பிலா அயிணி கட்சி | | யில் 24 |
| ஆக 100 | வித்து பொன் 100 | கண்ட மளை வுள | வித்து பலு 1 | | 1 | மாவு அயிணி பிலா | | யில் 32 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| துலா கொட்ட | யிரும்பு அடுக்க | பொன் 1 | நீதி வித்து 1 | மூணா தறும விரிப்பு | வள்ளி... 100 ... | மூனு குடி வரி ஆள் 1-1 |
| தொணி | குள்ளி வாக அயிணி | ... 3 | நீதி வித்து | 10கி 5 | 1-கி வெள்ளிச்சற | ஆண்டுக்கு |
| தூம | அயிணி பிலா | பொன் 3 | பாட்டம் 5 | புஞ்ச 10 கி 150 | ... 24 | |
| யேறகரி | அயிணி | பொன் 32 | பாட்டம் 3-2 | புஞ்ச 10 கி 1000 | 2 | |
| ஊற்ச்ச முட்டி | அயிணி | ... 1 | பாட்டம் 22 | புஞ்ச 10 கி 50 | | |
| நவரிபலக | அயிணி | ... 40 | பாட்டம் ... | முண்ட கன் 150 | | |
| கொளு மறவி | யிரிம்பு | ... 12 | பாட்டம் ... | முண்ட கன் 100 | | |
| ஞொள்ளி பலக | யிரிம்பு | | | முண்ட கன் 504 | | |
| கை மறவி | | யிட 3 | | | | |
| அரிவறள் | | புத்து 102 | | | | |
| ஞரத்து. | | புத்து 1 லட்சம் | | | | |

# மதுராந்தகம் வரலாறு

## ஆர். 3829

பூர்வத்தில் மதுராந்தகமானது மதுரையில் ஆண்ட பாண்டிய ராசாவுக்கு வடபுறத்து கடை எல்லையா யிருந்தபடியினாலே யிது மதுராந்தகமென்னும், வடமதுரை என்று மழைக்கப்பட்டது. இதற் குத்தாட்சியாய் மதுரை பாண்டிய ராசாவினாலே யிந்த வடை கடை எல்லைக்குக் காவலாய் வைத்த பிடாரி யாரின்னாள் வரைக்கும் மதுரைச் செல்லியம்மன் என்றழைக்கப்படுகிறது.

இதி லனாதியா யிருக்கிற ஈஸ்வரன் கோவிலொன்று இருக்கிறது. இது சுவேதாரண்ணியர் தேவஸ்தானம் என்றழைக்கப்படுகிறது. இந்த லிங்கம் பூற்வீகத்தில் சூரியனால் பூசை பண்ணப்பட்டதாம். அப்புறங் காடுமூடி வெகுகாலமாய்க் கிடந்து கடைசியிலே நளராசா வானவன் குஷ்டரோகம் பிடித்து வெகுநாளா யவதிப்பட்டு, கடைசியி லுபாதி பொறுக்க மாட்டாமல் விஷத்தை சாப்பிட்டு பரதேசம் புறப்பட்டு இந்த விடத்தில் வருடபத்தி லிந்த லிங்கத்துக் கெதிராக விருக்கிற தீர்த்தத்தில் விழுந்து புரண்டு அப்போ அதில் தண்ணியில்லாமல் சேறாய்க் கிடந்ததால் அந்த சேற்றை வாரிச் சாப்பிட்டான்.

உடனே அவன் குஷ்டம் தீர்ந்துபோய் விஷபான முறிந்து போச்சுது. அப்போ அவனுடனே யிந்த தெய்வத்தை கீர்த்தனம் பண்ணி உடனே காட்டை யழித்து, தேவஸ்தானங் கட்டிவைத்து, சுவேதாரண்ணிய தேவஸ்தானமென்று பெயரிட்டான்.

இந்த குளத்தில் முழுகி குளிச்சதினாலே தனக்கு சொஸ்தங் கிடைத்த படியா லிதற்கு விஷஹர தீர்த்தமென்று பேர் வைத்தான்.

அப்புற மிது இலமாய்ப் போய் பாண்டிய ராசாவால் கட்டி வைக்கப் பட்டுது. அப்புறம் இலமாகி சோழ ராசாவால் கட்டி வைக்கப் பட்டது.

அவரே யிந்த மதுராந்தகத்தில் பன்னிரண்டு சிவாலயம் யஉ விஷ்ணு ஆலயங்கள் 108 பிள்ளையார் கோவில் கட்டி வைத்தார். அதுக ளின்னமிருக்கிறது. இதல்லாம லொரு அக்கிரஹாரங் கட்டி வைத்தார். அதுவு மிருக்கிறது.

இந்தப்படி சோழராசா இந்த மதுராந்தகத்தில் வெகுநாள் வாசஞ் செய்தார்.

இந்த வூர் ஸ்தல மகத்துவம் மதுரை ஸ்தல மகத்துவத்துடன் சேர்ந்திருக்கிறது.

# வேட்டமங்கலம் வரலாறு

## டி. 3057

**வேட்டமங்கலம்[1] பூற்வ சங்கதிகள்**

ஆதி காலத்துலே வாயு பகவானுக்கும், ஆதிசேஷனுக்கும் தற்க்கம் வந்தபோது, மகாமேறுவுலே ஆயிறத்தெட்டுக் கொடு முடியிலே ஒரு முடியானது செண்டமாறுத[2] மென்னப்பட்ட வாயு பகவான், ஒரு முடிய்யை செதறும்படியாக அத்தபோது, செம்பு தீவில் திறாவிட தேசத்தில் கொங்கு மண்டலத்தில் செதரி விளுந்து பத்து யோசனை யொசறமும் மூன்று யோசனை அகலமுமாகி விளுந்து யிறுக்குற திருப்பாண்டிக் கொடுமுடி[3] யென்னப்பட்ட பறுபதில் மலை கொளுந்தா[4] யிறுக்கப்பட்ட மகுட்டிசுபற் வன்னிவனம் சேத்திரத்தில் பூற்வ திக்கில் ரெண்டு குரோசம் தூரத்தில் பாதாளத்தில் மரைந்து யிறுக்கப்பட்ட ஸிறை பறுபதில் பிற்க்காலம் அகஸ்தியற் கமண்டலத்தில் பாகீறத்திய்யை பொதிய பறுபதத்துக்கு கொண்டு வறுகுர போது,

அந்த பகீறத்தியானது பூமியின் கமிறில் கவிளுந்து வருகுர காலத்து, ஆதி கருவூறு[5] யென்னப்பட்ட வஞ்சுளாரண்ணியம் சேத்திரத்தில் துராசாரங்களும் உண்டாக்கின பேர்க மோன மென்னப்படாஙின்ற சிவிக்கியானத்துக்கு விளியான அம்புலனெ யடக்கி, மூச்சவீத்து, யிறுக்குமனி சுவாச யோகுத்தில் யிறுக்கப்படா னின்ற முனீசுபறாள் ஞானமென்றும் ஞானவாளிய திறலை ஒடத்தா யிறுக்கப்பட்டவற் னாலு வேத முடிவான வேதாந்த பொறுளின் விசாரணையினாலே ஆறாயிந்து, மனது தெளிந்து, முதிந்த பெரியோற்களான முதிக்குரைவாளாரான பெரியோற்கள் மாதவத் தோற் குறிதோயிந்து ஈனமான வல்வினை அகலுமட்டி மூல கெற்ப மென்னப்பட்ட இளங்கையறிந்து, இனிதோடும் கூடி தவசு பண்ணி பேற் பெறத்தக்கதாக அருள் செயிதபடி மூல கெற்ப மந்திரம் ஙிற்னையம் உள்க்கொண்டு தபோ மகிமைய்யை குறித்து போனபடியநாலே குறுக்கி யென்றும் சிறுதுட் சேத்திரத்தில் பெற வறுகுரது. ஆகயால் யிந்த நாட்டுக்கு கௌங்கு நாடு யென்றும் பேற் வறப்பட்டது.

இப்படி சொல்லப்பட்ட கிழங்கு நாட்டுக்கு காவேறியும் காச்சிமா னதியும் சக்கமாகும்போது[6] அகஸ்தியற் மகுட லிங்க ஈசனை கமண்டலத்தில் யிறுக்கின்ற பகீறதிய்யை வரவளைச்சுக் கொண்டாரென்ன, வரகுரபோது, அகதிஸ்யருடய பேர்மகிமை யினாலே பாதாளத்துலே யெறங்கும்போது, கற்த்தனை கண்டு பிடித்து, தெறிசினம் செயிது, திருவளட்டிக்கி பூற்வ திக்கில் பிறம்மா வேள்வி செயித கொன்றவனட் சேத்திரத்தில், அற்ப்புத லிங்க ரூப தறிசனம் தறுகுரோ மென்றபடி, அகஸ்தியர் வந்து பிறம்மா வேள்வி செயித கொன்றவனட் சேத்திரத்தில் தவசு கோறினபடியனாலே, கொன்றவனட் சேத்திரத்தில் அகஸ்திய ரிஷிக்கும் யிஷ்ட்ட காம்மிய சாயுச்சியம் தந்தறுளின போது சகலமான தேவதைகளும் புஷ்ப்ப மாறி வறுஷித்தபடியநாலே, புஷ்ப்பவன நாதரென்றும் பிறம்மா வேள்வி செயிதபடியநாலே வேதனாயகி அம்மனென்றும் பேறாச்சுது.

யிப்படிப்பட்ட ஸ்தலம், சிறுது காலத்துக்கு முன்னே அருப மடைந்து ஸ்தலம் யிறந்து போகாமல்ச் சேற றாசன் வேட்டைக்கு வறும்போது, யிந்த ஸ்தலத்தை கண்டு, சீறனோதாரணம் புண்ணி விச்சு, வேட்டையாடின யிடத்தில் வூறு உண்டு பண்ணின படியநாலே, வேட்டமங்கலம் யென்று நாமதேயம் உண்டாச்சுது.

இந்த ஸ்தல மகுத்துவம் கொடுமுடி புறாணத்திலும் கறுவூற் புறாணத்திலும் சொல்லி வறப்பட்டது.

---

1. சண்டமாருதம்.
2. வேட்டைமங்கலம் : திருச்சி மாவட்டம் கரூரிலிருந்து 12 கல் தொலைவில் உளது.
3. கொடுமுடி : கோவைமாவட்டம் ஈரோடு தாலுகாவில் உள்ளது.
4. மலைக் கொளுந்து-மலை உச்சி.
5. கரூர் : திருச்சி மாவட்டத்தில் உள்ள தாலுகாத் தலைநகர்.
6. சங்கம மாடும் போது.

# அருணாபுரிப் பட்டணங் கைபீது

## D. 3030

திருவண்ணாமலை[1] துக்குடியில் அருணாபுரிப் பட்டணங் கைபீது.

பரமசிவன் நந்திகேசுவரருக்குப் போதித்தபடி அந்த நந்திகேசுவரர் சொல்லப்பட்ட பெருமைதான் எப்படியென்றால்—கணத்தையுடைய மழுவும் மானும், (பிரம்பும்) கைக்கொண்டிருக்கும் சிறுவாளாயுதமுங் கைகளிலே தரிக்கப்பட்டவர். பவளமலைபோலுந் திருமேனி நிலவு பிறகாசம் போலே விபூதி தூளிதமுஞ் சடைமுடியும் திறிநேத்திரமும் திருவரையிற்க்கட்டிய புளித்தோலுங் கச்சையும் சதுர்ப்புசமு முப்பரினூலுமாகத் தோன்றிய காஷ்ச்சியையுடையவர். அதல்லாமலும் கெங்கையை சடாபாரத்திலே தரித்திருக்கப்பட்ட பரமசிவனுடைய ஆணை ஆக்கினை செலுத்திக்கொண்டு கைலாச கிரியை காத்திருக்கப்பட்டவர். அதல்லாது கொய்யப்பட்ட செந்தாமரைப் பூப்போலும் சிவந்த திருமேனியும் நீலகண்ட ரிஷப வாகனமுடைய பரமசிவன் உண்மையின் சயிவ சமயமென்றும் யிசனது தழைக்கும்படி கறு(த்த) மேகம்போலத் திருவறுள் பொழிந்து வற்த்திக்க செய்யப்படா நின்றவர் பஞ்ச யிந்திரியங்களையு உள்ளடக்கி யோகஞ்செய்யுஞ் சிலாதாரிழிக்கி ஆவியாகிய புறத்தியிலே யுலாவப்பட்ட புத்திரன் அவனைத் தெய்வங்களெல்லாம் தொழுது வணங்குமிடத்திலே அந்த தெய்வங்களிட கிரீடந் தாக்கி சிவந்திருக்கு மலர்பதத்தினையுடைய நந்திகேஸ்பரர்; அப்படிப் பட்ட நந்திகேஸ்பரன் காவலாயிருக்குங் கையிலாச கிரிதானெப்படி யிருக்குமென்னில் யீஸ்பரனுடைய சடையிலே தரித்திருக்கப்பட்ட சந்திரனைப் போலும் விளங்கிய படிகநிரமான வெள்ளியங்கிரி தானெப்படி யிருக்குமென்னி லிஸ்பரனுடைய சடையிலே தரித்திருக்கப்பட்ட கெங்கையினிட பிறகாசம் அந்த மலையினிடத்தில் தேவேந்திரன் முதல் சகல தேவதைகளுஞ் சேவிக்க வருகயில் நெருங்கி கிரிடமோடு கிரீடங்களொன்றோடொன்று தாக்கிய சத்தத்தினுதிர்ந்த அபரஞ்சிப் பொடியும் றத்தினமணிப்

பொடியு தினமானம் விளக்கி யொதுக்கியது பொன்மலை போலுங் குவிந்து கிடக்குமப்படிப்பட்ட கைலாசகிரி அப்படிப்பட்ட கைலாச கிரிமேலே முகசாலை மண்டபமுண்டு. அதெப்படி என்னி இந்திர நீல றத்தினத்தால் சந்துதெரியாமலெழுதிச் சேற்த்து வைத்த சுவர் புறப்பமும் அதுள்ளே வசிர வயடூரிய மலைகளைத் திரட்டிய தூணுக்கள் நிறுத்தி மாணிக்கங்களால் மதனக்கால்க் கொடுத்து பவளத்தினாலே பொதிகையிகள் சேர்த்து மரகத றத்தினதால் உத்திரங்கள் பாச்சி சந்திரகாந்தத்தினால் பாவுகல்லு பரபிய றத்தின திவியமான மஹாமண்டபமுளது.

அப்படி அனேக விஸ்தீறனமான மஹாமண்டபத்தினடுவாக யிரண்டு பிறமு முத்துகள்ளாலே வைத்து யிழைத்து யிருக்கும் சிங்காசனத்தின் மீதிலே குருமுகூற்த்தமாக நந்திகேஸ்பரன் வீத்திருக்க அதன்கீழே நீல பருமணி ரத்தினத்தினாலே வைத்திருந்தது எப்படி யிருந்துதெனில், முன்னாள் கையிலாசத்திலே வடவால விருஷ்டத்தின் கீழே சிங்காசனத்தின் பேரில் முயல்கள் பேரில் ஒரு பாதத்தையூன்றி ஒரு பாதத்தை முழந்தாள் மேற்க் கொண்டு எழுந்தறுளியிருந்து அருமறையாகிய வேதந்த தறுமாற்த்த கர்மமோக்ஷியங்களை அகஸ்த்தியர் புலஸ்தியர் சனகராசன் குமார ரிஷிகளுக்கு உபதேசம் பண்ணபட்ட பரமசிவன் போல வீத்திருந்தார் நந்திகேஸ்பரர். அப்படி நந்திகேஸ்பரன் சிங்காதனத்திலே வீத்திருந்த தறுவாயிலே, அனேக ரிஷிகள் வந்து சேவித்திருந்த போது, அவர்கள் ஆரோ வெண்ணி குறசென மஹாரிஷியும் ரோம மஹாரிஷியு குமுதரிஷியு குமுதாக்கரிஷியு சகடாயரிஷி கும்பசாதரிஷி வறசனவைசம்பாய ரிஷி புலிக்காலராகிய வியாக்கரபாத ரிஷி வாமதேவரிஷி சனகாசனகுமார ரிஷி யளவதசயன ரிஷி மதங்கரஷி யீஸ்பரனுடைய நடன பாதத்தை அற்சன செய்யப்பட்ட அனந்த ரிஷியாகிய பதஞ்சலியும் யிவர்கள் முதலான அனந்தரிஷிகளும் வந்து சேவித்து நந்திகேஸ்பரன் பக்கலிருந்தார்கள்.

அந்த வேளையிலே மாற்க்கண்ட ரிஷி யெழுந்திருந்து நந்திகேஸ்பரனை வணங்கிக் கேட்டபடி யெதென்னில், ஆதியிலுண்டான சீவராசிகள் மழை மின்னுப் போலும் பூதலத்திலே பிறப்பதாகவு மிரப்பதுவும் நல்வினை தீவினையினாலென்று எங்களுக்கு முன்சொன்ன கற்த்தனே, யினி யந்த சீவராசிகள் மோக்ஷத்திலே

யடையும் வகை சொல்ல வேணுமென்று கேட்க்க அந்த கேழ்வி நந்திகேஸ்பரனுடய திருச்செவியில்க் கேட்டு அவெருங் கிறுபைகூர்ந்து மார்க்கண்ண ரிஷிக்கி யருளி செய்தார்.

அந்த சீவராசிகளிட வினை துலையுரதுக்கு வயணங்களெப்படி யென்றால் பூலேகத்திலே ரதிகளுட பெருமையைக் கேளும்; சம்பா நதி, கும்பகேளாணதி, காவேரி நதி கோதாவேரி நதி கறுண நதி பம்பா நதி வேகவதி வேதவதி துரையுநதி பாமாஸ் கெங்கா நதி யமுனை நதி நறுமதை நதி மேற்சேல்லுஞ் சொண நதி முதலானதும் பூலோகத்திலே அநேக நதிகளுண்டு. அதிலே ஷ்தானபான பண்ணின சீவனுக்கு வினைகளெல்லாம் தீரும். அதுலாமலும் ஷ்தலங்களுடைய பெருமை காசியென்றுமொரு ஷ்தலமுண்டு. அதுவோ கையிலாசத்தை பாக்கிலும் அதிசெயமானது. அதிலே கங்காநதி யுண்டானது. அந்த கங்கையினிட அலையோடுகுரது. பாகெதிக்கிவேறொட்டி விளுதுமாக துணை செய்யுமாசா . . மலாப் பாண்ட சரீரங்கள் அந்த ஸ்தலத்திலே யிறந்தால் மரங்கள் னாலும் மிறுகங்களானாலும் மனிதராகிலுமங்கே யிரந்த சீவனுகளுக்கு சிவனெழுந்தறுளி வந்து செவிலநியை வுபதேசித்து றச்சிபான். அதனாலே அந்த சீவனுகள் சாறூப் பதவியை அடைவார்கள் அதுவுமல்லாமல் போகியென்னும் பாம்பு புத்திடமாயிருக்கக் கண்ட தேயல்லாமல் புனிதரான தேவாதிகள் போற்றப்பட்ட யோகியாகிய சிவன் புத்திடமா யெழுந்தறுளி யிருக்குர ஸ்தலம் கண்டதுண்டோ முண்டாயிருக்கப்பட்ட ஸ்தலத்திலே மஹான் விஷ்ணுவினுடைய பிறாணனை வேண்டி லஷ்சுமி தேவி தவசு நிலை நிந்றத்தினாலே திருவாருரெண்று பேராச்சுது. அவன் தாமரை பூவிலே வாசமா யிருந்ததினாலே கமலாலயமென்று பேராச்சுது. செது மனத்தின ரென்று பொல்லாத தீமையோரான திருபார்தியரை நகத்தெரிக்கப் பட்ட புத்திடங் கொண்டு ரக்ஷித்தறுளியிருக்கும் திருவாறூறென்று ஸ்தலமுண்ட அதுவுமல்லாமலுந் தகமையினையுடைய விராடப் புறுடனென்று பரகாயமான பரமசிவனுக்கு மனமென்று ஸ்த்தல மாகும் சீதாகாசமான கனகசபையினிடமாய அய்ந்தொழிலும் நடத்து முறையால் ஆநந்த கூத்தாட நிற்ப்பர் அந்த மூற்ததிலே காத்திலே ஆயிரத்தில் ஒரு கூரு யிந்த கையிலாசத்திலே யிருக்குர தென்றால் அந்த ஸ்தலத்தினுடைய அதிசிய ஒருவறாலும் சொல்லப்படாது. அப்படிப்பட்ட கனகசபையை தெரிசித்த பேருக்கு அரியுமயனும்

காணாத மோஷ்ச்சமுண்டாகும், அதர்க்கு சிதம்பரமென்றும் பேர் தாங்கிய சங்கு சக்கிரமுடைய மஹாவிஷ்ணுவுஞ் சிவனை வணங்கி பேறுபெற்ற விறுத்தாசலமென்றுமொரு ஸ்தலமுண்டு. அந்த ஸ்தலத்தை பாற்க்குமிடத்து அதுலே ஓங்கார சொரூபயிருக்கும் அதிலே யிரந்த சீவனுகளிட சரீரங்களழிந்து போகாது பிறகாசமுங் கெடாது வீங்கிப்போகாது. நெகிழ்ந்து போகாது பின்னையுமொரு செனித்திலே பிறந்து வருந்திடாது தலையு வெடியாது றக்காதமு மிடாதுச் சிரமும் சேராமல் வலர்ந்து கிடக்குவர் தலாசவிமேலாச் சிவனுபதேசம் பண்ணி ரக்ஷிப்பன். அப்படிப்பட்ட விறுத்தகாசி என்று ஒரு ஸ்தலமுண்டப்போய் யெளிய மெயில்லாத மயிடா சூரனை சங்கரிக்க பண்ணின உமையவளுக்கு யிடப்பாகமளித் தறுளிய பரிசுத்தமான சிவன் தமக்கு சிறப்பான ஸ்தலமிதுவென்று கரிய எருமை முகம்போல் சேர்ந்திருக்குந் திருக்கேதாரமென்று மொரு ஸ்தலமுண்டு.

அதிலே யாவராகிலும் சேர்த்ததே யுண்டாகில் யிந்த பிறப்பிலும் நீற்மானத்துக்குப்(ம்) மறுமை பிறப்பில் வருந் துக்கமும் னானமில்லாத சிறுமை துன்பங்களும் நீக்கி ரக்ஷிக்கும்படி பூமி அந்தர சொர்க்கமென்று மூன்று லோகத்துக்கு யெளிதாய் தனக்கொப்பத்த மோக்ஷ மிரப்பது போலும் திருக்கேதாரமுமென பருப்பத மென்று மல்லிகார்சுன பருவது முண்டு. அதிலே சிவன் யெத் தேசகாலமும் வாசமாயிருக்கும் பிரமாம்பிகையென்று யீஸ்பரனுடனே கூடியிருப்பன்.

அந்த ஸ்தலத்திலே யிறண்டு வேளையும் பிறம்மதேவன் பூசை பண்ணி லோகா லோகமெல்லாம் சிஷ்ட்டிக்க வரம்பெற்றனன். மற்ற திருப்பதியிலே வாசமாயிருக்குர வெங்கடேஸ்பர் முதலாகிய தேவர்களும் அந்த ஸ்தலத்திலே தாபரசங்கமாய் பிறந்திருந்தாலும் நலமென்று ஆதரவாயிருப்பார்களென்றா லதுக்கொப்பான ஸ்தலமில்லை. விரும்பி போத்தி செய்யுமடியார்கள் அற்ச்சுனை பண்ணி அருக்கு பச்சிலை புஷ்பத்துடனே கண்ணைப்பிடிங்கி அற்ச்சித்த கணபனுடைய[2] செருப்படியுமுகந்த பிறான் சிவனுக்கும் மனோகரமாயிருக்கும் திருக்காளஹஸ்ரீயென்று தெயிவீக ஸ்தல முண்டு. அதிலே சிவன் முலைபோலும் தெய்வப்பொருளாய்

விளக்கியிருப்பார். அதுகண்டுப் பூமியிலே அதிசெயமென்று லக்ஷிமி காந்தநாகிய துளசிமாலை அணிந்த வடமலையாயவனுக்கு வண்ணங் கப்பட்ட மஹா ஸ்தலமுண்டு, நேக்கியிருக்கும் எட்டு திக்கும் புகழப்பட்ட தொண்டமண்டலமென்று தெயிவநாட்டிலே ஒரு ஸ்தலமுண்டு. அதிலே யாதாமொருவர் வந்து தெரிசித்த பேர்களுட வினைகளெல்லாந் தீருமதனுடைய பெருமையி சொல்லக் கேளுமவர்க்கு நாயகியாகிய சரஸ்வதிக்குக் கணவனான பிறம்ம தேவன் அதிலே உண்டாக்கப்பட்ட பூலோகமெல்லாம் தழைக்கும் படிக்கு என்னாளும் மறம் வளர்த்து கார்க்கப்பட்ட காமாட்ச்சி அம்மனுடனே காக்கு னாயகரென்று எகாம்பர னாதனும் வாசமா யிருக்கும் திருக்காஞ்சிபுரமென்று ஸ்தலமுண்டு. பழுதில்லாத எழுகடலு மேழ்கிரியு மேழ்த்தலமு முண்டாக்கப்பட்ட வேதக்கிழவ னென்றும் பிறம்மதேவ னாதியிலே அன்னமாய்ப் பறந்துங் காணாத எட்டாத திருமுடியை ஒரு பிறாமண பிள்ளை அறியும்படி சிரசு வளர்ந்தறுளிய சிவன் உகந்திருக்கும் ஸ்தலத்தினிட பெருமையைக் கேளும்.

அழகாக அநந்த நடனம் பண்ணபட்ட சிவனும் யுகங்கள் தோறும் யீந்துரியும் பிறம்மாவு மகாவிஷ்ணுவு முதலானோரும் பூசித்து பேறுஸத்த திரு விரிஞ்சை பொய்யாமல் தெய்வீகமாய தீற்த்தம் பெரிகி வரப்பட்ட காவேரி நதிக்கறை மீதிலே விளங்கி யிருக்குந் திருப்பூந்தரென்று ஸ்தலமுந் திருவையாரென்று ஸ்தலமும் திருவடமருதூர் குமகொண்டுமென்னும் திருக்குடை நகை என்று திருவாணைக்காவுந் திருச்சினாப்பள்ளியும் றன்றினகிரி என்று திரிஞால பறுவதமே முதலாகிய நீலகண்ட சிவனுக்கு மனகக்ஷியாயிறுந்தறுளப்பட்ட தெய்வீக ஸ்தலமாகியனேகந் தலமுண் பரித்த சங்கீநங்களூர்ந்து விளையாடிய வைகையாத்தினதிக் கரை மீதிலே விளங்கியிருக்கும் மதுராபுரியென்று மகாஸ்தலமுண்டு. அதிலே சொக்கனாயகரென்று பரமசிவன் அருபத்துனாலு திருவிளை யாடலையுடையவர்.

அந்த ஸ்தலத்தினுடைய பெருமை சொல்ல சிவனே வல்லன். அது அல்லாது மகிமை ஒருவராலே சொல்லப்படாது. அது அல்லாமலுங் கருவிளையாட்டாகிய பிறக்குரதுமிறக்கிரது மாகிய விளையாகத்தியார் மேலைபரமேன மென்னும் மொரு ஸ்தலமுண்டு.

அதுலே செருவிளையாட்டாகிய உயித்தியம் போரட்டம் பண்ணி றாமபத்திர சுவாமியார் ராவணனை கொன்ற தோழம் போகாமலிங்கமென்று பூசை பண்ணிய தெய்வீக ஸ்தலமுண்டே. அப்படி பூலோகத்திலே சொல்லப்பட்ட பிறசித்தமாக மாதலங் களிலே பிறந்தாலு மிறந்தாலும் போயி தெரிசித்தாலும் சுத்த வெளியாகிய சிதாகாசத்திலே நடனம் பண்ணப்பட்ட சுடரொளி யாகிய சோதிப்பிறகாசம் சிவனுக்கு மனங்களிக்கும்படி சுத்த பவித்திரமாகிய தீர்த்தங்கொண்டு அபிஷேகம் முதலிய பூசை பண்ணினாலும் மோஷ முண்டாகும். மற்ற ஸ்தலங்களெல்லாம் மெடுத்துரைக்க சிவாலயமு விரிந்த பொழிலென்று திருக்காவணங் களுடைய ஸ்தலங்களிலே மிகவு உத்தமறான பேர்களும் மோஷ மாகிய பரகெதி யேறலாமென்று நந்திகேஸ்பரன் அருளிச்செய்யக் கேட்ட மாற்க்கண்ட ரிஷிசொல்லுவர்.

யிப்படி சொல்லப்பட்டது லோகத்திலே அதிசெயமன நதி களிலும் ஸ்தலங்கள் தோரும் தேவரீர் அருளி செய்த படிக்கி முடிக்க வேணுமென்றால் முயர்ச்சியான சீர்மையுடையதிதேவாதிகளுக்குச் சித்தருக்கு முனியேஸ்பர்களுக்கும் முடியாதென்பதனால் மின்னல்ப் போலும் தோன்றிய சிறு வாழ்க்கையுடைய மானிடவருக் கெளிதாகுமோ அல்லவென்று கூடினாலும் அனியமாயிருக்கிர பிற வுயிர்களுக்கு மரங்களுக்கு மிறுகங்களுக்கு மற்றுமுள்ள சீவராசி களுக்குமோ கற்த்தனே யென்று மாற்கண்ட ரிஷி கேட்ட அப்படி பூலோகத்திலே பிறசித்தமாய் சொல்லப்பட்ட தீற்த்தங்கள் தோரு மதிசெயமான ஸ்தலங்கதோ... அனந்த தேடுகின்ற பலங்களை யுதவுஞ் சிவஞானமாது வருந்தாமல் சிறுது போதிலே நாடுகின்ற போதுசித்தி .. மப்பியுருப்பாகிய கைகால்களில்லாத முடவருக்கும் அரிவில்லாத பேருக்கும் நீசரான பேருக்கும் நாக பிறாப்பதியான பேருக்கும் பத்தியான பேருக்கும் ஓடுகிர பிறவுயிராகிய முறுகங் கள் பக்ஷியாதிகள் முதலான சீவராசிகளுக்கு மோஷச்சமெளிதாபட்ட ஸ்தலமென்றுண்டாகில் வுரைக்க வேணுமென்று மாற்க்கண்ட ரிஷி கோட்டார்.

யிந்தப்படிக்கி விபரமாக யெமுனை வென்ற மாற்க்கண்ட ரிஷியும் மற்றுமுள்ளான தவத்தோருங் கேட்டு போத்தி செய்து தங்களிட தாமறை பூபோலும் கைகளினாலே நந்திகேஸ்பரநிட

பாததாமரையிலே தெண்டன பண்ணுதலை கண்டு தயவாய் நந்தி மகேஸ்பரன் கிறுபைகூர்ந்து அப்படி யெளிதாய் மோஷம் கொடுக்கப் பட்ட ஷ்லமென்றுண்டு சொல்லுகிறோமென்று கையமத்திய்க பிறகும் மைபோலும் நீலகண்டத்தினையுடைய அருணாசல மென்கிர ஸ்தலைமந் திருப்படை வீட்டை மனதிலே நினத்து பரவசமாயிருந்தார்.

அந்தப்படி பரவசமாய் அருணாசலமென்று ஸ்தலத்தினை னினத்த உடனே சரீரமெலாம் யிருக்குர சேர்ந்து நடுநடுங்கி கண்ணிலே ஆந்ந்த கண்ணீரொழுகும். யிப்படிக்கி செந்தாமரை பூபோலும் கையிகளி றண்டு சிரசன் பேரிலே அஞ்சலி அஸ்தமாய் கூப்பிக்கொண்டு சொல்லுவாயுங் குளரினெடும் போது தெளிவில் லாமல் அநந்த பரவசமா யிருந்து பிறகு நினவு வந்து கெங்கையை சடையிலே தரித்தறுளிய அருணாசல யீஸ்பரனே அக்கினை கண்ணினையுடைய வனெங்களை ஒரு பொருளாய் ரக்ஷிக்கப்பட்ட சுவாமி யென்று ஸ்தோத்திரம் பண்ணி கண் விழித்து பாத்து அருணாசலத்தினிட பெருமையை சொல்லத் துடங்கினார் நந்திகேஸ்பரர்.

அப்படி ஸ்தோத்திரம் பண்ணின பிறகு நந்திகேஸ்பரன் சொல்லுவார், சத்தியமாய் சொல்லுகிறேன் கேளி மாற்கண்ட ரிஷியே, யெழுத்தியாகிய மோஷ்ச்ச மெளிதாய் கொடுக்கப்பட்ட ஸ்தலமென்றுண்டு அதர்க்கு நாமதென வேதுவாயுண்டு அத்தனை யும் சொல்லுதற்க்கு யென்தரமெல்ல அதிலே சிரிது அறிந்த மாத் திரஞ் சொல்லுகுரேன் கேளு.

சிந்தியதுவுங் கெவரியென்று அழட்டமா சித்தியென்று பேர் களையு முதலப்பட்ட பிறகாச ஸ்தலமென்று போதேகருணை யென்று பேர்களையுடைய வளங்கரென்று பேறினையுடைய . . னைறுமழகினை யுடைய சிவலனாகங்கரென்றும் பேர் நீண்ட சதுர்விதமாகிய வாயவுனகென்று பேரினையுடையதென்று பின்னை யுஞ் சொல்லுவார் நந்திகேஸ்பரர் அதுவும் அல்லாமல் கேள் மார்க்கண்ட ரிஷியே சத்தபுரியென்றுஞ் சொலப்பட்ட அயோத்தியாபுரி மாயாபுரி மதுராபுரி காஞ்சி ஸ்தலம் வந்திகாபுரி காஞ்சிஸ்தல மிப்படி பூலோகத்திலே பிறசித்தமாய் சொல்லப்பட்ட எழு ஸ்தலமும்தோர்சிலை ஒரு தட்டுலையுமாக அருணாசலமென்ற

திருப்படை வீட்டை ஒரு நட்டுலேயுமாக நிறுத்துப் பார்க்கும்போது யிந்த அருணாசலமென்கிற திருப்படைவீடே அதிகமாயிருந்துது.

அப்படிப்பட்ட தெய்வீகத் தலமென்று பெயர். அது அல்லாம்ல் மோஷ ஷ்ஸ்தலமென்று பெயர்; ஞானநகரென்று பெயர்; சோணை கிரியென்று பெயரினையுடையதென்று பின்னையுஞ் சொல்லுவார் நந்திகேஸ்வர். வாதமாகியப் பிறசண்ட வாவிலுமுகாந்தமாகிய வடவாமுகாக்கினியினாலும் பிறளைய கால சத்த சமுத்திரமும் பொங்குறபோது வாதையில்லாமல் நிலையாயிருக்கப்பட்டது அந்த ஸ்தலத்திலே விசுவாசமாய் நம்பியிருந்த பேருக்கு சயித்திய பயித்திய வாதங்களென்று சகல வியாதிகளும் முன்செய்த தீமையும் தீந்து நலிவில்லாமல் யிருக்கப்பட்ட ஸ்த்தலமதினுடைய அதிசெயத்துனாலே மகத்தாகிய தபோதனர்களும் மாதவர்களான மகாவிஷ்ணுக்களாலுமந்த மகாவிஷ்ண்ணுவினுடைய நாபிசு கமலத்திலே பிறந்த தொண்ணூரத்தாறு பிறமாக்களும் பூசைபண்ணி பேறுபெத்த ஸ்த்தலமென்றால் அதுனுடைய பெருமைக்கு அளவு கண்டு சொல்ல முடியாது.

அப்படிப்பட்ட தெவிக ஸ்தல அருணாசலமென்ற அப்படி அதிசெயமாகிய ஸ்தலமென்றுண்டு பூலோகத்திலேயென்று புதிதல்ல வென்றும் அந்திர சொக்கமானது என்றுண்டாச்சுது. அன்று முதலுண்டது அதுவேத்ததினுச்சுப் பொருளாயிருப்பது அதிலே நீங்காமலிருக்கப்பட்ட குண்றாமலையார் தங்கிய ஒரு மலையுண்டு. அதின் பெருமை பிறம்மாண்டக் கொள்கையுங் கடந்து நிற்கப் பட்டது என்றுமளியாமல் தென் திசையிலேயிருந்துக் குனமதாகிய சமுத்திறம் சூழ்ந்த சலோகமில்லாவாள உண்ட யிருக்கும் ஆதிகாலமும் தோன்றியது அருணாசல மென்றொறு ஸ்தலமுண்டு. அமந்திருக்கப்பட்ட ராக்ஷதராலும் தேவர்கலாலும் மானிடராலுமுண்டாக்கி பூசைபண்ணி பேறுபெற்ற லிங்கங்கள் அந்த ஸ்தலத்திலே நிறைந்து பேறு பெற்றார்கள். அதுவுமல்லாமலும் அழகுடைய மலையே லிங்க ஆகாயமா தோன்றியிருக்குதே ஆதிகாலத்திலே முதல் யுகமாகியக் கிறைதாயுகத்திலே அக்கினி மலையாயிருந்து திறுதாயுகத்திலே மாணிக்க றண்றின மாலையாயிருந்து துவாபுர யுகத்திலே ஸாற்ப்பிறகாச மலையாயிருந்தது. கலியுகத்திலே

கல்லுமலையாயிருக்கப்பட்ட அப்படி மங்கமயமய் நிமிர்ந்து நிற்கப் பட்ட னாமதேன அருமையென்றும் பேர் கருவையாகிய யுகமுடிவிலே பொழியப்பட்ட மெங்க்ஙள உருவமாயி மழைத்துளி கள் சொரிந்தாலும் அருவியா அந்த மலைமேலை அடங்கிப்போமே அல்லாமல் பிறம்பும் பொசியாது அப்படிப்பட்ட பெருமையுடைய் அருணாசலமென்ற அரியுமயனு அடியுமுடிமளவிடபடாமல் அநந்தங்காலத்திருந்ததென்றால் அதுக்கு நிகராக ஒன்றை குரித்து சொல்லகூடுமோ அதினிட வுச்சியிர் ஆகாச கெங்கை பாவபட்ட அந்த மலையினிட சுனைகளிலே சூரியனுட றதத்திற் கட்டிய பச்சை குதிரை தண்ணீர் குடிக்குமென்றால் அதன் பெருமையை சொல்லிமுடிய வெண்மையாகிய மஞ்சு அந்த மலையிலே படிந்து அடிதுடங்கி மேவினால் அந்த மலை அப்படியிருக்குமென்றால் எண்ணிக்கைபட்ட கையிலாசமாகிய வெள்ளியங்கிரி போலவிருக்கு மென்னலாகும் தன்மையாகிய திருக்கார்த்திகை விளக்கிட்டால் ஏப்படியிருக்குமென்றால் உச்சியிலே சுடர் பிறகாசத்தினாலே பூமதேவக்கி ஒரு கிரீடம் போலவும் அந்த மலையிருக்குர முடிவிலே முழனியாகிய மாணிக்கவொளிபோலும் பிறகாசித்திருக்கும் ஆதியிலே மாலுமயனுமளவிட பட்டாத கற்த்தன் வாசயாய் மலைவடிவமானது கண்டு உமையளைப் பெத்த மலையரசன் ஆதிதெய்வமாகிய சிவன் தானும் மருகனும் ஒருகுலமானோமென்று மகிழ்ந்திருந்தான். பறுவதராசா அதல்லா கேளு மாற்க்கண்ட ரிஷியுகேளு பன்னிறண்டு மாசமும் பிறகாசிக்கப்பட்ட பன்னிரண்டு சூரியரும் நல மாகவரப்பட்ட அருணகிரியினிட அதிசெய பெருமை எல்லா விளங்கு படி சொல்லுகுரோமென்று என்னுடைய கொஞ்சமாகிய அரிவு போதுமோ ஆனாலும் அதனிட அதிசெய பெருமையெல்லா விளங்கும்படி சொல்லுகுரோமென்றால் சொல்ல கடிதோ வேணு மென்கிர ஆசையினாலே சொல்லுகிறேன் கேளுமென்று மாற்க் கண்ட ரிஷிக்கி அருளி செய்து சொல்லுவார் நந்திகேஸ்பரர்.

அதெல்லாமல்க் கேளு மாற்க்கண்டரிழியே அறக்கமாகிய கிளர்ச்சியையுடைய ஒரு மலையுளது. அது அடுத்த கிழக்கு முகமா யிருக்கும். அதிலே நற்கண்ணாயிரத்தவனென்று தேவேந்திரன் எந்தக்காலமும் நறமாளத்திலே பேறுபெற்றவன். அதற்கு தெற்கு முகமாயி தெய்வீகமாய் தோன்றியிருக்கும் அதிலே போக்கை அந்தகனென்று எமன் புதந்து போத்தியதென்று பின்னையுஞ் சொல்லுவார் நந்திகேஸ்பரர்.

மேற்குத் திசையிலே தண்டமாவரை என்றொரு மலையுளது. அதனைச் செல்லாகிய மஹாவாகனத்திலசைந்த வருணபகவான் செங்கை கூப்பி போத்தி செய்குவேன் தோற்றப்பட்ட வடைநிலை யிலே குணமால்வரை யென்று மலையுண்டு. அதனைப் போத்தி செயிதிருபோன் பெரிந்திவழவெமைத்து னாலு திசையாகிய தென் கிழக்கு முகமான மலையை புகளி பகவான் போத்தி செய்குவன். தென்மேர்க்கு முகமான மலையை நிரிதி போற்றி செய்குவன். வட் மேற்க்குமுகமான மலையை வாயுபகவான் போத்தி செய்குவன் வட கிழக்கு முகமான மலையை யீசானிய மூற்த்தி போத்தி செய்குவன். யிப்படி அடமுநேகவும் மெட்டமுகமான அமலையு அட்டதிக்குப் பாலகரும் போத்தி செய்வார்கள்.

அதல்லாமலும் சுத்திலை மதுக்கூர் மலயை சூரராகிய தேவர் களும் சித்தர்களும் அட்டவசுக்களும் குடியா யிருந்தி போத்தி செய் வார்க. அதல்லாமல் கேளு மாற்கண்ட ரிஷியே தனக்கு தானே ஒப்பாயிருக்கப்பட்ட அருணாசலத்திலே உலகத்துமெ க ல ா ம் தாயாகிய யீஸ்பரி தவசுபண்ணி யினக்கு கற்த்தாவாகிய அருணாசல யீஸ்பரடிடபாகமாகிய அற்த்தநாரீஸ்பரம் பெத்தாளென்றால் பின் னையும் அந்த ஸ்தலத்தினுடைய நலஞ் சொல்வேணுமே. அபடி அதிசெயமான ஸ்தல அருணாசலம் தனக்கு ஒப்பில்லாத மந்திரமும் புவனமும் தத்துவமும் வனமுமென்று சொல்லப்பட்ட ஆத்துவாவி னிட சுருபமாய் விளங்கப்பட்ட அந்த அருணாசலத்திலே மாலும் மயனும் அன்ன முவாரகமுகாக ஒரு மாறி அடியு முடியு தேடி யின்னமுமளவிலாமல் தங்களுடைய ஆங்கார நீங்கினார்கள்.

அப்படிபட்ட ஸ்தலம் அதுவுமல்லாமல் மருவி பெறிதான புநக்ஷியையுடைய வச்சிறாங்கத பாண்டியன் அருணாசலத்தை வல மாக வந்து பேறு பெற்று தேவனாயினான். அதுவுமந்றி சொல்லப் பட்ட கலாதரனென்று நா . . துசாலியென்று யிறண்டு பேர் வலமாக வந்து ... வந்தார்கள். முன்சொன்ன கற்த்தனே ஆதி அன்று தொட்டன்றய வரைக்கும் அனேகமாயிரும் பொருள் அருணா சலத்தை நினைத்து மோக்ஷத்தை அடைந்த பேரு ஆசையாக அறுணாசலமென்று வசனித்து மோக்ஷிம் பெற்ற பேரு அருணாசல மென்று சொல்லைக்கேட்டு மோக்ஷதிலே அடைந்த பெரும அந்த அருணகிரியென்னு மலையே. அக்கண்ணினாலே கண்டு முத்திபெற்ற பேரு அந்த மலையைக் காலினாலே வலமாக வந்து முத்திபெற்ற

பேரும் அந்த ஸ்தலத்திலே நீதிமாற்க்கமாயிருந்து முற்றிபெத்த பேரு. நன்மாற்க்கமாக நடந்து பேருபெத்து பேருனெடிய தீற்ந்தங்களிலே ஸதானபானம் பண்ணி மோக்ஷத்திலே அடைந்தபேருந் தறுமங்களை பண்ணி மோக்ஷத்திலே அடைந்த பேரும் சோதியாகிய அருணாசல யீஸ்பரனை தொழுது பதவி அடைந்த பேரும் பெரியோர்களெல்லாம் சிவாலயங்கள் முதலானத்திலே பணிவிடை செய்து பதவி அடைந்தபேரு எத்தினை பேறந்து சொல்லி லடங்குமோ அடங்காதென்று அந்த ஸ்தலமாகியது அருணாசலமென்பது தமிழ் நாடாகிய தெண்மண்டலத்திலே தோன்றியது. அதற்க்கு பேர் பெண்யாறு செய்யாரு யிடமு வலமுமாக வரப் பட்டது.

அதல்லாமலும் கமலாலய நதிய்முனையாயிருக்கும் அந்த ஸ்தலத்திலே செய்து தவம் ஒந்று அயிரமாக பலிக்கும். அதிலே முப்பதுமுக்கேடி தேவர்களும் செயித்து பேருபெற்றார்கள்...பிணையாக பூலோகத்திலே தெய்வலோகத்திலே ஒப்பில்லை, அத்தமென்று குற்றமற்ற நந்திகேஸ்பரன் சொல்லப்பட்ட அருசலமென்று ஸ்தலத்தினையுடையப் பெருமையை சொல்லக்கோட்டு மனமகிழ்ந்து மாற்க்கண ரிஷியனவன் மற்றுமுள்ள சிவ ஸ்தலங்களை பாற்க்கிலும் அதிகமாக அருணாசல ஸ்தலத்தை தெளியமாட்டேனென்று கேட்ட மாற்க்கண்ட ரிஷியே பாத்து சகலமுந்தெளிந்த நந்திகேஸ்பரன் அருளிசெய்வார்.

உமக்கு சந்தேகமானத்தைக் கேளு நாம் அரிந்தமாத்திரம் சொல்லுகுறோமென்று மாற்க்கண்டர் சொலுவார்.

"தில்லையாகிய **சிதம்பரத்தை** தெரிசித்தால் மோக்ஷமுண்டென்று **காஸி** தலத்திலே யிரந்தால் மோக்ஷமுண்டென்னும் சிரந்த **திருவாரூரிலே** பிறந்தால் மோக்ஷமுண்டென்னும் காசி ஸ்தலத்திலே யிரந்தால் மோக்ஷமுண்டென்னும் எல்லையில்லாத பெருமையையுடைய **அருணாசலத்தை** நினைத்திமாத்திரத்திலே மோஷ்ச்சமுண்டென்றுஞ் சொன்னீரே ஒல்லையாகிய பேற்பெற்று பிறிதீவு ஸ்தல திருவாரூரென்று அப்புஸ்தல திருவானைகாவு என்று தெய்வ ஸ்தல அருணாசலமென்று வாயுந்திருக்காளத்தியென்று ஆகாச ஸ்தலஞ் சிதபரமென்று மற்ற தலத்துடனே யிதுவுமொன்

றல்லவோ பஞ்ச பூதமென்றே சொல்லப்பட்ட கற்த்தனே அல்லியாகிய அகளவித பூங்காவையுடைய அருணாசலத்தை அதிகமென்று அது யெதுனாலே அடியேனுக்கு தெரியும்படி அருளிசெய்ய வேணுமெ"ன்று கேழ்க்க நந்திகேஸ்பரன் சொல்லுவார்.

ஆனால் சொல்லுகிறோம் கேளு மாற்க்கண்ட ரிஷியே, "யிறக்குரதும் பிறக்குறதும் மெண்ணினபடி முடியாது. அதுவுமல்லாமல் பிறக்கப்பட்ட பக்ஷி சாதிகளுங் கல்லுகளுக்கும் மரங்களுக்கும் மிறுகங்களுக்கும் விருஷ்ச்சியங்களுக்குமியைத்துமுள்ள யிழிகுல நீசறுக்கும் குறுடராகிய பேருக்கும் நிவற்ற மண்டபமாகிய சிதம்பரத்திலே நடனம் பண்ணபட்ட கனகசபை தெரிசிக்கக் கூடுமோ. தற்மபலனுண்டான சீவனுகளுக்கு சிலசில பேருக்கும் நேரிடமோ ஒளிய எல்லாருக்கும் நேரிடாதே. மற்ற சீவனுக்கு அருமை அல்லவோ அல்லவோ வென்று பின்னையுஞ் சொல்லுவார் நந்திகேஸ்பர குனக்குனக்குறாகிய பஞ்சபாதகஞ் செயுபாவிகளானாலும் விறுத்தபங்காறனாலுங் கோணக்குறானாலும் புலயுளகிய நீசச்சண்டாலுனரானாலும் குவலைகளன செய்து உறுப்புக்குறைந்த முடவரானாலும் எண்ணப்பட்ட அருணாசலத்தை ஒருதிர நினைந்த பேருக்கு மோக்ஷ வருமே அதுவுமல்லாமல் கண்டகாரசிய...முடையாளருக்கு னெடுந் தூரத்திலே யிருக்கப்பட்ட பெதுகருணையாகிய கிருபா கடாஷத்தினை ஒடைய அருணாசலமென்று ஒருதிரம் நினைக முத்தியுண்டாகும். மற்ற மிறுகங்கள் பஷ்ச்சி சாதிகள் மரங்கள் செடியான தாபர முதலானது . . . அருணாசலமென்று ஸ்தலத்திலே மூனுங் காணும் பட்ட முளைத்த சீவனுகளுக்கெல்லா மோக்ஷமுண்டாகு மென்றால் அதிசெயமாமோ அல்லவோ' வென்று பின்னையும் சொல்லுவார் நந்திகேஸ்பரர்.

அதல்லாமல் அதினுடைய அதிசெய்யினங் கேளு சிலைகளாகிய கல்லுகளெல்லா லிங்க ஆகாரமாயிருக்கும் அதுனாலே அந்த ஸ்தல சிவலோகமென்னப்படு. அந்த ஸ்தலத்திலே யிருக்கப்பட்ட தேனு கற்ப்பக விறுஷிய மரங்களாயிருக்கும் சிவனுடைய சடாபாரத்திலே யிருக்கிர கெங்கை தீர்த்தங்களாயிருக்கும். அந்த ஸ்தலத்திலே யிருக்கப்பட்ட மாலிடவருக்கும் பொசிக்கப்பட்ட வுணகுலாதேவர் அமுற்தயாயிருக்கும். அதிலே உலாவித் திரியுரது பூமி பிறதெக்ஷணமாகும் பேசுரபேச்சுகளெல்லா வேதவாக்கியமென்னப்படும். அந்த ஸ்தலத்திலே நித்திரைபண்ணுதல் சிவத்தியான நிஷ்டையாகும்.

அதுக்கு நிகராக ஒரு ஸ்தலமென்றென்று சொல்லக்கூடுமோ. பின்னயும் சொல்லுவார் நந்திகேஸ்பரர் முற்றழாகிய மூன்றும் விளையும் ஓமதிவளற்தியஞ் செய்தாலும் நாலு வேதமும் தெரி(ந்)த் பேர்களும் அஞ்சுவகையாகிய வெள்ளி வியாகம் பண்ணின பேர்களும் மற்றுமுள்ள தலங்களை செய் . . ர்களுப் பின்னையு அனேக விரத நோன்புகளை அனுஷ்ட்டித பேர்களு மெட்டுவிதமாகிய அஷ்ட்டாங் கங்கள்ள செய்யப்பட்ட பேர்கள் னாலும் அந்த அருணாசலத்தை நினையாத பேருக்கு மோஷங்கிடையாது. அதுகளுக்கு எது எது பயநுண்டாகுமென்றால் தெய்வப் பதவியிலேச் சிவகால அனுபவித்து பிறகு சுத்த மாணிஷ்டராய் பிறந்து அந்த ஸ்தலத்தை நினைத்து அதுனாலே மோக்ஷமாகி பதவி பெற்றிருப்பார்கள். ஒப்பில்லாத சொக்கலோகத்திலே அமுற்தமுண்டிருக்கப்பட்ட பேர்களும் போக பூமியை யேக சந்திரமாய் ஆளப்பட்ட ராசவமன்னவர்களும் தங்களுட போத போக்கித்திலும் அருணாசலமென்று ஸ்தலத்திலே பூச்சி புழுவாய் பிறந்திருக்குறத்துக்கு சமானவராது என்று ஆதரவு கொள்வார்கள்.

அப்படி னேரிந்தியிருக்கு அந்த ஸ்தலத்திலே பிறப்பதற்க்கு நூறு யாகம் பண்ணின பேர்களுக்கு கிடைக்குமே யல்லாமல் மற்ற பேருக்கு கிடையாது. சிவனுடைய திருவருள் கடாஷம் பெற்ற பேருக்கு கிடைக்குமல்லாது மற்ற தேவாதிகளுக்குக் கிடையாது மாற்க்கண்டரிஷியே கேளு எல்லா சிவஸ்தலமுஞ் சரி அல்லவோ சிவனும் ஏகமல்லவோ வென்றி சொன்னீரே ஆனால்க்கேளும் வெத்திரும்பாகிய யிடத்திலும் செம்பிலும் வெண்கலத்திலும் வெள்ளபோனிலுங் குற்றமிலா . . . வற்னதனமான மாணிக்கத்தை வைத்திழைத்தால் . . . யிருக்கும் சிவந்த பசும்பொன்னிலே வைத் திழைத்தாலெப்படியிருக்கும் பத்திரைமாத்து பசும்பொன்னிலெப்படி யிருக்கும் சோதி பிறகாரமாய் பறகாசிக்கிரது போல் விருக . . . ஷ போல அருணாசலமென்று ஸ்தலமுமெங்குமிறுக்கிர பரமசிவன் அந்த ஸ்தலத்திலே யிருந்தாலுமிது அதிசெயமா வெளங்கும். யின்னமொரு முகமை கேளு மாற்க்கண்ட ரிஷியே கண்தனாலே மனுஷருக்கு முகவிளங்கியிருக்குது. அப்படிப் போல முகத்தினாலே சரீர வெளங்கி யிருக்கு. அந்த பரமசிவனாலே அருணாசலமென்ற ஸ்தலமும் அதிக மாய் விளங்கியிருக்கு.

அந்த அருணாசலத்திலே பரமசிவனும் அதிசெயமாய் விளங்கி யிருப்பார் யெண்ணிக்கையில்லாத சிவஸ்தலங்கள் தென்மண்டலத்திலே பேர்பெற்றிருந்தாலும் எல்லாத்துக்கும் அருணாசலமே அதிகமாய் விளங்கியிருக்கும்; வீசிதழைத்த பூங்காவினுடையக் கொடிப் படருஞ் செடிக்கி வேரிலே தன்னீர் வார்கில் குளிற்ச்சியாய் தழைத்து வருவது போல பூசையானது அருணாசலத்திலே எவ்வளவாகிலுஞ் செயிததேயுண்டாகில் அதிக பலனுண்டு, அதிலும் செய்தாலென்ன செய்யாவிட்டால்லென்ன உபாயமறிந்து பேர்களுக்கென்று பூமதேவியும் தோன்றப்பட்ட அருணாசலத்திலே வாசமாயிருந்து மனசிலேசனதேகமாகனவர் பின்னையும் ஒன்றேனாடி பூதி சித்திலே எத்தால் தறுமம்களும் தவங்களும் பூசைனைகளும் செய்தாலும் புலியாமல் நிஸ்பலமாய்ப்போம். அவர்கள் செய்யிர தறுமங்களும் விறுத்தாவாய்போம் . . . வர்கள் நல்ல ஸ்தலத்திலே பெறந்தாலும் யிழிகுல . . னிப்படு அவர்கள் நல்ல குணமுடையோரானாலும் யிழிகுலமென்ன பொல்லாத பாவிய்ரென்னப்படு அவர்கள் யுயிருடனே யிருந்தலும் நடையாடு பிணமென்னப்படும். அதுக்கு ஏதுவாய் யுகமை சொல்லி ஏற்று ஒருமெற்ற பேரும் அந்தப்படி அவர்களப்படிப்பட்ட தெய்வீக ஸ்தல அருணாசலம்.

யிப்படியாகும் அருணாசலத்தினிட மகிமையென்று மார்க்கண்டரிஷிக்கி ஒப்பு உகமையுடனே சந்தேகம் தெளியும்படிக்கி அனுக்கிறகம் பண்ணி மானுமழுவும் பிரம்பு வன்சிறு வாளாயுதமும் தரித்தருக்கப்பட்ட கடவுளாகிய னந்திகேஸ்பரன் யிருந்தறுளியது கண்டு அவரை மாற்க்கண்ட யெழுந்திருந்து வலமாகச் சென்று உள்ளமுருக நெக்கினெக்கி அநந்த பரவசமாய் றண்டு கைகளும் தலைமேலே அஞ்சலி பண்ணிக்கொண்டு மகஷேசியென்று ஆநந்தக் கடலிலே மூள்கி பிறகு உணற்ச்சியாய் தோத்திரஞ் செய்து சொல்லுவார் மாற்க்கண்ட ரிஷி என்றவாறு.

திருச்சித்தம்பலம்.

# கடம்பர் கோயில் கைபீது

## டி. 3790 (ஓலை)

*1816*-ஆம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் *10*-ஆம் தேதி தாது வருஷம் ஆடி மாதம் *28*-ஆம் தேதி **செங்கல்பட்டு சில்லாவில்** சேந்த காலூர்[1] கோட்டம் உத்திர மேரூர்[2] பத்துல் சேந்த கடம்பர் கோவில்[3] கடம்பேசுவரர் அனாதியாயி செய்யாசதுங்கரை கீழ்பிறம் கரையில் உண்டாயிருக்கப்பட்ட சுவாமியார் ஆதிமுதல் நிற்ணயம் காசிப ரிஷி சிகாசிப தண்டலத்துக்கு பிறதி னாமமாயிருக்குற காவாந்தண்டலம் செய்யாறு மேல்புரம் அரிகில் யாகம் பண்ணிக் கொண்டுயிருக்கயில் மலையன் என்றும் மாகல என்றும் யிந்த ரெண்டு . . . சார்களும் யிந்த பாகத்தை நடக்க ஒட்டாமல் . . .னு செயிதுகொண்டு யிருக்கயில் . . . யா அந்த காசிப ரிசியானவர் சுவாமியை நோக்கி தபசு பண்ணுகயில் சுவாமியார் சுப்பிறமணியரை அழைச்சு, ''நமக்கு பத்தன் யிருக்குற காசிப ரிஷியிக்கியம் பண்ணால் யிந்த அசுராள் சாறுவ காலம் விகாதம் பண்ணுகுறாள். அந்த அசுரர்களை சம்பாரம் செய்யுறத்துக்கு யிந்திராதி தேவதிகளினாலே ஆக மாட்டாது. நீ போயி அந்த அசுரரை சம்பாரம் செய்து பத்தனுடைய யிக்கியத்தைட நப்பிச்சு வரவேணு''மென்று சுவாமியார் சொன்னார்.

அது கேட்டு சுப்பிறமணிய சுவாமியார் அந்த அசரருடனே யுத்தம் செய்து அவர்களுடைய சேந்த அனேக அசுரர்களை வேலா யுதத்தினாலே சம்பாரம்பண்ணி சாசிப ரிஷ்சியுடைய யாகத்தை நிறவேத்தி வச்சு தன்னுடைய வாகனத்தும்பேரில் ஏறி வருகயில், அவர்களுடைய பிறமத்தி யிவரை துடர்ந்து வந்தபடியினாலே அவடத்திலே யிறங்கி சுவாமியை நோக்கி தபசு பண்ணுகையில் சுவாமியார் பிறசன்னமாயி யிவடத்துக்கு மேற்க்த கொஞ்ச தூரத் திலே செய்யாத்தின் கரை கிழகரை ஓரத்தில் கடப்பம் காட்டுலே னாம் சுயம்பு லிங்கமா உண்டாயிருக்குறோம்.

அப்படிப்பட்ட நீ கதிள்கநிலே தேதிரவாகினிபாகு னதியில் ஸ்தத்தானம் பண்ணி நமை பூசை செய்தால் அந்த பிறமத்தி

விமோச்னம் ஆகும் என்று யிந்தபடி சுவாமியார் சொன்ன விசேஷ் சம் கேட்டு கதம்பவனத்துக்கு வந்து யிந்த சுவாமியாரை பூசை செய்தவிடத்தில் பிறமத்தி விமோசனம்மாச்சுது.

அப்போ கயிலெ யிருக்குற வேலாயுதம் அசுரர் சம்பாரத்திலே போனது வரயில்லையே என்று சுவாமியை கேட்டார்.

அது காவாந் தண்டலத்துக்கு கிழக்கு வேலூரில் பூமியில் புதைஞ்சுயிருக்குது.

நிர் அவடத்திக்கு போயி வாசம் பண்ணிகொண்டு நம்மை பூசை பண்ணிக்கொண்டு யிருந்தால் வேல் கயிக்கிவருமென்று சுவாமி திருவிளம்பத்தினார்.

சுப்பிறமணிய சுவாமி வாசம் பண்ணுகுற படியினாலே யிளைய நாவேலூர் என்று பேராச்சுது.

கயிலாசத்திலே யிருந்து யானையும் பேரில் எறிக்கொண்டு போகயிலே கோவிலே வந்து எறங்கி ஆனையை அவடத்திலே விட்டுவிட்டு மயில் மேலே எரிக்கொண்டு அசுரானை தெரித்திக் கொண்டு போறபோது அசுராள் யிவரைக் கண்டு துருஞ்சலாயி வடிவெடுத்து கோவிலே போயி . . த்தார்கள். அந்த கோவில் நந்திகேஸ்பரர் . . ணமனசச்சு அவொளை அவடத்திலே சம்மாரம் பண்ணபடியினாலே அந்த தாவுக்கு காட்டாங்குளமெண்ணு பேராச்சுது.

மயில் வாகனத்துடனே போயி யிறங்கின யிடத்துக்கு சிறுமயிலூர் யெண்ணு பேராச்சுது.

யிப்படி யிருக்கயில், தெற்க்கேயிருந்து ஒரு பிராமணன் அஸ்த்தியை யெடுத்துக்கொண்டு கெங்ககி போகவேணுமெண்ணு ஒரு பாண்டத்தில் வச்சுக்கொண்டு ஒரு ஆளும் தலையிலே எடுபிடிச் சுக்கொண்டு யிந்த ஸ்தளம் ஆத்து ஓரத்திலே வந்து யிறங்கி சமயல் பண்ணுறபோது எடுத்துவந்த ஆன் ஆனவன் யிது நெல் யிருக்குற் அதியசம் பாறக்க வேணுமெண்ணு அவுத்து பாற்க்கயில், அது செங்கழனி புஷ்ப்பமாயிருந்தபடியினாலே அது யெந்த

சாமியாருக்கு கொண்டுபோராரோவெண்ணு யெப்போதும் போலே கட்டிக்கொண்டு அவரோடே கூட காசிக்கு கொண்டுபோயி காசியில் அவற் அவுத்து பாற்க்கயில் ஒரு புஷ்ப்பமும் குறை எல்லாம அஸ்தியாயிருந்ததை பாத்து அவனை யேது ஒரு புஷ்ப்பம் வந்து யிருக்குது எண்ணு . . னை கேட்டத்துக்கு அவன் ரொம்பவும் பயந்தவனாயிக்கொண்டு சொன்ன வயணம் என்னமென்றால், "எனக்கு ரொம்பவும் அதிசெயமாயிருக்குது. னாம் வறச்சே ஒரு தாவுலே நீர் யிறங்கி சமயல் பண்ணுகுறபோது யிந்த பாண்டத்திலே யிருக்குற வஸ்த்து தெரியயில்லை யென்று உம்மை காணாமல்ப் படிக்கி அவுத்து னான் பாத்தேன். பாண்டம் நிறைய அப்போ புஷ்ப்பிச்ச செங்கழுணி புஷ்ப்பமாயிருந்துது. அது எந்த சாமியாருக்கு கொண்டு போறிரோவென்று பயந்து பயணம் சொல்லாமலப் படிக்கி வந்தேன்.

யிப்போ நீங்கள் அவுத்தவிடத்தில் ஒரு புஷ்ப்பமாத்திரம் யிருந்து குறை எல்லாம் மனுஷருட அஸ்த்தியாயிருந்ததை பாத்து எனக்கும் ஆச்சரியமாயிருக்குது. யிது என்ன காறணம்?'' எண்ணு அவன் கேழ்க்கயில், அப்போ அவர், ...யிது மகா ஆச்சரியமா யிருக்குது யிது எந்த .. புஷ்ப்பமாயிருந்துது அந்த தாவு காண்ம்பியாமல் போனால் யிப்பவும் அந்த தாவை காண்பிக்க சொல்லி அஸ்த்தியை எடுத்துக்கொண்டு யிந்த தாவுக்கு அழச்சுக் கொண்டு வந்து யிந்த பாக்குந் தீற்தத்தில் அவழ்த்துப் பாற்க்கயில் யெப்போதும் போலே அந்த பாண்டம் நிறைய புஷ்ப்பமாயிருந்துது.

யிந்த க்ஷேத்திரம் அதிசெயம் யென்னவென்று யிவடத்தில் யிருக்குற பேரை கேட்டவிடத்திலே சுப்பிறமண்ணியர் பூசை பண்ணின அனாதியாயிருக்குற கடம்பிசுரர் யிவடத்தில யிருக்குறார். அவருடை(டய) மகிமை என்று சொன்னது கேட்டு மகா சந்தோஷப் பட்டு யிப்படிப்பட்ட ஸ்தளத்திலேதானே வாசம் பண்ணி பகவானுடைய பதத்தை அடையவேணுமென்று அந்த புஷ்ப்பமா யிருக்குற அஸ்த்தியை யிந்த நதியிலே ஸ்தாபனம் பண்ணி சாற்வ காலமும் சாமியார் சேர்வை பண்ணிக்(கொண்டு) அவர் கயிலாசத்தை அடைஞ்சார்.

அது முதல் யிப்பவும் யிந்த ராச்சியத்திலேயிருக்குற சினங்கள் ஸ்தளத்திலே அஸ்த்தியை கொண்டுவந்து விடுகுறா...

சுப்பிறமணியர் வெகுன்னாள் யிலத்தில் வாசம் பண்ணி சுவாமி யாரை பூசை பண்ணி பிறமம் அத்தி விமோசனம் தித்துக்கொண்ட படியினாலே யிப்பவும் சற்ப்பதிஷ்ட்டி யானால் விஷம் யேரி செனங்களை உபத்திரம் செய்தது யில்லை.

---

1. காலூர் : செங்கை மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவில் உளது.
2. உத்திர மேரூர் : செங்கை மாவட்டம் மதுராந்தகம் தாலுகாவில் உள்ள ஊர்.
3. கடம்பர் கோயில் : செங்கை மாவட்டம் மதுராந்தகம் தாலுகாவில் உள்ள ஊர்.

# பவானிக்கூடல் கைபீது

டி. 2956

பவானிக்கூடல்[1] ஷ்தளம் மகத்துமம் கையிபியத்து.

பூறுவத்தில் பாறுவெதியம்மன் ஒறு காறணாத்தமாக சாபம் வெந்து, மறுபடி பின்னையும் தாட்சாயினி யெங்குர னாமதேயம் போகடிச்சுக் கொண்டு, பாறுவதி யென்ற னாமதேயம் யெடுத்து ஒரு அமுசமாக தீரத்திலை பவானி யெண்ணப்பட்ட நாமதேயத்தில் நீலிகிறி பறுவத்த மாறுக்கமாயிந் நதி றுப்மாயி பிறப்பட்டு, லோகசம்றட்சணாற்த்தமாயி பவானியம்மன் பிறவஹிச்சாள்.

**ஸ்லோகம் :**

ஈஹபவத்தி பவாநி சீதள ஸொச்ச தோயா
ஸிதிலித பவபாஷா ஸித்த கந்தர்ச சேவ்யா
சகல கலுஷ ஹந்த்ரீ சா கவேரஸ்யா கன்யா
பரிசரபுவி சாஸ்யாஹா சங்கமங்கீகரோதி

இதற்க்கு பிற்க்காலும் சயிபற வற்த்திலையினும் தாட்சணத்தியால் தெட்சண தேசத்திலை இருக்கப்பட்ட ஜனங்களுக்கு பஞ்சமாபர்த்தையெல்லாம் போகடிக்க வேனும்யென்றும், சமுத்திற றாசனை அடையிறதாயி வறபோது, பவானியம்மனை தெட்சணபதி றாக்காசர்மத்தில் பவானியம்மனுடைய சங்கமம் பண்ணிக்கொண்டு, சமுத்திர றாசனைபோயி அடைஞ்சாள்.

பவானியும் காவேறியும் கூடுதுரையானபடியினால் பெவானி கூடல் யென்குர பேற் வறப்பட்டது.

இதுமல்லாம், பூறுவத்தில் தெண்டகாறணிய வணமாயிறுக்கப்பட்ட தெட்சிண பதிறிகாசறமத்தில் பச்சகிறி மத்தியத்தில் வேதகிறி, னர்ககிறி, சக்கிகிறி, பத்துமகிறி, மங்கலகிறி, பச்சகிறி மத்தியில்

ஆனாதி விஷ்ணு ஸ்தளம் ஆதிகேசுவறயென்றும் சுவந்தற றாச சுவாமி இன்னும் கூடல் அளகற் இன்னும் அளகறாச சுவாமி யென்றும் இப்படி ஆனாதி விஷ்ணு ஷத்திரமாயிறுந்து நாலுயுகத் துக்கு நாலு பேற் வந்து யிருந்த்து குடித்தமாயிறுந்துது.

இதற்க்கு பிறக்காலும் றாத்தனதற் கல்ப்பத்துனுடைய ஆதி யில், தேவந்திறாதி தேவதிகளுக்கும் செயத்தை குடுக்குர நிமித்திய மாயி, அற்ந்தனாறிசு வறிசையிபலத்துக்கு இறுவது குபடி தூறம் பச்சுமத்திலே பவானிக்கி பூறுவ பாகத்தில்,[2] காவேறிக்கி பச்சம பாகத்தில்[3], ஒறுபகுசாக்காசு மாவற்த்தமாயி பதறி விறக்ஷம் யிறுக் குர்து.

அதின் கீளே லிங்க றுபியாயி ஜோத்திற் மையமாயி[4] அனுத்த மாயிறுக்காட்ட சுவாமி அவதாரம் பண்ணுறார்.

அதின் பிறகு சகலமான தேவதிகளுக்கும் ஜெயத்தை குடுத்தார்.

இந்த ஷ்தளத்தில் இருக்கப்பட்ட தீற்த்தம் யெட்டுக்கு விபரம் 1. வகாயிதிற தீற்த்தம் 2. சாவித்திற தீற்த்தம் 3. சறசுவதி தீற்த்தம் 4. ரோமசற் தீற்த்தம் 5. சக்கு தீற்த்தம் 6. சக்கிற தீற்த்தம் 7. அமறுத தீற்த்தம் 8. சூறிய தீற்த்தம் ஆக தீற்த்தம் யெட்டு. காவேறி பவானி அமற்த நதிக்கு பக்கமாயி அத்தறவாகினி திறுவேணி சங்கமம்.

இதுமல்லாமல் வேதகிறி பறுவதம் சங்கமேசுவற சுவாமி காயித் திற சீலை இந்த மூணும் யேக்காக்காறமாயிறுக்கும் விசுவாமித்தற றிஷீசுவற். இந்த காயித்திறி சீலையில் வந்து தபசு பண்ணி வசிஷ்ட் டற் வாயினாலே பிறம்ம றிஷியற் யென்று பிறாமணியும் ஆனாற்.

பூறுவத்தில் தேவத்தாலும் அசுறாலும் அமுற்தமதனம் பண்ணி அசுறாளை வகுசிச்சு தேவதிகள் யெத்தாபாகமாயி தாங்கள் அமற பானம்பண்ணி றிஷீசுவறாள் அமற்த பானம் பண்ணின நிமித்திய மாயி, கெறுடன் பகவான் கயிலை குடுத்து. சோறுண் கலசத்தில் அமறுதபூறதம் பண்ணி, இந்த ஷ்தளத்துக்கு யனுப்பிவிச்சு இருக்கு றாற்கள் யென்குரத்தை அசுறாள் அறிஞ்சு இந்த ஷ்தளைத்தை வந்து சுத்திக்கொண்டார்கள்.

அப்போ பாறாசற்றீசுஷீவற் மேல் தய்யைனாலேங்க மனுயகாற் அப்பன் அனந்தல் அறி யென்ங்குரனும் தேயத்தோடே குடியிருக்குர அம்மன் நாலு சஷ்திகளை ஸ்ரீஷ்ட்டிச்சி அந்த சக்தி கையால் சகல மான அசுறாலையும் சமாரம்பண்ணி அந்த சகுத்தியளை நாலு திக்குலையும் பிறதிஷ்டை பண்ணி இறுக்குது.

இதுமல்லாமல் இந்த ஷ்தளத்தில் சதா பலசகாபுஷ்(ப)ஹா யென்று சொல்லி அப்படி யிறுக்கப்பட்ட ஷ்தளம் அவள்ளவாள் யெந்தந்த அபிஷ்ட்டத்தை வேணும்யென்று மணசுலை யென்றா கூஷோ அந்தந்த அபிஷ்ட்டத்தை அவாளவாள் அடையவாள்.

ஸ்லோகம் : ஏகஸ்மிநபி விப்ரேந்த்ரே ஸாகேந்ணோத கேநிவா

தோஷதே தேண புண்யேந கேடிபோஜநதாயகஹா
அநுமாத்ரம் ப்ரதாநேண மேருதாநாதிகம் பலம்.
ஏகபுஷ்பார்ச்ச நேநாபி மஹோதேவோ ப்ரசிததி
தத்திதம் மநோஸோ பீஷ்டம் தவதாஸ்யதி தத்ருவம்[5].

இந்த ஷ்தளமறாதத்த கைல்ப்பம் ஆதியானபடியினால் ஆதத்தற கல்ப்பத்துக்குப் பதினாலு மனு ஒண்ணுக்கு சதுற்யுகம் யெளுவத்திரெண்டாக சதுற்யுகம் ஆயிறத்தி னானூத்தினாற்பது செதுற்யுகம் 1440.

நாளது சேத்து வறாக கல்பத்துக்கு வையிவசுத்த மனுவுலே சதுற்யுகம் 27 ஆக செதுற்யுகம் 1447. கிறத்த திரேதுற் துவாபறா யுகம் மூணு இதின்மேல் செல்லானின்ற கலியுகத்தில் 4908.

ஆக மனுயிறுவதுக்கு நாளது மனுர் உள்பட செதுற்யுகம் 1467 யுகம் 3 வறுஷம் 4608. இத்தினை னாளாச்சுது.

இதற்க்கு பிற்க்காலும் நாளது கலியுகத்துச்கு முன் துவாபற யுகத்து அத்தினும் கலியுகம் ஆதியிலியும் பாண்டிய மகாறாஜா சக்கிறவற்த்தியாயி பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வறும் காலத்தில், அவனுடைய றாசியத்துக்கு தெட்சிண சிமாசனத்துக்கு சேந்த றாசியத்தில் கொங்கு சுத்த தமீள் பேசப்பட்ட சுத்திறாள் இருக்கப்பட்ட குடியானபடியினாலே கொங்குதேசம் யென்று பேற் வறப்பட்டது.

இந்தக் கொங்குதேசத்துக்கு பிறபலஷ்தாளா யிறுக்கப்பட்ட அந்தந்த யெடங்கள் அந்தந்த நாட் யென்றும் அந்தந்த தேசம் யென்றும் நாமம் வறப்பட்டது.

இந்த கொங்கு தேசத்துக்கு றாசியாதிபத்தியா யிறுக்கப்பட்ட யெடம் காங்கியம்[6] யென்று பேற் வறப்பட்டது. இதுநாலே கொங்குதேசம் யென்று யிறுவத்திநாலும் நாடு யின்றும் லோக பிறசித்தமாச்சுது.

கொங்கு றாசியத்தில் யிறுவத்தி நாலு நாட்டுக்கும் சேந்த வடைகரை நாட்டுக்கு கற்த்தற்றாண கெட்டிமுதலி யென்னப் பட்டவர் றாசியாதிபதிகள் தயவுனாலே காறியத்துக்கு கற்த்த றாகிய கற்த்தறாகி யிறுந்தான்.

இதுக்கு முன்னாலே 1500 வறுஷத்துக்கு மேல் செட்டி சிவ பிறாமணாள் பாளையப்பட்டா யனுபவிச்சுக் கொண்டு யிறுந் தார்கள்.

இந்த மேல்யெளுதப்பட்டவாள் பாளையப்பட்டுக்கு தெற்க்கு பிறத்துக்கு பாளையகார் யிவாள் பாளையப்பட்டகார் வடக்கு ராசியத்துக்கு கற்த்தற்றாண வேடற் றாசியத்துக்கு போயி காத்துக் கொண்டு யிறுந்து அவாளுக்கு இந்த கொங்கு றாசியத்தை குடுத்தார்கள்.

அவாள் வேடற் சிறதுநாள் யனுபவிச்சுக்கொண்டு யிறுந்தார் கள். ததநத்தறம்[7] சீயாளி கெட்டிமுதலியாறுக்கு றாசீயத்தே பட்டாபிஷேகம் பண்ணிவிச்சுப்போட்டு தன் றாசீயத்துக்கு பிறப்பட்டுப் போயிவிட்டாற் இப்படிப்பட்டம் றாசியாதிபத்திப் பதிமூன்று பட்டமாண்டார்.

இதற்கு பிறகாலும் மயிசூறாற் சிக்கதேவறாச ஒடயற்[8] மனுஷ்யா பணியாயிறம் குதரை லட்சகால் பலத்துக்கு கூடா ஒன்பது வறுஷம் வந்து முத்தீகம் பண்ணிக்கொண்டு யிறுந்தார்.

அப்பறம் கெட்டி முதலியாரய்யன் இனிமேல் நாம் நிறுவாகம் பண்ணமாட்டோம் யென்குரதாக மனசுலே ஆலோசனை பண்ணிக் கொண்டு, தன்னுடைய கியாதியில் ஒருத்தனுக்குப் பட்டம் கட்டி

அவனையும் அந்தக் கோட்டையில் வச்சு அத்தகுமக்கல் முலாயிறச்சு தான் றாசிபுரத்துக்கு ரெகசியமாயி வேஷம் மாராடிக்கொண்டுப் போயிவிட்டார். அப்பறம் இந்தப்பட்டம் கட்டிக்கொண்டு கெட்டி முதலியும் மூணு வருஷம் யுத்தம்ப்பண்ணிக்கொண்டு கோட்டை விடாமல் இருந்தார்கள்,

அப்போ, மயிசூறாள் கோட்டையில் **சந்தனப்பன்** யென்று சொல்லி ஷ்த்தானாபத்தியம் பண்ணிக்கொண்டு கெட்டி முதலியாரு மாண்டுகொண்டு இருந்தான்.

அவன் சியாத்தியில் சத்திறியன் அவனுக்கு றாசாப்பட்டம் பண்ணினாற்கள். அவன் மேற்கு வாசல் தவுட்ட பாளையத்துக்கு மேல் மேற்குபறமாயி வந்தால் திண்டிகறந்து குடுக்குரேன் யென்று சொல்லியிறுந்தான்.

அவன் வார்த்தெய நம்பி மேற்குபறம் அயினூரு குதரையும் ஆயிற ஷெத்தாமமும் வந்தார்கள். இந்த சமாசாரம் யெப்படி றாசபட்டம்ப் பண்ணினான் யென்று அறிஞ்ச மதுரை கோபால் பீறங்கியெயெடுத்து கட்டினான். யெடுத்து கட்டி பீறங்கி அடிச்சான்னபோது அந்த அயினூரு குதரையும் ஆயிற ஷேதமமும் அத்தமாயி போயிவிடுது.

அதக்குமேல் அந்த சந்தனப்பன் கண்ணைப் புடிங்கி தலையெ செறச்சு களுதைமேல் ஒக்காத்திவிச்சு இந்த மேறக்கி பண்ணிவிச்சு மயிசூறாற் தெண்டுக்கு யனுப்பிவிச்சார். அனுப்பிவிச்சுப்போட்டு மூன்று வறுஷம் சண்டே புடிச்சார்கள்.

அதக்குமேல் மகாசமஷ்த்தானபத்தியளுடையச் சண்டே பண்ணு குறதுக்கு நிருவாகம் யில்லாமல் கோட்டை விட்டுவிட்டார்கள்.

மயிசூரு கறுத்தறாசிய **சிக்கதேவறாச ஒடயறவற்கள்** இந்த கெட்டி முதலியுடய றாசியம் தம்ம வசத்துக்கு ஆனபடியினாலே, அந்த கெட்டி முதலி சமஷ்த்தானத்துக்குப் பட்டத்துக்கு நித்தன மாயி வந்தவரே னீ புதுசாயி வறப்பட்டவன்; மூணு வறுஷம் யெங்கள் றாசியம் விடுகுறதுக்கு தொந்தரெ பண்ணினபடியினாலே அவனை கொண்ணுபோட சொல்லி வுத்திறவு பண்ணிவிட்டார்கள்.

அவனை கொல்லப்பட்ட வயனம் யென்னவென்றால் அந்தியூருக்கு மூனு னாளி வளிக்கி வடக்கே வாயுவு மூலையில் நதித்தீறத்தில் மலை சமீபத்தில் இந்த கெட்டி முதலிய்யைக் கோனிப் பயில்ப் போட்டு கட்டி, யிலுப்பு ஒலக்கியினாலே தலையெ ஒடச்சுப்போட்டார்கள். வயிறத்துனால் சீவ யிவுசம் பண்ணின படியினால், அதுமுதல் றாசியத்தில் மழெ மாறியில்லாமலும், வெள்ளாமை வெளச்சல் யில்லாமலும், சீர்மை அறுபகமாயிப் போச்சுது.

அதற்கு பிறக்காலும் சிக்கதேவறாச ஒடயாறவர்கள் இந்த ஷ்தளத்தாரை அளச்சு விசாறிச்சு, ரொம்பவும் மனசுக்கு ரொம்பவும் பச்சாதாபம் தோனி, சமஷ்த்தானாபதியெ அப்படி கொல்லலாகாது யென்று தோனீ, அந்த கெட்டிமுதலிக்கு புழுகு சந்தனமாதி பிறாமண சமாறாதனை பண்ணிவிக்கச் சொல்லி நிச்சயம் பண்ணார்கள்

வறுஷப் பறத்திவறுஷம்[9] யிட்டற்க்கால சமாறாதனை பண்ணினால் சமாறாதனை பண்ணின உடநே, யேறிக்கொளங்கள் யெல்லாம் நெரைஞ்சி நதியில் செலம் நெறஞ்சு வறும் இதற்க்கு யிடற்க்கால சமாறாதனை யென்றுபேற்.

சாலிவாகன செகாபுதம் யிசுவற சங்கமேசுவற சுவாமி கோவிலில் சிந்திவிக்சினேசுவற சுவாமி, சூறியனாறாயண மூற்த்தி, நந்திகேசுவற், துவாரப்பாலக்கால், வுளநந்தி, உள்ளை துவாரபாலக்கால், தெட்சினாமூற்த்தி, தண்டாயுதபானி, அறவத்தி மூவற், பச்சலிங்கம், றாமலிங்க சுவாமி, மறுவத்தவறுத்தமானியம்மன், சொற்க்கட்டேசுவற், வல்லிதேவானெ சமேத சுப்பிறமநேசுவற்.

அம்மன் சன்னியதானத்தில் அற்த்தமாமட்டப்பத்தில் துவாரப் பாலக்கால் மகாமட்டத்தில் துவாரபாலக்கால் அறுத்தமட்டப்பத்தில் கெணப்பதி பிறதட்சணத்தில் செண்டிகேசுவறி சருதி கெணப்பதி யீசுவற் கோவில் செண்டிகேசுவற் காலபயிறவற், கம்பத்து நல்லெப்பற், சுத்தாதுற்பற், பதறிவிருஷத்தின் கீள் பதறி லிங்கம் அம்மன் கோவிலுக்கு வடக்கே காசிலிங்கம் காயிதிற மலையில் காசிவிசுவனாதலிங்கம் அமுற்த்தலிங்கம் சாகத்துறலிங்கம் அளகறாச்சுவாமி சன்னதியில் துவாரபாலக்கால் லெட்சுமிதேவி சன்னதியில் துவார

பாலக்கால் கோபாலகிஷ்ண சுவாமி ஆள்வார் விஷுவக்ஷேனற் பெறுமாகோவிலுக்கு வடக்கே விக்கிநேசுவற், அதற்க்கு பூறுவத்தில் சுப்பிறம்மண்ணியற், அதக்கு வுத்திறத்தில் கோபிறம் வடக்குவாசல் அதக்கு அப்பால் இந்த தேவஷ்தானம் சுத்தி வேடற் போட்ட கோட்டெ வாசல் கெட்டி விக்கினேசுவற் அனுமத்த றாய்யற் கிறா மத்தியல் றாச வீதியில் மேற்க்கு சறகல் கணக . . றம் வெங்கட்ட றாயற் யென்று அதிகாரம் பண்ணிக் கொண்டு இறுந்தார்.

அவற் அந்தியூருக்கு முகாமிபண்ணுகுரபோது, அவற் காசியில் யிறுந்து லிங்கம் தறிவிச்சு, மேற்கோசறத்தில் காவேறியம்மனெ பாத்துக்கொண்டு யிறுக்குறாப்போல கெளக்குவாசல் கோவில் கெறுப்பகிறகம் மகாமட்டப்பம் சயிதமாயி கல்லுனாலே கட்டி, காசிவிசுவனாதற் சொப்புணமாயி, லிங்கத்தையும் பிறதிஷ்ட்டை பண்ணி, சூறியற் விக்கினேசுவற், தெட்சனாமூற்த்தி, சுப்பிறமண்ணி யற், சண்டிகேசுவற், காலபயிறவற், சயிதமாயி பிறதிஷ்ட்டெ பண்ணி னாற்.

பிறகாறங்கலும் நன்றாயிகட்டி விச்சுயிறுக்குறாற்கள். அக்கிறா றத்துக்கு மூனு னாளி ளிக்கி வடக்கு றாச்ச கோட்டெமலை வேதகிறிசுவற் வெறுதறாச பெறுமாள்; இவாள் பத்தினி சமேதானா யிறுக்குறாற்கள். இதுக்கு ஷ்தளபுறாணம் பிறமோத்தற கண்டம், காசி காண்டம் பச்சனதமயிமெப விஷேத்தா தள புறாணம் இது களில்ப் பதினெட்டு அத்தியாயம், இதனுடைய ஷ்தள மயிமயில்[10] வறப்பட்டது.

---

1. பவானி : கோவை மாவட்டத்தில் உள்ள தாலுகாத் தலைநகர்.
2. பூர்வம் - கிழக்கு.
3. பச்சிமம் - மேற்கு.
4. ஒளிமயமாகி.
6. காங்கேயம் , கோவை மாவட்டம். தாராபுரம் தாலுகாவில் உள்ள ஊர்.
7. 'தனநந்தரம்' எனும் வடசொல்; 'அதற்குப் பிறகு' என்பது பொருள்.
8. மைசூர் அரசர்களில் சாமராஜ உடையார் (1617-1637) என்பாரை அடுத்து ஆண்டவர் சிக்கதேவராச உடையார்.
9. பிரதி வருஷம்.
10. மகிமையில்.

# அவிநாசி தாலுக்கா கைபீது

## டி. 2957

கோயமுத்தூற் துக்குடி தாலுக்குக் கசுபா அவினாசி,[1] அவினாசி சுபா சுவாமி பெரும்கறுணையம்மனதெள வரலாற் பிறம்மாண்ட புராணத்திலும், ஸ்காந்தபுராணத்திலேயும், வரப்பட்ட அவினாசி ஸ்தள மகிமை வரலாற் கைபீது யென்னவென்றால்,

பூற்வத்தில் பராபர வஸ்துவாகிய பரமேஸ்வரற் பிரளய தாண்டவம் பண்ணுகுரபோது, ஸப்த்தசமுந்திரங்களும் யேகாண்டமாயி, ஜலாற்ணவமாயி, இருக்கும் நாளையில், சீவன் முகுத்திட் சேத்தரங்களாகிய முகுத்திபுரம், தோணிபுரம், விடைபுரம் முதலான ஷ்சேத்திரங்கள் மிகள்ந்து யிருந்துது.

இந்த சல பிரளயத்துக்காக அக்கினி தாண்டவம் பண்ணவேணுமென்று, பாற்வதி தேவிய்யை ஆகாச மாற்கத்துலே போயி இருயென்று சுவாமி கட்டுபண்ணி, அக்கினி பகவானை கடைக்காண்ணாலே திறிஷ்ட்டிச்சு பாத்தவிடத்தில், சல பிரளயத்துலே யிருந்து வாசம் பண்ணப்பட்ட படபாங்கினி வெளிப்பட்டு, மகாசோதி ரூபமாயி திருலோகமும் வியாபிச்சுக்கொண்டு யிருக்குர சமயத்தில், அந்த சோதிற்மத்தியிலே ஈசுவரற் தாண்டவம் பண்ணினாற். யிந்த படபாங்கினி வியாபிச்சபடியினாலே, செலங்கள் யெல்லாம் வத்திபோஇ ஸப்த்த சமுந்திரங்களும் அக்கினி சுரூபமாயி நிலைகளுலே நிண்ணுத்து.

பாற்வதி தேவியானவள் யிந்த அக்கினி தாண்டவத்துக்கு சஹிக்கமாட்டாமல் ஆகாசமாற்க்கத்தில் ஒளிஞ்சு யிறுந்தாள்.

பரமேசுவரற் படபாங்கினியிலே நிர்த்தனம் பண்ணுகுரபோது தேவதைய்கள் முதலான சராசரங்கள் யெல்லாம் தெஹிச்சு லோகங்களிலே யெல்லாம் பஸ்தமங்களாயும் யெலும்புகளாயும் யிருந்த தருணத்தில் பஸ்துமங்களையெல்லாம் தூளிதம் பண்ணிக்கொண்டு, யெலும்புகளையெல்லாம் ஆபரணங்களாயி தரிச்சுக்கொண்டு, தன்னுலே தாமே சந்தோஷப்பட்டுக்கொண்டு நிற்த்தனம் பண்ணினாற்.

பாற்வதி தேவியானவள் அங்கினி தாண்டவமானதின் பிரகு ஸ்வாமியைக் காணமென்று தேடிக்கொண்டு வருகுரபோது, லோகங்கள் யெல்லாம் பஸ்திமிபடலமாயிருந்து சுவாமிய்யை காணாமல் அம்மன் அனேக வெஸ்னத்துடனே வருகுறபோது, ஈஸ்வரற் பாற்வதி தேவி வெஸ்னம் அடஞ்சு வருகுரதெ பாத்து ஈசுவரற் பயப்படாதே யென்று சொல்ல அமந்தசபுத்ததே காதுலே கேட்டு சறவணாநந்தத்துடனே அனேக ஸ்துதிகள் பண்ணி சரணாகதியாஇ ஸ்வாமிக்கு பிரதஷ்சண நமஸ்காரம் பண்ணினாள். ஸ்வாமி கருணையாஇ சந்தோஷப்பட்டு லோகங்களிலே பிரசாவிற்தி பண்ணவேணுமென்று புன்சிருப்புடனே சொல்லி அம்மனை யெடது பாகத்துலே அணைச்சுக்கொள்ள பிறம்மா முதலான பிரசாவிற்தி உண்டாச்சுது.

பரமேஸ்வரற் கெங்காதீரத்தில் லிங்கஸ்வரூபமாஇ உத்ப்பவிச்சு, கெங்கைய்யை பிறவஹரிக்க பண்ணி காசிஷ்சேத்திரமென்றும் மனுமாந்தரதெகள்னாலே பூசைபண்ணிக்கொள்ள வேணுமென்று உத்ப்ப்விச்சாற்.

பாற்வதி தேவி ஈஸ்வரரை பாத்து அக்கினிதாண்டவமாடுகுர சமயத்தில் நான் பிரிஞ்சுயிருந்தபடியினாலே அதுக்காக நான் தபசுபண்ணுகுரதுக்கு இடம் சொல்லவேணுமென்று கேட்டுக் கொண்டாள்.

அப்போ ஈஸ்வரற் திராவிட தேசத்தில் கொங்கு மண்டலத்தில் தக்ஷணபாகத்தில் பூமியில் கைகாண்பிவிச்சாற்.

அம்மன் ஆனவள் தெற்க்கு னோக்கி பிரப்பட்டு, கனக விமானத்துடனே வருகுர சமயத்தில், பூற்வத்துலே சலபிரளயம் முதலான பிற(ள)ம பிரளைய காலத்தில் தாமர புஷ்ப்பம்போலே மெகள்ந்து யிருக்கப்பட்ட சேத்திரத்தில் தேவாதிகள் ஆதாரமாக வாசம்பண்ணின சேத்திரத்தில் வந்து, இந்த க்ஷேத்திரத்துனுடைய சுருபத்தை மனசுலே தெரிஞ்சிக்கொண்டு, இந்தட்சேத்திரத்தில் நிண்ணு பாட்டலீவனம், ஆம்பிரவனம் யிறுக்கப்பட்ட யிடத்தில பூற்வாபி முகமாயி னிண்ணுகொண்டு, தபசு பண்ணிக்கொண்டு யிருந்தாள். தபசு பண்ணிக்கொண்டு ஆயிரம் வறுஷம் தபசு பண்ணிக்கொண்டு யிருக்குரபோது, அப்போ ஸ்வாமி அம்மன்

தபசுக்கு சந்தோஷப்பட்டு காசீஷ்சேத்திரத்தில் யிருந்து தெற்க்கு னோக்கி விசுவனாதசுவாமி மூலாதாரத்துலே ஒரு கோடி யாக பிரப்பட்டு, பாதாளத்துலேயிறுந்து வளந்துவந்து, அம்ம னுடைய தபசு பூசை மகிமைகளுக்குசந்தோஷப்பட்டு வாரணவாசி பூங்கொளுந்து போலே பூமியிலேபிரசனமாயி தரிசனம் குடுத்தாற் அம்மன் வெகு சந்தோஷத்துடனேயிருந்தாள்.

வாரணவாசி பூங்கொளந்து போலே யிந்த ஸ்தளத்துலே வெளங்கினபடியினாலே கெங்கை ஸ்வாமிக்கு ஈசானிய பாகத்துலே யேளுதனசு அளவுலே பிரமாணத்துக்கு காசியிலேயிறுந்து பிறஹரிச்சு வந்து கூபரூபமாயி கெங்கை உத்ப்பத்தியாச்சுது. அம்மன் அந்த கெங்கையிலே ஸ்தானம்பண்ணி பஞ்சதளவில்வம் சுகந்திபுஷ்பங்கள்னாலே அற்ச்சனை பண்ணினாள்.

ஸகல தேவதைகள் முதலான ரிஷிகளும் அம்மனையும் ஸ்வாமி யும் தரிசிச்சு கெங்கையிலே ஸ்தானம் பண்ணி, சுவாமிய்யை பூசை பண்ணி, பிரளய காலத்துலே தாமர புஷ்ப்பம் போலே மெகள்ந்து யிருந்தட் சேத்திரமானபடியனாலே, புஷ்கராக்ஷசேத்திரமென்று நாம தேயமும், பிறம்மபிரளயகாலத்துலே புஷ்க்காட்சேத்திரத்தில் நாச ரஹிதமாயி இருந்தபடியனாலே தியவினாசியென்றும் காசியில் வாரணாசியில் விசுவனாத லிங்கத்தில் வேரோடி தெற்க்கு நோக்கி வந்து அம்மன் தபசு பண்ணப்பட்ட இடத்தில் உதுப்பத்தியாயி வெளங்கினபடியனாலேயும் வாரணாசியென்று நாமதேயம் கெங்கை சுவாமிக்கு யீசானிய பாகததில் தீபரூபமாயி உதுப்பத்தி யனபடியனாலே, இதுவே தட்சணகாசியென்று ஸ்தோத்திரம் பண்ணினாற்கள்.

அம்மன் ஆயிரம் வறுஷம் தபசு பண்ணி ஈசுபரனை குருச்சி[2] பூசைபண்ணினபடியனாலே, சுவாமி சந்தோஷப்பட்டு அம்மனை நமக்கு வலதுபாகத்துலே யிறுக்கச் சொல்லி அனுக்கிறஹம் பண்ணி னாற்கள்.

வலது பாகத்து அம்மனுடனே சையிதமாயி சுவாமி யெளுந் தறுளியிறுக்குர காசிட்சேத்திரத்துக்கு சமானமான தென்காசி அவினாசிட்சேத்திரத்தில் பூற்வம் பரமேசுவரறுடைய அடி நுனி தரிசிக்க வேணுமென்று நினைச்சுயிருந்த சமயத்தில், ஸ்ரீமகாவிஷ்ணு

ஓடநே னான் தரிசிச்சு வந்தேனென்று பிரம்மதேவற் சொல்லப் பட்ட வசனதோஷத்துக்கு ஆகயிந்தட்சேத்திரத்தில் தபசுபண்ணி தெண்டாயுதத்துனாலே கபிலமஹாநதி யுண்டுபண்ணி, தேவாண் டுலே னூறு வறுஷம் பூசைபண்ணிநாற்.

யிப்படிக்கு னூறாண்டு பிறம்மதேவற் தபசு செண்ணபின்பு ஈசுவரற் கறுணையாயி உன்னுடைய வசனதோஷம் பிரிஹாரமாச்சு தென்று உன்னுடைய அதிகாரத்துக்கு போகச்சொல்லி அபய பிரதானம் குடுத்தாற்கள்

பிறம்மா அனேக ஸ்துதிபண்ணினாற். அதுனாலே பிரம்ம தீற்த்தமென்று பேராச்சுது. பிறம்ம தேவற் வசனதோஷ பரிகார மாயி ஸ்ரீஷ்ட்டிகற்த்தவம் பண்ணிக்கொண்டு வருகுர நாளில் மேஷமாசத்து மிரகசிரா நட்சத்திரத்தில் சகலமான தேவாதி முதலான சங்கங்களை வரவளைச்சு, பிறம்மோச்சவமென்று ரதோச்சவம் நடப்பிவிச்சாற். பிறம்மதேவற்னாலே யிந்த ஸ்தளத் தில் பஞ்சதள விலுவவனமும் உண்டாச்சுது

தேவிந்திரன் தன்னுடைய யிந்திராணிதேவி ஸ்வஸ்தி ஸ்ரீலோல னாயி ராப்பகல்யென்று தெரியாமல் யிருக்கும் வேளையில் அயிராவதமான வெள்ளானை மதத்தை அடஞ்சு மதாந்தகாரத்து னாலே விடுபட்டு பூலோகத்தில் தண்டகாறுணிய வனத்தில் சேந்து அனேகம் ஆனை சேனைகளுடனே சமச்சாரம் பண்ணிக்கொண்டு யிறுந்துது.

தேவலோகத்துலே தேவிந்திரன் பேரில் தயித்தியாள் யுந்தத் துக்கு பிரப்பட்டு பெரீதாட்டணம் பண்ணுகுர சமயத்தில், தேவி கணங்கள் யெல்லாம் தயித்தியாள் யுத்த சன்னாகத்துடனே பிரப்பட்டுவந்து, பெரீதாட்டணம் பண்ணுகுராற்கள் யென்று தேவீந்திரன் யிடத்தில் முறையிட்டாற்கள்.

தேவேந்திரன் தேவகணங்கள் முறையிடுகுரது கேட்டு வெளியிலே வந்து தன்னுடய ஆனைய்யை னினைச்சு, ஆனெ பூலோகத்துலே வாசம்பண்ணிக்கொண்டு யிறுக்குரது யென்று கியான திரிஷ்ட்டி யினாலே அரிஞ்சிக்கொண்டு, பூலோகத்துலே யானைகளுடனே கூடா சமச்சாரம்பண்ணி யிருக்கக்கூடாது யென்று சாபம் குடுத்தாற்கள்.

அயிராவதமானது தேவேந்திரநிடத்தில் சாபம் பொரந்ததாயி பூற்வக்கியானம் யெடுப்பட்டுபோயி யானைகள் கூட்டத்துடனே கூடா சமச்சாரம் பண்ணிக்கொண்டு, சக்காரம் பண்ணிக்கொண்டு அதிலே சனத்தை அடஞ்சதாயி கெந்தற்வாள் முதலான றிஷிகளுடனே தனக்கு சாபம்வந்த வளிகளை முரையிட்டுக்கொண்டு யிருக்குர சமயத்தில், நாரதற் பாத்து, "ஒனக்கு சாபவிமோசனமாகுர வளி சொல்லுகுரேன் கேளுமென்று", "மகமேறுவுக்கு தட்சண பாகத்தில் அநேகட்சேத்திரங்கள் யிருக்குரது, அதுலே கமலாலயத்துலே பொரந்தால் முகுத்தி, சிதம்பரத்திலே தரிசினம் பண்ணால் முகுத்தி, அருணாசலத்துலே ஸ்தூணை பண்ணால் முகுத்தி காசியிலே மரணமானால் முகுத்தி; ஆகைநாலே காசிக்கி சமானமான வராஹமலைக்கு ஈசானியபாகத்துலே, சேற, கேரள தேசத்துலே காவேரிக்கு தென்பாகத்துலே ஆட்டுமாநிலைக்கு மேல் பால்பட்டி ஸ்தளத்துக்கும் கீழ்பால் ஆரு யோசன விஸதாரனத்தில் ரெண்டு யோசினை விஸ்திரணத்தில் மேற்க்கு ஒரு பொயிகையும், பஞ்சதளத்துடனே கூடியிறுக்கப்பட்ட வில்லுவவனமும் அந்த பொயிகையாகிய சிவதீற்த்தமென்றும் கெங்கையென்றும் பேற்உண்டான நதியும் கூடின க்ஷேத்திரத்தில், பாற்வதி வலபிரதானம் பெற்றுள பிறமதேவற் சாபம் நீங்குதலை பண்ணிக்கொண்ட ஸ்தலம் முகுத்தியாகுர தட்சணை காசியானபடியனாலே, நீயும் அந்தட்சேத்திரத்துக்குப் போயி சுவாமிய்யை அர்ச்சனை செயிதால் சாபம் நீங்குதலை யாகு"மென்று சொன்னாற்.

அவினாசி யீசுவரருக்கு யீசான்னிய பாகத்துலே ஈசன் ஒரு மஹாலிங்கமயி யிறுக்குரது. நாரதற் சொன்ன வாக்குகளையெல்லாம் கேட்டு அவினாசி க்ஷேத்திரத்துக்கு வந்துசேந்து சன்னதியை கண்டு அர்ச்சனைபண்ண வேணுமென்று நினைச்சு அயிராவதமானது தன்னுடைய நாலு கொம்புனாலேயும் சன்னதிக்கு கீழ்பாகத்தில் தீற்த்தமும் உண்டுபண்ணி, அந்த தீற்த்தத்துலே நித்திய குறுத்தமாயி, ஸ்தானம் பண்ணிக்கொண்டு அநேக புஷ்ப்பம்களாலே நயீஷ்ஷிகத்துடனே அற்ச்சனை பண்ணிக்கொண்டு, பனிரெண்டு வறுஷம் பூசைபண்ணிக்கொண்டு வாசம் பண்ணிக்கொண்டு யிருந்துது.

அவினாசீசுவரற் யானை அற்ச்சனை பண்ணதுக்கு சந்தோஷப்பட்டு, தேவேந்திரனை வரச்சொல்லி காரணம் செயிதாற்கள்.

தேவேந்திரவானவற் பூலோகத்துக்கு யெளுந்துரளி, பஞ்சதள வில்வவன ஷேத்திரத்துக்கு வந்து, அத்த அயிராவதத்தைக் கண்டு பொகு சந்தோஷத்தை அடஞ்சு மஸ்தகத்தை தடவி குடுத்து முன்னாலே தம் குடுத்த சாபம் நிவாரணம்மாச்சு யென்று சொல்லி, யெதாபிரகாரமாக க்கியானதிரஷ்ட்டி குடுத்தோமென்று வரம் குடுத்தாற். யானையும் தேவிந்திரனை பிரதட்சணை நமஸ்காரம் பண்ணி, வுங்கள் சாப காரணத்துனாலே மஹாக்ஷேத்திரங்களை யெல்லாய் தரிசித்து சிறத்தாற்த்தனானேன் யென்று தேவேந்திரனை அனேக ஸ்துதி செயிது தன் முதுகுமேலே யெடுத்து வச்சுக்கொண்டு, சுவாமி சன்னியதானத்தில் கொண்டுபோயிவிட்டது.

தேவேந்திரன் அவினாசீசுபாரரை பாத்து அனேகம் ஸ்துதி பண்ணினாற். அவினாசீசுபரற் தேவேந்திரனை பாத்து, நீற் உம்முடய அயிராவதத்துடனே உம்முடய லோகத்துக்கு போகச் சொல்லி வரம் குடுத்தாற்.

தேவேந்திரனும் தன்னுடய அயிராவதத்து மேலே யேரிக்க கொண்டு தேவலோகத்துக்கு போயி சேந்தாற்.

மாரிசனுடைய ஸ்வஸ்தி திரி தாடகி யென்ங்குர றாக்ஷசஸ்ரீ புத்திர சத்தானத்துக்காக பிறம்மதேவரை குறுச்சு தபசு பண்ணுகுர சமயத்தில், பிறம்மதேவற் நிதர்சத்துடனே அவினாசி க்ஷேத் திரத்தில் ஈஸ்வரரைக் குறுச்சி தபசு பண்ணெயானால் உன் னுடைய அபீஷ்ட்டம் சித்தியாரது யென்று அபயப்பிரதாநபடிக்கு தாட்டகீ யிந்த க்ஷேத்திரத்தில் தபசு செயிது அபீஷ்ட்டத்தை அடைஞ்சாள்.

சுவாமியுட அனுக்கிறஹத்துனாலே கருணாம்பிகை கறுணா கட்டாக்ஷயத்துனாலே மூணு வற்ஷம் தபசுசெயித பின்பு புத்திர சந்தானம் உண்டாயி தாட்டகீதான் புத்திர சந்தான வரம் குடுப்ப தாக தான் வரம் கேட்டு கொண்டு அபீஷ்ட்டம் சித்தியானவனா னான்.

நாகலோகத்து குந்தக ராசாவின் மகள் நாககனிகைக்கி விவாஹத்துக்கு ஸ்வயம்வரமாயி யிருக்கும் சமயத்தில், னாக கன்னிகையானவள் தன் தோப்பனாரை அளைச்சு, "ஆரயிம் பாபம்

பண்ணால் ஒரு பெண்ணாயி பிறக்கவேணும்; ரெண்டாயிரம் பாபம் செயிது மூடறுக்கு ஸ்வஸ்தஸ்ரீயாக யிறுக்கவேணும்; மூவ்வாயிரம் பாபம் செயிதால், வேபிசாரத்தை அடயவேணும்; னாலாயிரம் பாபம் செயிதால் அமங்கிலியஸ்ரீ ஆகவேணும். யிப்படி யிருக்குர படியினாலே, யெனக்கு விவாஹம் அக்கரையில்லை. னான் தவசு பண்ண போரேனென்றும் ஸ்வாமி அப்பணைஆயி இறுக்குரது" யென்றும் சொல்லிக்கொண்டபடியினாலே, குந்தகராசா கரந்தபால் ஸ்தனியத்துக்கு போகாதென்றும், முன் யெறந்துபோன புள்ளை களிலே யிதுஒண்ணுயென்றும் நினைச்சு அனேகம் திரவியங்களு குடுத்து தாதிகளையும் கூட்டி தவசுக்கு அனுப்பிவிச்சாற்.

நாககன்னிகையானவள் பிரப்பட்டு அவினாசி க்ஷேத்திரத்துக்கு வந்து ஸ்வாமி சனதிக்கு வடகிழ்பால் தீற்த்தம் உண்டுபண்ணி தவசுசெயிதுகொண்டு சுவாமிக்கு அற்ச்சுணை பண்ணிக்கொண்டு யிருந்தாள்.

திராவிட தேசாதிபதியான மனுசேகர ராசனுடைய குமாரன் அரிதுராசன் ஸ்தளங்கள்தோறும் தரிசனம் பண்ணவேணுமென்று நினைச்சு தீற்த்தயாத்திரைகள பண்ணிக்கொண்டு வருகுறபோது மாற்க்கத்துலே அகஸ்தயற் கைலாசத்துலேயிறுந்து தட்சணம் னோக்கி பொதியமா மலைக்கு போரவரை கண்டு, பிரதட்சண நமஸ்காரம் பண்ணி அஞ்சலீபத்தமாயி நிண்ணாற். அகஸ்தயற் ராசகுமாரனை பாத்து கருணையுடனே நீயி தீற்த்தையாத்திரைக்கு பிரவட்டவனானபடியனாலே சேரநுடய தேசத்துலே கொங்கு பூமியிலே காவேறி பவானீ சங்கமதீரத்துக்கு தென்மேற்க்கு பதரி காசிரம விசாலமத்தியத்தில் மாதேய வனத்தில் தூற்வாசர மஹாமுனி அர்ச்சனை செயிது முகுத்திபெத்த ஸ்தளத்துக்கு மேற்க்கு மூன்று னாளிகை வளியில் காசிவெற்படந்து ரோணவாசியாயி கேள்த்த திருஅவினாசியாற் யென்ங்குற பேற் உண்டாகிய தேவனை ஒருதிரம் அர்ச்சணைபண்ணேயானால், அனேக சித்தியும் முக்குத்தியும்[3] தருமென்று அகஸ்தியற் சொன்னாற்.

அகஸ்தயற் சொல்லப்பட்ட வசனங்கள் பரிபாலனம் பண்ண நினைத்து, அவினாசி சேத்திரத்துக்கு வந்து, பஞ்சதள வில்வ வனத்துக்கு வந்தான்.

வெந்த சமயத்தில் நாககன்னிகை தன்னுடைய நித்திய குறத்திய மாயி அர்ச்சனை பண்ணுகுரதுக்கு புஷ்பம் யெடுகுரதுக்கு வந்தான் அந்த னாக கன்னிகைய்யை கண்டு யிவன் தேவகன்னிகை முதலாகிய யெந்த கன்னிகையோ யாரோவென்று மனசுலே யோசிச்சக்கொண்டு அந்த கன்னிகைய்யை பின்துடற்ந்து வந்தான்.

அந்த னாக கன்னிகையானது புஷ்ப்பங்கள் முதலானதுகளாலே அர்ச்சனை பண்ணுகுரது யெல்லாம் கண்டு தானும் ஸ்வாமிதரிசினம் பண்ணி, சிவஸ்துதிபண்ணி அர்ச்சனை பண்ணிக்கொண்டு வந்தான்.

யிந்த னாககன்னிகையும் அரிதுவசராசனும் யிறுவரும் நிற்ப்மல சித்தம்மாயி நித்தியகிற்த்திமாயி பூசைபண்ணிக்கொண்டு வரகுரதுக்கு அவனாசீசுவரற் சந்தோஷப்பட்டு கறுணைகூந்து யிறுவறும்போயி விவாஹம் பண்ணிக்கொண்டு வரச்சொல்லி அனுக்கிறஹம் பண்ணினாற். ஈஸ்வரர் அனுக்கிரஹப்படிக்கு னாககன்னிகையும் அறிதுவசராசனும் யிறுவறும் னாகலோகத்துக்குபோயி விவாஹம் பண்ணிக்கொண்டு அனேக திரவயங்களை யெடுத்துக்கொண்டு அவினாசீசுவர சனதிக்கு வந்துசேந்து, அனேக கோபுர பிரகராதிகள், மண்டபங்கள் உண்டுபண்ணி நித்தியோச்சவமாயி நடப்பிவிச்சுக் கொண்டு யிந்த சேத்திரத்தில் வாசமாயிறுந்து ஸ்வாமி பாதார விந்ததை அடஞ்சாற்கள்.

தற்ம்மசேனனென்னப்பட்ட றாசன் சங்குகற்ன்னனென்னப் பட்ட வேடன் வேடசங்கத்துக்கு அதிபதியான வியாதனென்னப் பட்ட வேடன் யிவற்கள் ஒரு காறுணாற்த்தத்துனாலே பூசைசெயிது முகுத்தி அடஞ்சாற் யென்று சொல்லிவருகுரது.

தூற்வாச றிஷியானவர் திருமுறுகன் பூண்டிக்கு[4] வந்து யிந்த ஸ்தளமகிமை யென்னவென்று விசாரிக்க, அந்த ஸ்தள மகுத்துவம் பிதற்க்குளுக்கு பிண்ட பிரதானம் பண்ணால் அனேக முகுத்தி யுண்டு யென்று சொன்னபடியனாலே, ஸ்வாமிய்யை அர்ச்சனை செயிது, அன்னம் நியிவேத்தியம்பண்ணி, காகத்துக்கு பலி குடுத்தான்.

ஒரு காகமானது அந்த அன்னத்தை தான்சாப்புட்டு தன் குஞ்சுக்கும் யெடுத்துக்கொண்டு அவினாசி வீதியிலே வருகுரபோது, பின்னையொரு காகம் யெதிரே வந்து அந்த காகத்து அன்னத்தை

பிடங்க தக்கதாக அந்த காகத்தை கொத்தியபடியனாலே, அந்த சமயத்தில் ஒரு பொரவி[5] அந்தகன் அன்னபக்ஷிக்கி பாத்திரம் யேந்திக்கொண்டு வீதியில் வந்தான் அவன் பாத்திரத்தில் அந்த காகம் அன்னம் ஒரு அன்னம் நளுகி விளுந்துது அந்த கா(க)ம் போயிவிட்டது பின்னும் அந்தகன் பாத்திரத்தில் அன்னம் நிரஞ்சு சாப்பாட்டுக் கொண்டுயிறுந்தான்.

அந்த காகமானது பின்னும் அன்னம் யெடுத்துகொண்டு வரவேணுமென்று போக, காகத்தை தனுசுனாலே ஒரு வேடன் போட்டான். காகம் அவினாசி வீதியிலே வந்து விளுந்துது. காகம் விளுகவும் தெயிவலோகத்துலே யிறுந்து யிந்திரவிமானத்தின் பேரில் வந்துக்கொண்டுபோயி காகம் கைலாசம்போயி சேந்துது

திருமுறுகன் பூண்டியில் வாஸஸ்தனாயி இருக்கப்பட்ட யெக்கிய குடித்தநென்ங்குரவயிசன் அனேக திரவியம் சம்பாதிச்சுக் கொண்டவனாயி லுபுத்தகேசரளாயி இருந்து அவினாசி க்ஷேத்திரத்து ரதோச்சவத்துக்கு வியாபாரத்துக்காக வந்துயிறுந்தான் ஸ்வாமி ரதாறுடற் ஆகி வீதி பிரதக்ஷசணம் வறுகுரபோது தாசிகள் நிற்த்தனம்[6] பண்ணுகுரத்தை பாத்து தாசீமுகபரனாயி அவாளை பின் துடற்ந்து ஆலயத்துக்குள்வாக சுவாமி சன்னியதானத்துக்கு போனான்

மருபடி, தாசிகள் அவாள் வீட்டுக்கு போன ஒடனே யிவன் தானும் தாசீ வீட்டுக்கு போகவேணுமென்று நினச்சு பொகுதுரதிதுடனே போசனம் பண்ணுகுர சமயத்தில், அன்னகமட்டகமாயி தொண்டையடச்சு தெயிவகதியானான். தெயிவகதியான ஒடனே யெம்செணங்கள்வந்து யிவனை யிளுத்துகொண்டு போரசமயத்தில், தெயிவகணங்கள் கணனாதாள் வந்து, யெமதூதகளை நிருத்தி யிந்த ஸ்தளத்துலே யொந்துபோனபடியனாலே யிவறுக்கு முகுத்தி யுண்டு யென்றுசொல்லி யிந்திரவிமானத்தின் பேறிலே தெயிவலோகத்தை அடயபண்ணினாற்கள்.

**சுந்தரமூற்த்திகள்** ஸ்தளங்கள்தோறும் **தேவாரம்** பாடிக்கொண்டு வறுகுர சமயத்தில் திருமுறுகன்பூண்டி ஸ்தளம் தெரியாமல் அவினாசி ஸ்தளத்துக்கு வரவேணுமென்று மாற்க்கத்தில் வருகுர போது, திருமுறுகனாவற் ஒரு வேடரூபம் யெடுத்து வளியிலே

சுந்தரமுற்த்திய்யை அடிச்சு அனேக திரவியம், பரி பிடிங்கிக் கொண்டு போனாற் ஒடனே, க்கியாவை திஷ்ட்டிய்னாலே அரிஞ்சிக் கொண்டு திருமுறுகனாதன் ஸ்தளத்துக்கு போயி திருமுறுகனாவற் பேறிலே அனேகம் தேவாறங்கள் பாடி தம்முடைய அபீஷ்ட்டம் நெர வேத்திக்கொண்டு அவினாசீ க்ஷேசத்திரத்துக்கு வந்து ஒடனே, புக்குளியூறுலே மங்களவாதிய சபுதமும், ரோதனசபுதமாயும் யிந்த ரெண்டு சபுதமும் சரவணபானபடியனாலே யிதுனுடைய விபரம் யென்னவென்று விசாரிச்சாற் ஒறு கிறஹத்துலே வுபனையன மாகுரபடியனாலே மங்களவாதியமென்றும், ஒரு கிரஹத்துலே பிள்ளைய்யை பரிகுடுத்தபடியனாலே ரோதனசபுதமென்று அரிஞ்சுக் கொண்டு, அந்த கிறஹத்துலே யிருக்கப்பட்டவற்களை தரிவிச்சு புள்ளைய்யை பரிகுடுத்த வயணயென்னவென்று கேட்டாற்கள். முதுளை[7] கொண்டுபோச்சு யென்று சொன்னாற்கள். தாமர தடாகத்துக் கரையிலே யிறுந்துக்கொண்டு அவினாசீசுவர சுவாமி யின் பேரிலே அனேகம் தேவாரம் பாடினாற் மொதளை செலத்துக் குள்ளேயிறுந்து *வெளியிலேவந்து அந்த குளந்தைய்யை கக்கி குளந்தையன் தாயாறு கைய்யிலே குடுத்தது.

குளந்தையன் தாயாற் அதி சந்தோஷத்துடனே சுவாமிய்யை செரஸ்தாரம்பண்ணி மங்களகரமாயி அந்ததட்சணமே முதளை வாயி பிள்ளைக்கு சுந்தரமுற்த்தி உபனையனம் பண்ணிவிச்சாற்கள்.

முதளை மூணுவறுஷமிளங்கியிறுந்து ஈசுரெர் அனுகிரஹத்து னாலே வெளிவந்தபடியனாலே **முதளைவாயி புள்ளை யென்று** பேற்ப்பட்டது

சுந்தரமூற்த்திகள் மேற்க்கு னோக்கி ஸ்தலங்களில் தேவாரம் பாடிக்கொண்டு சேர றாசா சமக்ஷமத்துக்கு போயி கலியுகம் ௵ 905க்கு சேரனுடனேகூடா கைலாசத்தே அடஞ்சாற்.

இப்படி புராணசித்தமாயி இருக்கப்பட்ட மஹாஸ்தளமானபடி யனாலே பூற்வத்தில் சக்கிரவற்த்திகள் முதலானபேற்கள் அனேக கோபுர பிறாகாறாதி மட்டபங்கள் உண்டுசெயிது, பிறம்மோச்சவ ரதோச்சவ முதலாகிய உச்சவங்களுக்கு அனேக கிறாமங்கள் பூமிகள் விட்டு செறப்பாயி நடப்பிவிச்சு கொண்டு வந்தாற்கள்.

கோவிலுக்கு பூசைபண்ணப்பட்ட நம்பிகள் அரவது **தண்டி காற்கள்** யிறுந்து பூசைபண்ணிக் கொண்டு யிறுந்தாற்கள்.

அதின்பிற்க்காலம், கோவில்நம்பிகள் அரவது தண்டிகைக் காற்கள் பூசைபண்ணிக்கொண்டு பிரபலஸ்தாளாயிருக்கும் னாளை யில், அக்காலத்துக்கு மதுரை சமுஸ்தானாதிபதியான பாண்டிய வமுசஸ்தாற் னாளையில் அக்காலத்துக்கு பாலகுல வேளாளறில் **சோளியாண்டாக்கவுண்டன்** னாளையில் கோவில் நம்பிகள் யிடத் தில் தேசாந்திரியாயி சூத்திரசாதியில் ஒருவன் பிறா்மவங்குஷத்துக்கு உள்ள கற்ம்மாதிகளை அப்பியாசிச்சுக்கொண்டு, யிந்த அவினாசி சேத்திரத்துக்கு வந்துசேந்து கோவில் நம்பிகளுடனே பம்த்தி போசனங்கள் முதலானதுகளும் பண்ணிகொண்டு சிருதுனாள் யிறுக்கும் னாளையில், மருபடி தேசாத்திரியாக சூத்திரன் பிறாமண அபசாரம் வந்துது யென்று அனேக கிறந்தங்கள் சோதனைபண்ணும் யிடத்தில் தந்தோஷ பரிகாரம் நீவாரணமாகும்படி நிச்சயமில்லாத படியனாலே ஸ்வாமி சன்னியதானத்துக்கு பூற்வபாகத்தில் அக்கினி குண்டம் வளைத்து, அரவது தண்டிகைக்காறும் குஞ்சு குளந்தையள் சகிதமாயி அக்கினிபெறவேசம் ஆனாற்கள்.

அவனாசி சேத்திரத்து நம்பிகள் வமுசஸ்தனாகிய காஸ்ப கோத்திரத்தில்லுள்ளவன் ஒருவன் முன்னாலே தானே காசிக்கு போயி இருந்தான் சோளியாண்டாக்கவுண்டன் யென்ங்குரவன் ஸ்தளத்துக்கு நித்தியபடி பூசைக்கு பிராமணாளைவச்சு நடப்பிவிச்சுக் கொண்டு யிறுந்தான்,

அதின் பிற்க்காலம் கோவில் நம்பி வமுசஸ்தவான காஸ்பகோ தில்லுளவன் கெங்கா யாத்திரைபண்ணிகொண்டு யிந்த சேத்திரத் துக்கு வந்தஉடனே அக்கினிபிரவேசம் ஆனசமாசாரம் கேட்டு அதி வெசனத்தை அடஞ்சவனாயி, ஸ்வாமி சன்னியதானத்துலேக்கியான

மாற்க்கமாக யிருந்துகொண்டு ரோமாரிஷி கோத்திரககாற்களுக்கு புத்திர ஸ்ரீகாரமா கோவில் நம்பி ஆதினம் குடுத்தபடியனாலே ரோமாரிஷி கோத்திரம் வமுசபரம்பரையாயி...

---

1. அவிநாசி கோவை மாவட்டம் திருப்பூருக்கு அருகே உளது. திருப்புக் கொளியூர் எனப்படுவதும் அவனாசியே.
2. ஈசுவரனைக் குறித்து.
3. முக்தி
4. திருமுருகன் பூண்டி : கோவை மாவட்டம், திருப்பூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே அவிநாசி செல்லும் வழியில், ஐந்து கல் தொலைவில் உள்ள ஊர்.
5 பிறவி
6. நடனம்.
7. முதுளை - முதலை.

# தொரவலூர் அபிநேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு

## டி. 2959

மெஷி தாலுகாவுக்கு சேந்த தொரவலூறு அபினேசுவர சுவாமி அபிஷேகவல்லிஅம்மன் தேவஸ்தானம் ஸ்தானீக சாமயகுமாரன் பொன்னய்யனிடத்தில் யிறுக்ககப்பட்ட ஸ்தளபுராணத்துக்கு நக்கல் கைபீது யென்னவென்றால்,

பூற்வத்தில், சூதமகாறிஷி நைமிசாரண்ணிய ரிஷிஸ்வாளுக்கு உபதேசம் பண்ணுதரது யென்னவென்றால், நயிமசாரண்ணிய றிஷிகள் சூதபுராணீகரை பாத்து, காசீ சேத்திரத்துக்கு சமான தட்சணகாசி அவிநாசி யென்றும், திருமுறுகன்புரியென்றும், சொல்லுகுரார்களே யிந்த ரெண்டுலேயும் யெது முகுத்திஸ்தளமென்றும் மத்துமுள்ள ஸ்தளங்கள்தோறும் சவிஸ்தாரமாயி[1] சொல்லவேணுமென்று கேட்டுக்கொண்டாற்கள்.

சூதபுராணிகற் சொல்லப்பட்டது, "அவினாசி ஷ்சேத்திரத்தில் ஈசானிய பாகத்துலே உதுபவமாயிறுக்குரது அதுனுடைய மகிமைகள் சொல்லுகுரேன்; அதுனுடைய மகிமைகள் யென்னாலே தெரிஞ்சி அரியமாட்டீர்கள். ஆனாலும் தெரிஞ்சமாத்திரம் சொல்லுகுரேனெ"ன்று மஹாலிங்க மூற்த்திகளுடைய பெறுமைய்யை சொல்லுகுறாற்.

பூற்வத்தில் தேவேந்திரனுக்கும் ஒருவெறுக்கொறுவற் சம்வாதம் வந்து யிந்திராணியானவள் தேவேந்திரனை பாத்து, "சதுகிறதுவுகள்[2] பண்ணப்பட்டவன் தேவேந்திர பட்டாதிகாரியாறான இந்திராணிப் பட்டத்துக்கு ஒருவராலையும் சக்கியமில்லை அப்படிக்கினான் ஈஸ்வரவர் பிரசாதம் பெத்துயிறுக்குரேன், ஆனாலும் யென்னுடைய பெறுமை நான் சொல்லிக்கொள்ளலாகாது" யென்று சொன்ன வசனங்களை கேட்டு தேவேந்திரன் அதி அஹம்க்காரத்

துடனே இந்திராணிய்யை பாத்து, "னான் பிறம்மாவை குறுச்சு தவசு பண்ணி உனக்கும் யெண்மணங்காத பதினாருபங்கு செத்தி யாயி இறுக்கப்பட்ட பெண்ணை தரிவிப்பேனெ"ன்று சொல்லி தேவேந்திரன் பிரம்மாவை குறுச்சு தவசுபண்ணுகுரேன் யென்று சொன்னான்.

யிந்திராணி அந்த வசனத்துக்கு நீற் யென்னிலும் யெண் மடங்காத பெண்ணை தரிவிச்சு யிந்திராணி பட்டத்துக்கு தரிவிச் சீரானால், யென்னுடைய பவுசுபாக்கியமெல்லாம் குடுத்து னான் அவளுக்கு தெண்டுவேலை செயிகுரேன் யென்று பிறதிவசனமாக சடிதம் கோரினாள்.

யிந்திராணி சொல்லப்பட்ட சபுத்த வசனங்கள்னாலே மறுபடி தேவேந்திரன், "னான் பிறம்மதேவனை னோக்கி தபசு பண்ணி வுன்னிலேயும் மேல்மெயான பெண்ணை யிந்திராணி பட்டத்துக்கு உய்யாமல் போனால் யென்னுடைய தெயிவலோகத்தையும் பவுசு பாக்கியத்தையும் விட்டு பூலோகத்துலே போயி தவசு பண்ணு குரதே அல்லாமல் தேவலோகத்துக்கு வருகுரது யில்லை"யென்று பிரதிவசனம் சொன்னான்.

தேவேந்திரனானவன் யிந்திராணி வச்சிராயுதம் முதலான வஸ்துவுகளை யெல்லாம் விட்டுவிட்டு பூலோகத்துக்கு தண்டகாறுண் ணிய வனத்துக்கு வந்து முன் பெரியோற்கள் சொன்ன அனுக்கிரஹ படிக்கு பிரம்மதேவரை குறுச்சு அத்துக்கிர தபசுபண்ணி, பூசை பண்ணினாற். அந்த தபசுக்கு பிறம்மதேவற் அத்தியத்த சந்தோஷப் பட்டு அன்னவாகனாருடனாயி தண்டகாறுண்ணிய வனத்தில் தேவேந்திரனுக்கு பிரத்திக்ஷமாயி பிரம்மதேவரை கண்டு தேவேந் திரன் பிரதிக்ஷண நமஸ்காரம்பண்ணி, அஞ்சலீபத்தனாயி நிண்ணு யென்னை ரக்ஷிக்கும்படியாக நான் ஒரு வரம் (குடு)க்குரேன் யென்று யிந்திராணி சொல்லப்பட்ட கற்னகடோரமாகிய வசனங்களை சொல்லி தன்னுடய சபுத்தத்தை நெரவேத்தும்படியாக பண்ண வேணுமென்று சொன்னபடியனாலெ வரம்குடுத்தோமென்று தேவேந்திரனுக்கு சொன்னாற். தேவேந்திரன் பிறம்மதேவற் திருவளம்பத்தின வாக்குகளுக்கு சந்தோஷப்பட்டு, யெளுந்திரிச்சு நிண்ணு அனேக ஸ்துதிபண்ணினான்.

பிறம்மதேவற் தேவேந்திரனைபாத்து நான் சரசரங்களை யெல்லாம் ஸ்ரீஷ்டிக்குரவனானபடியனாலே யென்னுடைய தேவ லோகத்துக்கு போயி சிம்ஹாசனத்து மேலே யுக்காரதுக்குள்ளாக யிந்திராணி பட்டத்துக்கு ஸ்ரீய்யை ஸ்ரீஷ்டிச்சு அனுப்பிவிக்குரோ மென்று சொன்னாற். தேவேந்திரன் தண்டகாருண்ணிய வனத்தை விட்டு தேவலோகத்துக்கு போனாற்.

பிறம்மதேவற் தன்னுடைய ஸ்ரீஷ்டி சாமார்த்தியத்துனாலே ஒரு ஸ்ரீயை ஸ்ரீஷ்டிச்சாற். அந்த ஸ்ரீ பிறம்மதேவற் யெதிரை நிண்ண மாத்திரத்துனாலே அந்த ஸ்ரீமோகத்தை அடஞ்சவனாயி, ஸ்ரீயை தொடந்தான். அந்த ஸ்ரீ பாதி விறததற்மத்துனாலே தோப்பனாற் யென்குர மரியாதியினாலே ஓடி, ரிஷிகள் சங்கத்துக்கு வந்து சேந்தான்.

ரிஷிகள் பிறம்மதேவற் மஹா பெரியவரானபடியனாலே நம்மாலே கூடாது, கைலாசத்துக்கு ஈஸ்வரற் யிடத்துக்கு போகச் சொல்லி சொன்னாற்கள். ஈஸ்வரறிடத்துக்கு போயி சேந்தாள், பிறமதேவறும் பின்துடந்து கைலாசத்துக்கு சேந்தான். அந்த கன்னிகையானவள் நந்திகேஸ்வரன் தடையிலே அகப்படாமல் ஸ்வாமி பாதாரவித்தில் சேந்துயிறுக்குரபோது, பிறம்மதேவற் ஸ்ரீய்யை துடந்து வருகுர மாற்க்கத்தை கண்டு பாற்வதி தேவி சுவாமியடத்தில் விண்ணப்பம் செயிகுரது யென்னவென்றால், "பிறம்மதேவறுக்கு ஸ்ரீஷ்டிப்பு அதிகாரமும் குடுத்து, வுமக்கு சமானமாஇ பஞ்சசிறசு யிறுக்குரபடியனாலே ரொம்பவும் அஹம் கரத்தை அடஞ்சு நீற் யிருக்குறீகள் யென்று தோணாமல் அந்த ஸ்ரீயை தொடந்துவருகுரான்" யென்று சொன்னாள். ஈஸ்வரற் பிறம்மதேவற்யிடத்தில் ரொம்பவும் கோபத்தை அடஞ்சவற்களாயி, பிறம்மதேவற் வந்த ஒடனே அஞ்சு சிரசுலேயும் நடுவுலேயிருக்குர சிரசுவெ கிள்ளிபோட்டாற்.

பிறம்மதேவற் ரொம்பவும் வெஸனத்தை அடஞ்சவராயி அனேகமாயி ஈஸ்வர ஸ்துதிபண்ணினாற். பாற்வதீ தேவினாலே கறுணைகூற்ந்து பிறம்மதேவரை, 'நீ செயித பாவம் நிவற்த்தி யாகும்படி னாம சொன்னபடி பூசை செயிதேயானால் நிவாரண மாகுதென்று, பூலோகத்துலே தட்சணகாசியான அவினா

சேத்திரத்துக்கு ஈசானிய பாகத்தில் மூங்கில் வனமென்று யிறுக்குரது. அந்த வனத்துலே ஒரு மஹாலிங்கம் உண்டு. அந்த லிங்கத்தை கண்டு, ஆராதனை செயிது பூசித்தால், வுன்னுடைய பாப நிவாரணமாகு''மென்று கட்டளையிட்டாற். பிறம்மதேவற் மஹாதேவரை பாத்து, 'பூலோகத்துலே காசிசேத்திரம் முதலாகிய அனேக சேத்திரங்கள் யிருக்குரது. அவினாசி சேத்திரம் சகல பாவங்களும் நிவாரணமாகுரதென்று லோகபிறசுத்தியாயி இருக்க, அவினாசிக்கி ஈசானிய பாகத்துலே ஒரு லிங்கம் யிறுக்குரதுயென்று கட்டுபண்ணின விபரம் தெரியபண்ணவேணுமெ''ன்று கேட்டுக் கொண்டார்,

ஸ்வாமி சொல்லப்பட்டது, ''வராயி பிறம்மதேவனே[4] காசி யிலும் வாசி அவினாசியானபடியனாலே, அவினாசியிலே யிறுந்து ஒரு வேற் படந்து கொளுந்துவிட்டு ஈசான்னிய பாகத்துலே மூங்க வனத்துலே லிங்கமாயி உத்பத்தியா இறுக்குரது. அது நீ காண வேணுமே அல்லாமல் பின்னே ஒருவராலேயும் அரியகூடாது'' யென்று திருவளம்பற்றினாற். கைலாசத்துலே யிறுந்து பிறம்ம தேவற் பூலோகத்துலே அவினாசி க்ஷசேத்திரத்துக்கு வந்து, அவினாசி லிங்கற்றுக்கு ஈசானிய பாகத்துலே, மூங்கல் வனத்துலே மஹா லிங்கரை கண்டு, தரிசினம் பண்ணி பூசை பண்ணினாற்.

நிறஞ்சல் பூமியா இறுந்தபடியனாலே ஈஸ்வரஸ்துதியினாலே பவானீ கூப ரூபமாயி ஆவறப்பவிச்சான்.[5] அந்த தீற்தத்துக்கு நர தீற்த்தமென்றும், அமுற்ததீற்த்தமென்றும் பேற் உண்டாச்சுது.

பிறம்மதேவற் பூசைசெயிது அவறுடைய பாபம் விமோசன மாயி, பிறம்மதேவற் ஸ்ரீஷ்டிக்கப்பட்ட ஸ்ரீக்கு தேவலோகத்துலே தேவரம்ப்பையாக யிறுக்கச் சொல்லி திலோத்தமெ யென்று பேறும் குடுத்து, தேவலோகத்துலே போயி இறுக்கச் சொல்லி திருவளம் பத்தி பிறம்மதேவற் தம்முடைய லோகத்துக்கு போயி சேந்தாற்.

தேவாதி தேவதைகள் பூசைபண்ணினபடியனாலே அபிஷேக வல்லி யென்று(ம்), அயினேஸ்பரர் யென்றும், அபிஷேகபுரமென்றும் பேற் வரப்பட்டது.

சொலகம் :

அவினாசீதி விக்கியாதா தஸ்மின் க்சேத்திரமஹிதலே;
தய்ய சேத்திரஸ்ய ஈசானியே பாக யோசன மத்திரகே.
அபிஷேகபுரம் பொரோகுத்தம் இதி பூற்வம் ஸ்வயம்புவா;
அயனே புண்ணியகாலேஸ்மின் அமராஸ்நாபஸாஸஹா.
ஸப்த றிஷ்ய ஸ்ததா கும்போபிஷேகா தபாம்புரா;
தேவாத்து பரமசம்பிறாயாபா தஸ்ய ஸ்ஃஸ்தேன சேத ஸான்.

பூற்வம் முதலாக அந்தந்த காலத்து றாசாக்கள் கிறாமம் பூமி விட்டு உச்சவம் முதலானது சிரப்பாயி நடப்பிவிச்சுகொண்டு வந்தாற்கள் யென்று பரம்பரையிலே யெங்கள் பெறியவாள்ச் சொல்ல கேள்வியுண்டு.

சீதாறாமசாத்திரி சேஷறாம சாத்திரி றுசு
ஞானிகபொன்னய்யன் றுசு

1. அவினாசி தாலுகா.
2 விளக்கமாக.
3. நூறு யாகங்கள்.
4. "வாராய், பிரம்மதேவனே!"
5. தோன்றினாள்.

# சேஹூர் வாலீசுவரசுவாமி கைபீது

## டி. 2960

கோயமுத்தூற் துக்குடி சேஷூறு[1] தாலுகா கசுபா வாலீஸ்வர சுவாமி ஸ்தளபுராணம் றிஷபகிறி மஹாத்மியம் கைபீது புக்கு.

கோயமுத்தூரு துக்குடி சேஷூரு தாலுகா கசுபா சேஷூர் வாலீசுபர சுவாமி தேவஸ்தானம் ஸ்தளபுராணம் பிறம்மாண்ட புராண சங்கரஹத்தில் யிறுவத்தி ஒன்பதாம் அத்தியாயம் முதல், முப்பத்திரெண்டாம் அத்தியாயம் வரைக்கும் னாலு அத்தியாயத்தில் வறப்பட்ட கதைகள் யென்னவென்றால்,

முதலத்தியாயத்தில் வரைப்பட்டது வினாயக பிராத்தனெ, சரசுதி பிரத்தனெ, முண்ணாவது வெங்கிடாசலபதி பிராத்தனெ; நாலாவது ரிஷிஸ்வாரளுடைய பிராத்தனெ; அஞ்சாவது சூத பிராத்தனெ. நயிமசாரிண்ணிய வாசிகளா யிருக்கப்பட்ட சவுனாகாதி ரீஷீஸ்வராள் உத்திர தீரத்துலே மகக்ஷாக்ஷேத்திரங்களுடைய மஹாதியங்களெயெல்லாம் கேட்டுயிருந்தோம் தக்ஷிண தீரத்திலே உண்டாகிய க்ஷேத்திரங்களுடைய மஹதியங்கள் யெல்லாம் கேள்விப்பட வேணுமென்று பிரஸ்தாபம் பண்ணிக்கொண்டு யிறுக்குர சமயத்தில், சூதற் தக்ஷண பாகத்துலே உண்டாகிய ஸ்தள மஹாதியங்கள் யெல்லாம் தெரியப்படுத்த வேணுமென்று வந்தாற்.

அந்த சமயத்துலே சபுனகாதி மஹாரிஷிகள் சூதரை பாத்து கூசலபிறஸ்தமகள் ஆனபின்பு சவுனகாதி மஹாமுனிகள் சூதரை பாத்து, தக்ஷணபாகத்துலே உண்டாகிய ஸ்தளமகாதியங்கள் சொல்ல கேள்க்கவேணுமென்று கேட்டுக்கொண்டு ஒருவறக்கொறுவற் சுத்தியும் பண்ணிக்கொண்டாற்கள்.

பிறம்மதேவறானவற் நாரத றிஷீஸ்வரறுக்கு உபதேசம் பண்ணா தாயிறுக்க ஸ்தளத்துக் கதைகளை உங்களுக்கு நான் உபதேசம் பண்ணுகுறேன். "தக்ஷிணதிக்கு பாகத்துலே முன் ஆதியாயிருக்கப் பட்ட ஸ்தளம் சொல்லுகுரோம். [சகலாபீஷ்ட்ட பிரதாயகமாயி

இருக்குர அவினாசியென்று பேரோடேடா[2] ஒரு க்ஷேத்திரமுன்று; காசீ க்ஷேத்திரத்திலும் அதிகம் பிறம்ம பிரளயகாலத்திலும் அவினாசீ க்ஷேத்திரத்துக்கு சலனம் யில்லை; ஆனபடியனாலே சாஹிதமான யிடமானபடியனாலே அவினாசியென்று பேற் வரப் பட்டது.

பின்னையும் அந்த க்ஷேத்திரம் யெப்படிப்பட்டது யெண்ணால் அஷ்ட்ட திக்கு பாலகற்னாலேயும், யேகாதச ருத்திராள்ளாலேயும், துவாதசாதித்தாள் நாலேயும், அஷ்ட்டமஸ்துக்குள் ளாலேயும், சித்தியவித்தியாதியள் ளாலேயும், அயிராவத(ா)தி திக்கசங்கள் ளாலேயும், அநத்தலாயும் கீமுதலான அஷ்ட்டமஹா னாகங்கள் ளாலேயும், நாககன்னிகைகள் ளாலேயும், மஹா நக்கிரங்கள் ளாலே யும், கெருடபகவான்னாலேயும், நல்லசரோவரங்கள் ளாலேயும், அனேக ராசாகள் ளாலேயும் சேவிக்கப்பட்டு தக்ஷண வாரணசி யென்று பேரோட கூட ச(ல)ந்திதிர மஹாநதீ தீரத்துலே வெளங்கி கொண்டு யிருக்குரது.

அப்படிப்பட்ட க்ஷேத்திரத்துலே சகல பீஷ்ட்டபிரதாயகரா யிறுக்க அவினாஸ்சீவர சுவாமியானவற் வெளங்கிக்கொண்டு யிறுக்குறாற். அப்படிப்பட்ட அவினாசி க்ஷேத்திரத்துக்கு அதிகமாயி உத்திரபாகத்திலே கொரோசத்துக்கு[3] அதிகமாயி வடக்குபிரத்துலே **ஸ்ரீதர க்ஷேத்திரமென்று** ஒரு புண்ணிய ஸ்தளம் உண்டு. அந்த புண்ணிய ஸ்தளமானது ஸ்ரீதர ஸ்வாமியாறனாலே கல்ப்பிக்கப் பட்டது. அப்படிப்பட்ட க்ஷேத்திரத்திலே **றிஷபபுரம்** யென்ங்குர தாக ஒரு பட்டணம் உண்டு. அந்த பட்டணமானது குரோச பிரமாணத்தோடே சவுக்கமாயிறுக்கும். பிறம்ம, க்ஷத்திர, வைய்சிய சூத்திராள் நாலேயும், வாபி கூப தடாகாரமாதி[4]யள்ளாலேயும், சோபரனமாயிறுக்கும் அப்படிப்பட்ட பட்டணமானது, பராக்கினா யும், ராசனீதி தெரிஞ்சவனாயும், தேவதாவற்ச்சியோடே கூடியிறுக் குரவனாயும், யிறுக்குர முசுகுந்த சக்கிரவற்தினகலெ ரெக்ஷிக்கப் பட்டும் ராசன்வதி யென்பிச்சுக்கொண்டு யிறுக்கும்.

யிப்படி யிறுக்கப்படட அந்த றிஷப்புரத்துலே, முசுகுந்த சக்கிரவற்தி பொகுனாளாயி வாசம்பண்ணிக்கொண்டு யிருக்கச்சே, அயோத்தியா பட்டணமானது சூரியவமுசத்து ராசாக்களுக்கு மூலஸ்தானமானபடியனாலே அவடத்துலேபோயி இந்திரோச்சவம்

பண்ணவேணும் யென்ங்குரதாக அயோத்தியா பட்டணத்துக்கு பிரப்பட்டு போனாற். போயி, விசிஷ்ட்டற் அனுக்கியனாலே, யிந்திரோச்சவம் பண்ணவேணுமென்ங்குரதாக அப்போ யிந்திரன் யிந்திரகுமாரன் வாலி, சுங்கீரவன், அனுமாற் முதலான வானரரையும் ரதவதிகளை பின்னையும், அனேக ராசாக்களை அனேக ரிஷீஸ்வராளை அளைப்பிவிச்சு, ஒ(ருமாச) பரியத்தம் உச்சவம் பண்ணிவிச்சுப்போட்டு அயிர்மத தக்ஷணதிக்கு பாகத்துலே யிறுக்குர புண்ணிய க்ஷேத்திரங்களை பாற்க்க போகலாம் யென்று வசிஷ்ட்ட ரிஷீஷ்வரருடைய அனுக்கியனாலே அதே மேரெக்கி வாலீ, சுக்கிறிவன், அனுமாற், றிஷீஸ்வராள் முதலான பேற்களை தரிஸிச்சு உச்சவம் சகல சம்பரமத்துடனே உச்சவம் பண்ணினாற்.

அப்போ ஸகலமான வித்துவாமுசாளும் ரிஷீஸ்வராளும் ராசாவை ஸ்தோத்திரம் பண்ணினபடியனாலே, ஸ்தோத்திரத்துக்கு சம்துஷ்ட்டனாயி சுவற்ன்ன வறுஷம் பிராமணாளுக்கு ரிஷீஸ்வரா ளுக்கும் வறுஷிச்சபடியனாலே அத்தைபாத்து, வஸிஷ்ட்டரானவற் சந்தோஷப்பட்டு, அந்த பட்டணத்துக்கு சிறுதுபேற் ராசாக்களை யும் மந்திரிவற்க்கதையும் வச்சுபோட்டு வசிஷ்ட்டற் முசுகுந்த சக்கிரவற்த்தி, வாலி, சூக்கிறீவன், அனுமாற் முதலான சகலமான பேறும் தஷணதிக்கு பாகத்தில் யிறுக்கப்பட்ட புண்ணிய ஷேத்திரங் களை பாற்க்கவேண்டி பிரப்பட்டார்கள்.

அப்போ யிந்த மாற்க்கத்தில் வறுகுரபோது, வசிஷ்ட்டருக்கும் வாலிக்கும் முச்சுகுந்த சக்கிரவற்த்திக்கும் மூணுபேறுக்கும் மாற்க்கத் திலே யிந்த றிஷிப்புரமானது சமீபமாயி தெரியப்பட்டுது.

அந்த பட்டணத்துக்கும் கிழக்குபிரத்துலே ஒரு கதம்பவனம் உண்டு. அந்த கதம்பவனத்துலே யிருந்து ஒரு றிஷபமும் ஒரு புலியும் வெளயாடிக்கொண்டுவந்து ரிஷபத்துனுடைய முதுகுலே புலியானது உக்காந்துக்கொண்டு வெளயாடிக்கொண்டு யிரும்ந்த் ததை பாத்து, ஆச்சரியப்பட்டுக்கொண்டாற்கள்.

யிப்படி யிறுக்கச்சே பின்னையும் அந்த கதம்மபவனத்துலே யிருந்து ஒரு யானையும் ஒரு சிம்ஹமும் பிரப்பட்டது யிதை பாத்து அந்த மஹாஸபையிலே வாலியானவன் வசிஷ்ட்டரையும் முசுகுந்த சக்கிறவற்தியெயும் பாத்து, யிது புண்ணிய பூயியானபடி

யனாலே றிஷபத்துனுடைய முதுகுலே, புலி விளையாடுகுரது; ஆனபடியனாலே றிஷபபுரி யென்று பேற் யிறுக்கட்டும். யிந்த றிஷபபுரியிலே யிறுக்கப்பட்ட சகலமான பேற்களும் அல்லோறும் வயிரமன்னியிலே யிருக்குட்டும் யென்று மஹாஸபையிலே சொன்னபடியனாலே, அன்றுமுதல் றிஷபபுரமென்ங்குரதாக பேற்வந்துது.''

யெங்குரதாக, நாதற்க்கு பிறம்மதேவற் சொன்னாற். அந்த வாற்த்தை நாரதற் கேட்டு, மஹாசந்தோஷப்பட்டுக்கொண்டு அந்த வலீசுபரறுடைய மஹாத்தியத்தை நண்ணாக் கேட்டாற்.

யிப்படி கேள்க்குர நாரதறுக்கு றிஷபபுரத்துக்கு யீஸ்வரறாயி இருக்கப்பட்ட வாலீஸ்வரருடை மஹாதிம்யத்தை நண்ணாயி சொல்லுகுராற்.

யிப்படி யிருக்கச்சே, வாலியானவன் யிப்படிப்பட்ட புண்ணிய க்ஷேத்திரத்துலே வயிரவற்க்கமண்ணியிலே யிறுக்குறபடியனாலே, யிந்த புண்ணிய க்ஷேத்திரத்திலே னான் சிவபிரதிஷ்டை பண்ணுகுரேன்; அனுக்கிரஹம் பண்ணவேணுமென்று வசிஷ்டரை ராசாவை கிட்டவச்சுக்கொண்டபடியனாலே, வசிஷ்டற் அனுக்கிறஹம் பண்ணினாற்கள்.

அந்தக்ஷணமே சிவபிறதிஷ்ட்டை பண்ணவேணுமென்று தேவாலயம் கட்டிவச்சாற். யிப்படி யிருக்குர சமயத்தில், மத்தியான்ன காலமானபடியனாலே வாலியானவன், சறதாபகுத்தியோடேகூடா மத்தியான காலத்துக்கு யோக்கியமாயி இருக்குர சத்துகிற்த்தியங்களை நெரவேத்தி சிவபூசைய்யை பண்ணினான். அந்த சிவபூசை பண்ணப்பட்ட பிரபாலத்துனாலேயும் வாலினுடைய அசபச்சலா பகுத்தினாலேயும் அந்த சிவலிங்கத்துனுடைய சிரஸுலேயிருந்து அப்போ பரமேஸ்வரரானவற் தயாநிதியா யிருக்குரவராயி பகுத்தாற்திபஞ்சனாயி றிஷிபாருடராயி உமா சமேதராயி, தேவகேதற்வ சேவிதராயி, பிறம்மறிஷிஸ்துதுயமானாயி வாலியனுடைய யெதிராக ஆவிற்ப்பவிச்சாற்.

யிப்படிப்பட்டக் கதையை யாதொறு பேற்கள் படிக்கிரற்களோ, யாதொருபேற்கள் கேள்க்குராற்களோ, யாதொறு பேருகள் ஆதரணையோடேகூடா ஸ்துதிபண்ணுகுராற்களோ அப்படிப்

பட்ட பேற்கள் யிஹலோகத்துலே சகல யோகபாக்கியங்களை அனுப்பிவிச்சு பரமேஸ்வரருடைய பாதாரவிந்தத்தை அடயுவாற்கள் யென்ங்குரதாக நாறதறுக்கு பிறம்மதேவற் சொன்ன கதைய்யை சூதபுராணீகற் ஆனவற் சவுனகாதி ரிஷீஸ்வராளுக்கு உபதேசம் பண்ணினாற்கள் என்ங்குர தாத்துபறியம்; பிரதமாத்தியாயம்.

ரெண்டாம் அத்தியாயத்துலே வரப்பட்ட காதை.

நரதறுக்கு பிறம்மதேவற் சொல்லாதா யிருக்ககதையெ, ஸ்தூத புராணிகற் சவு(ன)காதி றிஷீஸ்வராளுக்கு உபதேசம் பண்ணுகுர பிரகாரம் றிஷீஸ்வராள் சொல்லப்பட்டது, வாராயி சூதரே, யிந்த ஸ்ரீதர க்ஷேத்திரத்துக்கு சமானமான க்ஷேத்திரம்மில்லை; பூலோகத் துலே கிடயாது அப்படிப்பட்ட ஸ்ரீதர க்ஷேத்திரத்துலே யிறுக்குர றிஷிப்புரத்துனுடைய மகிமெகளை நண்ணாயிச் சொல்லவேணும் மென்று பிராதிக்கப்பட்டவனாயிக்கொண்டு அப்போ றிஷீஸ்வராவை பாத்து சொல்லுகுரான்: "வாராயி றிஷீஸ்வராளே, வாலியினாலே பிராத்திக்கப்பட்ட சிவரானவற் லிங்கத்துனுடைய வரபிரகாரத்தை யும் சிவலிங்கத்துனுடைய பிரதிஷ்ட்டையும் சந்தோஷத்தோடே கூடா சொன்னாற்.

அப்போ வாலியானவன், அந்த விற்ஷபாருடராயிருக்குர சுவாமியெ பாத்து ஸ்துதிபண்ணி வரம் கேள்க்குரான். "தேவதேவ னாயிருக்குரவனை தயாநிதியா யிருக்குரவனை சகலமான பேற் களுக்கும் உங்களுடைய பாதாரவிந்தம்ங்களிலே பகுத்தி உண்டா னது நில்லாமானதேயானால் நம்மிடத்திலே தயவுசெயிது வரத்தை சொல்லு"மென்று கேட்டாற். "சுவாதி நக்ஷேத்திரமும் சயோகமும் சுகருணமும் கூடின சிம்ம லகுனத்துலே ஈஸ்வரனை பிரதிஷ்(டை) பண்ணிவிச்சு சாசுவதமாயி இறுக்கப்பட்ட கீற்தி(யளை) அடெயெ"ன்று றிஷீஸ்வராள் சொன்னாற்கள். அந்த வார்த்திய்யை கேட்டு, வாலியானவன் யெதேஷ்ட்டமாயி திரவியம் சம்பாதிச்சுக் கொண்டு சகல அபிஷேக திரவியங்களையும் தரிவிச்சுக்கொண்டு அ(ப்)போ சகல சம்பரமத்தோடேகூடா பிரதிஷ்ட்டை பண்ணி விச்சான்,

யிப்படி பிரதிஷ்ட்டை பண்ணிவிச்சு ஈஸ்வரற் சமீபத்துக்கு வந்து, அஞ்சலீ பதம் பண்ணிகொண்டு ஸ்துதிபண்ணுகுராற். வாலி ஸ்துதியிலே பய்ச்சக்ஷரஸ்தலம் சொலோகம்.

1. விஸ்வேஸ்வராய விலஸன் மணிகுண்டலாய னாகேந்திர சேற்ம்ம வஸனாய நடேஸ்வராய பகுதபிரயாய புவனாவனதஸ்து பராய கைலாசசையில் நிலயாய நமசிவாயா

2. விக்கியானதாய விமலாய விறக்ஷதுசாய விஸ்வபிரயாய... ... யலநிலயாய நவசிவாய

3 தயித் தாறிங்ந்திதபதாய திகம்பராய திபியாபகாஸவில் ரம்மிய சடாதராய தாக்ஷாயணிங்தனபமக்கச பாஸ்வராய கைலாச சையிவநிவாயாய நவசிவாயா

4. காமத்தல்லாம் கலிதாற்ந்த களேபறாய கல்பூர தீபலில்ஸன மணிமகுடபாய கையிவல்லியதாள குசலாய கலாதறாய கையிலாச் சையில் நில்லாய நமசிவாய

5. நித்தியாய நிற்மலகுணாய நிராம்யாய நிற்மச்சறாய நிகிலா மாலந்திதாய நித்தியோச்சவாய நிகமாகம்...ாகறாய கைலாச்சையில் நிலயாய நமசிவாய

ஷெி பச்சாக்ஷறீ சோதிர் பாரயணத்துக்கு பலம் யென்னவென் றால்,

ஹிம்சை லஸ்தி சாமாது ஸ்தோத்திரம் பச்சாக்ஷ்ரஸ்ய பகுத்தா பிரதோஷேபடிதெ ஸிவஸ்யாஇரே ஸமுகுதிபாகு.

யிப்படி ஸ்தோத்திரம்பண்ணி வாலீ பூமியிலே நமஸ்காரம் பண்ணி அப்போ சபையை பிறாதிச்சி சபாபூசை பண்ணி சபை சனங்களை ஸ்தோதிரம் பண்ணின பிரகாரம், வாறாய் மஹானுபா வாளா யிருக்குற நீஷீஸ்தாரளே நீங்களான பேற்கள் அவியாத கறுணா மூற்த்திகளானபடியனாலே வாநர ரூபமாயி துச்சனா யிருக்குர நம்மிடத்திலே கிற்பைய்யை வ(ச்)சு பொகு தூரத்திலே யிறுந்து வந்து சிவபிர(திஷ்)டை பண்ணிவிச்சி யாதொறு கா(ரண)த்து(னா)லே கிரதாற்த்தனாக ந(ர்)மை பண்ணிவிச்சீற்களோ

உங்கள் கடாக்ஷயத்துனாலே நான் சீற்த்தனானே உங்கள்ளுட சாறாரவிந்த சமதறிசனத்துனாலே கிறதகீற்த்தியனாயுடரேன் யென்று தோத்திரம் பண்ணி அப்போ சிவபிரதிஷ்ட்டை பண்ணி விச்சவராயி பிறுக்கப்பட்ட அந்த வெசிஷ்ட்டரை ஆந்தெளிகா ரோஹணம் பண்ணிவிச்சு கிறமபிரதக்ஷணம் பண்ணி(விச்)சு புளஹா சிவனுடைய சமீபத்துக்கு போயி, சகலமான பேறுக்கும் சபாபூசை பண்ணிவிச்சு ஈஸ்வரனுடைய பாதார விந்தத்துலே தனக்கு அசச்சலா பகுதி உண்டாகட்டும் யென்ங்குரதாக ஈஸ்வரனுடைய சன்னிதியிலே றிஷீஸ்வராளை குறுச்சு யெப்போ பிராத்தனை டண்ணி னானோ அப்போ றீஷீஸ்வராள் வாலிய்யை பாத்து மஹதா ஆசீற்வாதம் பண்ணினாற்கள்.

அப்போ வாலி மஹாதா ஆசிற்வாத்தை அடஞ்சு சந்தோஷத்தை அடஞ்சான்.

இப்படிப்பட்ட ரெண்டாம் அத்தியாயத்துக்கு பல சுறுதி சொல்லுகுரான். யிப்படிப்பட்ட மஹிமையுள்ள கதைய்யை யாதொறு ருடினானவன் படிக்குரானோ அந்த புருஷனானவன் நிரோ(க) நிருபுதுறுவனாக, வாலிபோலே பல(சாலி) ஆயிடுவான். யிந்த தேஹத்துனுடைய அமத்தியத்துலே சிவனுடைய பாதார விந்தத்தை அடயுவன்.

வாலினாலே பூசைபணப்பட்ட ஈஸ்வரனை சுக்குரவாரத்துலே யாதொரு பேற்கள் ஸ்துதிபண்ணுகுராற்களோ நமஸ்காரம் பண்ணு குராற்களோ, யாதொரு பேற்கள் மனோரதத்தை குருச்சு பிராத்தனை பண்ணுகுராற்களோ, அவாளுக்கு ஈஸ்வர பிரசாத்து னாலே சகல கலியாண வைபவங்களும் உண்டாகும்.

இந்த வாலீஸ்வரருடைய மஹாதியத்தெ யாதொருபேற்கள் ஒருவருஷம் படிக்குராற்களோ அந்த புருஸாளுச்கு சமஷச்சாத்து னுடைய அமத்தியத்துலே புத்திர லாபத்தை குடுக்குராற்.

இந்த புராணம் படிக்குர புராணிகரை யாதொறுபேற்கள் பூஷணாதிகள்னாலே சந்(தோ)ஷபடுத்திவிக்குறாற்களோ அவாளுக்கு மஹ(ா)விஷ்ணுவானவற் பாத்து சந்தோஷ(ப்படு)வாற்க(ள்) சோமவாரத்துலே ய(ா)தொ(ரு)பேற்கள் திருகாலங்களிலேயும்

சமதரிசனம் பண்ணுகுறாற்களோ அவாளுடைய பாபசாலங்களா னதுகள் தக்ஷணத்துலேலயும் அடையும். அந்த வாலீஸ்வரருடைய நாமதேயத்தை சற்த்தாபகுத்தியோடேகூடா யாதொருபேற்கள் உச்சரிக்குறாற்களோ அவாளுக்கு கைலாஸ பருபதத்துலே வாசமென்ங்குரதாக னாரதறுக்கு பிறம்மதேவற் சொன்ன வாலீஸ்வரருடைய மஹாத்தியத்தை நம்மனாலே உங்களுக்கு சொல்லப்பட்டுது. வாலீஸ்வரருடைய பிராதசத்துனாலே உங்களு டைய மனோரதங்கள் உண்டாகட்டும்," யென்ங்குரதாக சூதபுராணீகரானவற் சவுனகாதீ முனீஸ்வராளுக்கு உபதேசம் பண்ணினாற்.

ஸரராய சவுனகாதி முனீஸ்வராளை இப்படியாப்பட்ட வாலீஸ்வரருடைய மாஹறதியத்தை உங்களுக்கு சொன்னபடியனாலே னானும் கிராதாற்த்தனாக ஆயிவிட்டேன். இது பிரம்மாண்ட புராண சங்கரஹத்துலே முப்பதாம் அத்தியாயத்துலே வாலீஸ்வர ருடைய பிரசம்சை சொல்லப்பட்டுது.

மூணாம் அத்தியாயத்துலே வரப்பட்ட கதை :

னரதற் பிரம்மதேவரை கேளுக்குரபடி வாலீஸ்வரறுடைய னாமதேயம் கிறதயுகத்துலே யெப்படி உண்டாச்சுது. அது நமக்கு விஸ்தாரமாக சொல்லவேணுமென்று கேள்க்க, அப்போ பிறம்ம தேவற் னாரதரெ பாத்து சொல்லுகுராற் புண்ணியமாயி இருக்கப் பட்ட றிஷபபுரத்துலே கிறதயுகத்திலே வாலியனாலே பூசை பண்ணப்பட்டவரானபடியனாலே றிஷீஸ்வராள்னாலே வாலீஸ்வர ரென்று சொல்லப்பட்டுது.

அனமத்தரத்துலே வாலீஸ்வரருடைய சன்னிதியிலே பரிவார தேவதையளை பண்ணிவிச்சான். நந்திகேஸ்வரரெயும் தக்ஷணா மூற்த்தி தேவதையும் பஞ்சலிங்கதெயும் செண்டேஸ்வரநெயும் தண்டாயுதபாணியும் சுபிரம்மண்ணிய தேவனையும் பிறஹகீற்த்தி பிறஹதற்ம விவற்தனீதேவிய்யையும் பிரதிஷ்ட்டை பண்ணிவிச்சான்.

இந்த தேவதைகளை பூசைபண்ணுகுர நிமித்தியமாக அற்ச்ச காளுக்கு வகுதியும் பண்ணிவிச்சு பூதானத்தையும் பண்ணி, பூசாற்த்தம் உபசாராதிகளையும் பண்ணிவிச்சான்.

தேவதேஓத்தமனாயி இறுக்கப்பட்ட வாலீஸ்வர சுவாமியா றுக்குஉச்சவாற்த்தமாயும் சேவாற்த்தமாயும் சைவாகம விதான கியானியாயி வேதசாஸ்திர சம்ப்பன்னா(னா)யி இருக்குர சிவ பிராப்மணாளான பேற்கள் ஸ்வஸ்தசித்தமாயி வாலியனுடைய ஆக்கியனாலே பூதானத்தை சீகாரம் பண்ணிக்கொண்டு சுகமா யிருந்தாற்கள்.

அனம்த்தரம்,[5] வாலியானவன் உச்சவபேரங்களை பண்ணிவிச்சு ரதோச்சவங்களை பண்ணிவிச்சான். அநமதரம் வாலீஸ்வரருடைய சன்னிதியிலே மனோரதமா யிறுக்கப்பட்ட தீற்த்தத்தை வாலீஸ்வரறுக்கு அபிஷேகாற்த்தமாக அந்தரங்கத்திலே ஸகல பாபங்களையும் போக்கடிக்க தக்கதாயீறுக்கப்பட்ட பாகீரதிய்யை தியானம்பண்ணி நடவாவியெ கல்பிச்சான். அந்த வாபி கையிலே யிருந்து அந்த க்ஷணமே சான்னவியானவள் பிரப்பட்டாள். வாலீயினாலே கல்ப்பிக்கப்பட்ட தானபடியனாலே வாலீதீற்த்த மென்று சொல்லப்பட்டது.

அந்த சமயத்துலே வாலீதீற்த்தத்துலே னாலு சமுத்திரத்துலே யிறுக்கப்பட்ட உதகத்தேயும் சகலதீற்த்தங்களும் வாலீ தீற்த்தத் துலே ரொப்பி சகலமான ரிஷீஸ்வராளும் யிந்த வாலிதீற்த்தமானது கெங்கா தீற்த்தத்துக்கு சமானமாகட்டும் யென்று விசிஷ்ட்டாதி முனீஸ்வராள் சொல்லி ஸ்நானம் பண்ணி இந்த தீற்த்தமானது நராளுடைய சகலமான ப(ாவ)த்தையும் பரிஹா(ரம்) பண்ணதக்கது. சகலாபீஷ்ட்டத்தையும் குடுக்கதக்கது யென்ங்குரதாக வாலீ தீற்த்தத் துனுடைய மாஹாதிமயத்தை மாசம்சைபண்ணி கொண்டுயிருக்குர சமயத்திலே ஒரானொரு வித்துவான் அவள் குஷ்ட்டரோகி வெகுகாலமாயி சகலமான தீற்த்தங்களையும் சேவைபண்ணி ஸகல புண்ணிய க்ஷேத்திரங்களெயும் செபிச்சும்கூடா குஷ்ட்டரோகம் பரிஹாரமாகமல்படிக்கி கெரளிய்யானாயிருக்க ஸ்ரீயோடே குடி கொண்டுயிருக்க ஸகல சாஸ்திர சம்பன்னனாயும் யிருக்க, ராஸபட்டன் யென்ங்குரவன் அக்கினிஹோத்திரத்தெயும் பண்ணிக் கொண்டு தெயிவ யோகத்துனாலே ஸ்ரீதர க்ஷேத்திரத்தை அடஞ்சு வாலீஸ்வரருடைய மாஹாதியத்தை கேட்டு றிஷீஸ்வரருடைய சேவாற்த்தமாயும் வந்து, இந்த வாலீதீற்ததுலே ஸ்நானம் பண்ணுகுரதுக்கு யெத்தினம்பண்ணி றிஷீஸ்வராளுடைய அனுக்கிய

வாங்கிகொண்டு விதிலித்தாய தீற்த்ததை பூசைபண்ணி சகலமான றீஷீஸ்வராளும் பாத்துக்கொண்டேயிருக்கச்சே ஸகலரோக நிவாரணமாயி இருக்கப்பட்ட தீற்த்தத்துலே பாரியாள்[6] ஸமேதனாயி ஸ்நானம் பண்ணினான்.

ஸ்நானப்பண்ணி யெளுந்துரிந்த க்ஷணமே ஸகலரோகமும் போயி நல்மனமதாகாரதேகத்தோடே கூடினான். அப்போ தன் னுடைய சறீரத்தை தான் பாத்துக்சொண்டு ஆச்சிரியப்பட்டான். பாறியா ஸமேதனாயி அந்த ரிஷீஸ்வராளுக்கு தனாமபாங்கள்னாலே பூசைய்யைபண்ணி அந்த வாலீஸ்வரரை நண்ணாயி சேவைபண்ணி வாலீதீற்த்ததையும் பிரதக்ஷண நமஸ்காரம்பண்ணி கொண்டாடின வனாயிகொண்டு தன்னுடைய தேகஹிதெ அடஞ்சு மஹதயீஸ்வரி யத்தை அடஞ்சு சுகத்துலே யிருந்தான்.

சவுனகாதி றிஷீஸ்வராள்ஆன பேர்கள் யிந்த வாலி தீற்தத்துலே அந்தகெறளிய்யனாயி இருக்கப்பட்ட பிராமணனானவன் கொஷ்ட்ட ரோகத்தோடே அனுபவிச்சன். நலமனமதாகா தேஹத்தோடே கூடினான் யென்று பயுஸ்தளம் றீஷீஸ்வராள் ஆச்சிறியப்பட்டாற்கள்.

வசிஷ்ட்டற், றிஷ்யஸிங்கற், விசுவாமித்திரற், கவுதமற், ஶ்ரீசீ, அத்திரி, வியாகிரபாதற், பாற்கவற், வால்மீகி, நாரதற், கவுச்சற், ஆஸ்வாயனற் முதலான றீஷீஸ்வறாள் அந்த வாலி தீற்தத்துக்கு னாலு பிரத்தியிலும் யிருந்துக்கொண்டு வாலிதீற்த்தம் யென்ங்குர னாலு அக்ஷரத்துக்கு பல சுறுதி சொல்லுகுராற்கள்.

வகாரம் யென்ங்குர அக்ஷரத்துக்கு வாமச்சிதாற்த்தம் உண்டா கட்டும்.

லகாரம் யென்ங்குர அக்ஷரத்துக்கு லோகபூசிதெ உண்டாகட்டும்.

தகாரம் யென்ங்குர அக்ஷரத்துக்கு சகல தத்துவங்களும் உண்டாகட்டும்.

ஸநதகாரம் யென்ங்குர அக்ஷரத்துக்கு அவியாமாய்யிருக்குரதாக சொன்னாற்கள்.

அப்போ றிஷீஸ்வராளுடைய வாக்கியத்தெ கேட்டு, ஆகாச வாணியானவள் சதியமஸ்துவசஸ்தவர் உங்களுடைய வாக்கியம் ஸத்தியமாக ஆகட்டும் யென்று ஆகாசவாணி யெப்போ சொன்னாளோ அண்று முதல்க்கொண்டு அந்த வாலி தீற்த்தத்துக்கு ஆதிக்கமுண்டாச்சுது.

அநம்தரம் ஸுதற்சொல்லுகுர பிரகாராம் யிந்த வாலிதீற்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகுரவாளுடைய பாதகங்கள் உப்பாதங்கள் அந்தக்ஷணமே னாசத்தை அடயுரது. அது யெப்படியென்றால் பாஸ்கரருடைய சமதரிசனத்துனாலே பனியானது யெப்படியோ அந்தமேரை.

பின்னையும் வாதரோகம், பித்தரோகம், செஷ்ம ரோகம், மஹாசோரம் சன்னிபாதம் அபஸ்தமாரம் கஷ்ட்டமாயிருக்கபட்ட குஷ்ட்டரோகம், சிரோரோகம், குக்ஷிரோகம், அக்ஷிரோகம், வருணமேகம், பகந்தாரோகம் யிந்த ரோகங்கள் ஆதியத்தமும் மஹா கஷ்ட்டதரங்களானபடியனாலே நரனானவன் யிந்த வாலீதீற்த்தத்திலே ஸ்நானம் பண்ணின மாத்திரத்துனாலே யிந்த ரோகங்களை தான் அனுபவிக்கமாட்டான். யிந்த தீற்த்தம் ஹாதியத்துனாலே சகியாது ஆயிவிட்டுவான் பொகுபிரகாரம் சொல்லிபொன்ன யிந்த தீற்ததுலே ஸ்நானம் பண்ணின பேற்களுக்கு தாரித்திரத்தை போக்கடிக்க தக்கதாயி புத்திர பவுத்திர பிராயமாயி இருக்குரது.

பின்னையும், ",வராயி ரிஷீஸ்வராளே, வலிதீற்த்தம் யிம்மாதிரம் நம்மாலே வற்ணிக்கப்பட்டுது."

இப்படி சொல்லப்பட்ட சூதருடைய வாக்கியத்தை கேட்டு வராயி சூதபுராணிகளே, மஹாபிராகியதே உன்னுடைய முகாரவிந்தம் நிற்களிதமாயி இருக்குர ஸதக்கதே யெங்குர அமுர்தத்துனாலே பரிசுத்தாளாயும் கிறதகிறிதாளாக[7] ஆனோம் நாங்கள் யெல்லோரும் அத்தியமத்த சந்தோஷத்தோடே கூடினோம்.

ஈதின்மேலே, வாலீஸ்வரருடைய தேவஸ்தானத்துக்கு ஈசானிய பாகத்துலே கதம்பவநம் யிருக்குரது யெங்குரதா உன்னாலே சொல்லப்பட்டதன்னோ அந்த கதம்ப வனத்துனுடைய மஹாதியத்தை கேள்க்கவேணுமென்று விச்கிக்கி(றோம்). ஆகைனாலே அந்த கதம்ப(வ)னதுனுடைய மஹாதியத்தை சவிஸ்தாரமாக

வற்னிக்கவேணும் யென்ங்குரதாக சவுனகாதி றிஷீஸ்வராள் சூதரை பாத்து பிராத்திச்சாற்கள் யென்ங்குர தாபிறியத்திலே மூணாம் அத்தியாயம் பூற்த்தி ஆச்சுது.

னாலாம் அத்தியத்துனுடைய கதையில் சூத புராணிகற் சொல்லுகுராற்கள்:

பிறம்மதேவற் னாரதரைபாத்து சொல்லுகுர பிரகாரம் வாலீஸ் வரருடைய தேவஸ்தானத்துக்கொச அற்த்த பிரமாணத்துலே ஈசா னிய பாகத்துலே கதம்பவனமென்று ஒரு வனமுண்டு. யெந்த வனத்துனுடைய மஹிமகளுடைய சரவணங்கள்நாலே விடுபடுகு ராரோ அப்படிப்பட்ட கதம்பவனத்துனுடைய வைபவத்தை வராய் நாரதனே ஒனக்கு சொல்லுகுரேன்.

பிறம்மா கைலாஸ்ஸையில் சிகரத்துனி . . பூற்வத்துலே பாற்வதி சமேதராயி பரமேஸ்வரறானவற் கெந்தற்வ, கின்(னரர்), கிம்புஷ கணங்கள்நாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்டு யிருக்குர தன்னு டைய வைபவத்தை ஒடத்தானவராய் அந்த கதம்பவனத்துலே வாஸம்பண்ணிநாற். தவு பாற்வதி பரமேஸ்வரற் ... பாற்வதி பரமேஸ்வருள் மீனாக்ஷியென்றும் சுந்தரேஸ்வரரென்றும் பேரோடே கூடி யிருந்தாற்கள். அந்த மீனாக்ஷிசுந்தரேஸ்வராள் ஆனபேற்கள் பிரதி தினத்துலேயும் கைலாசத்து பதத்துக்கு ஆலாசிய க்ஷேத்திரத்துக்கு பிரதி தினத்திலேயும் கதாகதாளாயி[8] இருக்குறாற்கள்.

அந்த கதாகதாளாயி யிறுக்குர மீனாக்ஷி சுந்தரேஸ்வரசுவாமி யானவற்கள் மாற்கமத்தியத்துலே அந்த வனத்தை கண்டாற்கள். கண்ட பிற்பாடு யிந்த வனமானது நம்மனாலே மத்தியமாற்க்கத் துலே சகல சிறமபரியாறாற்த்தமாக நிற்ம்மாணம் பண்ணப்பட்டது. ஆனபடியனாலே யிவடத்துலேதானே வாசம்பண்ணுவோமென்று அவடத்துலே நவறாத்திரியிலே ஒன்பதுனாள் வாஸம்பண்ணி நாற்கள்.

அந்த வனம் யெப்படியாப்பட்டது யென்றால் அத்திய . . த்த சயிதிய சவுரபிய சாகாபல்லவ தல்லசதோடே கூடியிறுக்கப்பட்டு யிறுக்கும் வஸ்மத்தகீற்ஷ்ணும் றிது முதலான ஆரு றுதுக்குள்நாலே

சேக்கப்பட்டுயிறுக்கும் புஷ்ப கொத்துக்குளுடைய வாசனைகள் நாலே வாஸனை உள்ளதாக பண்ணப்பட்ட பூமி தலமென ஆகாச தலமென்ன யிந்த ஔடத்த யிருக்கப்பட்டது.

பின்னையும் ரமணிய்யமாயும் மஹா குளுமையாயும் யிருக்குர லதாகிரஹங்களுடைய சத்தத்துனாலே வியாகுலமாயி இருக்கப் பட்டது, தங்கமயமாயி யிறுக்கப்பட்ட பூமியோடே கூடிகொண்டு யிறுக்கப்பட்ட பதினாரு வீதியள்நாலே சோபாயமானமா யிருக் குரது படுக்கைகள் தலைகணிகள் தொடைவில்லைகள் யிதுகளு டைய ஆயிரங்களோடே கூடியிறுக்கப்பட்ட சயனகிரஹங்கள் னாலே மனோக்கியமாயி யிருக்குரது.

யின்னும் அந்த படுக்கை வீடுகள் யெப்படிப்பட்டது யென்னால் விசித்திரதரமா யிருக்குர மதவானெகளுடைய கொம்புகள் நா(லே) யும் பவளகொடிகள் னாலேயும் கலப்பிவிக்கப்பட்டு யிறுக்குரது. ரத்தின சாலங்கள்நாலே வெளங்கிகொண்டு யிருக்குர மதவானை கொம்புகள்நாலே பண்ணப்பட்டு யிருக்குர விசித்திரமான கட்லு கள்னாலே ரஞ்சிதங்களாயி இருக்குரது. வயிடூரீய மணியமா யிருக்கு. சரபணிகள் னாலே ...போட்டு யிறுக்குர ரத்தினமயமாயி யிறுக்கப்பட்ட மய்யாலே பலகைகள்நாலே சோபிதங்களாயிருக் குரது. தங்கக் கிண்ணிகளுடைய மதியத்துலே யிருக்குர தாம்பூல பலங்கள்னாலே சுந்தரங்களயி இருக்நரதுகள். கெங்கோதகத்து னாலே பூறனங்களாயி இருக்குர தங்கமயமா இருக்குர சொப்பு குடங்கள்நாலே சோபிதங்களாயி இருக்குரது. நல்ல வாளபளங்கள் னாலே சம்பூற்ன்னங்களயி இருக்குர தங்கத்து தட்டங்கள்நாலே நெரஞ்சி யிறுக்குரது. முறுக்கப்பங்கள்னாலேயும் அதிரசங்கள்நாலே யும் கோக்ஷிரங்கள்நாலேயும் நல்ல சொழ தயிற்கள்நாலேயும் மனோரஅரங்களாயி யிறுக்குரதுகள். மஹாமாதுரியங்களோடே கூடி சுத்தியத்தம் தாவுளியமாகவும் யிருக்குர ச(ர்)க்கரைனாலே பண்ணப்பட்டு யிறுக்க, யெண்ணை பூரிகள்னாலே நெஞ்சு யிருக் குரதுகள் மஹா நெயிவேத்தியங்கள்நாலேயும் சித்திராஅன்னங்கள் நாலேயும் விராசமானமாயி இருக்குர சுயம்பாகசாலைகளொடத்தா யிறுக்குரது. சுகந்த தயிலங்கள்நாலேயும் கஸ்தூரிநாலேயும் பரிமள யுகத்தமாக பண்ணப்பட்டு யிறுக்க குட்டத்திண்ணையள்ளொட தாயி யிருக்குரது மாணிக்க தீபங்கள்நாலே வெளங்கிகொண்டு யிருக்குரது. வெள்ளி தீபஸ்தம்பங்கள்நாலே சோபிச்சுக்கொண்டு யிருக்குரது

இப்படி விசித்திரமா யிறுக்குர துசங்கள்யென்ன டெக்கியங்கள் யென்ன மேல்க்கட்டுகள் யென்ன தெரைபச்சடங்கள் யிதுகள்னாலே அலங்காரம் பண்ணப்பட்டு யிருக்குரது. சங்கீதவித்யா சூசலகெந் தற்வ ஸ்ரீயள்னாலே நெரஞ்சி யிருக்குரது. கெச தந்தங்கள்னாலே விசித்திரங்களாயி பண்ணபட்டு யிறுக்க சாலக வாசலுகளோடே கூடியிறுக்கப்பட்டது. குறுவிந்த மாணிக்கங்கள்நாலேயும், தங்க மயமாயிருக்குர செண்டுமல்லிக புஷ்ப்பங்கள்னாலேயும், வெள்ளி கொடிகள்நாலேயும், பவள கொடிகள்நாலேயும், கற்ப்பிதங்களா யிறுக்குர கீள்படி மேல்படியோடே கூடின ராசலுகள்ளோடதாயி இருக்குரது.

வீணா கானத்துலே மனசு உண்டாயிருக்குர யெவ்வனங் களோடே கூடியிருக்குர தேவதாஸ்ரீகள்நாலே சம்பரமாயிருக்குரது. சுபசிசுருஷணாற்த்தமாயிருக்குர திவிய ஸ்ரீகள்னாலே சோபிதமா யிருக்குரது பொன்மயமாயிருக்குர பேற் புகள் ஒடத்தாயிருக்குர துவாரபாலகாள்னாலே சோபிக்கப்பட்டு யிருக்குரது. தெதிப்பி மானமா யிருக்குர ஆபரண சாலங்கள்நாலே அலம்க்காரம் பண்ணப் பட்டு யிருக்கு. வனாயுச தேசங்களுலே பெரந்து யிருக்குர அஸ்வங் கள்நாலே நிபிடீகரமாயி இருக்குரது. செகப்பு சலாதி மஞ்ச சகலாதி பச்ச சகலாதியள் சூற்த்தி சகலாதிகள்னாலே பண்ணபட்டு இறுக்குர கோலார் வண்டிகள்நாலே கோலாஹலமாயி இருக்குரது.

பின்னையும் மஹா வேலைபெத்து யிறுக்குர ரத்தினங்கள் நாலே நிற்ம்மாணம் பண்ணப்பட்ட தங்க அம்பாரிகள்நாலே சோபாயமானங்களாயி யிருக்குர மதவானையள்நாலே கூடியிருக்கு ரது. . சனகாதிகள்நாலே சிதாதிகள்நாலே தேவேந்திராதிகள் நாலே ரம்பாதி தேவதாஸ்ரீகள்நாலே அலம்க்காரம் பண்ணப்பட்டு யிருக்குரது. மஹத்தாயிருக்குர தபசுனாலே தேவசில்ப்பியா யிறுக்குர விசுவகற்ம்மாவுனாலே கல்ப்பிக்கப்பட்டு யிறுக்குரது.

யிப்படிப்பட்ட கதம்பவனத்துலே யிந்த பதினாரு நீதிகளுலே ஒரு சவீதியிலே ஒரு வீட்டிலே சோபசோபிதமாயிருக்குர கிறஹத் துலே சொலாபரியமக்கமதியஸ்த தட்டிதக்காமத்தி சப்பிறபையா யிருக்குர ஸ்வற்ன சிம்ஹாஸனத்துலே ரத்தின காமத்தி சோபித மாயிருக்குர சுவேதச்சத்திரத்துநாலே வெளங்கிகொண்டு யிருக்குர

சாமாங்கள்னாலே வெளங்கிகொண்டு யிருக்குர ரத்தின பீடத்துலே மீனாக்ஷி சுந்தரேஸ்வராளாயிறுக்குர தம்பதிகளான பேற்கள் வெளங்கராற்கள்

மனுஷாளுக்கு மோக்ஷ சாம்பிராச்சியத்தே குடுக்குரவாளாக யிறுக்குராற்கள். யிப்படியாப்பட்ட ஸ்ற்வ்வா(பீ)ஷ்ட்ட பிரதயக மாயி இறுக்கப்பட்ட யிந்த கதம்பவனத்துலே தேவேந்திரனாலே யும் நவராத்திரிகளுலே உச்சவம்பண்ணிவிக்குர நிமித்தியமாயி பிராத்திக்கப்பட்டவாளாயி மீனாக்ஷிசுந்தரேஸ்வரற் அந்த வனத் துலே யிறுந்தார்கள்.

அப்போ தேவேந்திரனானவன் அந்த மீனாக்ஷிசுந்தரேஸ் வரறுடைய அப்பணையினாலே கன்னிய மாசத்துலே சுக்குல பக்ஷத்துலே நவறாதிரியிலே உச்சவம் பண்ணிவிச்சாற் யென்று பிறம்மா நாரதறுக்கு உபதேசம் பண்ணிநாற்கள்.

நாரதற் கேள்க்குர பிரகாரம் கதம்பவனத்துலே யிந்திர னானவன் யென்ன நிமித்தியமாக நவறாத்திரி லிபுதம் பண்ணி விச்சாற். அந்த விற்த்தாத்தம் சவிஸ்தாரமாக சொல்லும் யென்று நரதற் கேட்டதுக்கு பிரம்மா சொல்லுகுராற் :

''பூற்வம் கெவுதம றிஷிஸ்வரற் சாபத்துனாலே தேவிந்திர னுடைய சரீரத்துலே யோனிறாசி உண்டாச்சுது. அப்போ தேவேந்திரற் கெவுதம றிஷீஸ்வரரை பிராத்திச்சு கேட்டுக்கொண்ட படியனாலே கெவதமற் சாபாத்தியதை சொன்னாற். வாறாயி யிந்திரனை ஸ்ரீதர க்ஷேத்திரத்துலே றிஷிப்புரத்துலே வாலீஸ்வர சுவாமிய்யை சேவிச்சு, அந்த வாலி தீத்தத்துலே ஸ்நானம் பண்ணி, அந்த வாபீஸ்வரறுடைய ஈசான்னிய பாகத்துலே கதம்பவனத்துலே மீனாக்ஷி சுந்தரேஸ்வரரை சே(சவி)ச்சு சன்னதியிலே அமிற்தவாபிகெ யென்குர தீற்த்தத்துலே ஸ்நானம் பண்ணி அந்த மீனாக்ஷி

சுந்தரேஸ்வரரை ஸ்தோத்தி(ரம்பண்)ணினதேயானால் ஒன்னுடைய சறீராத்துலே யிறுக்கப்பட்ட யோனி றாசியெல்லாம் போயி சஹாசிரநேத்திரமாரது. அப்போ சஹாசிறாக்ஷநென்று பேற் ஒனக்கு வரது''யென்று தேவிந்திரனுக்கு சொன்னாற்.

அப்போ அஹல்லியா (தேவதை)ப்பாத்து தேவேந்திரன்மேலே நீ திற்ஷ்ட்டிவச்சபடியனாலே நீ பாரையாக போயிவிடு யென்று சேபிச்சு அப்பிரம் ரொம்பா பிரார்த்தனையினாலே ஸ்ரீறாம றுடைய பாதாரவிந்தஸ் பரிசத்துனாலே தொபிரகாரமாக ஸ்ரீயாக ஆராள் யென்று அனுக்கிரஹம் பண்ணினாற்.

அதின்பிறகு, பொகுகாலத்துக்கு பிற்ப்பாடு ரகுனாயகறுடைய பாதாரவிந்த ஸ்தபர்சத்துனாலே சாப விமோசனமாயி பதியோடே (கூ)டா சுகத்தெ அனுபவிச்சாள்.

தேவேந்திரனானவன் குெவுதமறுடைய சாபத்தை மனசுலே நெனச்சுக்கொண்டு ஸ்ரீதர க்ஷேத்திரத்துக்கு வந்து விறஷபபுரத்துலே வாலிதீற்த்தத்துலே ஸ்நானம்பண்ணி வாலீஸ்வரரை நண்ணாக சேவிசா அந்த வாலியெடெகூடா முசுகுந்த சக்கிரவற்த்தியோட கூடா சகல பரிவாரத்தோடேகூடா அந்த கதம்பவனத்துக்கு போயி அந்த அமுறுத வாபிகையிலே ஸ்நானம்பண்ணி, அந்த மீனாக்ஷ சுந்தரேஸ்வர சுவாமியை சேவிச்சபடியனாலே, அத்த சறீரத்துலே யிறுக்கப்பட்ட யோனி றாசி போயி சஹசிறாக்ஷனாக ஆனாற்.

அப்போ அந்த தேவேந்திரனானவன் அனேக பிரகாரமாக ஸ்துதிபண்ணி சகலமான தேவதைகளோடேகூடா ஸ்வறாங்கத்தை குறுனுடைய அப்பணையினாலே பரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகத்துலே யிறுந்தான்.

யிந்தபடி னாலாம் அத்தியாயத்துலே பல சுறுதி சொல்லுறாற். யிப்படிப்பட்ட பசுபதியனுடைய சத்துகுணங்களுடைய மஹி

மய்னாலே மனோஹரமா யிருக்குர யிந்த சிவபுராணத்தை யெந்த மனுஷனானவன் படிக்குரானோ, யெவன் கேள்க்குரானோ, அந்த மனுஷனானவன் லோகத்துலே சகல போக பாக்கியங்களையும் அனுபவிச்சு... மத்தியத்துலே கைலாச பருபதத்துனுடைய சிகரத் துலே சாசுவதமாயி யிருக்குர சவுக்கியத்தை அனுபவிச்சுக்கொண்டு யிறுப்பன் யென்று பிரமதேவற் நாரதறுக்கு உபதேசம் பண்ணி னத்தைய்யை சூதபுராணீகரானவற் நயிமசாரிண்ணிய வாசிகளா யிறுக்குர சவினகாதி முனீஸ்வராளுக்கு வுபதேசம் பண்ணினாற்கள் யென்ங்குரத்தை பிறம்மாண்ட புராண சம்ங்கறஹத்துலே முப்பத்தி ஓராம் அத்தியாத்துலே சொல்லி வருகுரது.

ஸ்ரீதர க்ஷேத்திரத்தில் றிஷபபுரத்தில் வாலீஸ்வரனுடைய ஸ்தளபுராணம் சம்பூறன்னம்.

---

1. சேவூர் : கோவை மாவட்டம் அவிநாசித் தாலுகாவில் உள்ள ஊர்.
2. பெயருடன்
3. குரோசத்துக்கு. குரோசம் - கூப்பிடு தூரம், சமீபம்
4. வாபி - கிணறு; கூபம் - ஆழ்கிணறு; தடாகம் - குளம்.
5. அடுத்து
6. மனைவி
7. கிருதகிருத்யாளாக (வ.மொழி) - பயன்பெற்றவர்களாக
8. வந்துபோய்க்கொண்டு

# மடவளாகங் கைபீது

## டி. 3793( ஓலை)

செங்கல்ப்பட்டு ஜில்லாவில் சேந்த மடவளாக[1] கிறாமம் குரு மாரேஸ்ர்வரர் கோவிலில் சிலாசாசனம் 20யிது சோழக்கட்டு சுபா தாலூகாவுக்கு திருவத்தூர் துக்குடியில் சேந்த மாறல் கிறாமத்தில் பீதகுருந்த பெருமாள் கோவிலில் ஸ்வாமியார் வாலியினாலே பூசை செய்யப்பட்டுது.

---

1. மடவளாகம்: செ.மா, காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ள ஊர்.

# இந்நூலிற் பயின்றுள்ள ஊர்ப்பெயர்கள்

அக்காதங்கச்சி மலை
அக்கினி மலை
அகோபளம்
அந்தியூர்
அபிசேகபுரம்
அயோத்தியாபட்டணம்
அர்த்தநாரீசுவரம்
அருணகிரி
அருணாசலம்
அருணாபுரிப்பட்டணம்
அவணாமல்
அவிநாசி
அழிபடைதாங்கி
அன்னக்காவடி மடம்
ஆண்டிப்பாரை காடு
ஆத்தூர் காணி
ஆந்திரம்
ஆப்பூர்
ஆம்பிரவனம்
ஆலாசியசேத்திரம்
ஆனைகொந்தி மலை
ஆனைமலை
இராசிபுரம்
இராமநாதபுரம்
இராமராசா சீமை

உத்திரமேரூர்
உப்பளங்காணி
உருத்திரகிரி
ஊரகம்
ஏநாமக்கல்
ஓரியூர்
கடம்பர் கோயில்
கதம்பவனம்
கம்பம்
கமலாலயம்
கயிலை
கர்நாடகதேசம்
கரிசப்பட்டு
கரிசப்பட்டுவார்
கருமலை
கவுண்டர் மடம்
கவையம்புத்தூர்
கள்ளிபாறா
காங்கேயம்
காசி
காஞ்சிபட்டணம்
காஞ்சிபுரம்
காட்டாங்குளம்
காயங்காடு
காயங்குளம்
காராஞ்சி
காவுங்குளம்
காளையார் கோயில்
குமாரப்பட்டி

குலகுமலை
கேரளம்
கைலாசகிரி
கைவல்லியபுரம்
கொங்கணதேசம்
கொங்கம்பட்டி
கொங்கு
கொச்சி
கொளத்தூர்காணி
கோட்டைமலை
கோபுரமலை
கோயமுத்தூர்
கோவளம்
சக்கிகிரி
சம்பா நதி
சாமக்குளம்
சித்தாமூர்
சிதம்பரம்
சிவகெங்கை
சிவசேத்திரங்கள்
சிவதாபுரி சேத்திரம்
சிறுமயிலூர்
செங்கற்பட்டு
செட்டிப்பாளையம்
செய்யாறு
சேதுக்கரை
சேவூர்
சொரிகல் காடு

தஞ்சை
தட்சிணகாசி
தட்சிணவாரணாசி
தண்டகாரணியம்
தணக்கல்காடு
தனுஷ்கோடி
தாராபுரம்
திராவிடதேசம்
திருக்காஞ்சிபுரம்
திருக்காளஹஸ்ரீ
திருக்கேதாரம்
திருச்சி
திருசிரபுரம்
திருநாராயணபுரம்
திருப்பத்தூர்
திருப்பதி
திருப்பனூர்
திருமுருகன்பூண்டி
திருவண்ணாமலை
திருவத்தூர்
திருவாரூர்
திருவானைக்கா
திருவிரிஞ்சை
தில்லை
துக்குடி
துறுக்கடவு காடு
தூவையாறு
தென்காசி
தென்மண்டலம்

தேவனூற்பதி
தொண்டமண்டலம்
தொரவலூர்
தோணிபுரம்
நயிமிசாரணியம்
நறுமதை நதி
நாககிரி
நாகலோகம்
நாயிகுந்திக்காடு
நாயிகளேறு மலை
நீலகிரி
நெமிலிக்கிராமம்
பச்சகிரி
பட்டணங்கள்
பம்பா நதி
பரமக்குளம் காடு
பவானி
பவானிக்கூடல்
பாடலிவனம்
பாண்டிதேசம்
பாண்டுகுழி
பாளையப்பட்டு
பாளையம்
பிரமகிரி
பிரான்மலை
பிள்ளையாறு கணவாய் மலை
புதுக்கோட்டை
பூஞ்சேரி
பூப்பாறு மலை

பூவாம்பட்டு கிராமம்
பெருமணம் கிராமம்
பேரூர்
பையனூர்
பொள்ளாச்சி
பொன்னமராவதி
மகாபலிபுரம்
மங்கலகிரி
மடவளாகம்
மதுக்கூர் மலை
மதுராபுரி
மதுரை
மதுரைக்கோட்டை
மயிலாப்பூர்
மருங்கைப்பதி
மல்லாபுரி பட்டணம்
மலையாளம்
மாகமான் மலை
மாமலைபுரம்
மாறல் கிராமம்
முக்திபுரம்
முப்பந்தட்டி
மூக்குவெளிக்காடு
மூங்கில்வனம்
மேவாரப்பூர்
ரத்தினகிரி
ரிஷபபுரம்
வடகரை நாடு

வந்தவாசிக் கோட்டை
வல்லம் கிராமம்
வாமநாதபுரம்
வாட்டுபார்க்காடு
வார்த்தாண்டி மலை
வாரணாசி
வாரப்பூர்
வாரப்பூரார்
வால்பாறைக்காடு
வாலிதீர்த்தம்
விசயநகரம்
விசையமங்கலம்
விடைபுரம்
விருத்தகாசி
விருத்தாசலம்
வில்வவனம்
வெட்டுக்கடவுபதி
வெள்ளாதி நகர்
வேலூர்
ஸ்ரீதரசேத்திரம்